தகவலை நோக்கிய...



# வலையின் வீசல்கள்

சமகாலத்தில் பின்னப்பட்ட வலை இழைகளின் தொகுப்பு – 01

சி. என். எச். சாள்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகவலை நோக்கிய
# வலையின் வீசல்கள் ...

சி.என்.எச்.சாள்ஸ்

வெளியீடு :
**வலைப் பதிப்பகம்**
163, செம்மணி வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் : தகவலை நோக்கிய வலையின் வீசல்கள் ....

ஆசிரியர் : சி.என்.எச்.சாள்ஸ்

முதற்பதிப்பு : 23.04.2013

பதிப்புரிமை : சி.என்.எச்.சாள்ஸ்

பதிப்பாசிரியர் : வி.பி. தனேந்திரா

பக்கங்கள் : x + 185

விலை : 350 /-

National Library of Sri Lanka - Cataloguing - in - Publication Date

தகவலை நோக்கிய வலையின் வீசல்கள்... / தொகுப்பாசிரியர் சி.என்.எச்.சாள்ஸ்; பதிப்பாசிரியர் வி.பி.தனேந்திரா-நல்லூர்: வலை பதிப்பகம், 2013.

viii, 185 ப ; 21x14 செ.மீ.

ISBN : 978-955-4444-01

1. 001-DDC 2. பொது அறிவு

i. தலைப்பு

ii. சாள்ஸ், சி.என்.எச், தொ.ஆ.

iii. தனேந்திரா, வி.பி, ப.ஆ.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்

சர்வதேச தினங்கள்

இலங்கை பற்றிய வீசல்கள்

உலகை நோக்கிய வீசல்கள்

அயல் நாட்டுப் பக்கம் வீசிய வீசல்கள்

விளையாட்டுப் பக்கம் வீசிய வீசல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாசக நெஞ்சங்களுக்கு...!

என்னால் மாதாந்தம் வெளியிடப்படும் சமகால பொது அறிவுத் தொகுப்பான வலையின் இழைக்கு தாங்கள் காட்டிவரும் ஆதரவுக்கு எனது மனம் நிறைந்த நன்றிகளைக் கூறிக்கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

காலம் பிந்திய விடயங்கள் தவிர்க்கப்பட்டு, தவறுகள் திருத்தப்பட்டு **"தகவலை நோக்கிய வலையின் வீசல்கள்..."** என்ற தலைப்பில் இதுவரை வெளிவந்த *'வலை'*யின் ஒருவருட நிறைவில் 12 இழைகளையும் உள்ளடக்கிய தொகுப்பாக உங்கள் முன் வைத்துள்ளேன்.

எனவே இன்றைய உலகில் மிகவும் விரைவாக கண்ணிமைப் பொழுதில் மாற்றங்கள் நிகழ்ந்த வண்ணமே உள்ளன. அவற்றினை அறிவதற்கும், மனதில் நிறுத்தி உள்வாங்கிக் கொள்வதற்கும் வலையின் தொகுப்பு உங்களுக்கு ஓரளவேனும் உறுதுணையாக இருக்கும் என்பதில் எதுவித ஐயமுமில்லை.

இலங்கையில் சகல அரச வேலை வாய்ப்புக்களுக்கும் போட்டிப் பரீட்சை முடிவுகளின் பிரகாரமே தெரிவுகள் இடம்பெறுகின்றன. எனவே பரீட்சார்த்திகள் ஒவ்வொருவரும் சமகால நிகழ்வுகளை தமது வாழ்வில் விரும்பியோ அல்லது விரும்பாமலோ தெரிந்திருக்க வேண்டியது அவசியமாகும்.

சமகால விடயங்களை அறிய வேண்டுமாயின் அன்றாடப் பத்திரிகைகளைப் படிக்கவேண்டும். அல்லது இணையத்தள வசதிகள் இருக்க வேண்டும். எனவே எல்லோருக்கும் இவ்வாறான வசதி வாய்ப்புக்கள் கிடைப்பதில்லை. அவர்களுக்கு இவ்வாறான வெளியீடுகள் பயனுடையதாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது நூலகப் பணியுடன் இதனையும் ஒரு பணியாகவும், சேவையாகவும் கருதியே இந்த வலை வீசலினை ஆரம்பித்தேன். எனவே பொதுஅறிவு சம்பந்தமான விடயங்களை அறிய ஆவல் கொண்டோர், மாணவர்கள், அரச போட்டிப் பரீட்சார்த்திகள் ஆகியோர் கற்றுப் பயனடைய முடியும்.

இந்த நூலுக்கு அணிந்துரை வழங்கிய எனது மதிப்புக்குரிய யாழ்.மாநகரசபை பொதுசன நூலகத்தின் பிரதம நூலகர் திருமதி இமெல்டா கருணாகரன் அவர்களுக்கும், வாழ்த்துரைகளை வழங்கிய எனது நூலகவியல் ஆசானும், யாழ்.பல்கலைக் கழக சிரேஷ்ட உதவி நூலகருமான திருமதி கல்பனா சந்திரசேகர் அவர்களுக்கும், யாழ்.பூபாலசிங்கம் புத்தகசாலையின் முகாமையாளர் திரு.வீ.மகாலிங்கம் அவர்களுக்கும்,

எனது வலையின் இழைகளை தொகுத்து நூலாகப் பதிப்பித்து உதவிய எனது மதிப்பிற்குரிய நண்பரும் பதிப்பாசிரியருமான வி.பி.தனேந்திரா அடிகளாருக்கும்,

இந்த நூலினை குறுகியகால நேரத்தில் சிறப்பாக அச்சிட்டு தந்த யாழ்.நோபிள் பிறிண்டேர்ஸ் உரிமையாளர் மற்றும் பணியாளர்கள் அனைவருக்கும் எனது மனம் என்றும் நன்றி சொல்லும்.

வலை வீசல் தொடரும்...

சி.என்.எச்.சாள்ஸ்.

2013.04.21 தொகுப்பாசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை



இன்றைய உலகில் மாற்றங்கள் மிகவும் விரைவாக நாளாந்தம் ஏற்பட்ட வண்ணமே உள்ளன. இந்த வகையில் இயற்கைக்கும், மனிதர்களுக்கும் இடையில் நிகழ்கின்ற ஊடாட்டத்தின் வளர்ச்சிகளில் ஏற்படுகின்ற சிந்தனைப் புல மாற்றங்கள் அறிவியலாக மிளிர்கின்றன.

எமது பொதுசன நூலகத்தில் பணியாற்றும் நூலகர் திரு.சி.என்.எச்.சாள்ஸ் அவர்கள் தனது நூலக சேவையுடன் கூடிய ஒரு சேவையாக அன்றாடம் பத்திரிகைகள், சஞ்சிகைகள், இணையத்தளங்களில் வெளிவரும் சமகால பொது அறிவு விடயங் களை கேள்வி - பதில் வடிவில் தொகுத்து மாதாந்தம் 'வலை' என்ற பெயரில் சிற்றிதழாக வெளியிட்டு வருவது மாணவர்களுக்கும், அரச போட்டிப் பரீட்சார்த்திகளுக்கும் பெரிதும் வரப்பிரசாதமா கும்.

அந்த வகையில் ஏப்ரல் - 23 உலக புத்தக தினத்தினை முன்னிட்டு வலையின் 12 இழைகள் அடங்கிய "தகவலை நோக்கிய **வலையின் வீசல்கள்...**' என்ற தலைப்பில் நூல் வெளியிடப்படுவதை எண்ணி எமது நூலகம் சார்பில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

அவரது சமகால பொதுஅறிவுத் தொகுப்பான வலையின் இழை தொடர்ந்து வெளிவர வேண்டுமென ஆசித்து வாழ்த்துகின் றேன்.

திருமதி இரெண்டா கருணாகரன்,
பிரதம நூலகர்
பொதுசன நூலகம்,
யாழ்.மாநகரசபை.

2013.04.20

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை



வீசப்பட்ட வலைகள் வீரியமான தொகுப்பாக வெளி வந்திருப்பது மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகிறது.

அறிவுசார் விடயங்கள், அரசியல் நிகழ்வுகள், புதிய கண்டுபிடிப்புக்கள், உலகியல் நிகழ்வுகள், தொழில் நுட்ப முன்னேற்றங்கள், இலங்கை பற்றிய தகவல்கள் ஆகியவற்றின் பயன்பாடுகளை உடனுக்குடன் அவ்வப்போது கல்வி உலகத்திற்கு தெரியப்படுத்தி வந்த எனது இனிய நண்பரும், நூலகருமான திரு.சி.என்.எச்.சாள்ஸ் அவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்.

மாணவர்களிடையே வாசிப்பு, தேடுதல் என்பன அரிதாகி வருகின்ற இக் காலகட்டத்தில் காலத்தின் தேவையுணர்ந்து பல வேலைப்பளுக்கிடையிலும் சீராக வீசப்பட்டுவந்த வலையைத் தொகுத்து அறிவுக்களஞ்சியமாகத் தந்திருக்கின்றார் சாதனையாளர் சாள்ஸ். இத் தொகுப்பானது கல்வி உலகத்திற்கும், போட்டிப் பரீட்சையை எதிர்கொள்பவர்களுக்கும் மிகவும் பயனுள்ளதாக அமையும் என்பது எனது நம்பிக்கை.

தொடர்ந்தும் இழை அறாது வலை வீசப்பட வேண்டும். பல தொகுப்புக்கள் கல்விக் களஞ்சியங்களாகத் தொகுக்கப்பட வேண்டும்.

எல்லாவற்றிற்கும் பூரண சுகத்தையும், மன உறுதியையும் ஆசிரியருக்கு கிடைக்க எல்லாம் வல்ல நயினை நாகபூஷனி அம்பாளை வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

**திரு.வீ.மகாலிங்கம்,**
பூபாலசிங்கம் புத்தகசாலை,
யாழ்ப்பாணம்.

2013.04.20

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை



பாடசாலைக் கல்வியோ அல்லது பல்கலைக் கழகத்தில் ஒரு துறைசார்ந்த கல்வியோ ஒரு மனிதனை முழுமையானவனாக உருவாக்குவதில்லை.

பல்துறை சார்ந்த விடயங்களையும் அறிந்து வைத்திருப்பவனே இன்றைய உலகில் ஆற்றலும், ஆளுமையும் மிக்கவனாக விளங்குகின்றான். அவ்வகையில், சமகால செய்திகளையும், தகவல்களையும் சுவைபடத் தாங்கிவரும் "தகவலை நோக்கிய வலையின் வீசல்கள்...' பல்சுவைக் கதம்பமாகத் திகழ்கின்றது.

கடந்த காலங்களில் மாதாந்தம் வெளிவந்த வலையின் 12 இழைகளையும் தாங்கிய தொகுப்பாக இன்று இந்நூல் உங்கள் கரங்களில் தவழ்கின்றது.

மாணவர் முதல் முதியோர் வரை வாசித்துப் பயன்பெறும் வகையில் நூலை வடிவமைத்த நூலாசிரியரின் இப்பணி தொடர எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு, இவ்வாசிரியர் நூலகவியல் கற்கை நெறியைப் பூர்த்தி செய்த எனது மாணவர்களில் ஒருவர் என்பதில் நான் பெரிதும் மகிழ்வடைகின்றேன்.

இவரது இவ் உயரிய சேவை தொடர வாழ்த்துகின்றேன்.

திருமதி. கல்பனா சந்திரசேகர்
சிரேஷ்ட உதவி நூலகர்,
யாழ்.பல்கலைக்கழகம்.

2013.04.22

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதிப்புரை

சி.என்.எச்.சாள்ஸ் எம்முடைய நீண்டகால நண்பன். அவர் பழகுவதற்கு இனிமையானவர், அடக்கமான குணம், பொது நலநோக்கு, புதியவற்றைத் தேடிக் கற்றுக் கொள்ளும் ஆர்வம். கற்றுக் கொண்டதை மற்றவர்களும் கற்றுக் கொள்ளவைக்கும் துடிப்பு அவருக்குரிய தனித்துவம்.

அலுவலக உத்தியோகத்துடன் மட்டும் முடங்கிவிடாது, அனைவருக்கும் பயனுடைய வகையில் "வலை" என்னும் அறிவியல் சஞ்சிகையை காலத்தின் தேவை அறிந்து வெளியிடுவது சிறப்பு. "வலை" சஞ்சிகை போட்டிப் பரீட்சை எழுதுபவர்களுக் கும், மாணவர்களின் பொதுஅறிவு வளர்ச்சிக்கும் பெரிதும் துணை புரிகின்றது.

சமகால அறிவை மாதா மாதம் தொகுத்து வெளியிடுவது பெரும் இடர்பாடு மிக்க பணி. அந்தப் பணியை மனநிறைவுடன் சி.என்.எச்.சாள்ஸ் தானே தனியனாக முன்னெடுத்து எமது சமூகத் திற்கு அரும்பெரும் பணியாற்றிவருவது பாராட்டுக்குரியது.

கல்விப் புலத்தில் இருப்பவர்கள் முன்னெடுக்க வேண்டிய பணியை தனியொரு மனிதராக பொதுநல நோக்குடன் செயல் படுத்துவது சிறப்பு. "வலை" சஞ்சிகைக்குத் தேவையான தகவல் களை சேகரிப்பது, கணனி அச்சுச் செய்வது, விற்பனைத் தளத் திற்கு விநியோகிப்பது போன்ற அனைத்தும் தனியனாக செய்து வருகின்றார்.

அவர் நூலகத்தில் பணியாற்றி வருவதினால் வாசிப்புக்கு களமுண்டு. அதனைப் பயன்படுத்தி பலரையும் பயனடைய வைக் கிறார். அறிவியல் உலகம் அவரை நன்றியுடன் என்றும் போற்ற வேண்டும்.

சி.என்.எச்.சாள்ஸ் 1972 நவம்பர் 21 இல் சாள்ஸ் நவரட்ணம்-ஜசிந்தா ஆகியோருக்கு மூன்றாவது பிள்ளையாகப் பிறந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலாலியைச் சொந்த இடமாகக் கொண்ட சாள்ஸ், ஆரம்பக் கல்வியை மயிலிட்டி றோமன் கத்தோலிக்க பாடசாலையிலும், இடைநிலைக் கல்வியை பலாலி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மற்றும் இளவாலை ஹென்றியரசர் கல்லூரியிலும், உயர்நிலைக் கல்வியை மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் கற்றார்.

பாடசாலைக் கல்வியை முடித்த சாள்ஸ் நூலகத்துறையில் உள் நுழைந்து படிப்படியாக வளர்ச்சி பெற்றார்."நூலகத் தகவல் விஞ்ஞான டிப்ளோமா " மூன்று வருடகால கற்கை நெறியையும் துறைபோகக் கற்று தற்போது "நூலகர் தரம் III" இல் யாழ்.மாநகர சபையின் பொதுசன நூலகத்தில் சேவையாற்றி வருகிறார்.

கணனித்துறையிலும் போதிய அறிவு கொண்டவர் சாள்ஸ். அவர் சி.என்.ஹெய்ன்ஸ் என்ற பெயரில் யாழ்.குடாநாட்டுப் பத்திரிகையில் கவிதைகளையும், மற்றும் "யாழ்.தினக்குரல்", "நமது ஈழநாடு" பத்திரிகைகளில் சிறுசிறு கட்டுரைகளையும் எழுதி வந்தார். "யாழ்.தினக்குரல்", "நமது ஈழநாடு" , " வலம்புரி" பத்திரிகைகளில் நீண்டகாலமாக பிரதேச செய்தியாளராகவும் பணியாற்றி வந்துள்ளார்.

"வலை" சமகால பொது அறிவுத் தொகுப்பு (ஒக்ரோபர் 2011- செப்ரெம்பர் 2013) ஒரு வருட இழைகளைத் தொகுத்து புத்தகமாக வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

இனிவரும் காலத்தில் இப்படியான தொகுப்புகளையும் வேறு பல அறிவியல் நூல்களையும் வலைப் பதிப்பகம் வெளியிடும் என்ற நம்பிக்கையுடன் பயணிக்கின்றோம். எங்கள் பணிக்கு உங்கள் கரம் என்றும் இருந்திட யாசிக்கிறோம்

சி.என்.எச்.சாள்ஸின் பணியை வாழ்த்துகின்றோம்.

வி.பி.கஜேந்திரா

24.04.2013 பதிப்பாசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாசக நெஞ்சங்களுக்கு...**

எமது நாட்டில் சகல விதமான அரச வேலைவாய்ப் புகளுக்கும் போட்டிப் பரீட்சைகள் மூலமும், நேர்முகப் பரீட்சைகள் மூலம் தெரிவு இடம்பெறுகின்றது. அவற்றுள் அமைந்துள்ள பாடங்களில் பொது அறிவு விடயம் முக்கிய இடம் பிடிக்கின்றது.

கடந்தகாலப் பரீட்சை வினாக்களில் சமகால விடயங் களே வினாக்களாக வருவதை அவதானிக்கலாம். இன் றைய அவசர யுகத்தில் பத்திரிகைகளை வாசிப்பதும், நூலகங்களுக்குச் சென்று படிப்பதும் தற்போது அருகி வருவதைக் காணலாம்.

எனவே,சமகால விடயங்களை அறிய வேண்டுமாயின் அன்றாடப் பத்திரிகைகளை வாசிப்பது மிகவும் அவசிய மாகும். இன்றைய மாணவர்களும், போட்டிப் பரீட்சார்த் திகளும் பரீட்சை அனுமதி அட்டை கிடைத்த பின்னரே பொது அறிவு விடயங்களைத் தேடுவதற்கு நூலகங்களை நாடி ஓடி வருவதையும் நான் நூலகத்துறை சார்ந்தவன் என்ற வகையில் அவதானித்து வந்துள்ளேன். எனவே இவ்வாறான பரீட்சார்த்திகள், பாடசாலை மாணவர்க ளுக்கு என்னால் எவ்வாறு உதவ முடியும்? இதனை இலகு வாக்கும் வழி என்ன? எனவே பத்திரிகைகளில் வருகின்ற சமகால விடயங்களை மட்டும் தொகுத்து வெளியிட்டால் என்ன? என்ற கேள்வி எனக்குள் பல காலமாக இருந்து வந்தது. அந்தச் சிந்தனையின் வடிவமே இந்த "வலை" என்ற சமகால பொது அறிவுத் தொகுப் பாகும்.

அது என்ன வலை? ஒரு சிலந்தி எவ்வளவோ கஷ்ரப்பட்டு, முயற்சி எடுத்து அந்தச் சிலந்தி வலையை நெய்கின்றது என்பது உங்களுக்கும் தெரியும். அதனைக் கருத்தாக வைத்துத்தான் அந்த இலட்சனை (Logo) வடிவமைக்கப்பட்டது. எனவேதான் இதற்கு வலை எனப் பெயரிடப்பட்டது.




எம் மத்தியில் வெளிவரும் தினகரன், வீரசேகரி, தினக்குரல், உதயன், வலம்புரி, தினமுரசு இன்னும் இதர பத்திரிகைகளில், இணையத்தளங்களில் அன்றாடம் வெளிவருகின்ற சமகாலத் தகவல்களை உள்ளடக்கி வெளிவருவதே இவ் வலையாகும். இவ்விதழ் ஒவ் வொரு மாதமும் முதல் வாரத்தில் வெளியாகும் என்பதை தங்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றேன்.

இந்த முயற்சிக்கு உறுதுணையாக இருந்த அன்பு நெஞ்சங்கள் அனைவருக்கும் எனது இதயங்கனிந்த நன்றிகள். எனவே இந்த இதழ் தொடர்ந்து வெளிவர உங்கள் ஆதரவை நாடி நிற்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒக்ரோபர் மாத சர்வதேச தினங்கள்




- ஒக்ரோபர் – 01 – சர்வதேச சிறுவர் தினம்
- ஒக்ரோபர் – 01 – சர்வதேச முதியோர் தினம்
- ஒக்ரோபர் – 03 – சர்வதேச மது ஒழிப்புத் தினம்
- ஒக்ரோபர் – 03 – சர்வதேச உயிரினங்கள் தினம்
- ஒக்ரோபர் – 06 – சர்வதேச ஆசிரியர் தினம்
- ஒக்ரோபர் – 09 – சர்வதேச அஞ்சல் தினம்
- ஒக்ரோபர் – 10 – சர்வதேச உளச்சுகாதார தினம்
- ஒக்ரோபர் – 14 – உலக கட்டளைகள் தினம்
- ஒக்ரோபர் – 15 – சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினம்
- ஒக்ரோபர் – 16 – சர்வதேச உணவு தினம்
- ஒக்ரோபர் – 17 – சர்வதேச வறுமை ஒழிப்பு தினம்
- ஒக்ரோபர் – 21 – சர்வதேச விவசாய தினம்
- ஒக்ரோபர் – 31 – சர்வதேச சேமிப்பு தினம்

✧ இலங்கையில் தேசிய பாதுகாப்பு தினம் எப்போது கொண்டாடப்படுகிறது? டிசம்பர் - 26

## இலங்கை பற்றிய இம்மாத வீசலில்...

✧ இலங்கையில் சர்வதேச விளையாட்டு மைதானம் அமைந்துள்ள இடமும், அதன் பெயரும் தருக?
தியகம, மகிந்தராஜபக்ஷ சர்வதேச விளையாட்டு மைதானம்.

✧ அண்மையில் இலங்கையில் எரிவாயு வளம் கண்டுபிடிக்கப்பட்ட இடம் எது? மற்றும் ஆய்வுமேற்கொண்டு உறுதிப்படுத்திய நிறுவனம் எது?
இலங்கையின் வடமேற்கே அமைந்துள்ள மன்னார் கடற்பிரதேசம்.
இந்திய நிறுவனத்தின் துணை நிறுவனமாகிய 'கெய்ன் சிறிலங்கா' என்ற நிறுவனம் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✦ சுகாதார அமைச்சினால் தேசிய சுகாதார வாரம் எப்போது கொண்டாடப்படுகிறது?
ஒக்ரோபர் 03 - 09 வரையாகும்.

✦ 'தேசத்தின் மகுடம்' கண்காட்சி கடந்த வருடம் (2012) நடை பெற்ற இடம் எது? ஓயாமடு (அனுராதபுரம்)

✦ யாழ்ப்பாண பொது நூலகத்தில் பிரிட்டன் நூலகம் மற்றும் பிரிட்டிஷ் கவுன்சிலும் அண்மையில் இணைந்து நடத்திய கண்காட்சியின் பெயர் என்ன?
"இலங்கைக்கு மீளத் திரும்புதல்"

✦ கல்வியமைச்சினால் அனுஷ்டிக்கப்பட வேண்டுமென சகல பாடசாலைகளுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ள சர்வதேச கல்வித்தர தினம் எப்போது கொண்டாடப்படுகிறது?
ஒக்ரோபர் - 14

✦ 137 ஆவது உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு நாட்டிலுள்ள தபாலகங்களுக்கு இடையே நடத்தப்பட்ட போட்டியில் தேசிய ரீதியில் சிறந்த அஞ்சல் அலுவலகமாகத் தெரிவு செய்யப்பட்ட தபாலகம் எது?
யாழ். பிரதம தபாலகம்

✦ அண்மையில் வர்த்தமானிப் பத்திரிகை அறிவித்தல் ஊடாக பாதுகாப்பு அமைச்சுடன் இணைக்கப்பட்ட அதிகாரசபை எது?
நகர அபிவிருத்தி அதிகார சபை

✦ 1000 பாடசாலை அபிவிருத்தித் திட்டம் என்பது என்ன?
மகிந்த சிந்தனையின் கீழ், 1000பாடசாலைகளைத் தரமுயர்த்தும் திட்டமாகும்.

✦ இலங்கையின் முதலாவது கூட்டுறவு கடனுதவு சங்கம் எங்கே ஆரம்பிக்கப்பட்டது?
மாத்தறை மாவட்டத்தில் "வெல்லபடபத்து" என்ற இடத்தில் ஆரம்பிக்கப்பட்டது. (Credit Society)

✦ அண்மையில் புதிய தலைமைத்துவ விருது கிடைக்கப்பெற்ற நிறுவனம் எது?
வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கா ரெலிக்கொம் மேம்பவர் சொலுயூசன்ஸ் நிறுவனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✧ NELSIP திட்டம் என்பது என்ன?
வடக்கு - கிழக்கு உள்ளூராட்சி சேவைகள் மேம்படுத்தும் திட்டம் (North East Local Services Improvement Project )

✧ "ஜனசெவன" திட்டம் என்பது என்ன?
வீடமைப்புத் திட்டமாகும்.

✧ மன்னார் வளைகுடாவில் புதிய வகை "பேய்க் கணவாய்"இனம் இந்த மாத (2011 ஒக்ரோபர்)முதல் வாரத்தில் தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி ஆராய்ச்சியாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டது.

✧ இலங்கையில் ஆகக்கூடுதலான தனித்த ATM வலையமைப்பைக் கொண்டுள்ள வங்கி எது?
கொமர்ஷல் வங்கி

✧ 2012 ஆம் ஆண்டு இலவசப் பாடப் புத்தகங்களை விநியோகிப்பதற்காக எவ்வளவு மில்லியன் செலவிடப்பட்டுள்ளதாக கல்வியமைச்சு அறிவித்துள்ளது.
3 ஆயிரம் மில்லியன்

✧ வலி.கிழக்குப் பிரதேசசபை தனது எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த எடுத்துள்ள நடவடிக்கையின் திட்டம் என்ன? "பூச்சியக் குப்பை"

✧ தேசியமட்டப் பாடசாலைகளுக்கிடையிலான தடகளப் போட்டியில் வடமாகாணத்தின் சிறந்த வீரராகத் தெரிவாகிய மாணவன் யார்? வி.ஜஸ்மினன் - யாழ். இந்துக் கல்லூரி.

✧ சிறந்த ஆசிரியர், அதிபருக்கு வழங்கப்படும் விருது எது?
"ஆசிரியர் பிரதீபா பிரபா" விருதாகும்.

✧ 2011 ஒக்ரோபரில் கொலன்னாவையில் தேர்தல் பிரச்சார அசம்பாவிதத்தின் போது நடைபெற்ற சூட்டுச் சம்பவத்தில் இறந்த ஜனாதிபதியின் ஆலோசகர் யார்?
பாரத லக்ஸ்மன் பிரேமசந்திர

✧ அண்மையில் இலங்கையின் பொழுதுபோக்கு முன்னோடி சஞ்சிகையாகத் தெரிவு செய்யப்பட்ட சஞ்சிகை எது?
Showtime

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✧ ரயில் போக்குவரத்துப் பாதிப்புக்களைத் தடுப்பதற்கு இலங்கை ரயில்வே திணைக்களத்தினால் தற்போது செயற் படுத்தப்படும் திட்டம் எது?
புதிய ரயில் தொடர்பாடல் திட்டம் (ரயில் ரெக்கிங் சிஸ்ரம்)

✧ தருஸ்மன் அறிக்கை என்பது யாது?
இது இலங்கை தொடர்பில் ஐ.நா.வின் அதிகாரபூர்வமான அறிக்கையாகும்.

✧ இலங்கையின் சனத்தொகையில் இளைஞர்கள் எத்தனை சதவீதம் உள்ளனர்? 25 %

✧ 2025 ஆம் ஆண்டளவில் இலங்கையில் வயது முதிர்ந்தோர் எத்தனை சதவீதம் இருப்பர்?
20 %

✧ இலங்கையின் சனத்தொகை யாது?
2 கோடியே 10 இலட்சம்

✧ இலங்கையின் தலைசிறந்த ஆண்டறிக்கை 2010 ஐ தயாரித்த மைக்கான நியூயோர்க் நகரில் இடம்பெற்ற 25ஆவது சர்வ தேச ARC விருது வழங்கும் நிகழ்வில் மகுடம் சூடிக்கொண்ட வங்கி எது?
தேசிய சேமிப்பு வங்கி (National Saving Bank)

✧ சாரதி அனுமதிப்பத்திரங்களை எத்தனை நாட்களில் வழங்கப் படுமென போக்குவரத்து அமைச்சு அறிவித்துள்ளது?
07 நாட்கள்

✧ இந்தியாவின் ஆந்திராவில் வெண்கலத்தில் சிலை வைக்கப்பட்ட நடிகை யார்?
சாவித்திரி

✧ உலகில் மிகவும் விலை குறைந்த கணினி எங்கு அறிமுகம் செய்யப்பட்டது? அதன் பெயர் என்ன?
இந்தியாவில், ஆகாஷ்

✧ சர்வதேச நடவடிக்கைகளுக்கான நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியத்தின் 33ஆவது வருடாந்த மாநாடு இறுதியாக நடை பெற்ற இடம் எது? கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✦ ஐக்கிய நாடுகளுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி யார்? மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா

## அயல்நாட்டுப் பக்கமாக வீசிய வலையில்...

✦ ஆங்கிலக் கால்வாயை நீந்திச் சாதனை புரிந்த இந்தியப் பெண் யார்?
ரம்யா ராஜசேகர் - வயது - 18



✦ பெல்ஜியம் நாட்டில் நடந்த உலக சவுண்டு டிராக் அக்கடமி விருதுகள் 2011 வழங்கும் நிகழ்வில் இசைப்புயல் ஏ.ஆர்.ரஹ்மானுக்கு வழங்கப்பட்ட விருது யாது?
"மக்கள் தெரிவு" விருது

✦ மிகப்பெரிய தேசியக் கொடி தயாரித்து பறக்கவிட்ட நாடு எது? இந்தியாவின் ராஜஸ்தான் மாநிலத்தில் பறக்கவிடப் பட்டுள்ளது. இதன் அகலம் 48 அடி, நீளம் 72 அடி ஆகும்.

✦ இந்தியாவின் அன்னா ஹசாரே அவர்களின் எதிர்ப்புப் போராட் டம் எத்தகையது?
ஊழலுக்கு எதிரான போராட்டம்

## உலகை நோக்கிய வீசலில்...

✦ மிஸ் மெஸிடோனியா 2011 அழகியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட வர் யார்? வெஸ்னா ஜகிமுவ்ஸ்கா (மெஸிடோனியா)

✦ ஜப்பான் நாட்டில் கடந்த மார்ச் மாதம் 04 நிமிடம் ஏற்பட்ட நில நடுக்கத்தால் உண்டான அழிவுகளைக் காட்டும் விதமாக படங் கள் அடங்கிய புத்தகம் ஒன்றை அண்மையில் ஜப்பான் வெளி யிட்டது அதன் பெயர் என்ன?
"நான்கு நிமிடங்களில் நகரத்தின் அழிவு"

✦ விமான சேவைக்கு அளிக்கப்படும் மதிப்புமிக்க ஒஸ்கார் விரு தென வர்ணிக்கப்படும் விருது வழங்கப்பட்ட விமான சேவை நிறுவனம் எது? ஏயார் இந்தியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✧ நியூயோர்க் சர்வதேச சந்தையில் நடத்தப்படும் 100 நிறுவனங்களின் பட்டியலில் முதலிடத்தைப் பெற்றுக்கொண்ட நிறுவனம் எது?
கொக்கோ கோலா

✧ அண்மையில் காலமான அப்பிள் நிறுவனத்தின் தலைவரும், ஸ்தாபகரும் யார்?
ஸ்டீவ் ஜாப்ஸ் (புற்றுநோயினால் 05.10.2011 இல் மரணமானார்)



✧ 2011 இன் இறுதியில் பொதுமக்கள் போராட்டங்களால் பதவியைத் துறக்க முடிவு செய்த ஜனாதிபதி யார்? அவர் எந்த நாட்டவர்?
அலி அப்துல்லா சலே - ஏமன் நாட்டவர்.

✧ 2011 இல் தமது நாட்டு ஜனாதிபதிக்கு எதிராக மக்கள் போராட்டம் வெடித்த நாடும், ஜனாதிபதியும் யார்?
சீரியா - பஷார் அல்-ஆசாத்

✧ 26 வயது இளம் பெண் 70 வயதுப் பாட்டியாக மாறிய சம்பவம் எங்கு நடை பெற்றது?
வியட்நாம் நாட்டில்.

✧ சீனாவிடம் இருந்து பிரிந்து தற்போது தனிநாடாக இயங்கிவரும் நாடு எது?
தாய்வான் - அதிபர் - மாயிங் ஜியோவு

✧ சர்வதேச அஞ்சல் ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் நாடுகள் எத்தனை?
192

✧ 68 லீற்றர் இரத்தத்தை தனது வாழ்நாளில் தானமாக வழங்கிச் சாதனை படைத்த பெண்மணி யார்?
கிறின் டொறத்தி - வயது-73, பிரிட்டிஷ்

✧ "கூடங்குளம் அணு மின் நிலையம்" அமைப்பதில் மக்கள் எதிர்ப்புக்கு முகம் கொடுக்கும் நாடு எது?
இந்தியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✧ சாதாரண குடும்பத்துப் பெண்ணை 2011இில் மணம் முடித்த பூட்டானின் இளம் மன்னர் யார்?
நாம்கியால் வாங்சுக்

✧ மரதன் ஓட்டம் ஓடி கின்னஸ் சாதனை புரிந்த 100 வயதான தாத்தா யார்?
பஜாசிக் - லண்டன் (இவ் மரதன் ஓட்டம் பிரிட்டனில் நடைபெற்றது).

✧ 2011 ஆம் ஆண்டுக்கான 'புக்கர்' விருதினைப் பெற்றுக் கொண்ட எழுத்தாளர் யார்?
ஜூலின் பர்னஸ் - பிரிட்டன் (இது ஆங்கில இலக்கியத்திற்கு வழங்கப்படும் உயரிய விருதாகும்).

✧ 2011 இறுதியில் கிளர்ச்சியாளர்களால் கொல்லப்பட்ட லிபியாவின் சர்வாதிகாரி யார்?
கேணல் முகம்மர் கடாபி (வயது - 65), (42 ஆண்டுகள் ஆட்சி புரிந்தவர்தனது சொந்த ஊரான 'சித்ரில்' இல் கொலை செய்யப்பட்டார்).



✧ 2011ஒக்ரோபரில் நடைபெற்ற வடமாகாணத்தின் உள்ளூராட்சிச் சபைகள் பங்கேற்ற கண்காட்சியின் தொனிப்பொருள் என்ன? எங்கு நடைபெற்றது?
"உள்ளூர் அபிவிருத்தி ஊடாக தேசிய அபிவிருத்தி", வவுனியா

✧ அண்மையில் பூகம்ப அனர்த்தத்தினால் 1000 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்ட நாடு எது?
துருக்கியின் தென்கிழக்குப் பகுதி.

✧ குழந்தைகளுக்கான நீதிமன்றம் அண்மையில் எந்த நாட்டில் அமைக்கப்பட்டது? இந்தியா

✧ உலகின் பொதுநலவாய நாடுகளின் 22 ஆவது உச்சிமாநாடு எங்கே நடை பெற்றது?
அவுஸ்ரேலியாவின் பேர்த் நகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✧ "கோப்" என்றால் என்ன?

அரச நிறுவனங்களைக் கண்காணிக்கும் நாடாளுமன்ற தெரிவுக்குழுவாகும்.

✧ 'சீபா" ஒப்பந்தம் என்பது என்ன?

இந்திய - இலங்கை அரசுகள் மத்தியில் பொருளாதார ஒத்துழைப்புத் தொடர்பான ஒப்பந்தமாகும்.

✧ "திவிநெகும" என்பது யாது?
வாழ்வின் எழுச்சி

✧ மியன்மார் சுதந்திரப் போராட்டத் தலைவி யார்?

ஆங்சாங்சூகி- இவருக்கு அண்மையில் அமெரிக்க அரசினால் வழங்கப்பட்ட கௌரவ விருது எது?
"வாலன் பர்க்"

✧ அமெரிக்காவின் போர்ப்ஸ் பத்திரிகை - இந்தியாவின் பணக்காரப் பெண் மணியாக யாரைத் தெரிவு செய்தது?

சாவித்திரி ஜிந்தாஸ்

✧ அண்மையில் விண்ணில் பறக்கவிடப்பட்ட முதல் பிளாஸ்ரிக் விமானம் எது?

போயிங் விமானநிறுவனம் தயாரித்த 787 ட்ரீம்லைனா விமான மாகும்.

✧ செயற்கை இரத்தம் : பிரிட்டனின் எடின்பர்க் மற்றும் பிரிஸ்டல் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் தயாரித்துள் ளனர். இன்னும் 02 வருடங்களில் பாவணைக்கு வரவுள்ளது.

✧ 200 நாடுகளின் தேசியக் கொடியை 1.30 நிமிடத்தில் சொல்லி முடித்துச் சாதனை படைத்த சிறுமி யார்?

இந்தியாவின், கரூர் பிரதேசத்தைச் சேர்ந்த 4 வயதுச் சிறுமியான இனியா ஆவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✧ சுமார் ஆயிரம் அடி ஆழத்துக்கு பதாளத்தை முட்டும் அளவுக்கு கட்டடம் கட்டவுள்ள நாடு எது?
மெக்சிகோ

✧ பிரிட்டிஷின் முன்னணி பத்திரிகை நிறுவனம் எடுத்த கருத்துக் கணிப்பில் உலகின் சிறந்த கல்வி நிறுவனமாக 'ஸுலிச்' (Schulich) ஐ தெரிவு செய்துள்ளது.

✧ "வால் தெரு" ஆக்கிரமிப்புப் போராட்டம் என்பது யாது?
அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் உலக பொருளாதார சீர்கேடு அடைவதற்கு காரணமான வங்கிகள், நிறுவனங்கள் மற்றும் அரசியல்வாதிகளைக் கண்டித்தும் நடைபெறும் போராட்டமாகும்.

✧ கிறீன் காட் என்றால் என்ன?
வேறொரு நாட்டுப் பிரஜை ஒருவர் அமெரிக்காவில் சென்று நிரந்தரமாகத் தங்குவதற்கான குடியுரிமையை வழங்கும் அட்டையே கிறீன் காட் ஆகும்.

✧ அமெரிக்காவைச் சேர்ந்த நியூஸ் வீக் என்ற நாளிதழ் நடத்திய கணிப்பில் பெண்களுக்கு ஏற்ற நாடு எனக்கணிக்கப்பட்டது எது?
ஐஸ்லாந்து (இந்தியா 141 இடத்தில் உள்ளது)

✧ ஆயுதங்கள் கொள்முதலில் உலக அளவில் முதலிடத்தில் உள்ள நாடு எது?
இந்தியா (அமெரிக்கா தகவல் வெளியிட்டுள்ளது)

✧ அண்மையில் புதிய நாடாக அங்கீகரிக்கப்பட்ட நாடு எது?
தென் சூடான்

✧ அண்மையில் இராஜினாமாச் செய்த பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சர் யார்? லியாம் பொக்ஸ்

✧ சுற்றுச் சூழல் என்பவற்றுக்கு 2004 இல் நோபல் பரிசு பெற்றவரும், அண்மையில் புற்றுநோயால் இறந்த ஆபிரிக்க நாட்டுப் பெண் யார்?
வெங்காரி மாதாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✧ புற்றுநோயைக் குணப்படுத்த மருந்து கண்டுபிடித்த கனடா வாழ் தமிழ் இளைஞர் யார்? அபிக்குமரன்

✧ உலகின் கவனத்தை ஈர்த்த 'விக்கிலீக்ஸ்' இணையத்தளத்தின் ஸ்தாபகர் யார்? ஜுலியன் அசாஞ்சே

✧ 20111 இறுதியில் கடும் வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்ட நாடு எது?
தாய்லாந்தின் தலைநகர் பாங்கொக்

✧ இந்தியாவின் மதுரையில் இடம்பெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் 102 வயது டைய பாட்டி போட்டியிட்டு வெற்றி யடைந்துள்ளர்.

✧ 2013 இல் பொதுநலவாய உச்சி மாநாடு எங்கே நடை பெறவுள்ளது?
இலங்கை (மொறிசியஸ் - 2015, மலேசியா - 2019 இல் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது)

✧ உலகின் முதன் முதல் ஒரு தொன் எடையுள்ள தங்க நாணயத்தை மிக அண்மையில் வெளியிட்ட நாடு எது?
அவுஸ்ரேலியா - (இது பிரிட்டிஷ் மகாராணி 02 ஆம் எலிச பேத்தின் வருகையை முன்னிட்டு வெளியிடப்பட்டது.

## விளையாட்டுப் பக்கம் வீசிய வலையில்...

✧ டெஸ் அரங்கில் அதிக போட்டிகளில் ஆட்ட நாயகன் விருது வென்று முன்நிலையில் இருப்பவர் யார்?
கலிஸ் - தென்னாபிரிக்கா

✧ இலங்கையில் AAA தரப்படுத்தலைக் கொண்ட முதலாவது வங்கி எது? தேசிய சேமிப்பு வங்கி

✧ சர்வதேச கிரிக்கெட் அரங்கில் அதிகளவு இரட்டைச் சதம் அடித்து முன்னணியில் நிற்கும் வீரர் யார்?
டான் பிராட்மன் - அவுஸ்ரேலியா (2ஆம் இடம் : பிறையன் லாரா - மேற்கிந்தியத்தீவு, 3 ஆம் இடம் : சங்கக்காரா - இலங்கை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✧ விளையாட்டு பஸ் மாதிரிகளைச் சேகரித்து (2012) ஆண்டுக்கான கின்னஸ் சாதனை படைத்தவர் யார்?
இங்கிலாந்தைச் சேர்ந்த பொறியியலாளர் ஜெப், அவரது மனைவி லிண்டா ஆகும்.

## 2011 நோபல் பரிசுகளின் பார்வையில்...

✧ இந்த வருட மருத்துவத்துக்கான நோபல் பரிசைப் பெற்றவர்கள் யார்?

புரூஸ் பட்லர் - அமெரிக்கா, ஜுல்ஸ் ஹொஃப்மன் - பிரான்ஸ்

(உயிரினங்களில் நோய் எதிர்ப்பு சக்தி எவ்வாறு உந்தப்படுகிறது என்பதைக் கண்டறிந்தமை) ரல்ஃப்ஸ்டெய்ன் - கனடா (புதிய அச்சுறுத்தல்கள் வர வர அவற்றுக்கேற்ப நோய் எதிர்ப்புக் கட்டமைப்பின் ஒரு பிரிவு எப்படி உருமாறிக்கொள்கிறது என்பதைக் கண்டறிந்தமை.

- இவர் பரிசுக்குழு அறிவிக்கும்போது 03 நாட்களுக்கு முன்னர் இறந்துவிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது)

✧ 2011ஆம் ஆண்டு இயற்பியலுக்கான நோபல் பரிசைப் பெற்றுக் கொண்டவர்கள் யார்?

- சால்பெர்ல் முட்டர் - அமெரிக்கா

- ப்ரியான் ஷெமிட் - அமெரிக்கா

- ஆடம் ரீஸ் - அமெரிக்கா

✧ 2011ஆம் ஆண்டு வேதியலுக்கான நோபல் பரிசைப் பெற்றவர் யார்?
டான்ஷெஷ்ட்மான் - இஸ்ரேல்

✧ 2011 ஆண்டு இலக்கியத்துக்கான நோபல் பரிசைப் பெற்றுக்கொண்ட எழுத்தாளர் யார்?

-தோமஸ்ட்ரான்ஸ்ட்ருமர் - சுவீடன். ("மிஸ்டிக்கல் வெர்சடைல் அண்ட் சேட்'' என்ற கவிதைத் தொகுப்புக்கே வழங்கப்பட்டது. இது 50 மொழிகளில் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டுள்ளது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✧ 2011 ஆம் ஆண்டு சமாதானத்துக்கான நோபல் பரிசினைப் பெற்றுக் கொண்டவர்கள் யார்?

- எலென் ஜோண்சன் சிர்லீப் - லைபீரியா ஜனாதிபதி (Elen Johnson Sirleafe)
- லேய்மாஹ் க்போவீ (Leymah Gbowee) சமூக ஆர்வலர் - லைபீரியா
- டவக்குல் கர்மான் (Tawak Kul Karman) யேமனின் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்.

✧ 2011 ஆம் ஆண்டு பொருளியல் துறைக்கான நோபல் பரிசைப் பெற்றவர்கள் யார்?

- தோமஸ் சேர்ஜன் - அமெரிக்கா
- கிறிஸ்தோபர் சிம்ஸ் - அமெரிக்கா



உலக மக்கள் தொகை
(31.10.2011)
700 கோடியை எட்டியது.

✧ ஐ.நா. சனத்தொகை 700 கோடி மக்கள் அதிகரிப்பு நிகழ்வின் தொனிப் பொருள் என்ன? "07 பில்லியன் மக்களாக நாம் ஒருவருக்கொருவர் அக்கறையுடன் வசிப்போம்" என்பதாகும்.

**உலக சனத்தொகை தினம் யூலை-11**

✧ ஐ.நா. சனத்தொகை நிதியம் 07 பில்லியன் பெறுமதியானதிட்டத்தை செயற்படுத்த உத்தேசித்துள்ளது.

✧ அத்திட்டங்கள் எவை?

- 07 பில்லியன் மக்களின் வாசிப்பு மற்றும் அதன் மூலம் ஏற்படும் சாவால்கள்
- சந்தர்ப்பம் மற்றும் செயலுக்கு உள்ள திறமை
- உலகின் எதிர்காலததைத் திட்டமிடுதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உலக சனத்தொகை 07 பில்லியனாக்கிய முதல் ஆண் குழந்தை பிலிப்பைன்ஸ் தலை நகர் மனிலாவில் பிறந்தது.

குழந்தைக்கு 'டானிகா' எனப் பெயர் சூட்டப்பட்டது. இதேவேளை, இலங்கையில் பிறந்த முதற்குழந்தை 'முதுமாலி' ஆகும்.



**உலகை மூன்று அப்பிள்கள் மாற்றியமைத்தன**



- ஒரு அப்பிள் ஏவாளை மயக்கியது.
- இன்னொரு அப்பிள் நியூட்டனை மயக்கியது.
- 3 ஆவது அப்பிள் ஸ்டீவ் ஜாப்ஸின் கைவசம் இருந்தது.






*2011 புக்கர் விருது : ஜூலின்*



2011 சமாதானத்துக்கான நோபல் பரிசுக்கு உரியவர்கள்
(விபரம் 13ஆம் பக்கத்தில்...)



## *பேராசிரியரின் பார்வையில்...*

உலகம் இன்று தகவலால் ஆளப்படுகிறது. தொடர்புத்துறையின் அபரிதமான வளர்ச்சியானது உலகின் எங்கோ ஒரு மூலையில் நடக்கும் சம்பவத்தைக் கூட ஒரு வினாடிப்பொழுதில் எம் கண்முன்னே கொண்டு வருகிறது.

இன்றைய அவசர யுகத்தில் ஊடகங்களோடு எம்மைப் பூரணமாகப் பரிச்சயப்படுத்திக் கொள்ளமுடியாதுள்ளது. இதனால் பல விடயங்களை நாம் அறியாமல் விடுகிறோம். இத்தகைய பின்புலத்தில் 'வலையின்' வரவு முக்கியத்துவம் பெறுகிறது.

வலை, அது பின்னப்படும் இறுதி நிமிடம் வரையிலான தகவல்களைத் தாங்கி நிற்பது இதன் சிறப்பம்சம். வாசகர்கள் வலைக்கு ஆதரவுக்கரம் நீட்ட வேண்டுகிறேன்.

**பேராசிரியர். கி. விசாகரூபன்,**
தலைவர் / தமிழ்த்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாசக நெஞ்சங்களுக்கு...**

வலையின் இரண்டாவது இழையில் உங்களைச் சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

இந்த வலையின் முயற்சிக்கு ஆதரவுக்கரம் நீட்டிய வாசக நெஞ்சங்கள், மாணவச் செல்வங்கள் மற்றும் கல்விமான்கள் அனைவருக்கும் எனது இதயம் கனிந்த நன்றிகளைக் கூறிநிற்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

வலை அறிமுக விழா நிகழ்வினைப் பத்திரிகைகளில் செய்தியாகப் பிரசுரித்தும், விழா நடைபெற்ற பின்னர் அதன் நிகழ்வுப் படங்களையும், பிரமுகர்களது உரைகளையும் பத்திரிகைகளில் பிரசுரித்து ஒத்துழைப்பு வழங்கிய ஊடகவியலாளர்களுக்கும், பத்திரிகை நிறுவனங்களுக்கும் மற்றும் நிகழ்வுக்கு வந்து சிறப்பித்த அனைவருக்கும் எனது நன்றிகள்.

அது மட்டுமல்லாது, கடிதங்கள், தொலைபேசி மற்றும் ஈ-மெயில் மூலமும் பாராட்டுக்களையும், ஆலோசனைகளையும் தெரிவித்துக் கொண்டிருக்கும் அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எனது நன்றிகள்.

இவ்விதழ் சமகால விடயங்களை உள்ளடக்கிய பொது அறிவுத் தொகுப்பாக இருப்பினும், உங்களுக்கு பயன்படக்கூடிய பொதுவான பொது அறிவு விடயங்களும் தேடலின் போது வலையில் சிக்குகின்றன. எனவே அதனையும் உங்களின் நலன்கருதி வலையில் சேர்த்துள்ளேன். இனிவருகின்ற வலையிலும் சேர்க்கவுள்ளேன் என்பதை உங்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றேன்.

இந்த மாத வலையில் தகவல்கள் அதிகமாகச் சிக்கியதால் நான்கு பக்கங்கள் மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளன. இனிவரும் காலங்களில் இன்னுமின்னும் மெருகூட்டப்பட்டு வெளிவரும் என்பதை மகிழ்ச்சியுடன் கூறிக்கொள்கின்றேன்.

எனவே இந்த இதழ் தொடர்ந்து வெளிவர உங்கள் ஆதரவை நாடி நிற்கின்றேன்.

உங்களது ஆலோசனைகள் வரவேற்கப்படுகின்றன.



## நவம்பர் மாத சர்வதேச தினங்கள்...

- ✧ நவம்பர் - 11 - உலக நினைவூட்டல் தினம்
- ✧ நவம்பர் - 14 - உலக நீரிழிவு தினம்
- ✧ நவம்பர் - 16 - உலக பொறுமை / சகிப்புத் தன்மை தினம்
- ✧ நவம்பர் - 17 - அனைத்துலக மாணவர் தினம்
- ✧ நவம்பர் - 20 - உலக சிறுவர்/குழந்தைகள் உரிமைகள் தினம்
- ✧ நவம்பர் - 21 - சர்வதேச கடற்றொழில், உலக தொலைக்காட்சி தினம்
- ✧ நவம்பர் - 24 - உலக பரிணாம வளர்ச்சி தினம்
- ✧ நவம்பர் - 25 - பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்புத் தினம்
- ✧ நவம்பர் - 30 - கணினி பாதுகாப்பு தினம் (Computer Security day)




❒ உலக சனத்தொகை ஏழு பில்லியனை எட்டும் போது இலங்கையில் பிறந்த முதல் குழந்தையின் பெயர் என்ன?

"முதுமாலி" (23 வயதான டனுஷிகா டிலானிக்குப் பிறந்ததா கும்-கொழும்பு)

❒ பிலிப்பைன்ஸ் தலைநகர் மனிலாவில் கமிலி கலுறா என்ற பெண்மணி டானிகா கமாச்சோ என்ற பெண் குழந்தையைப் பெற்றெடுத்தார்.

❒ இந்தியாவின் உத்தரப் பிரதேசத்தில் மால் பகுதியில் நர்கிஸ் என்ற பெண் குழந்தையும் பிறந்தது.

❒ சனத்தொகைக் கட்டுப்பாடு குறித்து மக்களுக்கு விழிப் புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் ஐ.நா. ஆரம்பித்துள்ள இணையத்தளம் எது?

www.7billionnan-dmc.org - "ஏழு பில்லியனும் நானும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை பற்றிய இம்மாத வீசலில்...

❖ உள்ளூராட்சிஅமைச்சினதும்,உள்ளூராட்சி திணைக்களத்தினதும் 2009, 2010ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட முகாமைத்துவப் போட்டியில் முதலிடத்தைப் பெற்றுக் கொண்ட பிரதேசசபை எது? நல்லூர் பிரதேச சபை.

❖ இலங்கையின் நீரிழிவு நோயினால் எத்தனை இலட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது? 48 இலட்சம்

❖ கண்டியில் அமைந்துள்ள சிறிமாவோ பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற உள்ளூர் உற்பத்தித் துறைகளின் கண்காட்சியின் பெயர் என்ன? "சில்ப - 2011"

❖ அகில இலங்கை ஆசிரியர்களுக்கான விளையாட்டு விழாவில் இரண்டு பதக்கங்களை வென்றுள்ள ஆசிரியர் யார்?
ஜேம்ஸ் யூட் நிரஞ்சன் (மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை)

❖ இலங்கையில் நடைபெற்ற உலக யோகா போட்டியில் வெற்றியீட்டிய மாணவி யார்? யாமினி தேவி - இந்தியா

❖ தற்போதைய இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் யார்? ஹில்டா ஹரல்ஸ்ட்

❖ வரலாற்றில் அலரிமாளிகையில் முதன் முதலாக ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற பட்டமளிப்புவிழா எது?
தாதியப் பயிற்சி டிப்ளோமா பட்டமளிப்பு விழாவாகும்.

❖ யாழ்.மாவட்டத்தில் ஒரே வலைப்பின்னலின் கீழ் கொண்டு வரப்பட்ட அரச அலுவலகம் எது?
யாழ்.மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்களில் செயற்படும் உதவிப் பதிவாளர் அலுவலகங்களாகும். இலங்கையில் ஏனைய பதிவாளர் அலுவலகங்கள் ஒரே வலைப்பின்னலில் உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ நிறுவனங்களின் வெற்றிடங்களை அறிந்துகொள் இலங்கையில் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இணையத்தளம் எது?
www.nccsl.lk

❖ இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தின் இறுதித் தருணங்களின் போது ஐ.நா.வின் பேச்சாளராகப் பணியாற்றிய ஹோடன் வெய்ஸ் எழுதி, உலகின் கவனத்தை ஈர்த்துள்ள நூல் எது?
"The Cage"

❖ இலங்கையின் இரண்டாவது சிறுவர் நீதவான் நீதிமன்றம் அண்மையில் திறந்து வைக்கப்பட்ட இடம் எது?

யாழ்ப்பாணம்-குருநகர் (முதலாவது நீதவான் நீதி மன்றம் வத்தளையில் உள்ளது)

❖ வெகுஜன ஊடக மற்றும் தகவல் அமைச்சின் ஆலோசனைக்கு இணங்க தொலைத்தொடர்பு ஒருங்கமைப்பு ஆணைக்குழுவினால் இலங்கையில் பார்வையிட முடியாதவாறு தடை செய்யப்பட்டுள்ள இணையத்தளங்கள் எவை?

ஸ்ரீலங்கா மிரர், கொசிப் 9,

பெபராஸ், லங்கா காடியன்,

லங்காவேநியூஸ், லங்கா நியூஸ் வெப்,

லங்கா ஈ நியூஸ்

❖ யாழ்.மாவட்டத்திற்கான டிஜிட்டல் வரைபடத்தினை தயாரிப்பதற்கு உதவி வழங்கியுள்ள நாடு எது?
ஜப்பான்

❖ 2040 ஆம் ஆண்டளவில் இலங்கையில் கடல் மட்டம் உயரலாம் என எதிர்வு கூறப்படும் இடங்கள் எவை?

நீர்கொழும்பு, மட்டக்களப்பு ஆகிய நகரங்களில் 15 தொடக்கம் 20 சதவீதமான பகுதிகள் கடல்மட்ட உயர்வால் பாதிக்கப்படுமென மொறட்டுவ பல்கலைக்கழகம் மேற்கொண்ட ஆய்வில் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ மும்மொழிச் சமூகத்தை உருவாக்கும் திட்டத்தின் கீழ் 2012 ஆம் ஆண்டை அரசாங்கம் என்ன "மும்மொழி" ஆண்டாக அறிவித்துள்ளது.

❖ வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் இணையத்தள முகவரி யாது? www.np.gov.lk

❖ இலங்கையில் முதன் முறையாக பார்வையற்றோருக்கான பிரெய்லி பத்திரிகை அண்மையில் வெளியிடப்பட்டது. அதன் பெயர் என்ன?
"விஜய் பிரெய்லி" (இது விஜய் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெளியிடப்பட்டுள்ளது)

❖ யாழ்.தேவி ரயில் புனரமைப்புக்கு இலங்கை ரயில் திணைக்களத்துடன் ஒப்பந்தம் செய்துள்ள இந்திய நிறுவனம் எது?
இர்கோர்ன் (பளை-கே.கே.எஸ் வரை 150 மில்லியன் டொலர் செலவில்)

❖ இலங்கையின் எப்பகுதியில் அண்மையில் நில அதிர்வு காணப்பட்டது?
இலங்கையின் தெற்கு கரையோர நகரான பலப்பிட்டியவில் (19.11.2011) மாலை நேரத்தில் நில அதிர்வு உணரப்பட்டது. (4.7 ரிச்டர் அளவில்)

❖ பழைய இரும்புக்கு விற்பனை செய்யப்படவிருக்கும் இலங்கைக்குச் சொந்தமான கப்பலின் பெயர் என்ன?
லங்கா முடித்த

❖ உலகத் தரத்தில் இசையமைத்து பிரித்தானியாவில் சாதனை படைத்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞன் யார்?
ரமேஷ் (அளவெட்டி)

❖ நிறுவனங்களின் இரகசியத் தகவல்களைப் பெற்று சட்டவிரோதமான வணிகத்தில் ஈடுபட்டதற்காக 11 வருடங்கள் சிறைத்தண்டனை வழங்கப்பட்ட இலங்கையில் பிறந்த அமெரிக்காவின் முன்னாள் வணிக முகாமையாளர் யார்?
ராஜ் ராஜரட்ணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ அண்மையில் இத்தாலியில் டாக்டர் பட்டம் பெற்றுச் சாதனை படைத்த இலங்கைப் பெண் யார்?
ஞானசீலன் பிரியா
(வயது-25 - ஊர்காவற்றுறை-நாராந்தனையைச் சேர்ந்தவர்)

❖ இலங்கையில் முதலாவது கத்தோலிக்க இணையத்தளம் யாழ்ப்பாணம் ஆயர் இல்லத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதன் முகவரி யாது? www.tenlive.com

❖ கல்வியமைச்சின் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினால் நடத்தப்பட்ட சுவரொட்டிப் போட்டியில் அகில இலங்கை ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட மாணவன் யார்?
சி.றஜிகரன் (உ சன் இராமநாதன் ம.வி. - வடமாகாணம்).

❖ இறுதியாக நடைபெற்ற இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தேசிய மாநாடு எங்கே நடைபெற்றது?
யாழ்ப்பாணம், வேம்படி மகளிர் கல்லூரியில்.

## வரவு செலவுத்திட்டம் 2012 ஒரு பார்வை...




## உலகை நோக்கிய வீசலில்...

¤ ஜி- 20 உச்சிமாநாடு இறுதியாக எந்தநாட்டில் நடைபெற்றது?
பிரான்ஸ் நகர் கேன்ஸ்ஸில் நடைபெற்றது. (இது ஒரு சுற்றுலாத் தலமாகும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

¤ உலகிலேயே அண்மையில் மிக நீளமான நாக்கை உடைய பெண் கின்னஸ் சாதனை படைத்தார் அவர் யார்?
காண்ல் டேப்பர் - வயது - 21,(அமெரிக்கா)
நாக்கின் நீளம் 9.7 செ.மீ.



¤ இந்த வருடம் (2011) பெஸ்ட் டிரெஸ் லேடி விருதுக்குத் தெரிவு செய்யப்பட்டவர் யார்?
இளவரசர் வில்லியம்ஸின் மனைவி கேத் மிடில்டன் ஆவார்.

¤ உலகின் சக்திவாய்ந்த நபர்களின் பட்டியலில் இவ்வாண்டு (2011) முதலிடத்தில் நிற்பவர் யார்?
பராக் ஒபாமா
(பிரபலமான /போர்ப்ஸ் சஞ்சிகை தகவல்)
இரண்டாவது இடம்: ரஷ்ய அதிபர் விளாடிமீர் புடின். மூன்றாவது இடம் : சீன அதிபர் ஹுஜிந்தாவோ



¤ 2020 ஆம் ஆண்டுக்குள் விண்வெளியில் ஆய்வு நிலையம் ஒன்றினை அமைக்க உள்ள நாடு எது?
சீனா

¤ நவம்பர் 08 ஆம் திகதி பூமியை நெருங்கிய கிரகத்தின் பெயர் என்ன?
2005 ஓய்.யூ.55 (அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாசா அறிவித்தது)

¤ 2011 உலக அழகியாகத் தெரிவு செய்யப்பட்டவர் யார்? அவர் எந்த நாட்டவர்?
இவியன் லுனாசோல் சார்கோ - வயது - 22, (பட்டதாரி)
வெனிசுலா, லண்டனில் நடைபெற்றது.



இவர் 61 ஆவது உலக அழகு ராணி ஆவார்.(இவர் கன்னியாஸ் திரியாக வரவேண்டும் என ஆசைப்பட்டவராம்)

¤ அண்மையில் ரூபாய்த் தாளில் தமிழ் எழுத்துக்களையும் பொறித்து வெளியிட்டுள்ள நாடு எது?
மொரீசியஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

¤ 18 வயதில் மேயராகத் தெரிவு செய்யப்பட்ட மாணவன் யார்?
ஜெர்மி மின்னிர் - அமெரிக்கா

¤ 2011 ஆம் ஆண்டுக்கான சீன சமாதான விருது யாருக்கு வழங்கப்பட்டது?
ரஷ்ய பிரதமர் விளாடிமிர் புடின்

¤ ஐ.நா. யுனெஸ்கோவில் முழுநேர உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட நாடு எது? பலஸ்தீனம்

¤ ஐ.நா. மன்ற வளர்ச்சித் திட்ட அமைப்பு வெளியிட்டுள்ள இந்த ஆண்டு மனித வளர்ச்சிக்கான குறியீட்டுப் பட்டியலில் 187 ஆவது நாடுகளில் இந்தியா எத்தனையாவது இடத்தில் உள்ளது? 134

¤ ஆசியபசுபிக் பிராந்திய சாரணர் சங்க ஜம்போறி எங்கே நடைபெற்றது?
2012 மார்ச் 31 - ஏப்ரல் 06 வரை மாத்தளை மாவட்டத்தில் நடைபெற்றது.

¤ அரசுக்கு வரி கட்டத் தவறிய பிரபல ஓவியருக்கு அவரது ஆதரவாளர்கள் பண உதவி செய்து உதவினர். அந்த ஓவியர் யார்?
சீனாவின் பிரபல ஓவியரான "அய் வெய்யின்" ஆவார்.

¤ 2011 ஆம் ஆண்டுக்கான ஐ.நா.வின் மனிதவள அபிவிருத்தி நாடுகள் தரப்படுத்தலில் இலங்கைக்கு எத்தனையாவது இடம் கிடைத்தது?
97 ஆவது இடமாகும். (இந்தியாவுக்கு 134 ஆவது இடம் கிடைத்தது)

¤ 2012 இல் சுற்றுலா செல்லக்கூடிய சிறந்த நகரமென உலக சுற்றுலா ஆர்வலர்களால் தெரிவு செய்யப்பட்ட உலகின் முதலாவது நகரம் எது? லண்டன்

¤ சர்வதேச நிதியமைச்சின் தற்போதைய தலைவர் யார்?
கிறிஸ்டினா லகார்டோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

¤ அண்மையில் மறைந்த அமெரிக்க வாழ் இந்திய நோபல் விஞ்ஞானி யார்? ஹர்கோவிந்த் குரானா (வயது-89)

¤ இந்த வருட சர்வதேச விமானக் கண்காட்சி எங்கே நடை பெற்றது? துபாய் (வளைகுடா)

¤ உலக அதிசயங்கள் பட்டியலில் சேர்க்கப்பட இருக்கும் காடு எது? அமேசன் காடு

¤ வயதான பெற்றோரைக் கைவிட்டால் ஓராண்டு சிறைத் தண்டனை வழங்குவதற்கு முடிவுசெய்துள்ள நாடு எது? தாய்வான்

¤ அரசு லீக் அமைப்பிலிருந்து தற்போது நீக்கப்பட்டுள்ள நாடு எது? சிரியா

¤ இந்த ஆண்டுக்கான கன்பூசியஸ் அமைதிக்கான விருது எந்த நாட்டுப் பிரதமருக்கு கிடைக்கவுள்ளது? அவர் யார்? ரஷ்யா - விளாடிமிர் புடின் (லிபியாவில் குண்டு வீச்சு நடைபெற்றதுக்கு புடின் கடும் எதிர்ப்புத் தெரிவித்திருந்தார்).

¤ சர்வதேச விண்வெளி நிலையத்திற்குப் பொருட்களைக் கொண்டு செல்ல ஆளில்லா விண்கலத்தை ரஷ்யா ஏவியது அதன் பெயர் என்ன? எம் 13 எம்

¤ உலகில் மிகப்பெரியதும், எடைகூடியதுமான நாணயத்தை வெளியிட்ட நாடு எது?
அவுஸ்ரேலியா (பிரிட்டிஷ் மகாராணியார் 2ஆம் எலிசபெத்தின் வருகையை முன்னிட்டு வெளியிடப்பட்டது. இதன் நிறை ஒருதொன், விட்டம் 80 செ.மீ, தடிப்பு 12 செ.மீ. ஆகும்.

¤. இங்கிலாந்தின் மகாராணி 2ஆம் எலிசபேத் மரணித்தால் செய்தி வெளியிடும் முறை குறித்து தற்போது பயிற்சி வழங்கும் செய்தி நிறுவனம் எது?
பி.பி.சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

¤ மூன்று தலைகளுடன் கூடிய குழந்தை அண்மையில் எந்த நாட்டில் பிறந்தது? இந்தோனேசியா

¤ ஜப்பானில் அணுக்கதிர் வீச்சால் பாதிக்கப்பட்ட நீரைக் குடித்து அதன் பாதுகாப்புத் தன்மையை உறுதிப்படுத்திய ஜப்பான் நாட்டு எம்.பி. யார்? யாஷுஹிரோ சோனாடா

¤ 1980 இல் தனது 40 ஆவது வயதில் இறந்த பொப் பாடகர் ஒருவரினது "பல்" 15 இலட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது அவர் யார்? ஜோண் - இங்கிலாந்து

¤ அமெரிக்காவின் முன்னாள் உதவி இராஜாங்கச் செயலாளர் யார்? றிச்சர்ட் ஆர்மிரேஜ்

¤ அண்மையில் 17 குழந்தைகளைக் காவு கொன்ற கொடூர வாகன விபத்து எந்த நாட்டில் நடைபெற்றது? சீனாவின் வடமேற்கு மாகாணம்

¤ கின்னஸ் சாதனை படைத்த 2,080 அடி கொண்ட உலகின் மிக உயரமான ஒலிபரப்புக் கோபுரம் அண்மையில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. அது எங்கு உள்ளது? இந்தக் கோபுரம் ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் அமைக்கப்பட்டுள்ளது. இதன் பெயர் "டோக்கியோ ஸ்கைட்ரீ"

¤ பூமியின் எந்தப் பகுதியிலும் உள்ள இலக்கை 30 நிமிடங்களில் சென்று தாக்கக் கூடிய ஏவுகணை ஒன்றினை அமெரிக்கா தயாரித்துள்ளது. அதன் பெயர் என்ன? "ஹைப்ப சொனிக்" (ஒலியிலும் 5 மடங்கு வேகம் கொண்டது)

¤ ஆசியான் (ஏசியான்) எனப்படும் தென்கிழக்கு ஆசிய உச்சி மாநாடு இவ்வருடம் எந்த நாட்டில் நடைபெற்றது? இந்தோனேசியாவின் பாலி மாகாணத்தில்

¤ எதிர்வரும் டிசம்பர் மாதம் இரண்டாம் வாரத்தில் துபாயில் நடைபெறவுள்ள சர்வதேச திரைப்பட விழாவில் இசைப்புயல் ஏ.ஆர்.ரஹ்மானுக்கு வழங்கப்படவுள்ள விருது எது? "வாழ்நாள் சாதனையாளர்" விருது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

¤ இராணுவ நிர்வாக சபைக்கு எதிராக மக்கள் போராட்டம் வெடித்த நாடு எது?
எகிப்தின் தலைநகரான கெய்ரோவில்

¤ அண்மையில் கின்னஸில் இடம்பிடித்துள்ள லட்டு எது?
ஆந்திராவில் விநாயகர் திருவிழாவுக்கு தயாரித்த 5,570 கிலோ உடையதும், 117 அடி உயரமுடைய 'லட்டு' ஆகும்

¤ 2011 ஆம் ஆண்டுக்கான குழந்தைகள் அமைதி விருதுக்குப் பரிந்துரைக்கப்பட்ட சிறுமி யார்?
பாகிஸ்தானைச் சேர்ந்த மலாலா யூஸுப்ஸாய என்ற 1வயதுச் சிறுமியாகும்.

¤ அண்மையில் உலங்குவானூர்தி விபத்தில் பலியாகிய மெக்சிக்கோ நாட்டின் உள்துறை அமைச்சர் யார்?
பிரான்சிஸ்கோ ப்ளேக்மோரா (வயது-45)

¤ உலகத் தலைவர்கள் முத்தமிடுவது போல விளம்பரம் வெளியிட்ட உலகப்புகழ் பெற்ற நிறுவனம் யாது?
பெனட்டன்

¤ வளைகுடாவில் அண்மையில் கலைக்கப்பட்ட பாராளுமன்றம் எது? குவைத் பாராளுமன்றம்

¤ பூமி போலவே இருக்கும் புதிய கிரகம் அண்மையில் அமெரிக்கப் பேராசிரியர் குழுவால் கண்டுபிடிக்கப்பட்டது. அதன் பெயர் என்ன? "ஹ கிளஸி - 581ஜி"

¤ லண்டனில் நடைபெற்ற ஏ.டி.பி. சர்வதேச ஆண்டு இறுதி டென்னிஸ் போட்டியில் சம்பியன் பட்டம் பெற்றவர் யார்?
ரோஜர் பெடரர் - சுவிட்சர்லாந்து.

¤ பூமியைத் துளைத்துத் தாக்கும் 13 தொன் எடையுள்ள வெடி குண்டைத் தயாரித்த நாடு எது?
அமெரிக்கா

¤ உலக வலைப்பின்னல் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு?
1990 World Wide Web

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

¤ அண்மையில் எந்த நாட்டு ஜனாதிபதி பதவி விலகினார்? அவர் யார்?
ஏமன், அலி அப்துல்லா சலே (30 வருட ஆட்சி, மக்கள் எதிர்ப்புக் காரணமாக பதவி விலகினார்)

¤ கடலுக்கு அடியில் சிறு விடுதியை அமைத்த நாடு எது?
அமெரிக்காவின் புளோறிடாவிலுள்ள கடல் ஆய்வு மையமாகும்.

¤ நாணயங்கள் இல்லாத நாடு எது?
பராகுவே

¤ அண்மையில் (2011) கடுமையான பனிப்பொழிவால் பாதிக்கப்பட்ட நாடு எது? அமெரிக்கா

## அயல்நாட்டுப் பக்கமாக வீசிய வலையில்...

¤ உலகில் காசநோயாளர் எண்ணிக்கையில் முதலிடத்தில் உள்ள நாடு எது? இந்தியா

¤ இந்திய நாட்டின் பிரபல எழுத்தாளர் ஜெயகாந்தன் அவர்களுக்கு ரஷ்ய நாட்டின் மிக உயரிய விருது வழங்கப் பட்டது. அந்த விருதின் பெயர் என்ன?
"ஆர்டர் ஒ.்.ப் ்.பிரன்ஷிப்"

¤ கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் பொருளாதார ஆராய்ச்சிப் பட்டம் பெற்ற இந்தியப் பெண்மணி யார்?
மஹிசா கண்ணா - வயது - 23

¤ பாடகராக அறிமுகமாகி 50 ஆண்டுகளைப் பூர்த்தி செய்துள்ள தென்னிந்தியப்பாடகர் யார்?
கே.ஜே.ஜேசுதாஸ்

¤ அண்மையில் இந்தியாவால் வெற்றிகரமாக அனுப்பப்பட்ட ஏவுகணை எது? அக்னி - 04

¤ சர்வதேச பெண்கள் அமைப்பு உறுப்பினராகத் தேர்ந்தெடுக் கப்பட்ட இந்திய நடிகை யார்?
நந்திதா தாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

¤ இந்தியாவின் சென்னை கோட்டூர்புரத்தில் அமைந்துள்ள மிகப் பெரிய நூலகம் இடமாற்றப்படவுள்ளதாக செய்தி பரவியது. அந்த நூலகத்தின் பெயர் என்ன?
பேரறிஞர் அண்ணா நூலகம்

¤ ஆசியாவின் இளம் உளநல சேவைக்கான சர்வதேச விருது கிடைத்த இலங்கையின் வைத்தியர் யார்?
யூடிரமேஷ் -(கிளிநொச்சி நகரைப் பிறப்பிடமாகக் கொண்டவர்)

¤ இந்திய பெருங்கடல் விளிம்பு நாடுகளின் பிராந்திய கூட்டுறவு மாநாடு எங்கே நடைபெற்றது?
பெங்களூர் (இலங்கையின் சார்பில் அமைச்சர் சரத் அமுனுகம கலந்து கொண்டார்).

¤ அண்மையில் இறைபதமடைந்த பிரபல தென்னிந்தியப் பாடகி யார்? சிவாணந்த விஜயலட்சுமி (வயது-75)

¤ இவ்வாண்டு (2001) இந்திராகாந்தி அமைதி விருதுக்குத் தெரிவு செய்யப்பட்ட சமூக ஆர்வலர் யார்?
இலாபட்

¤ இரும்புப் பெண் என உலகத் தலைவர்களால் அழைக்கப் படும் பெண்மணி யார்? இந்திராகாந்தி

¤ தற்போது புலி எண்ணிக்கையில் முதலிடம் வகிக்கும் நாடு எது? இந்தியா

¤ அண்மையில் இணையத்தளத்தின் மூலம் 10 இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் கேட்டு மகிழ்ந்த பாடல் எது? பாடியது யார்?
தென்னிந்திய நடிகர் தனுஷ் எழுதிப் பாடிய "வைதிஸ் கொலவெறி....." என்ற பாடலாகும்.

## விளையாட்டுப் பக்கம் வீசிய வலையில்...

✪ சர்வதேச கிரிக்கெட் வரலாற்றில் 22 வருடங்களைப் பூர்த்தி செய்துள்ள துடுப்பாட்ட வீரர் யார்?
சச்சின் டெண்டுல்கர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இந்திய இராணுவத்தில் கௌரவ பதவியான லெப்டினன்ட் கேணல் அந்தஸ்து வழங்கிக் கௌரவிக்கப்பட்ட இந்திய கிரிக்கெட் வீரர் யார்? மகேந்திர சிங் டோனி

- 2011 உலகக் கிண்ண கபடிப்போட்டி எந்த நாட்டில் நடைபெற்றது? இந்தியாவின் பஞ்சாப் நகரில்.

- 2011 ஆண்டு சிறந்த டென்னிஸ் வீராங்கனை விருதுக்காக தெரிவு செய்யப்பட்ட வீராங்கனை யார்?
  பெட்ரா கிவிரோவா (செக்குடியரசு)

- கிரிக்கெட் வரலாற்றில் ஆட்ட நிர்ணய சதி வழக்கில் தண்டனை வழங்கிய முதல் நீதிமன்றம் எது?
  லண்டன் நீதிமன்றம் (பாகிஸ்தான் முன்னாள் வீரர்களான சல்மான் பட், மொஹமட் ஆசிப், மொஹமட் அமிர்)

- சர்வதேச கிரிக்கெட் சபையின் தலைவர் யார்?
  சரத்பவார் (இந்தியா)

- "திலீப் சர்தேசாய்" விருதுக்குத் தெரிவு செய்யப்பட்ட இந்தியக் கிரிக்கெட் சுழற்பந்து வீச்சாளர் யார்?

  அஸ்வின் (மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிராகச் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியவர்)

- 'கிருடா சக்தி" என்பது யாது?

  விளையாட்டு அமைச்சின் ஏற்பாட்டில் பாடசாலைகளில் 14, 18 வயதிற்குட்பட்ட திறமையான விளையாட்டு வீர, வீராங் கணைகளை இனங்காணும் விளையாட்டு நிகழ்வாகும். இதில் வலைப்பந்து, கரப்பந்து, கூடைப்பந்து, உதைபந்தாட்டம், ஹொக்கி, கபடி விளையாட்டுக்கள் இடம்பெறும். இக்கிரிடா சக்தி நிகழ்வு அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

- 2011 டென்னிஸ் வீராங்கனை விருதுக்காகத் தெரிவு செய்யப்பட்ட வீராங்கனை யார்?
  பெட்ரா கிவிரோவா (செக்குடியரசு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✪ சர்வதேச கனிஷ்ட விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டி எங்கே நடைபெற்றது?

தென்னாபிரிக்காவின் டேர்பன் நகரில் - யாழ்.இந்துக் கல்லூரி மாணவர்கள் இருவர் உட்பட இலங்கையில் இருந்து 06 பேர் பங்குபற்றினர். 50 நாடுகளைச் சேர்ந்த 300 மாணவர்கள் பங்குபற்றினர்.

➢ "புரநெகும" திட்டம் என்றால் என்ன?

100 உள்ளூராட்சி மன்றங்களுக்குள் அமைந்துள்ள சிறிய நகரங்களை நவீன மயப்படுத்துதலாகும்.

இங்கு பிரதான அபிவிருத்தி முன்னெடுப்புக்களான

- நீர் வழங்கல்
- துப்புரவேற்பாட்டு வசதிகளை நவீனமயப்படுத்தல்
- பாதை வசதிகள்
- பிரசவ மற்றும் சுகாதார நிலையங்கள்
- விளையாட்டு மைதானங்கள்
- சிறுவர் பூங்காக்கள்
- சந்தைகளை நவீனமயப்படுத்தல்

போன்றவை இத் திட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ளன. மேற்படி கிராமிய மைய மாதிரிகளை ஒருங்கிணைப்பதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து பெறப்பட்ட 7,000 மில்லியன் ரூபா உதவித்திட்டத்தின் மூலம் செயற்படுத்தப்படவுள்ளது.

➢ "**உருமய அருண பாதுகாப்பு நிதியம்**" என்றால் என்ன?

எமது நாட்டிலுள்ள புராதன கட்டடங்கள், தளபாடங்கள், நூதனசாலைகள் போன்றவற்றினைப் பராமரித்து பாதுகாக்கும் திட்டமாகும்.

உதாரணமாக :

யாழ்.கோட்டை கட்டடம், அம்பாந்தோட்டைக் கச்சேரி, பழைய கொழும்பு தபால் நிலையம், மும்தாஸ் மஹால் பழைய இரத்தினபுரி கச்சேரிக் கட்டடம் போன்றவற்றுள் சிலவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢ "**பிம்சவிய திட்டம்**" என்றால் என்ன?

மண்ணின் மகிமை நிகழ்ச்சித் திட்டமாகும். அதாவது காணிப்பதிவுத் திட்டமாகும். பிம்சவிய என்னும் தேசிய காணி உரித்துநிகழ்ச்சித்திட்டம் அராங்கத்தால் 2007 ஆம் ஆண்டு முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் மூல உரித்து பதிவுகளின் அறிமுகம், காணிப் பிணக்குகளுக்கு தீர்வுகாண எட்டுதல்,காணி அபிவிருத்திக்கான தகவல் முறைகள் என்பவற்றைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

➢ இத்திட்டமானது 03 முக்கிய திணைக்களங்களால் அமுலாக் கப்படுகிறது அவை எவை?

- நில அளவைத் திணைக்களம் (நில அளவிடும் படத்தினை தயாரிக்கின்றது)
- காணி நிர்ணய திணைக்களம் (தீர்ப்பும் தீர்மானமும் வழங்குகிறது)
- பதிவாளர் நாயகத் திணைக்களம் (பதிவு செய்தலை மேற்கொள்கிறது)

➢ **உறுதி** என்பதன் விளக்கம் என்ன?

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களுக்கிடையே ஏற்படுத்தப்பட்ட காணிப் பரிமாற்றம் சம்பந்தமான ஆவணமாகும். எனவே உறுதி மட்டும் சொத்தை உறுதிப் படுத்தும் ஆவணமல்ல.காணியின் சொத்தை உறுதிப் படுத்தபல நடைமுறைகளுக்கு உட்படுத்தப்படும்.

➢ இதன் நன்மைகள் எவை?

இத்திட்டமானது மக்களுக்கு நன்மை கிடைப்பதற்கே உருவாக்கப்பட்டதாகும். இக் காணிப் பதிவின் மூலம் ஒரு காணிக்கு ஒரு அடையாள அட்டை இலக்கம் மற்றும் அதற்கான அத்தாட்சிப் பத்திரம் போன்றவை கிடைக்கும்.

இது காணிக்கும், காணிச் சொந்தக் காரருக்கும் அசைக்க முடியாத அதிகாரம் மிக்க ஆவணங்களாக அமையும். அத்து டன் இவை அரச உத்தரவாதம் பெற்றவையாகும். தெளிவான உரிமையை ஏற்படுத்துவதன் மூலம் அபிவிருத்திக்கான பாதையை உருவாக்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே காணியின் அபிவிருத்தி தனிப்பட்ட அபிவிருத்திக்கு ஏற்ற தருணத்தை வழங்கும். எனவே இத்திட்டத்தின் மூலம் மக்களின் சக்தி உயர்த்தப்படுகிறது.

உதாரணமாக :

இங்கு காணித்துண்டுகளின் இலக்கங்கள் பின்வருமாறு அமையும்.

| 51 | 0086 | 09 | 0228 |
|---|---|---|---|
| ① | ② | ③ | ④ |

1. மாகாணம் - மாவட்டம்
2. கிராமம்
3. கண்டம்
4. காணித்துண்டு

## பொது நலவாயம் - (Common Wealth)

- 54 உறுப்பு நாடுகளைக் கொண்டமைந்த பொதுநலவாய அமைப்பின் 21 ஆவது மாநாடு எங்கே நடைபெற்றது?
அவுஸ்ரேலியா நாட்டின் பேர்த் நகரில் நடைபெற்றது. இதில் 3 ஆயிரம் பேர் பங்குபற்றினர்.
- பொதுநலவாய அமைப்பின் செயலாளர் நாயகமாகத் தெரிவு செய்யப்பட்டவர் யார்? அவர் எந்த நாட்டவர்?
கமலேஷ் சர்மா - இவர் இந்திய நாட்டவரும் பிரபலமான இந்தியாவின் இராஜதந்திரியுமாவார்.
- 2013 இல் பொதுநலவாய நாடுகளின் மாநாடு எங்கு நடைபெறவுள்ளது? இலங்கை.
- இளம்பிள்ளைவாதம் நோய் தற்போது அதிகமாகக் காணப்படும் நாடுகள்?
இந்தியா, பாகிஸ்தான், நைஜீரியா, ஆப்கானிஸ்தான் (அண்மையில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் உறுதி செய்யப்பட்டது).
- 2018 கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டி எந்த நாட்டில் நடைபெற உள்ளது? அவுஸ்ரேலியாவின் - கோல்ட் கோஸ்ட் நகரில் நடைபெறவுள்ளது. (இலங்கையில் நடைபெறுமென எதிர்பார்க்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. அவுஸ்ரேலியாவுக்கு - 71, இலங்கைக்கு 27 வாக்குகளும் கிடைத்தன)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

⊙ காபன் வரித்திட்டம் என்றால் என்ன?

தூய்மையான சக்தி சட்டத்தின் பிரகாரம் உலகின் மிகப்பெரிய மாசுபடுத்தலை ஏற்படுத்தும் நிறுவனங்கள் வரி செலுத்தும் திட்டமாகும். சூழல் மாசடைதல் தொடர்பான சர்ச்சைக்குரிய காபன் வரித்திட்டத்துக்கு அவுஸ்ரேலியாவின் செனட் சபை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

⊙ அபெக் என்பது யாது?

Asia pacific Economic Cooperation (APEC)

ஆசிய பசுபிக் பொருளாதார ஒத்துழைப்பு அமைப்பாகும். அமெரிக்காவின் ஹாவாயில் அண்மையில் தொடங்கியது.

**சார்க் -SAARC**
**(South Asian Association for Regional Cooperation)**




❋ 17 ஆவது சார்க் உச்சி மாநாடு எங்கே நடைபெற்றது?
மாலைதீவின் 'அட்டு' நகரில்

❋ 18ஆவது சார்க் உச்சி மாநாடு எங்கே நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது?
நேபாளத்தின் காத்மண்டு நகரில்

❋ இந்த முறை நடைபெற்ற மாநாட்டின் தொனிப்பொருள் என்ன?
"உறவுப் பாலங்களைக் கட்டியெழுப்புதல்" (Building Bridges)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❋ இந்த மாநாட்டில் தெற்காசிய நாடுகளின் தலைவர்கள் பிராந்திய ஒத்துழைப்பின் முக்கியத்துவம் குறித்து வலியுறுத்திய விடயங்கள் எவை?
- பௌதீக ரீதியான இணைப்பு
- சுற்றுலாத்துறையை மேம்படுத்தல்
- காலநிலை மாற்றத்தின் பாதிப்புக்களைத் தடுப்பதற்கான வழி முறைகள்
- உயர் விவசாய உற்பத்தி
- உணவுப் பாதுகாப்பு மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள் போன்றவற்றைத் தழுவியதாக ஒத்துழைப்புக்கள் மேலும் கூடுதல் தீவிரத்துடன் முன்னெடுக்கப்பட வேண்டுமென அறைகூவல் விடுத்துள்ளனர்.


❋ இந்த சார்க் அமைப்பின் ஒரு வருடத்துக்கான தலைமைப் பதவியை வகிப்பவர் யார்? மாலைதீவு ஜனாதிபதி முஹமட் நஷிட்

❋ சார்க் அமைப்பில் எட்டாவது உறுப்பு நாடாக இணைந்து கொண்ட (14 ஆவது உச்சி மாநாடு 2007 இல்) நாடு எது? ஆப்கானிஸ்தான்

❋ இதில் அங்கத்துவம் வகிக்கும் நாடுகள் எவை? இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, மாலைதீவு,நேபாளம், பங்களாதேஷ், பூட்டான், ஆப்கானிஸ்தான்.

## இலங்கையின் முதலாவது அதிவேக நெடுஞ்சாலை...

- ☐ ஜனாதிபதியால் 27.11.2011 இல் திறந்து வைக்கப்பட்டது.
- ☐ 96 கிலோ மீற்றர் தூரமானது. (கொட்டாவை - காலி பின்னதுவ வரை)
- ☐ 700 கோடி ரூபா செலவில் அமைக்கப்பட்ட நேர்த்தியான நெடுஞ்சாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- □ ஜப்பான் மற்றும் ஆசிய வங்கி அனுசரணை.
- □ நான்கு வாகனம் செல்லக்கூடிய வசதிகள்.
- □ 100 மைல் வேகம்.
- □ பாதை நெடுகிலும் சி.சி.ரிவி கமெரா கண்காணிப்பு.
- □ 24 மணிநேர அவசர விபத்துச்சேவை
  - தீயணைப்புப் படை
  - அம்புலன்ஸ் வண்டிச் சேவை
- □ சைக்கிள், ஆட்டோ, டிரக்டர், மாட்டு வண்டி போன்றவற்றுக்கு அனுமதி இல்லை.
- □ வாகன தரத்திற்கேற்ப நுழைவுக் கட்டணங்கள் :
  - கார், ஜீப், வெகன், கெப்ஸ், 9 ஆசன வேன், சிறிய ரக ட்ரக் - 400/
  - 9-33 ஆசனங்களுக்கு உட்பட்ட பஸ்களுக்கு - 700/-
  - 33 ஆசனங்களுக்கு மேற்பட்ட வாகனங்களுக்கு 1500/-
  - அதிகனரக வாகனங்கள் - 2000/-



## அதிபரின் பார்வையில்...

பரந்துபட்ட பூமியில் "வலை" கொண்டு பெரும் வளம் சேர்க்கும் முயற்சியில் தன்னலம் துறந்து பொதுநலம் நோக்கும் இவ் வலையானது, அவசர யுகத்தில் மாணவர்களின் அறிவியல் தேடலுக்கு ஒரு முதற்தர இதழாக அமைந்திருப்பதை உணரமுடிகிறது.

க.பொ.த.உயர்தரம், பல்கலைக்கழகக் கல்வி தொடர்ந்தும் அவர்கள் சந்திக்கும் ஒவ்வொரு அரச போட்டிப் பரீட்சைகளுக்கும் இச் சமகால பொது அறிவு பொட்டகமானது அவர்களுக்கு ஏணிப்படியாக இருக்கும் என்பது கண்கூடு. புத்தகப் பூச்சிகளாக இருக்கும் எம்மவர்களின் பொது அறிவினை அண்மையில் நடந்துமுடிந்த பரீட்சைகள் முடிவுகள் எடுத்துக் காட்டி நிற்கின்றன.

அறிவியல் ஊற்றாக வரும் வலையின் தேடல்கள் தொடர்ந்தும் வெளிவர வேண்டி வாழ்த்துகிறேன்.

**திரு.வீ.கணேசராஜா,**
அதிபர்,
யாழ்.இந்துக் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாசக நெஞ்சங்களுக்கு...**

வலையின் இதழ் மூன்றாவது இழையில் உங்களைச் சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைவதோடு, உங்கள் அனைவருக்கும் இறுதி வருட நல்வாழ்த்துக்களைக் கூறிக்கொள்வதில் சந்தோசமடைகின்றேன்.

இந்த வலை உங்கள் அனைவருக்கும் மாத ஆரம்பத்தின் முதல் வாரத்துக்குள்ளேயே உங்கள் கரம் சேர்க்க வேண்டும் என்பதே எனது விருப்பு. இருந்தபோதும் வருடத்தின் இறுதி மாதமாகையால் வேலைப் பழுக்கள் கூடியமையினாலும், இப்பரந்துபட்ட உலகில் தனியொருவனாக நின்று இவ்வலை வீசி தகவல்களைச் சேகரிப்பதனால் உடற்சோர்வுக்கும் ஆளாகியிருக்கின்றேன்.

அத்துடன், எமது குடாநாட்டில் அவ்வப்போது ஏற்படுத்தப்படும் மின்வெட்டுக்கள் மற்றும் பதிப்பித்தல் தாமதங்களும் காரணங்களில் சிலவாகும். எனவே வாகச நெஞ்சங்கள், சந்தாதாரர்கள் அனைவரும் இதனைக் கருத்தில் கொள்ளும்படி அன்புடன் கேட்டு நிற்கின்றேன்.

இவ்விதழின் கடந்த இழைகள் இரண்டும் News Print தாளிலேயே வெளியிடப்பட்டன. காரணம் வாசக நெஞ்சங்கள் குறைந்த செலவில் பெற்று, நிறைந்த பயன்பெற வேண்டும் என்பதே என்னுடைய அவா. இந்தநிலையில், வாசக நெஞ்சங்களிடமிருந்து, பெறுமதியான இவ்வலையினை வெள்ளைத்தாளில் பதிப்பித்தால் என்ன? என்ற அன்புக் கோரிக்கைகள் என்னை நோக்கி வீசப்படுகின்றது. இருந்தபோதும் இச்செலவினை நானே பொறுப்பெடுத்து இவ் இதழினை வெள்ளைத்தாளில் பதிப்பித்து, வெளியிட்டுப் பார்ப்போமே என்ற ஆவல் என்னுள் எழுந்ததே இதற்கு காரணம்.




எனவே இதனைக் கற்று பரீட்சையில் சித்தியடைய இறையாசியுடன் வாழ்த்தி நிற்கின்றேன்.

எனவே இந்த இதழ் தொடர்ந்து வெளிவர உங்கள் ஆதரவை நாடி நிற்கின்றேன்.

உங்களது ஆலோசனைகள் வரவேற்கப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டிசம்பர் மாத சர்வதேச தினங்கள்...




- டிசம்பர் - 01 - சர்வதேச எயிட்ஸ் தினம்
- டிசம்பர் - 02 - உலக வலது குறைந்தோர் தினம்
- டிசம்பர் - 03 - உலக ஊனமுற்றோர் தினம்
- டிசம்பர் - 09 - உலக ஊழல் ஒழிப்பு தினம்
- டிசம்பர் - 10 - சர்வதேச மனித உரிமைகள் தினம்
- டிசம்பர் - 13 - சர்வதேச சிறுவர் ஒளிபரப்பு தினம்
- டிசம்பர் - 14 - சர்வதேச குழந்தைகள் தினம்
- டிசம்பர் - 15 - உலக தேயிலை தினம்
- டிசம்பர் - 18 - சர்வதேச சிறுபான்மை உரிமைகள் தினம்
- டிசம்பர் - 23 - சர்வதேச உணவு தினம்

## இலங்கை பற்றிய இம்மாத வீசலில்...

- உலக விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமையத்தினால் வருடாந்தம் நடத்தப்படுகின்ற கல்வி மற்றும் ஈ-கற்கைகள் (EeL2011) மாநாட்டில் யாழ். பல்கலைக்கழக வணிக முகாமைத் துவபீட விரிவுரையாளருக்கு விருது வழங்கப்பட்டது. அவர் யார்?
  திருமதி தே.ஜனனி (இந்நிகழ்வு சிங்கப்பூரில் இடம்பெற்றது)

- கராத்தே "சிகான்" தரத்துக்கான பரீட்சையில் சித்தியடைந்த யாழ்.வீரர் யார்?
  கராத்தே பிரதம ஆசிரியர் - சென்சேய் அன்ரோ டினேஸ்

- இலங்கையிலேயே மிகவும் உயரமான 12 அடி கொண்ட முருகன் சிலை அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. அச்சிலை எங்கு உள்ளது?
  இரத்தினபுரி - இறக்குவானை கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❍ பொது நிருவாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் நடத்தப் பட்ட அகில இலங்கை ரீதியில் பிரதேச செயலகங்களுக் கிடையிலான முகாமைத்துவப் போட்டி (2009/2010)இரண்டாம் இடத்தைப் பிடித்துக்கொண்ட பிரதேச செயலகம் எது?
கரவெட்டி பிரதேச செயலகம். (வடமராட்சி)

❍ தேசிய மட்டத்தில் தொலைக்காட்சி வினா விடைப் போட்டியில் வெற்றியீட்டிய யாழ். மாணவி யார்?
செல்வி சிவாஜினி ஆராஅமுதன் (யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்)

❍ இலங்கையில் மரக்கறி வகைகளைக் கொண்டு செல்வதற்கு பிளாஸ்ரிக் பெட்டிகளைப் பயன்படுத்தவேண்டும். இந்த உத்தரவு அண்மையில் நடைமுறைக்கு வந்துள்ளது. இது எந்த அமைச்சின் கீழுலுள்ள விடயம் ஆகும்?
நுகர்வோர் மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சு

❍ சமூகசேவை அமைச்சின் அங்கவீனமுற்றோருக்கான தேசிய செயலகத்தினால் வீடமைப்புத் திட்ட நிதி நன்கொடையாக வழங்கப்படுகிறது. அதன் தொகை எவ்வளவு?
ஒன்றரை இலட்சம் ரூபா

❍ பிரபல கட்டடக் கலைஞரும், யாழ்.பொதுசன நூலகத்தினை வடிவமைத்தவருமான கலைஞர் அண்மையில் வெளிநாட் டில் காலமானார். அவர் யார்?
அமரர் வி.எஸ்.துரைராஜா

❍ ஹெங்கொங் நாட்டில் நடைபெறுகின்ற 95ஆவது உலக பாசறையில் பங்கு பற்றுவதற்காக யாழ்ப்பாணத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவி யார்?
பிரியதர்சினி சதானந்தம் (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி)

❍ உலகின் கலாசார சொத்து என இலங்கையில் அழைக்கப்படுவது எது?
காலிக் கோட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❍ இலங்கையில் சுனாமி எச்சரிக்கை நிலையம் எங்கு அமைந்துள்ளது? கிக்கடுவ

❍ 'பேபி 81" என்பதால் நினைவுக்கு வருவது யாது?
ஆழிப்பேரலை இடம்பெற்று 52 நாட்களின் பின்னர் கண்டுபிடிக்கப்பட்ட அபிலாஷ் என்ற சிறுவனை இரண்டு தாய்மார் உரிமை கோரினர். அச்சிறுவனுக்கு வைக்கப்பட்ட பெயரே இதுவாகும். இவரது புகழ் உலகம் முழுவதும் பரவியது.

❍ சனத்தொகை கணக்கெடுப்பை மேற்கொள்ளும் திணைக்களம் எது?
புள்ளிவிபரவியல் திணைக்களம்

❍ உயர்தரப் பரீட்சை (2011)யில் தேசிய ரீதியில் முதலிடம் பிடித்த யாழ். மாவட்ட மாணவன் யார்?
கமலக் கண்ணன் கமலவாசன் (கணிதம்) (உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன்)

❍ தெற்காசியாவின் மிகப்பெரிய சர்வதேச படகுக் கண்காட்சி Boat Show Sri Lanka 2012" எங்கு நடைபெற்றது?
மே மாதம் (18 - 20) பண்டாரநாயக்க ஞாபகார்த்த கண்காட்சி நிலையத்தில்

❍ இலங்கையிலிருந்து (வடபகுதி) இந்தியக் கரையோரப் பிரதேசங்களை நோக்கி நகர்ந்து சென்று தாக்கிய சூறாவளியின் பெயர்?
"தானே" (பெயர் சூட்டியது மியன்மார்)

❍ 2011 இல் யாழ்ப்பாணம் வந்து சென்ற இந்திய விஞ்ஞானி யார்? அப்துல் கலாம்

❍ அண்மையில் காலமாகிய முன்னாள் அமைச்சர் யார்?
அப்துல் மஜித்

❍ இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கத்தின் விஞ்ஞான விருது கிடைக்கப் பெற்ற ஊடகவியலாளர் யார்?
சாரதா மனோகரன் (தினகரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❍ சுற்றுலாவுக்கு ஏற்ற இடத் தரப்படுத்தலில் இலங்கை எத்தனை யாவது இடத்தில் உள்ளது.
ஆறாவது இடம்

❍ அண்மையில் அரச உயர் விருதான 'சாஹித்திய ரத்னா" விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட பேராசிரியர் யார்?
பேராசிரியர்-சபா ஜெயராசா (யாழ்.பல்கலைக்கழகம்)

❍ Spickes விருது கிடைக்கப்பெற்ற குறுந்திரைப்படம் எது?
Pass it on when you're done with it (இது இலங்கை கண்தானச் சங்கத்துக்காக தயாரிக்கப்பட்ட படமாகும்).

❍ 2011 SLIM குறியீட்டு சிறப்புத் தன்மை விருது எந்த நிறுவனத் துக்கு கிடைத்தது? ஹமீடியா

❍ இலங்கை மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் அரச ஒசுசல கிளை இறுதியாக எங்கே திறந்து வைக்கப்பட்டது?
யாழ்ப்பாணம்

❍ இலங்கையில் புதிதாகத் திறந்து வைக்கப்பட்டுள்ள தாமரைத் தடாகம் எங்கு உள்ளது?
பொலநறுவை (இது சீன-இலங்கை நட்புறவின் அடையாள மாகும். இது சீனாவினால் நன்கொடையாக வழங்கப்பட் டது). அத்துடன் புதிதாக அமைக்கப்பட்ட மகிந்த கலையரங் கம் கொழும்பு - 07 இல் உள்ளது.

❍ முன்பள்ளிப் பருவப் பாதுகாப்பு அபிவிருத்தி வாரம் இலங்கையில் எப்போது கொண்டாடப்படுகிறது?
டிசம்பர் - 14 - 20 வரையாகும்.

❍ இலங்கையில் எத்தனை வயதுக்கு கீழ்ப்பட்டோருக்கு சிகரெட் விற்பனை செய்யக்கூடாது என்ற சட்டம் உள்ளது?
21 வயதுக்கு கீழ்

❍ இலங்கையில் நீரில் மூழ்கி வருடாந்தம் எத்தனை பேர் இறப்பதாக இலங்கை உயிர்காப்புச் சங்கம் வெளியிட் டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது?
1600 பேர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகை நோக்கிய வீசலில்...

◊ எதிர்க்கட்சியினர் நடத்திய ஊழல் புகார் போராட்டத்தால் பதவி விலகிய குவைத் பிரதமர் யார்?
ஷேக் நசீர் அல்முஹம்மத் அல் - சபாஹ்

◊ செவ்வாய்க் கிரகத்தில் மணல் குன்றுகளும், அடுக்கடுக்கான மணல் அலைகளும் இருப்பதாக எந்த விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர்?
நாசா விண்வெளி விஞ்ஞானிகள்

◊ உலகின் மிகச்சிறந்த சிந்தனையாளர்களின் பட்டியலில் இடம் பிடித்துள்ள இந்தியர்கள் யார்?
- அன்னா ஹசாரே (சமூக ஆர்வலர் - 2011 வெளியான செய்தித்தாள்களில் அதிகளவு இடம்பிடித்தவர்)
- அருந்ததி ராய் (எழுத்தாளர்)
- ஆசிம் பிரேம்ஜி (லிப்ரோ நிறுவனத்தலைவர்)
- தீபா நாராயணன் (வறுமை ஒழிப்பு)
- அரவிந்த் சுப்பிரமணியம் (பொருளாதார நிபுணர்)
(வெளிநாட்டுக் கொள்கை இதழ் பட்டியலிட்டுள்ளது)

◊ அமைதியான சுற்றுச்சூழல், செலவு, கட்டமைப்பு போக்வரத்து வசதி, மருத்துவ வசதி கொண்ட நகரம் எது?
அவுஸ்ரேலியாவின் தலைநகர் வியன்னா

◊ மெர்சர் நிறுவனம் உலக ரீதியில் நடத்திய கருத்துக் கணிப்பில் இந்தியாவில் மக்கள் வசிக்கச் சிறந்த நகரங்களின் பட்டியலில் முதலிடத்தைப் பிடித்த நகரம் எது?
பெங்களூர் (பாதுகாப்பான நகரங்கள் பட்டியலில் பெல்ஜியத்திலுள்ள லக்சம்பர்க் முதலிடத்தில் உள்ளது)

◊ உலகிலேயே அதிகளவு ஆயுதங்களை இறக்குமதி செய்யும் நாடு எது?
இந்தியா (அமெரிக்காவிலிருந்து வெளியாகும் Foreign Ploicy Magazine தகவல் வெளியிட்டுள்ளது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◈ ஐ.நா.வெளியிட்டுள்ள "உலகப் பொருளாதார நிலவரமும், எதிர்பார்ப்புகளும் 2012" என்னும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய விடயம் எது?
2012 "ஆக்குதல் அல்லது அழித்தல்" என்ற வருடமாக அமையும், பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்க நேரிடும், மந்த வளர்ச்சி நீடிக்கும் என்பதாகும்.

◈ பல ஆயிரம் கோடி தொன் வைரத்துடன் புதிய கிரகத்தினைக் கண்டுபிடித்த விஞ்ஞானி எந்த நாட்டவர்?
அமெரிக்காவைச் சேர்ந்த ஒஹியோ மாநிலப் பல்கலைக்கழக புவியியல்துறை விஞ்ஞானிகள்.

◈ சிறுவர் திருமணங்கள் அதிகளவில் இடம்பெறும் நாடு எது?
ஏமன்

◈ வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட பாடகர்கள் யார்?
- தேனிசைத் தென்றல் தேவா
- எல்.ஆர்.ஈஸ்வரி

◈ தனியார் மருத்துவமனையில் ஏற்பட்ட தீயினால் 75 இற்கு மேற்பட்டோர் உயிரிழந்த பரிதாப சம்பவம் எங்கு நடைபெற்றது?
கொல்கொத்தா

◈ இரு பிரதமர்களால் ஆளப்படும் நாடு எது?
கம்பூச்சியா

◈ உலகில் செய்தித்தாளை துணியில் வெளியிடும் நாடு எது?
ஸ்பெயின்

◈ 12வருடங்களாக பிரதமராகப் பதவிவகித்துக் கொண்டிருப்பவரும், தற்போது மக்கள் கிளர்ச்சிக்கு உள்ளாகி நெருக்கடியில் இருப்பவர் யார்?
ரஷ்யப் பிரதமர் விளாடிமிர் புட்டின் (இறுதியாக நடைபெற்ற தேர்தலிலும் வெற்றியீட்டினார்)

◈ 5 ஆவது முறையாகவும் திருமணம் செய்து கொண்ட பிரபல நாவலாசிரியர் யார்?
சல்மான் ருஷ்தி (பிரிட்டன் வாழ் இந்தியர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◈ ஜனாதிபதி ஆதரவாளர்களுக்கும், எதிர்ப்பாளர்களுக்கும் இடையே மோதல்கள் தொடர்வதையடுத்து அண்மையில் இடைக்கால அரசு அமைக்கப்பட்டது எந்த நாட்டில்?
ஏமன் - (ஜனாதிபதி - அலி அப்துல்லா சலே)

◈ உலகிலேயே மிகப்பெரிய தானியக் கிடங்கு அமைக்கவுள்ள மாநிலம் எது? பஞ்சாப்

◈ அதிசிறந்த விளையாட்டு வீரனாக கௌரவிக்கப்பட்ட பிரான்ஸ் வாழ் தமிழ் இளைஞன் யார்?
கெவின் வலத் தேசர் (இவரது சொந்த இடம் தேடலில் சிக்கவில்லை)

◈ உலகப் பருவநிலை (உலக காலநிலை மாநாடு) மாநாடு எங்கு நடைபெற்றது?
தென்னாபிரிக்காவின் டர்பன் நகரில்

◈ பிரபல நடிகை மர்லின் மன்றோ அணிந்த உடை அண்மையில் சீனாவில் ஏலம் விடப்பட்டது. அதன் தொகை யாது?
2.5 கோடி

◈ இந்தியாவின் பிரபலமான பழம்பெரும் தேசியக் கவிஞரின் குறிப்பு புத்தகம்அமெரிக்காவில் அண்மையில் ஏலம் விடப் பட்டது. அவர் யார்?
கவிஞர் ரவீந்திரநாத் தாகூர் (92 இலட்சம் இந்திய மதிப்பு)

◈ 2011 இல் மிகவும் வீழ்ச்சியடைந்து காணப்பட்ட ஆசிய நாணயம் எது? இந்திய ரூபாய்

◈ இறுதியாக நடைபெற்ற ஐரோப்பிய யூனியன் கவுன்சில் மாநாடு எங்கு நடைபெற்றது.?
பெல்ஜியம்

◈ உலகில் உயிரோடு உள்ள மிகவும் குள்ளமான இளம் பெண் என கின்னஸ் (2012) சாதனை படைத்தவர் யார்?
இந்தியரான ஜோதி ஆம்க் - உயரம் 24.3 அங்குலம்

◈ இந்துக்களின் புராதன நூலான பகவத் கீதையை தடை செய்த நாடு எது? ரஷ்யா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◈ அண்மையில் மாரடைப்பால் காலமான வடகொரிய அதிபர்யார்?
கிம் ஜோஸ் (வயது-69) தற்போது மகன் ஜிம் ஜோங் அதிபராக பதவி வகிக்கின்றார்.

◈ யூரோ மண்டல நிதி நெருக்கடியால் கோடிக்கணக்கானோர் வேலை இழக்கும் நிலை எந்த நாட்டில் உருவாகும் அபாயம் உள்ளது? ஜேர்மனி

◈ புற்றுநோயால் மரணமான முன்னாள் உலக அழகி யார்?
இவா எக்வல் - வெனிசுலா (வயது-28)

◈ தனது பிள்ளைகள் 'பேஸ்புக்'கை (Facebook) பயன்படுத்து வதற்கு தடைவிதித்த அதிபர் யார்?
அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா

◈ போர்க்கப்பலில் சென்ற முதலாவது பெண் ஜனாதிபதி யார்?
இந்திய ஜனாதிபதி பிரதிபா பாட்டீல்

◈ இந்தியாவின் முன்னணி அணு விஞ்ஞானி அண்மையில் மரணமானார் அவர் யார்? பி.கே.அய்யங்கார் (வயது-80)

◈ Space X என்பது என்ன?
நாஸா தற்போது கண்டுபிடித்துள்ள புதிய ரக விண்கலமாகும்.

◈ "போஸ்து மஸ் கிராமி" (மரணம் அடைந்தவர்களை கௌர விக்க வழங்கப்படும் விருது) 2011 இற்கான விருது யாருக்கு வழங்கப்படவுள்ளது.
ஸ்டீவ் ஜாப்ஸன் (Apple நிறுவனத் தலைவர்)

◈ கழுத்துக்கு கீழே ஒன்றாகவும், தலைகள் வேறாகவும் உள்ள குழந்தை எந்தநாட்டில் அண்மையில் பிறந்துள்ளது?
பிரேசில்

◈ மனிதாபிமான அடிப்படையில் 3 ஆயிரம் சிறைக்கைதிக ளுக்கு அதிரடியாக பொது மன்னிப்பு வழங்கிய நாடு எது?
கியூபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◈ காகிதத்திலிருந்து மின்சாரம் தயாரித்துச் சாதனை படைத்த நிறுவனம் எது? 'சொனி' (Sony)

◈ அமெரிக்கர்களால் அதிகமாக விரும்பப்படும் நபர்களின் வரிசையில் இடம் பிடித்துள்ளவர்கள்?
- பராக் ஓமாமா
- ஹிலாரி கிளிண்டன்

◈ 30 இலட்சம் பொதுத்துறை ஊழியர்கள் கலந்து கொண்ட பொது வேலை நிறுத்தம் அண்மையில் எந்த நாட்டில் நடை பெற்றது? பிரித்தானியா

◈ ஓபாமா, கெமரூனை விட அதிக சம்பளம் பெறும் அவுஸ்ரேலி யாவின் பிரதமர் யார்? ஜூலியா கில்லார்டு

◈ "டாம் 999" என்பது யாது?
முல்லைப் பெரியாறு விவகாரம் பற்றிய ஆங்கிலத் திரைப்பட மாகும்.

◈ ஆசியப் பெண்களில் மிகவும் கவர்ச்சியான நடிகையாகத் தெரிவு செய்யப்பட்டவர் யார்?
கரீனாகபூர்

◈ உலகளவில் முதன் முறையாக உழவர்களுக்கு 3 ஆண்டுகள் பட்டப்படிப்பை ஆரம்பித்துள்ள நாடு எது?
இந்தியா - தமிழ்நாடு

◈ அண்மையில் பூமியை ஒத்த கிரகம் நாஸாவால் கண்டு பிடிக்கப்பட்டது. அதன் பெயர் என்ன?
"கெப்லர்-22பி"

◈ 2011 ஆம் வருடத்துக்கான மனித உரிமை விருதினைப் பெற்றுக் கொண்டவர் யார்? மார்த்தா கோஸ்டெலி

◈ உலகின் மிகவும் அபாயகரமான சுற்றுலாத்தலம் எங்கு அமைந்துள்ளது?
நோர்வேயில் அமைந்துள்ள Pulpit Fock என்ற பாறைப் பகுதியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◈ அமெரிக்காவின் இரட்டைக் கோபுரத்தினைப் போன்ற கட்டடத்தினை அமைக்க உள்ள நாடு எது?
தென்கொரியா

◈ ஆங்கிலம் பேசத் தெரிந்தால் மட்டுமே தனது நாட்டில் குடியேற முடியும் எனச் சட்டம் கொண்டு வந்துள்ள நாடு எது?
இங்கிலாந்து

◈ 2011 ஆண்டின் பிரபலமான யூ ரியூப் (You Tubc) இல் இடம்பிடித்துள்ள பாடல் எது?
கொலவெறி (நடிகர் தனுஷ் பாடிய பாடல்)

◈ முன்னாள் யுகோஸ்லோவியக் கூட்டரசிலிருந்து தனிநாடாகப் பிரிந்த தேசம் எது?
குரோஷியா

◈ நிலம் கையகப்படுத்தலை எதிர்த்து ஒரு கிராமமே திரண்டு அரசுக்கு எதிராகக் கடந்த மூன்று மாதங்களாகப் போராடி வருகின்றது. அது எந்த நாடு?
சீனா

◈ தலைமுடியில் அந்தரத்தில் தொங்கிச் சாதனை படைத்த தமிழர் யார்?
சுதாகரன் சிவஞானதுரை (இலங்கைத் தமிழர் - 23 நிமிடம் 24 செக்கன் வரை தொங்கினார்)

◈ இராணுவ ஆட்சியை எதிர்த்து தற்போது மக்கள் போராட்டம் வெடித்துள்ள நாடு எது? எகிப்து

## அயல்நாட்டுப் பக்கம் வீசிய வலையில்...

◈ "பத்மவிபூஷன்" விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட தென்னிந்திய நடிகர் யார்?
சுப்பர் ஸ்ரார் ரஜனிக்காந் (35 வருடங்கள் இந்திய சினிமாவுக்கு சேவை புரிந்தமைக்காக இவ் புரிந்தமைக்காக இவ் விருது வழங்கப்படுகிறது).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◈ 2011 சங்கீத நாடக அக்கடமி விருது வழங்கிக் கௌரவிக் கப்பட்ட தென்னிந்திய நடிகர் யார்?
நடிகர் ஏ.ஆர்.சீனிவாசன்

◈ உலக அமைதிக்காகப் பாடல் எழுதியுள்ள நடிகர் யார்?
சிலம்பரசன் (சிம்பு)

## உலகை உலுக்கிய இம்மாத இயற்கை அழிவுகள்...

◈ கடும் காற்று வீசியதால் போக்குவரத்து நெருக்கடியால் அண்மையில் பாதிக்கப்பட்ட நாடு எது?
பிரிட்டன்

◈ "ஜோக்கீம்" என்ற புயல் எந்த நாட்டைத் தாக்கியது?
சுவிற்சர்லாந்

## விளையாட்டுப் பக்கம் வீசிய வலையில்...

➢ 2011 சிம்பாப்வேயின் சிறந்த கிரிக்கெட் விளையாட்டு வீரராகத் தெரிவு செய்யப்பட்டவர் யார்?
அந்த அணியின் தலைவர் பிரண்டன் ரெய்லர்

➢ 2011ஆம் ஆண்டில் விளையாட்டுத்துறை சார்ந்தவர்களுள் அதிகம் தேடப்பட்டவர்களின் வரிசையில் ரஷ்யாவின் டென்னிஸ் வீராங்கனை இடம் பிடித்துள்ளார். அவர் யார்?
"மரியா ஷரபோவா"

➢ 2011 இன் உலக டென்னிஸ் சம்பியன்களாகத் தெரிவு செய் யப்பட்டு உயரிய விருது வழங்கப்பட்டவர்கள் யார்?
- நோலக் ஜோகோவிச் - (செர்பியா)
- பெட்ரா கிவிடோவா - (செக்குடியரசு)

➢ கழங்களுக்கிடையிலான உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் நடை பெறவுள்ள ஆண்டும், நாடும் எது?
2012 - ஜப்பான்
2013 - மொரோக்கோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢ இறுதியாக வெண்கலச் சிலை வைக்கப்பட்ட ஆஸ்திரேலிய சுழல் பந்து ஜாம்பாவான் யார்?
ஷேன் வோர்ன் (மெல்பேர்ன் மைதானத்தின் வெளிப்பகுதி யில் அமைக்கப்பட்டு உள்ளது).

➢ 2011 ஆம் ஆண்டின் சிறந்த ஆபிரிக்க உதைபந்தாட்ட வீரர் யார்? யாயா டோர்

➢ கடந்த 2011 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டி எங்கு நடைபெற்றது? லண்டன்

## CELAC என்பது யாது?

லத்தீன் அமெரிக்க நாடுகளால் புதியதாக உருவாக்கப்பட்டுள்ள பிராந்திய அமைப்பாகும்.

இது வெனிசுலாவில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. செலக்கின் அடுத்த மாநாடு இவ்வாண்டு சிலியில் நடைபெறவுள்ளது. (திகதி மாதம் இன்னும் அறிவிக்கப்படவில்லை)

## 'நெனசர' என்றால் என்ன?

நடமாடும் டிஜிட்டல் உள்ளடக்க நூலக சேவை. பொது மக்கள், அரசாங்க நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், சமூக அமைப்புக்கள் மற்றும் சமூகசேவை நிறுவனங்கள் ஆசிய வற்றை இலக்காகக்கொண்டு 'நெனசர' ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## இலங்கையின் "விரைதூதர் சேவை"

இலங்கை ரயில்வே திணைக்களத்தின் ரயிலில் ஒப்படைக்கப்படுகின்ற பொருட்களை அவரவர் வீடுகளுக்கே சென்று வழங்கும் சேவையாகும். இச்சேவை 2012 ஜனவரி மாதம் முதல் நடைமுறைக்கு வருவதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகை உலுக்கிய இம்மாத இயற்கை அழிவுகள்...

✶ கொலம்பியாவில் சில வாரம் நிலச்சரிவு...

✶ ஆஸ்திரேலியாவின் தெற்கு பசுபிக் தீவில் நிலச்சரிவு (14.12.11)

✶ பிலிப்பைன்சில் கடும் சூறாவளி, வெள்ளம் (22.12.11) 1000 இற்கு மேற்பட்டோர் மரணம்

✶ நியூசிலாந்தில் நிலநடுக்கம் (24.12.11)

✶ டிசம்பர் முற்பகுதிபிலிப்பைன்ஸில் மோசமான வெள்ளப் பாதிப்பு (650 இற்கு மேல் உயிரிழப்பு.

✶ "ட்ரான்ஸ் பேரன்சி இன்ரர்நஷனல் அமைப்பு" தெற்காசியாவில் இலஞ்சம் பற்றிக் குறிப்பிட்ட விடயம் யாது?
'இலஞ்சம்' - 'கையூட்டு' தெற்காசிய மக்களின் அன்றாட வாழ்க்கையில் மிக மோசமாக ஊடுருவி இருக்கிறது என்பதாகும்.

✶ பூமியின் குறுக்கு வெட்டு வட்டத்தின் அளவு என்ன?
12, 756, 31 கிலோ மீற்றர்

## இலஞ்சம் தொடர்பில் சிறு வீசல்...

➤ இலஞ்சம் எம்மிடம் யாரும் கேட்டால் யாருக்கு தகவல் கொடுக்க வேண்டும்?
இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்குத் தகவல் கொடுக்க வேண்டும்.

➤ அதன் தொலைபேசி இலக்கம் என்ன?
1954 (24 மணிநேர சேவை)

➤ இலங்கையில் இலஞ்சம் பெற்றதை உறுதிப்படுத்தினால் வழங்கப்படும் தண்டனை யாது?
07 ஆண்டுகால கடுழியச் சிறைத்தண்டனை அல்லது 5 ஆயிரம் ரூபாவுக்கு மேற்படாத தொகையைத் தண்டப் பணமாகக் விதித்தல் அல்லது இவை இரண்டும்.


➤ இலஞ்சம் என்பதில் எவை உள்ளடக்கப்படும்?
- பணம்
- பணத்தினைப் பெறுமதி மதிப்பிட முடியாவினும் வேறு நன்மைகளும், உதவிகளும்.
உதாரணம் : பெண்களிடம் தகாத உறவை வேண்டி நிற்றல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலை கிடைக்கப்பெறும் புத்தக நிலையங்கள்



- பூபாலசிங்கம் புத்தகசாலை – யாழ்.நகர்
- அன்னை புத்தகசாலை – யாழ்.நகர
- பாக்கியா காகிதாகிகள் – கொக்குவில்
- நியூஸ் பேப்பர் ஏஜென்ட் – இணுவில்
- அம்மா கடை – மருதனார்மடம்
- துர்க்கா புத்தக நிலையம் – சுன்னாகம்
- கரன் புத்தக நிலையம் – சுன்னாகம்
- ஸ்கைலாக் பான்ஸி ஹவுஸ் (ஐயர் பேப்பர் கடை) – சுழிபுரம்
- லக்கி ஹவுஸ் – மானிப்பாய்
- மொடேர்ன் புத்தக நிலையம் – நெல்லியடி
- கனோன் போட்டோக் கொப்பி – பருத்தித்துறை
- பாலவிநாயகர் – கிளிநொச்சி
- துர்க்கா கொமினிக்கேசன் – முள்ளியவளை

## மாணவனின் பார்வையில்...

இன்றைய நவீன உலகில் நாம் பல மாற்றங்களைக் காணக்கூடியதாக உள்ளது. ஒவ்வொரு நொடிப்பொழுதும் ஒரு மாற்றம் நிகழ்ந்த வண்ணமே உள்ளது. அம்மாற்றங்கள் யாவற்றையும் எம்மால் உடனடியாக உணர முடியாது. எனினும் "வலை யானது இம் மாற்றங்களை உடனுக்குடன் அறிவதற்கு உதவி செய்கின்றது.

இன்றைய அவசர யுகத்தில் எம் மாணவர்கள் அனைவரும் இன்று புத்தகப் பூச்சிகளாகவே இருக்கின்றனர். சீரற்ற கல்வி, கலாசாரங்கள் மற்றும் நாட்டு நிலைமைகள் மாணவர்களை ஒரு வட்டத்துக்குள் வைத்திருக்கின்றன. இதனால் மாணவர்களின் பொது அறிவு குறைந்து கொண்டு செல்கிறது. எனினும் "வலை யானது இதனை நிவர்த்தி செய்யக்கூடிய ஒரு அரிய பொக்கிஷமாக உள்ளதுடன், குறைந்த விலையில் நிறைந்த தரத்துடன் மிளிர்கின்றது என்பதில் எதுவித சந்தேக மும் இல்லை. ஆகவே வலையின் வரவு எங்கள் மாணவ சமூகத்துக்கு மிகவும் பயனுள்ளது. வலைப் பின்னல்களால் வலை மேலும் வளர வாழ்த்துகிறேன்.

**கி.கு.சக்கரியா ஜெறோபேட்,**
கணிதப் பிரிவு உயர்தர மாணவன்,
சென்.ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாசக நெஞ்சங்களுக்கு...**

வலையின் இதழ் நான்காவது இழையில் உங்களைச் சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சியடை கிறேன்.

சில தவிர்க்கமுடியாத காரணங்களினால் வலை வெளிவருவது சற்றுத் தாமதமாகிவிட்டது எனவே இதனைப் பொறுத்துக் கொள்ளும்படி சகல வாசக நெஞ்சங்கள், சந்தாதாரர்கள் அனைவரையும் கேட்டு நிற்கின்றேன்.

பன்னிரண்டு பக்கங்களாக வெளிவந்த வலை யினை பதினாறு பக்கங்களாகக் கூட்டியுள்ளமைக்கு வாசகப் பெருமக்களின் ஆதரவுக் கரமே அதற்குக் காரணம் என்பதில் ஐயமில்லை. அத்துடன் கடந்த வலை இழை 3 இல் இருந்து வெள்ளைத்தாளில் பதிப்பித்து வெளி யிட்டு வருகின்றேன்.

உட்பக்கங்களை அதற்குரிய படங்களை இட்டு இன்னும்மின்னும் பக்கங்களை மெருகூட்டி வெளியி டத்தான் விருப்பம். ஆயினும் அவ்வாறு படங்களைப் போட்டு பக்கத்தினை வடிவமைக்கும் போது பக்க எண்ணிக்கை கூடுவதுடன், பொருளாதாரச் சிக்கலும் ஏற்படும். எனவே பெரும்பாலும் படங்களைத் தவிர்த் துள்ளேன். இருந்தும் அவ்அவ்விடங்களில் ஒரு சில படங்களைச் சேர்த்துள்ளேன்.

இவ்வாறான நிலையில் பொருட்களின் விலை யேற்றங்கள் நாட்டு மக்களைப் பாடாய்படுத்துகையில் நாமும் அதற்கு விதிவிலக்கல்ல. எனவே வலையும் அதனை எதிர்கொள்கிறது

எனவே இதனைக் கற்றுப் பரீட்சைகளில் சித்தி யடைய இறையாசியுடன் வாழ்த்தி நிற்கின்றேன்.

எனவே இந்த இதழ் தொடர்ந்து வெளிவர உங்கள் ஆதரவை நாடி நிற்கின்றேன்.

உங்களது ஆலோசனைகள் வரவேற்கப்படுகின்றன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனவரி மாத சர்வதேச தினங்கள்...




★ ஜனவரி - 04 - உலக பிரெய்லீ தினம்

★ ஜனவரி - 10 - உலக சிரிப்பு தினம்

★ ஜனவரி - 12 - உலக இளைஞர் தினம்

★ ஜனவரி - 18 - உலக படை வீரர் தினம்

## இலங்கை பற்றிய இம்மாத வீசலில்...

◈ 3 ஆம் காலாண்டில் இலங்கையின் பொருளாதாரம் எத்தனை வீதம் வளர்ச்சி கண்டது?
8.4 வீதம் வளர்ச்சி (**G.D.P** - இலங்கை தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத் தகவலிலிருந்து)

◈ இலங்கையில் 70 வயதுக்கு மேற்பட்ட முதியோர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் உதவித் தொகை எவ்வளவு?
1000 ரூபா

◈ பெறுபேறு சர்ச்சைக்குத் தீர்வாக இலங்கை பரீட்சைத் திணைக் களம் ஆராயும் விடயம் யாது?
பரீட்சார்த்திகள் தோற்றும் சகல பரீட்சைகளிலும் ஒரே சுட்டெண்ணைப் பயன் படுத்தும் சாத்தியம் பற்றி ஆராய்ந்து வருகிறது. தேசிய அடையாள அட்டை இலக்கத்தைப் பயன் படுத்தும் முறை குறித்தும் ஆராய்ந்து வருகின்றது.

◈ யாழ்.மாவட்டத்தில் 2010 இல் தற்கொலை செய்து கொண்ட வர்களின் எண்ணிக்கை யாது?
179பேர் (யாழ்.போதனா வைத்தியசாலை புள்ளி விபரத் திலிருந்து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◈ கட்டுநாயக்க விமானநிலையத்தில் எரிபொருள் நிரப்புவதற்காக தரையிறக்கப்பட்ட மிகப்பெரிய வெளிநாட்டு விமானம் எது?
அவுஸ்ரேலியாவின் சிட்னி விமானநிலையத்திலிருந்து புறப்பட்ட A-380 ரக விமானமாகும்.

◈ மகாவம்சத்தில் குறிப்பிடப்படாத அரச பரம்பரை தொடர்பான கல்வெட்டு ஒன்று இலங்கையில் அண்மையில் எங்கு கண்டுபிடிக்கப்பட்டது?
திருகோணமலை கந்தன்கரு பிரதேசத்திலாகும்.

◈ கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் ஊடாக இலங்கை வரும் வெளிநாட்டவர்களிடம் இருந்து இணையத்தள விசாவுக்காக இம்மாதத்தில் (ஜனவரி, 2012) 10 தினங்களில் எவ்வளவு வருமானம் கிடைத்துள்ளதாக குடிவரவு குடியகல்வு திணைக்களம் அறிவித்தது?

7 கோடி ரூபாய் ஆகும்.

◈ இரண்டு நாட்கள் தங்கியிருக்கும் நோக்கில் இலங்கை வரும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளிடம் எத்தனை வயதுக்கு கீழ் விசா கட்டணம் அறவிடப்படமாட்டாது என இலங்கை அரசு அறிவித்துள்ளது?
12 வயதுக்கு கீழ்

◈ குடிசன மதிப்பீட்டுப் புள்ளிவிபரத் திணைக்களம் வெளியிட்டுள்ள உத்தியோகபூர்வத் தகவல்களின்படி இலங்கையில் ஆகக்கூடிய வாழ்க்கைச் செலவு கொண்ட இடமாக எந்த மாவட்டம் தெரிவு செய்யப்பட்டுள்ளது?

யாழ்.மாவட்டம்

◈ 2011 இல் யாழ். குடாநாட்டில் பதின்ம வயதுக் கர்ப்பம் தரித்தோர் எத்தனை பேர்?

408 (யாழ்.மாவட்டச் செயலக புள்ளிவிபரத் தகவலிலிருந்து..)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◈ தென்னாசியாவிலேயே மிக உயரமாக அமையவுள்ள கோபுரத்திற்கு அண்மையில் அடிக்கல் நாட்டப்பட்டது. அது எங்கு உள்ளது?

டாக்டர் விஜேவர்த்தன மாவத்தை, கொழும்பு (பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ அவர்களினால் அடிக்கல் நாட்டப்பட்டது)

◈ "வெண்புறாவே வெண்புறாவே" எனத் தொடங்கும் இலங்கையின் சமாதானப் பாடலுக்கு குரல் கொடுத்தவர் யார்? நிரோசா விரோஜினி

◈ இலங்கையில் நுகர்வோரைப் பாதுகாக்கும் சட்டம் எது? 1979 ஆம் ஆண்டின் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டமாகும்.

◈ சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியத்தின் இணையத்தள முகவரி யார்?

www.jaffnapriest.org (மிக அண்மையிலேயே அங்குரார்ப் பணம் செய்து வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது)

◈ 2011 ஆம் ஆண்டுக்குரிய சிறந்த முயற்சியாளருக்குரிய விருது யாருக்கு வழங்கப்பட்டது?
இணுவில் அண்ணா தொழிலதிபர் எஸ்.பி.நடராசா அவர்களுக்கு.

◈ 2011 இலங்கையில் அதி கூடுதலான வாகனங்கள் பதிவு செய்யப்பட்டது எந்த மாவட்டதில்?

2011 புள்ளி விபரத்தின்படி -

- யாழ்.மாவட்டம் - 77 ஆயிரத்து 859
- வவுனியா மாவட்டம் - 25 ஆயிரத்து 709
- மன்னார் மாவட்டம் - 8 ஆயிரத்து 913
- கிளிநொச்சி - ஆயிரத்து 989
- முல்லைத்தீவு மாவட்டம் - 2 ஆயிரத்து 989



◈ அரச ஓய்வூதியம் பெறும் நிரந்தர சேவைக்குள் உள்ளீர்க் கப்பட்ட உத்தியோகத்தர்கள் யார்?
சமுர்த்தி உத்தியோகத்தர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◈ இலங்கை உற்பத்திகளுக்கு அண்மையில் தடை விதிக்கப் பட்டது எந்த நாட்டில்?
இந்தியாவின் தமிழ் நாட்டிலாகும்.

◈ அண்மையில் இலங்கை வந்த உலகப் புகழ்பெற்ற குத்துச் சண்டை வீரர் யார்? ஹொலிபீல்

◈ 2011 இல் இலங்கையில் எலிக்காய்ச்சலினால் பீடிக்கப் பட்டவர்கள் எத்தனை பேர்?
6 ஆயிரத்து 589 பேர். இதில் 89 பேர் உயிரிழந்துள்ளனர்.

◈ "ஒன்லைன்" மூலமாக ஆதனவரி செலுத்தும் திட்டத்தை இலங்கையில் முதன் முதல் அறிமுகப்படுத்திய மாநகரசபை யாது?
யாழ்ப்பாணம் மாநகரசபை ஆகும்.

◈ 2012 ஆம் ஆண்டினை என்ன ஆண்டாக அரசாங்கம் பிரகடனப்படுத்தியுள்ளது?
மும்மொழி இலங்கைக்கான ஆண்டு

◈ "சிவத்தமிழ்" விருது வழங்கப்பட்ட புகைப்பட ஊடகவி யலாளர் யார்?
சங்கரகம்பர் கதிரவேலு (வயது-87-யாழ்ப்பாணம்)

◈ சிறுவர் துஷ்பிரயோகக் குற்றத்துக்கு என்ன தண்டனை வழங் கப்பட வேண்டுமென சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை பரிந்துரை செய்துள்ளது?
மரண தண்டனை உட்பட கடுமையான தண்டனை

◈ இலங்கையின் வடக்கு-கிழக்கு பாடசாலை அபிவிருத்திக்கு அண்மையில் நிதியுதவி வழங்கிய நாடு எது?
கொரியா

◈ இஸ்லாமிய கீதங்கள் என்றாலே நினைவில் நிறைந்தும் நிமிர்ந்தும் நிற்பவர் யார்?
நாகூர் ஹனிபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◇ தெற்கு அதிவேக வீதியில் மேலும் விஸ்தரிக்கப்பட்டுள்ள சேவை எது?
பொது போக்குவரத்து பஸ் சேவை

◇ கட்டாக்காலி நாய்கள் குறித்து 2012 ஆம் ஆண்டை சுகாதார சேவைகள் அமைச்சு பிரகடனப்படுத்தி இருப்பது எது?
நாட்டில் கட்டாக்காலிகளாகத் திரியும் 30 இலட்சம் நாய்களுக்கு ஒவ்வொரு பிரஜைகளும் சொந்தக்காரராக வேண்டும் என்பதாகும்.

◇ இவ்வருட மார்ச் மாத நடுப்பகுதியில் இலங்கையில் நடைபெற்ற குடிசனக் கணிப்பீடு எத்தனையாவது மதிப்பீடு?
14 ஆவது ஆகும்.

◇ திருட்டு மின்சாரம் பெறுபவர்களுக்கு தற்சமயம் அறிவிக்கப்பட்டுள்ள தண்டனை எது?
அபராதத் தொகை செலுத்துவதுடன், வாழ்நாள் முழுவதும் மின்சார இணைப்பு வழங்கப்படமாட்டாது. (தகவல் : மின்சக்தி எரிசக்தி அமைச்சர் பாட்லி சம்பிக்க ரணவக்க)

◇ அதிவேக நெடுஞ்சாலைக்குள் ஆடு புகுந்ததால் அதன் உரிமையாளருக்கு எவ்வளவு அபராதம் விதிக்கப்பட்டது?
5 ஆயிரம் ரூபா

## உலகை நோக்கிய வீசலில்...

⅄ உலகிலேயே அதிகளவில் இணையத்தளத்தைப் பாவிக்கும் நாட்டினர் யார்? சீனா

⅄ இணையத்தளப் பாதுகாப்பை கடுமையாக்கிய நாடு எது?
சீனா

⅄ ஆர்ஜென்டினா நாட்டில் அண்மையில் சுட்டுக்கொல்லப்பட்ட ஆளுநர் யார்?
ரியோநெக்ரோ மாகாணத்தின் ஆளுநரான கார்லோய் கொரியா (வயது 61)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உலகிலேயே மிகவும் உயரமான பூனை எங்குள்ளது?
  அமெரிக்காவில் (20 றாத்தல் எடை, 19 அங்குல உயரமாகும்)

- இந்திய சிகரெட் பக்கெட்டுக்களில் படம் வெளிவந்து சர்ச்சையைக் கிளப்பியவர் யார்?
  இங்கிலாந்து உதைபந்து அணியின் தலைவரான ஜோன் டெர்பி ஆவார்.

- தங்கம் தேடும் முயற்சியில் ஈடுபட்ட 25 பேர் நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்த சம்பவம் எங்கு நடைபெற்றது?
  பிலிப்பைன்ஸ்

- உலகின் முதல் மரபணுக் குரங்கு எங்கு பிறந்துள்ளது?
  அமெரிக்காவில்

- லாயிக் பெய்ரோன். தனது குழுவினருடன் படகில் உலகைச் சுற்றி புதிய சாதனை படைத்தனர். அவர் எந்த நாட்டவர்?
  பிரான்ஸ்
- உலகின் மிகப் பெரிய சோலர் தொலைபேசி எங்கு அமைக்கப்படவுள்ளது?
  ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில்

- "சாத்தானின் வசனங்கள்" என்ற நாவலை எழுதிய உலகப்புகழ்பெற்ற எழுத்தாளர் யார்?
  சல்மான் ருஷ்டி

- உலக மக்களின் அபிமானத்தைப் பெற்ற அரச ஜோடியாக வலம் வருபவர்கள் யார்?
  பிரிட்டனின் எதிர்கால மன்னரான இளவரசர் வில்லியம் அவரது மனைவி கேத்மிடில்டன்

- முனைவர் பட்டம் அண்மையில் வழங்கப்பட்ட வங்கதேசப் பிரதமர் யார்? ஷேக் ஹசீனா

- மறைந்த அதிபரின் பூதவுடலைப் பாதுகாத்து வைப்பதற்கு முடிவெடுத்துள்ள நாடு எது?
  வடகொரியா (அதிபர் - கிம் ஜோங் இல்லின் ஆவார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

⅄ நாளொன்றுக்கு 40 பேர் வீதம் படுகொலை செய்யப்படுகிறார்கள். அது எந்த நாடு?
சிரியா (ஐ.நா. தகவல்)

⅄ உலகின் மிகப்பெரிய "குர்ஆன்" எங்கு அண்மையில் திறந்து வைக்கப்பட்டது?
ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில்

⅄ வானிலையை ஆய்வு செய்து தகவல்களைத் தரும் செயற்கைக் கோளை அண்மையில் வெற்றிகரமாக விண்ணில் செலுத்திய நாடு எது?
சீனா - பெங்கியூன் - 2

⅄ டைட்டானிக் கப்பல் போன்று அண்மையில் நீரில் மூழ்கிய கப்பலென மேற்குலக ஊடகங்களால் வர்ணிக்கப்பட்ட கப்பல் எது?
கொஸ்டா கொன்கோர்டினா (இத்தாலிக் கப்பல்)

⅄ அண்மையில் காலமடைந்த இந்தியாவின் முதல் பெண் ஒளிப்படப் பத்திரிகையாளர் யார்?

ஹோமை வியாரவல்லா (வயது - 98) கடந்த 2011 ஜனவரியில் இந்திய நாட்டின் உயர் விருதான பத்மபூஷன் விருது இவருக்கு வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

⅄ அதிபருக்கு எதிராக மேலும் மக்கள் கிளர்ச்சி தீவிரம் பெற்றுள்ள நாடும் ,அதன் அதிபரும் யார்?
- சிரியா, அதிபர் அல் அஸாத் ஆவார்

⅄ ஊழல் வழக்குத் தொடர்பான சர்ச்சையில் தனது பதவியை இராஜினாமாச் செய்வதற்குத் தயாராகவுள்ள பாகிஸ்தான் பிரதமர் யார்?
கிலானி

⅄ 2011 இல் ஆறு மாடிக் கட்டடம் விழுந்து 13 பேரைப் பலி கொண்ட சம்பவம் எங்கு நடைபெற்றது?
லெபனான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

⅄ அரசுக்கு எதிரான 'மக்கள் போராட்டம்' அண்மையில் எங்கு நடைபெற்றது?
ருமேனியா

⅄ அமெரிக்காவில் அதிவேக ரயிலில் குழந்தைதையைப் பிரசவித்த இந்தியப் பெண்மணி யார்?
ரபீதா சங்கர் (ஆண் குழந்தை)

⅄ பிரிட்டிஷ் மகாராணி எலிசபேத் அவர்கள் ஆட்சிக்கு வந்து 60 வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு அந்நாட்டு அரசு வழங்கியுள்ள பரிசு என்ன?
600 அடி நீளமுள்ள மிகப்பெரிய கப்பல் ஆகும்.

⅄ யாகூ (Yahoo) நிறுவனத்தில் இருந்து விலகிய அதன் இணை நிறுவுனர் யார்?
ஜெர்ரி யங் (வயது-43)

⅄ அண்மையில் இரசாயண விபத்து ஏற்பட்டு 40 பேர் காயமடைந்த சம்பவம் எங்கு நடைபெற்றது?
ஜேர்மனி

⅄ உலகின் இளம் மைக்ரோசொப்ட் சாதனையாளர் என்ற பெயர் பெற்ற சிறுமி மரணமானார் அவர் யார்?
அர்பா கரீம் (வயது-16, பாகிஸ்தான்) - 2004 இல் மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் இளம் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

⅄ நூலக வசதியை (e-book) ஏற்படுத்தியுள்ள இணையத்தளம் எது?
கூகுள் (Google)

⅄ கர்ப்பிணிப் பெண்ணின் வயிற்றைக் கிழித்து குழந்தையைத் திருடிய சம்பவம் எங்கு நடைபெற்றது?
தென்னாபிரிக்காவில் (29 வயது நிரம்பிய பெண்ணே மேற்படி திருட்டுச் சம்பவத்தை நடத்தினார். கர்ப்பிணிப் பெண் கடும் இரத்தப் போக்கால் மரணமடைந்தார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உலகை ஒற்றைக் கப்பல் மூலம் வலம் வந்து சாதனை படைத்த 16 வயது இளம் யுவதி யார்? அவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
  லாரா டெக்கர், நெதர்லாந்து.

- 2012 ஆம் ஆண்டுக்கான உலகப் பொருளாதார மாநாடு எந்த நாட்டில் நடைபெற்றது?
  சுவிற்சர்லாந்து நாட்டின் லாவோஸ் நகரில்.

- 84 ஆவது ஒஸ்கார் விருது வழங்கும் நிகழ்வு எங்கு நடைபெறவுள்ளது?
  லாஸ் ஏஞ்சல்ஸ் (கலிபோர்னியா)

- 15, 243 பேர் ஒன்றுகூடி தேசிய கீதத்தினைப் பாடி கின்னஸ் சாதனை படைத்த நிகழ்வு எங்கு நடைபெற்றது?
  இந்தியாவின் அவுரங்காபாத் நகரில்.

- அவுஸ்ரேலிய யூதக்குடியினரின் தாக்குதலிலிருந்து அண்மையில் தப்பிப்பிழைத்த பிரதமர் யார்?
  ஜூலியா கிலார்ட்

- ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கி மூனின் மியான்மாருக்கான சிறப்பு ஆலோசகர் யார்?
  இந்தியத் தூதுவர் விஜய் நம்பியார்

- ஹிட்லரின் நூலிலிருந்து எந்தவித தகவலையும் தனது அனுமதி இன்றி வெளியிடக் கூடாது என்று தடைவிதித்துள்ள அரசு எது?
  ஜேர்மனியின் ஹிட்லர் பிறந்த மாநில அரசே இவ்வாறு தடைவிதித்துள்ளது.

- "இரண்டாம் புதினம் மிட்னைட் சில்ட்ரென்" என்ற நாவல் மூலம் பிரபல மடைந்த எழுத்தாளர் யார்?
  சல்மான் ருஷ்டி (இந்த நாவல் புக்கர் விருதைப் பெற்றது)

- தனது நாட்டுக்குள் செல்போன்களைப் பயன்படுத்தினால் "போர்க்குற்றம்" என அறிவித்துள்ள நாடு எது?
  வடகொரியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சுவிற்சர்லாந்துக்கு புகலிடம் நாடி வருபவர்களுக்கு குடியிருப்புக்கள் அமைத்துக் கொடுக்கக்கூடாது என போராடி வருபவர்கள் யார்?
அந்நாட்டில் வாழும் மூத்தகுடி மக்கள் ஆகும்.

- உலகின் மிக உயரமான பாலம் எங்கு அமைக்கப்பட்டு வருகின்றது? மெக்ஸிக்கோவில்

- பிரிட்டனின் "சேர்" பட்டத்தைப் பெறும் அப்பிள் நிறுவனத்தின் தலைமை வடிவமைப்பாளர் யார்?
ஜோனாதன் இவே

- அப்பிள் நிறுவனத்தின் ஸ்தாபகர் ஸ்டீவ் ஜெப்ஸ்சுக்கு அண்மையில் சிலை அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. அது எந்த நாட்டில் உள்ளது?
ஹங்கேரியின் தலைநகரான புடாபெஸ்டிலுள்ள சயன்ஸ் பார்க் ஒன்றில் வைக்கப்பட்டுள்ளது. வெண்கலத்தினாலான 6.5 அடி உயரமான சிலை கிராபி சொப்ட் என்ற நிறுவனத்தினால் திறந்து வைக்கப்பட்டது.

- அண்மையில் ஈரானில் படுகொலை செய்யப்பட்ட அணு சக்தி விஞ்ஞானி யார்?
முஸ்தபா அகமதி ரோஷன் (வயது-32)

- நோபல் பரிசு பெற்ற தமிழருக்கு இங்கிலாந்தின் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது. அவர் யார்?
வெங்கடராமன் ராமகிருஷ்ணன் (தமிழ்நாட்டைச் சேர்ந்த இவருக்கு 2009 ஆம் ஆண்டில் இயற்பியல் துறைக்காக நோபல் பரிசு வழங்கப்பட்டது.)

- தேசிய ஜனநாயக லீக் கட்சி தலைவரான ஆங் சாங் சூகி எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
மியான்மார்

- 34 சனல் தொலைக்காட்சி சேனலினைத் தொடங்கியுள்ள நாடு எது? சீனா

- 2012 தை மாதத்தில் சூரியனை அணமித்துக் கடந்து சென்ற வால்நட்சத்திரம் எது? கொமெற் லவ் ஜோய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

⅄ வாழ்க்கை வரலாறு தொலைக்காட்சித் தொடராகும் ஆபிரிக்க நாட்டுத் தலைவர் யார்?
நெல்சன் மண்டேலா

⅄ மைக்ரோ சொப்ட் பங்காளர் விருது கிடைக்கப்பெற்ற நிறுவனம் எது? கிறின் விச் நிறுவனமாகும்.

⅄ உலகிலேயே மிகவும் பழமை வாய்ந்த 5 ஆவது மரம் தீக்கிரையானது அது எது? எங்கு உள்ளது?
சைப்பிரஸ் ஆகும். அமெரிக்காவின் புளோறிடா மாநிலத்தில் உள்ளது.

## விளையாட்டுப் பக்கம் வீசிய வலையில்...

◈ இலங்கை பளுதூக்கும் சங்கம் நடத்திய 2011 ஆம் ஆண்டுக்கான இளையோர் தேசிய பளுதூக்கும் போட்டியில் வெண்கலப் பதக்கம் பெற்ற யாழ்.மாவட்ட வீரர் யார்?
அ.விதன் (ஜனவரிமாத முற்பகுதியில் களனி பல்கலைக்கழக பளுதூக்கும் நிலையத்தில் இடம்பெற்றது)

◈ உலகக் கிண்ண தொடர் நாயகன் யார்?
யுவராஜ்சிங்

◈ அஸ்திரேலிய பகிரங்கத் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவில் கிராண்ட்ஸ்லாம் சம்பியன் பட்டம் வென்ற வீராங்கணை யார்? விக்டோரியா அஸரென்கா

◈ ஆஸ்திரேலியா ஓபன் ரென்னிஸ் போட்டியில் ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் பட்டம் வென்றவர் யார்? ஜோகோவிச் (செக்குடியரசு)

◈ உலகின் சிறந்த கால் பந்து வீரருக்கான விருதை தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக தட்டிச் சென்றவர் யார்?
ஆர்ஜென்ரீனாவின் நட்சத்திர வீரர் மெஸ்னி

◈ இந்தியாவில் கிரிக்கெட் அணியில் 2011 ஆம் ஆண்டின் சிறந்த வீரராகத் தெரிவு செய்யப்பட்டவர் யார்?
ட்ராவிட் (இந்திய ஆங்கிலப் பத்திரிகை தெரிவு செய்துள்ளது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகை உலுக்கிய இம்மாத இயற்கை அழிவுகள்....

- கடும் மழை -

- பிரேசிலில் கடும் மழை - 4 ஆயிரம் பேர் இடம்பெயர்வு (06.01.2012)

- நிலநடுக்கம்

- இந்தோனேசியாவின் வடபகுதியிலுள்ள் சுமத்திரா தீவில் (02.01.2012)

- இந்தோனேசியாவின் அசே மாகாணம் (11.01.2012)

- மெக்ஸிக்கோவின் ஸ்டெபெக் நகரில் - 6.2 ரிச்டர் அளவில் (23.01.2012)

- பசுபிக் பெருங்கடலில் அமைந்துள்ள பிஜி தீவில் - 6.3 ரிச்டர் அளவில் (24.01.2012)

- இந்தோனேசியாவின் சுமத்திரா தீவில் 7.3 ரிச்டர் அளவில் (10.01.2012)

- ஜப்பான் கிழக்க கடற்கரைப் பகுதியில் 5.7 ரிச்டர்அளவில் (12.01.2012)

- அந்தாட்டிக்காவில் - 6.6 ரிச்டர் அளவில் (16.01.2012)

- பூகம்பம்

- நியூசிலாந்தின் தென்பகுதியில் - 6.1 ரிச்டர் அளவில் (20.01.2012)

- ஈரானின் நெய்ஸ்பூர் (21.01.2012)

- நிலச்சரிவு

- அவுஸ்ரேலியாவிலுள்ள பாப்புவா நியூகினியா - 40மரணம் (25.01.2012)

- சூறாவளி

- இந்தோனேசியாவில் - 14 பேர் பலியாகினர் (29.01.2012)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அயல்நாட்டுப் பக்கமாக வீசிய வலையில்...

- தமிழ்நாட்டு அரசியலில் அண்மையில் நடைபெற்ற பரபரப்பான விடயம் எது?

  ஜெயலலிதா - சசிகலா நட்பின் முறிவு

- இவ்வாண்டு நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டியில் தங்கம் வெல்லும் தமிழக வீரருக்கு முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ள அதிரடி பரிசுத் தொகை எவ்வளவு?

  2 கோடி

- இந்திய வரலாற்றில் முதன் முறையாக அரசுக்கு எதிராக வழக்குத் தொடுத்த இராணுவத் தளபதி யார்?

  வி.கே.சிங் (இராணுவக் கல்லூரியில் இருக்கும் தனது கோவையில் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் ஆண்டு வேறாக இருப்பதாக (1951), தனது உண்மையான ஆண்டு 1951 என்ற வயதுப் பிரச்சினையின் விவகாரமாகும்)

- திருப்பதி வெங்கடேசப் பெருமாளுக்கு 2011 காணிக்கை யாகச் சேர்ந்த பணத்தின் பெறுமதி எவ்வளவு?

  1700 கோடி

- பாதுகாப்புக் கருதி குண்டுதுளைக்காத கார் வழங்கப்பட்டுள்ள பாகிஸ்தானின் கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித் தலைவர் யார்?

  இம்ரான் கான்

**தெற்காசியாவிலேயே மிக உச்சத்தில் மலர்ந்துள்ள தாமரைக் கோபுரம் பற்றிய வீசலில் சிக்குப்பட்ட சில தகவல்கள்**



- தெற்காசியாவில் நிர்மாணிக்கப்படும் மிக உயர்ந்தகோபுரம் “கொழும்பு தாமரைக் கோபுரம்” ஆகும்.

- இது கொழும்பு, டி.ஆர்.விஜேவர்த்தன மாவத்தையில் கட்டப்படுகிறது. இதற்கான அடிக்கல்லை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ கடந்த 20.01.2012 ஆம் திகதியன்று நாட்டி வைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 50 ஒளிபரப்புச் சேவைகள் 50 தொலைக்காட்சிச் சேவைகள் 20 தொலைத்தொடர்புச் சேவைகள்
- பார்வைக் கூடம், விசித்திரமிக்க சுழலும் போசன சாலை, அதிசொகுசு மிக்க உல்லாச விடுதிகள், உற்சவ மண்டபம், தொடர்பாடல் காரியாலயம் மற்றும் அரும்பொருட் காட்சியகம்

## விருதுகள் பக்கம் வீசிய வலையில்...

➢ வடமாகாண ஆளுநர் விருது உட்பட 3 விருதுகள் கிடைக்கப் பெற்ற "ஈழத்து கலை இலக்கிய உலகு" என்ற நூலின் ஆசிரியர் யார்?
கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன்

➢ 2011 இலக்கியத்துக்கான கலாபூசனம் விருதினைப் பெற்றுக்கொண்ட யாழ்ப்பாணத்தவர் யார்?
வே.இளையகுட்டி - புத்தூர்

➢ சமூக சந்தைப்படுத்தலுக்கான விருதினைப் பெற்றுக்கொண்ட நிறுவனம் எது? எக்ஸ்போ லங்கா

➢ சிரேஷ்ட தொழிற்சங்க வாதியான அலவி மௌலானாவின் 80 ஆவது அகவையை முன்னிட்டு அவருக்கு ஜனாதிபதியால் வழங்கப்பட்ட விருது என்ன?
"ஜன பிரசாதினி" விருதாகும்.

➢ அமெரிக்க வாழ் இந்தியரான வெங்கட்ராமன் ராமகிருஷ்ணனுக்கு பிரிட்டன் அரசினால் வழங்கப்பட்டுள்ள உயரியவிருது யாது?
நைட்ஹுட்

➢ நியூஸிலாந்து நாட்டில் "மகாராணி" விருது பெற்ற தமிழ்த் தம்பதியர் யார்?
ஜோர் அருளானந்தம் (கல்விச்சேவைக்கு வழங்கப்பட்டது. இவர் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் ஆவார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது துணைவியார் ஆன் உமா (சமூகசேவைக்கு வழங்கப்பட்டது)

➢ பிரான்ஸ் நாட்டின் ஜனாதிபதி நிகோலஸ் சர்கோசிக்கு ஸ்பெயின் நாட்டின் மிக உயரிய விருது வழங்கப்பட்டது. அது எது? எதற்காக வழங்கப்பட்டது?

"நைட் ஆ.'.ப் தி கோல்டன் .'.பிலீஸ்"

பாஸ்க் பிரிவினை இயக்கமான ஈட்டாவை எதிர்த்து ஒடுக்குவதற்கு பிரான்ஸ் ஜனாதிபதி தொடர் உதவி செய்து வந்தமையினாலேயே இந்த விருது அவருக்கு வழங்கப்படு கிறது.

**அயல்நாட்டுப் பக்கமாக வீசிய வலையில்...**

✧ தமிழ்நாட்டு அரசியலில் அண்மையில் நடைபெற்ற பரபரப் பான விடயம் எது?

ஜெயலலிதா - சசிகலா நட்பின் முறிவு

✧ இவ்வாண்டு நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டியில் தங்கம் வெல்லும் தமிழக வீரருக்கு முதல்வர் ஜெயலலிதா அறிவித் துள்ள அதிரடி பரிசுத் தொகை எவ்வளவு?

2 கோடி

✧ இந்திய வரலாற்றில் முதன் முறையாக அரசுக்கு எதிராக வழக்குத் தொடுத்த இராணுவத் தளபதி யார்?

வி.கே.சிங் (இராணுவக் கல்லூரியில் இருக்கும் தனது கோவையில் பிறப்பு அத்தாட்சிப்பத்திரத்தில் ஆண்டு வேறாக இருப்பதாக (1951), தனது உண்மையான ஆண்டு 1951 என்ற வயதுப் பிரச்சினையின் விவகாரமாகும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- திருப்பதி வெங்கடேசப் பெருமாளுக்கு 2011 காணிக்கை யாகச் சேர்ந்த பணத்தின் பெறுமதி எவ்வளவு?
1700 கோடி

- பாதுகாப்புக்கருதி குண்டு துளைக்காத கார் வழங்கப்பட் டுள்ள பாகிஸ்தானின் கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவர் யார்?
இம்ரான் கான்

- யாழ்ப்பாணத்து மக்கள் "சிரித்துக்கொண்டே அழுகிறார்கள்" எனக் கருத்து வெளியிட்டவர் யார்?
இந்திய முன்னாள் ஜனாதிபதியும், அணு விஞ்ஞானியு மான அப்துல் கலாம் ஆவார்.

(அண்மையில் இலங்கை வந்து திரும்பிய பின் மேற்படி கருத்தினை வெளியிட்டார்.)

---



## முன்னணி ஆங்கில ஆசிரியரின் பார்வையில்...

பொது அறிவு என்பது மிகவும் தேவையானதாக எப்போதுமே உணரப் பட்டுள்ளது. அந்த வகையில் பொது அறிவு தொடர்பாக காலத்திற்கு காலம் பல கையேடுகள் வெளிவந்தபோதிலும், தொடர்ச்சியாக வெளிவருபவை குறைவாகவே உள்ளன.

மேலும் எமது மாவட்டத்தில் அனைத்துப் பகுதிகளுக் கும் இணைய வசதிகள் வழங்கப்பட்டுள்ள போதிலும் அனைத்து மாணவர்கள், தொழில் நாடுபவர்களும் இணைய வசதி உடையவர்களாக இல்லாதிருப்பதுடன், நூலகங்களுக்குச் சென்று படிப்பதற்கும் போதிய நேரமும் அவர்களுக்கு இல்லை.

இந்த நிலையில், சமகால பொது அறிவுத் தொகுப்பாக மாதாந்தம் வெளிவரும் 'வலை' யானது அனைவருக்கும் பயன் தரும் வண்ணம் அமைந்துள்ளமை பாராட்டுக்குரியது. இவ்வெளியீடானது தொடர்ந்து வெளியிடப்படுவது வாசகர்களாகிய எமது கைகளிலேயே தங்கியுள்ளது. எனவே எமது ஆதரவினை நாம் வழங்கி 'வலை' தடையின்றி வெளிவர உதவுவோம்.

**திரு. சந்திரமவுலி,**
ஆங்கில ஆசிரியர்,
ஆங்கில பொது மன்றம், வட்டுக்கோட்டை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாசக நெஞ்சங்களுக்கு...**

வலையின் இதழ் ஐந்தாவது இழையில் உங்களைச் சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

நூலகவியல் பரீட்சையொன்றினை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டதன் காரணத்தினால் பெப்ரவரி மாத வலையினைக் குறித்த காலத்திற்குள் வெளியிடமுடியவில்லை. அதற்காக மனம் வருந்துகின்றேன்.


வலை இழையின் இப்பகுதியில் வாழ்க்கைக்கு வேண்டிய சில கருத்துக்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ளலாமென நினைக்கின்றேன்.

ஒரு விடயத்தைக் கொஞ்சம் நினைத்துப் பாருங்கள் துடிப்போ அல்லது தன்னம்பிக்கையோ இருந்துவிட்டால் மட்டும் போதுமா? அதைப் பயன்படுத்தினால் மட்டுமல்லவா படகு நகரும். அல்லது வாழ்வில் முன்னேற்றம் வரும். அதுமட்டுமா? அவற்றை ஒரே ஒரு தடவை மட்டும் பயன்படுத்துவதும் போதாது தொடர்ந்து உபயோகிக்க வேண்டும்.

சரி, துடுப்பு போடுவதை தொடர்ந்தும் செய்யக் கைகளில் வலு மட்டும் இருந்தால் போதும். இந்தத் தன்னம்பிக்கையைத் தொடர்ந்து செயற்படுத்துவது எப்படி?

அதற்குத்தான் உதவுகிறது உங்கள் ஆழ்மனம். உடல் வலுவாக இருக்க உடற்பயிற்சி அவசியமமோ, அப்படி மனம் வளமாக இருக்க மனப்பயிற்சி அவசியம். மனம் சோர்ந்துவிட்டால் நீங்கள் என்னதான் முயன்றாலும் செயற்பட முடியாது.

உங்கள் உடலோ, அறிவோ எதுவானாலும் சிறப்பாகச் செயற்பட வேண்டுமானால், ஆழ்மனம் ஆரோக்கியமாக இருக்க வேண்டும். அதற்கு ஒரே ஒருமுறை மட்டும் பயிற்சி அளித்துவிட்டால் போதாது, தொடர்ந்து பயிற்சி அளிக்க வேண்டும்.




இந்த மனப்பயிற்சியை எங்கு பெற்றுக்கொள்ளலாம்? அதற்காகத் தானே எம் மத்தியில் பல பயிற்சி நிலையங்கள் இயங்கி வருவதோடு, வழிப்படுத்துவதற்குத் தயாராகவும் இருக்கின்றன. என்ன! பயிற்சிக்குத் தயாரா....?

உங்களது ஆலோசனைகள் வரவேற்கப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெப்ரவரி மாத சர்வதேச தினங்கள்...

- பெப்ரவரி - 02 - உலக ஈர நிலங்கள் தினம்
- பெப்ரவரி - 14 - உலக காதலர் தினம்
- பெப்ரவரி - 20 - உலக சமூகநீதி தினம்
- பெப்ரவரி - 21 - உலக தாய்மொழி தினம்
- பெப்ரவரி - 22 - உலக சாரணியர் தினம்
- பெப்ரவரி - 28 - உலக நோயாளர் தினம்




## இலங்கை பற்றிய இம்மாத வீசலில்...

- மூன்றாவது தடவையாகவும் இலங்கையில் ஆளுநராகப் பதவி வகிப்பவர் யார்?
  மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலானா

- 2013 முதல் "வரலாறு" பாடத்தினை என்ன பெயர் கொண்டு மாற்றுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது?
  'தேசிய உரிமைகள் மற்றும் சுற்றாடல்"

- புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட நெல் அறுவடை இயந்திரத்தினை சர்வதேச கண்காட்சியில் (ஈரான்) வைப்பதற்கு யாழ்.பல்கலைக்கழகத்திலிருந்து சென்ற உத்தியோகத்தர் யார்?
  கனகலிங்கம் சோமசேகரம் (பதவி நிலை தொழில்நுட்ப உத்தியோகத்தர்)

- 2012 ஆம் வருடத்துக்கான சூழலியல் வெளிப்பாட்டுச் சுட்டெண் தரப்படுத்தலில் இலங்கை எத்தனையாவது இடத்தினைப் பிடித்துள்ளது? 55 ஆவது இடத்தினை

- 100 ஆண்டுகளில் தரம் 5இல் புதிய சாதனை படைத்த வன்னிப் பாடசாலை எது?
  கிளிநொச்சி மாவட்ட பூநகரி வலைப்பாடு றோ.க.த.க. பாடசாலை மாணவி மேரி விதுசா 152 புள்ளிகளைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❒ நாட்டிய வாரிதி 2011 விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட கலைஞர்கள் யார்?
- நடனக் கலைஞர் வேல் ஆனந்தன்
- கலாபூஷணம் லீலாம்பிகை செல்வராஜா

❒ கடந்த 2011 இல் தரம் - 05 புலமைப் பரிசில் பரீட்சையில் அகில இலங்கை ரீதியில் முதலாமிடத்தைப் பெற்றுக்கொண்ட மாணவனின் பெயர் அவ் வித்தியாலய நூலகத்துக்குச் சூட்டப்பட்டது. அந்த மாணவனின் பெயரும், வித்தியாலயமும் யாது?
சகி அஹமட்
கெகிராவ முஸ்லிம் மகா வித்தியாலயம்

❒ இலங்கையில் 64 ஆவது சுதந்திர தின நிகழ்கள் எங்கு கொண்டாடப்பட்டது?
அநுராதபுரத்திலுள்ள ஸ்ரீ சம்புத்தத்வ ஜயந்தி மாவத்தையில் ஜனாதிபதி தலைமையில் நடைபெற்றது.

❒ சர்வதேச தேயிலை சம்மேளன மாநாடு இந்த முறை எங்கே நடைபெற்றது? கொழும்பில்

❒ "ஜனசெவன" என்பது யாது?
தேசிய வீடமைப்புத் திட்டமாகும்.

❒ ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பற்றி பிரதமர் டி.எம்.ஜயரட்ண தொகுத்து வெளியிட்ட நூலின் பெயர் என்ன?
"ஹிருவாபத்துவே மகா மகிந்த"
(ஜனாதிபதி தொடர்பாக 22
கட்டுரையாளர்கள் எழுதிய
ஆக்கங்கள் இடம் பெற்றுள்ளது.

❒ "விதுலமு லங்கா" என்பது?
2012 ஆம் ஆண்டில் எல்லோருக்கும் எப்போதும் மின்சாரம்

❒ 2000 ஆம் ஆண்டுக்கான சிறந்த புத்தாக்கத்திற்கான ஜனாதிபதி விருதினைப் பெற்றுக்கொண்ட பிரசவ மற்றும் பெண்மை பிணியியல் மருத்துவர் யார்?
எஸ்.ஜே.பி.லெனதொர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இந்த ஆண்டு (2012 மார்ச்) நடைபெற்ற தேசத்தின் மகுடம் கண்காட்சி எத்தனையாவது கண்காட்சியாகும்?
ஆறாவது (2007 முதல் நடைபெறுகின்றது)

- கொழும்பு பங்குச் சந்தை இந்த வருட மார்ச் மாதத்தில் அறிமுகப்படுத்தப்படவுள்ள புதிய விலைச் சுட்டெண்ணுக்கு இடப்பட்டுள்ள பெயர் யாது? ஸ்ரண்ட் அன் புவர்

## உலகை நோக்கிய வீசலில்...

- கலா அல்சர் (Kala Alzar) என்பது யாது?
ஒரு வகை பூச்சிக் கடியினால் உண்டாகும் நோயாகும். இந்த நோய் 100 வீதம் உயிராபத்தை உண்டாக்கக்கூடியது. இது ஆபிரிக்க நாடுகளில் உள்ளவர்களை அதிகமாகப் பாதித்துள்ளது. இந்நோய், சர்வதேச சமூகத்தால் நீண்டகாலமாகப் புறக்கணிக்கப்பட்டு வந்தது.

- தற்போது சனத்தொகை வீழ்ச்சியடைந்து வரும் நாடு எது?
ஜப்பான்

- 34 கிலோ மீற்றர் அகலமான இரண்டாவது பெரிய விண்கல் அண்மையில் பூமியைக் கடந்து சென்றது. அதன் பெயர் என்ன? ஈராஸ்

- 2012 ஆம் ஆண்டு நோபல் சமாதானப் பரிசுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ள தொலைக்காட்சி எது?
சனல் - 4

- இருபது ஆண்டுகளுக்குப் பின் விமான சேவையை ஆரம்பித்துள்ள நாடுகள் எவை?
இந்தியா - ஈராக்

- அண்மையில் காலமாகிய அமெரிக்காவின் பிரபல பொப்பாடகி யார்?
ஒய்ட்னி ஹீஸ்டன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✦ சுவாமி விவேகானந்தரின் 150 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு அவரது உருவச் சிலை எந்த நாட்டில் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது?
சிக்காக்கோ ஆர்ட் இன்ஸ்ரியூட்டில் (அமெரிக்கா)



✦ ஐரோப்பிய நாடுகளின் நிதி நெருக்கடிக்கு உதவியளிப்பதாக உறுதியளித்துள்ள நாடு எது?
சீனா

✦ உலகில் அதிகூடிய செலவு மிகுந்த நகரமாகக் கண்டறியப் பட்டுள்ள நகரம் எது?
சுவிற்சர்லாந்தில் உள்ள 'சூரிச்' நகரமாகும்.

✦ மறைந்த வடகொரியத் தலைவரின் உருவச் சிலை அண்மை யில் அந்த நாட்டில் திறந்து வைக்கப்பட்டது. அவர் யார்?
கிம் ஜொங் இல்லின் (வயது-70)

✦ கரன்சி நோட்டுக்களில் இடம்பிடித்த தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி யார்?
நெல்சன் மண்டேலா

✦ ஆறு கிராமி விருதுகளை தட்டிச் சென்ற அமெரிக்கப் பாடகி யார்? அடெலெ

✦ சிரியாவில் ஷெல் வீச்சில் கொல்லப்பட்ட பிரபல ஊடகவியலாளர் யார்?



- மேரி கொல்வின்
இவ்வேளையில், விருதுபெற்ற பிரெஞ்சு புகைப்பட பிடிப்பாளர் ரெமி ஓசலிக்கும் உயிரிழந்தார்.

✦ பருமனானவர்கள் அதிகம் வசிக்கும் நகரம் எது?
அமெரிக்காவின் நான்காவது பெரிய நகரமான ஹிஸ்டன் நகரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✦ உலகின் பெரிய கார் காட்சியகம் எங்கு உள்ளது?
ஜேர்மனியில்

✦ 2012 கின்னஸ் புத்தகத்தில் காந்தியின் பெயர் இடம்பிடித் தமைக்கான காரணம் என்ன?

கொல்கொத்தாவைச் சேர்ந்த 485 குழந்தைகள் காந்தியைப் போல வேடமணிந்து அமைதிப் பேரணியொன்றை நடத்தினர். இதுவே காந்தியின் பெயர் மீண்டும் கின்னஸில் இடம்பெற வழிவகுத்தது.

✦ ஐரோப்பிய யூனியனின் மாநாடு இறுதியாக எங்கே நடைபெற்றது? பெல்ஜியத்தின் பிரசெல்ஸ் நகரில்

✦ 17 பேருக்கு ஒரே நாளில் தூக்குத் தண்டனை நிறைவேற்றிய நாடு எது? ஈராக்

✦ உலக அளவில் பெண் குழந்தைகளின் இறப்பு வீதம் எந்த நாட்டில் கூடுதலாக உள்ளது?
இந்தியாவில்

✦ சேவல் முட்டையிட்ட அதிசயம் அண்மையில் எங்கு நடைபெற்றது? சீனாவில்

✦ உலகில் இந்த ஆண்டை (2012) என்ன ஆண்டாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது?
ஆலன் டூரிங் ஆண்டு (Alan Turing Year)

✦ சீன மொழியில் மொழிபெயர்க்கப்படவுள்ள நூல் எது?
திருக்குறள்

✦ 2011ஆம் ஆண்டுக்கான மனிதநேய விருது பராக் ஒபாமாவால் யாருக்கு வழங்கப்பட்டது?
- இந்தியப் பொருளாதார வல்லுநரான அமர்த்தியா சென்னுக்கு வழங்கப்பட்டது.

✦ போலியோ பாதிப்பு நாடுகள் பட்டியலிலிருந்து அண்மையில் நீக்கப்பட்ட நாடு எது?

இந்தியா (இப்பட்டியலில் தற்போது உள்ள நாடுகள் பாகிஸ்தான், நைஜீரியா, ஆப்கானிஸ்தான் ஆகியவையாகும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✦ உலகிலேயே மிகவும் சிறிய மனிதர் என்ற கின்னஸ் சாதனை படைத்த மனிதர் யார்?
சந்திர பகதூர் டான்ஜி

✦ உலகில் அதிக மகிழ்ச்சியுடன் இருப்பவர்கள் யார்?
இந்தியர்கள் (இப்சல் குளோபல் அமைப்பு நடத்திய ஆய்விலிருந்து)

✦ உலகில் அமைதிக்கு பாடுபட்டதற்காக 2002 இல் பெண்மணி ஒருவருக்கு ஐ.நா. அமைப்பினால் விருது வழங்கப்பட்டிருந்தது. அவ்விருது 10 வருடங்களின் பின்னரே அவருக்கு தற்போது வழங்கப்பட்டுள்ளது. அவர் யார்?
ஆங் சாங் சூகி (மியான்மார்)

✦ மூங்கில் மூலம் செல்லிடத் தொலைபேசியைத் தயாரித்துச் சாதனை படைத்தவர் யார்?
லண்டனில் வசிக்கும் கிரான்ஸ் காட்வுட் ஹவுஸ் (வயது-23) என்பவராவார்.

## அயல்நாட்டுப் பக்கமாக வீசிய வலையில்...

❒ 2012 ஆம் ஆண்டுக்கான ஃபிலிம்பேர் விருது கிடைக்கப் பெற்ற இசையமைப்பாளர் யார்?
ஏ.ஆர்.ரஹ்மான்

❒ அண்மையில் காலமாகிய இந்தியாவின் பழம்பெரும் நடிகை யார்?
எஸ்.என்.இலட்சுமி

❒ இந்திய முன்னாள் ஜனாதிபதியும் விஞ்ஞானியுமான டாக்டர் அப்துல் கலாம் எழுதிய அராபிய மொழிபெயர்ப்பு நூலுக்கு சாகித்திய விருது கிடைத்துள்ளது. அந்த நூலின் பெயர் என்ன?
"இன்டோமி டபில்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❒ எதிரி விமானங்களை வழியிலேயே இடைமறித்துத் தாக்கும் ஏவுகணையை இந்தியா வெற்றிகரமாகப் பரிசோதித்தது. அதன் பெயர் என்ன?
"சுப்பர்சொனிக்"

## உலகை உலுக்கிய இம்மாத இயற்கை அழிவுகள்...

✧ கடும் பனிப்பொழிவு -

- செர்பியாவில் வரலாறு காணாத பனிப்பொழிவு (02.02.2012)
- கிழக்கு, மத்திய ஐரோப்பிய நாடுகளில் நிலவும் கடுமையான பனியில் 66 பேர் பலி.
- 27 ஆண்டுகளுக்குப் பின்னர் ரோமில் கடும் பனிப்பொழிவால் 300 பேர் பலி.
- ஆப்கானிஸ்தானில் கடும்குளிர் நாற்பது குழந்தைகள்பலி.

✧ நிலநடுக்கம் -

- இந்தியாவின் ராஜஸ்தான் தலைநகர் ஜெய்ப்பூரில் (02.02.2012)
- கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியாவில் உள்ள வான்கூவர் தீவின் மேற்குப் பகுதியில்
- பிலிப்பைன்ஸ் 44 பேர் உயிரிழப்பு (06.02.2012)
- கலிபோர்னியாவில் (13.02.2012)
- மொங்கோலி எல்லைக்கு அருகிலுள்ள சேர்பிய பகுதியில் (27.02.2012)

✧ நிலச்சரிவு -

- ஜம்மு காஷ்மீர் மாநிலம் ராம்பன் மாவட்டத்தில் 06 பேர் உயிரிழப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுப் பக்கம் வீசிய வலையில்...


◈ அண்மையில் காலமாகிய சர்வதேச கிரிக்கெட் வர்ணனை யாளர் யார்? ரணில் அபேநாயக்க

◈ உலகின் சிறந்த கால் பந்து வீரருக்கான விருதை தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக தட்டிச் சென்றவர் யார்? ஆர்ஜென்ரீனாவின் நட்சத்திர வீரர் மெஸ்னி

**ஜெனிவா ஜெனிவா என அண்மைக்காலமாக பத்திரிகைகளிலும் சரி. இலத்திரனியல் ஊடகங்களிலும் சரி அனைத்து மக்களின் வாய்க்குள்ளும் இச்சொல் உச்சரிக்கப்பட்டுக் கொண்டிருப்பதைக் நாம் காணுகின்றோம். இந்த ஜெனிவா பற்றி உங்களுக்குத் தெரியுமா? இதோ உங்களுக்காக ஜெனிவா பக்கம் வீசப்பட்ட வலையில் சிக்குப்பட்ட சில தகவல்கள்...**

## ஜெனிவா (Geneva) நகரம் அமைந்துள்ள சுவிற்சர்லாந்து

- மக்கள் தொகையின் படி சுவிட்சர்லாந்து நாட்டின் மிகப் பெரிய இரண்டாவது நகரமே ஜெனிவாவாகும்.



- ஜெனிவா ஏரியிலிருந்து ரோன் ஆறு பாய்கிற இடத்தில் அமைந்த இந் நகரத்தில் 186, 825 மக்கள் வாழ்கின்றனர்.
- ஐக்கிய நாடுகள், செஞ்சிலுவை போன்ற பன்னாட்டு அமைப் புக்களின் தளங்கள் ஜெனிவாவில் அமைந்துள்ளன.
- செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைமைப்பீடம் இந்நகரத்தில் அமைந்துள்ளது.
- ஜேர்மன், பிரெஞ்சு, இத்தாலியம் மற்றும் உ ரோமாஞ்சு முதலிய நான்கு தேசிய மொழிகளைப் பேசும் மக்கள் வாழ்கின்றனர்.
- ஓகஸ்ட் - 1 - தேசிய தினம் கொண்டாடப்படுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- றோமன் கத்தோலிக்கம், புரட்டஸ்தாந்து, இஸ்லாமிய மதங்களைச் சார்ந்த மக்கள் வாழ்கின்றனர்.
- ஐ.நா.வின் தலைமைச் செயலகமும் இங்குதான் உள்ளது.

## இலங்கையில் மரண தண்டனை...

இலங்கையில் மரண தண்டனையை மீள நடைமுறைப்படுத்துவது குறித்து பொதுமக்களிடம் கருத்துக் கணிப்பு இலங்கை சிறைச்சாலைகள் திணைக்களத்தினால் நடத்தப் படுகின்றது.

மரண தண்டனையை நடைமுறைப் படுத்து வதன் மூலம் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்த முடியுமா? என்பது குறித்து மக்களின் கருத்துக்கள் அறியப்படவுள்ளன.



சிறைச்சாலைகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள வினாக்கொத்தை மக்கள் பூர்த்தி செய்து வழங்கப்பட வேண்டு மென அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் கருத்துக் கணிப்பு தொடர்பான இறுதி அறிக்கை ஜனாதிபதியிடம் ஒப்படைக் கப்படவுள்ளது.

அநுராதபுரத்தில் நடைபெற்று முடிந்த தேசத்துக்கு மகுடம் கண்காட்சியிலும் பார்வையாளரிடம் வினாக் கொத்து வழங்கப் பட்டு கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## வீசலில் சிக்கிய நாடுகளின் தேசிய விளையாட்டுக்கள் சில...

- இலங்கை - எல்லே, கரப்பந்தாட்டம்
- இந்தியா - கொக்கி, கபடி
- ஆஸ்திரேலியா - கிரிக்கெட்
- துருக்கி - மல்யுத்தம்
- பாகிஸ்தான் - ஹொக்கி
- ஸ்பெயின் - ஜல்லிக்கட்டு
- கனடா - பனிக்ஹொக்கி
- ஐக்கிய அமெரிக்கா - பேஸ் போல்
- ஸ்கொட்லாண்ட் - கால்பந்து

லண்டன் நகரில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிக்கான குதிகலத்தில் வலம் வந்த கண்ணைக் கவரும் இலட்சனைகள்...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலைகளிலிருந்து மாணவர்கள் இடைவிலகல்

2011ஆம் ஆண்டில் பாடசாலைகளிலிருந்தான மொத்த மாணவர் இடைவிலகல்கள் 125,970.

கூடியளவு மாணவர் இடைவிலகல்கள் இடம்பெற்ற மாகாணம் - வட மாகாணம் 30.42%, 38,321 பேர். குறைந்தளவு மாணவர் இடைவிலகல்கள் இடம்பெற்ற மாகாணம் - சப்ரகமுவ மாகாணம் 5.52%

## உலகில் அதிகளவு பெண்கள் அபாயத்தை எதிர்நோக்கும் நாடுகள்.

உலகில் அதிகளவு பெண்கள் அபாயத்தை எதிர்நோக்கும் நாடுகளுள் முதலாவதாக ஆப்கானிஸ்தான் விளங்குகின்றது.

ஏனைய நிலை நாடுகளாக கொங்கோ, பாக்கிஸ்தான், இந்தியா, சோமாலியா என்பன விளங்குகின்றன.



## *வன்னி மாணவனின் பார்வையில்...*

நாளுக்கு நாள், நிமிடத்திற்கு நிமிடம் உலக அரங்கிலே நடந்தேறும் நிகழ் வுகளை வலை வீசித் தேடித் தொகுத்து நினைத்த மாத்திரத்தில் எம் கரங்களில் தவழ வழியமைக்கும் வலையின் தலைசிறந்த பணியானது என்றென்றும் பாராட்டு தலுக்குரியது.

அந்தவகையில், அசுர வேகத்தில் வளரும் மின்னியல் உலகிலே நாளாந்தம் பற்பல அரிய சாதனைகளும், நிகழ்வுகளும் நடந்த வண்ணமே உள்ளன. அவையனைத்தையும் சல்லிடையிட்டுத் தேடி தன்னில் தாங்கி வரும் வலையானது கிணற்றுத் தவளைகள் போல இருக்கும் எம் சமுதாயத்தினரிடையே வெளி நடப்புக்களைப் படம்பிடித்துக் காட்டுவதில் தன்னிகரற்ற சேவையினை ஆற்றி வருவது வெள்ளிடைமலை.

இவ்வாறே அரிய பல ஆக்கபூர்வமான பொது அறிவுசார் தகவல்களை எமக்குத் தொகுத் தழித்து எம்மிடையே தேடல் பசிக்குத் தீனி போடும் வலையின் பணியானது இழையறாது செவ்வனே பின்னப்பட உறுதுணையாய் இருப்போம் என திடசங்கற்பம் பூணுவோமா....!

**மரியநாயகம் கேசவன்,**
கிளி/ கிளிநொச்சி இந்துக் கல்லூரி,
கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாசக நெஞ்சங்களுக்கு...**

வலையின் இதழ் ஆறாவது இழையில் உங்களைச் சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

வாசிப்பினைப் பற்றிக் கொஞ்சம் சிந்திப்போமா....

இன்று நம் மத்தியில் நூல்களும், பத்திரிகைகளும், சஞ்சி கைகளும் அடங்கலாக தகவல் பெருக்கம் அதிக ரித்து வரும் அளவுக்கு இன்றைய இளம் சமுதாயத்தி னரான மாணவர்களி டையே வாசிப்புப் பழக்கம் அதிக ரித்துக் காணப்படுகின்றதா என்ற கேள்வி எழுகின்ற போது, பதில் திருப்திகரமானதாகத் தோன்றுவதில்லை.

மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கம் மிகக் குறைந்த மட்டத்திலேயே இருப்பதாக ஆய்வுகள் சுட்டிக் காட்டுகின்றன.

தூரதிர்ஷ்டவசமாக மாணவர்கள் தமது ஆசிரியர் கள் தரும் பாடம் சம்பந்தமான குறிப்புக்களைத் தவிர, அதற்கு மேலான வாசிப்பினையோ, அன்றிப் பொது வான வாசிப்பினையோ மேற்கொள்ள ஆர்வம் காட்டாதிருக்கின்றனர் என்பது உண்மையே.

அவர்களது கண்ணையும், கருத்தையும் திசை திருப்பச் செய்வதில் சக்திமிக்க நவீன தொழில்நுட்பச் சாதனங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. எனினும் மாணவர்களை 'மனிதனைப் பூரணமாக்கும்' வாசிப்புப் பழக்கத்தில் ஈடுபடுத்துவது மிக முக்கியமாக ஆசிரியர் களின் கையில் தான் தங்கி நிற்கின்றது. பிள்ளைகள் ஆழ்ந்த அறிவினைப் பெற்றுச் சமுதாயத்தில் சிறந்த பண்புடைய மனிதர்களாக விளங்கவும் வேண்டும்.




எனவே இந்த வாசிப்புப் பழகத்தினை ஊக்குவிக்க ஆசிரியர்களுடன் பெற்றோரும் தூண்டுதலாக, ஊக்கிக ளாக நிற்றல் அவசிய மாகும். செய்வீர்களா...?

இந்த இதழ் தொடர்ந்து வெளிவருவது உங்கள் கைகளிலேயே தங்கியுள்ளது. எனவே உங்களது ஆதரவை நாடிநிற்கின்றேன்.

உங்களது ஆலோசனைகள் வரவேற்கப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மார்ச் மாத சர்வதேச தினங்கள்...

❖ மார்ச் - 03 - தேசிய தொழிலாளர் பாதுகாப்பு தினம்
❖ மார்ச் - 06 - தொழுநோய் முற்றிலும் ஒழிப்புதினம்
❖ மார்ச் - 08 - சர்வதேச மகளிர் தினம்
❖ மார்ச் - 15 - உலக ஊனமுற்றோர் தினம்
❖ மார்ச் - 20 - சமூக அதிகாரம் அளித்தல் நினைவு தினம்.
❖ மார்ச் - 21 - உலக காடுகள்/வனதினம்
❖ மார்ச் - 22 - உலக தண்ணீர் தினம்
❖ மார்ச் - 23 - உலக வானிலை தினம்
❖ மார்ச் - 24 - உலக காசநோய் தினம்
❖ மார்ச் - 25 - செஞ்சிலுவை தினம்
❖ மார்ச் - 27 - நாடக தினம்




## இலங்கை பற்றிய இம்மாத வீசலில்...

- எயிட்ஸ் நோயினால் இதுவரை (2012 மார்ச் வரை) இலங்கையில் உயிரிழந்துள்ளவர்களின் எண்ணிக்கை யாது?
  250 பேர் (3 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக எயிட்ஸ் ஒழிப்புப் பிரிவு அறிவித்துள்ளது)

- எச்சிலைத் துப்பினால் 500/- தண்டம் விதிக்கப்படும் என அறிவித்துள்ள நகர சபை எது?
  புத்தளம் நகர சபை

- இலங்கையில் சட்டபூர்வமாக உற்பத்தி செய்யப்படும் மதுபானங்களின் பாவனை எத்தனை வீதத்தினால் அதிகரிக்கப்பட்டுள்ளது? ஆறு வீதம்

- இலங்கையில் பல ஆண்டுகளாகவே நஷ்டத்தில் இயங்கி வரும் அரச நிறுவனங் களில் முன்னணியிலுள்ள நிறுவனம் எது?
  தபால் திணைக்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- யாழ்.மாவட்டத்தில் முதன் முறையாக உலக உணவுத் திட்டத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட திட்டம் என்ன?
பணக்கூப்பன் (Cash Boucher)

- 2011 இல் அதிக பெறுபேறுகள் பெற்ற பால் எது?
"மலிபன் பால்"

- "பெண்களுக்கு முக்கியத்துவம்" ஆசியாவில் இலங்கை எத்தனையாம் இடம்?
முதலாவது இடம்

- வடக்கில் தாய்-தந்தை இருவரையும் இழந்த சிறார்களின் எண்ணிக்கை எவ்வளவு?
2 ஆயிரத்து 87 பேர்(2012 மார்ச் வரை)

- 2012 சர்வதேச மகளிர் தினத்தில் ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ தம்பதியினரால் கௌரவிக்கப்பட்ட எட்டு பெண்களில் ஒரேயொரு தமிழ்ப் பெண்மணி யார்?
யாழ்.மாவட்ட முன்னாள் அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் அவர்கள்.

- சீனிப் பாவனையைக் குறைக்க சுகாதார அமைச்சு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?
பொதுமக்கள் சீனிப் பாவனையைக் குறைப்பதற்கு ஏற்றவாறு அவற்றுக்கு மாற்றீடாக சீனி கலக்காத பானங்களை வழங்கு வதுடன், அவர்களின் விருப்பத்துக்கு ஏற்றவாறு சீனியை எடுத்துக்கொள்வதற்கு சீனியைத் தனியான பாத்திரத்தில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் என்பதாகும்.

- தற்போது இலங்கையில் ஒரு மனிதனின் ஒரு மாதத்துக்குரிய ஆகக்குறைந்த வாழ்க்கைச் செலவு எவ்வளவு?
3 ஆயிரத்து 316 ரூபா
யாழ்ப்பாணத்தில் 3 ஆயிரத்து 565 ரூபா ஆகும்.
(2012 புள்ளிவிபரத் திணைக்கள அறிக்கையிலிருந்து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நீரிழிவு நோயாளியை தேடிச்சென்று (வீட்டுக்கு) சிகிச்சை வழங்குவதற்குத் தயாராகவுள்ள, யாழ்.மாவட்டத்தில் அமைந்துள்ள வைத்தியசாலை எது?
சாவகச்சேரி வைத்தியசாலை

- தபாலகச் செயற்பாடுகளை ஞாயிறு தினத்திலும் நடத்திச் சேவையாற்றி வரும் தபாலகம் எது?
வவுனியா பிரதம தபாலகம்

- இலங்கையில் தற்போதுள்ள பொலிஸ் நிலையங்கள் எத்தனை? 432

- அதி நவீன நகரத் திட்டமிடலுக்கு தெரிவு செய்யப்பட்ட வடமாகாண நகரங்கள் எவை?
யாழ்ப்பாணம், கிளிநொச்சி

- வடமாகாண தகவல் தொடர்பாடல் நிலையம் அண்மையில் எங்கு திறந்து வைக்கப்பட்டது?
றக்கா வீதி, சுண்டிக்குளி

- இந்த மாதத்தில் (மார்ச்) தனது 25 ஆவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடிய பத்திரிகை எது?
"ராவய"

- 2012 இல் (மார்ச்) தேசிய சேமிப்பு வங்கி தனது எத்தனையாம் ஆண்டு நிறைவு விழாவினைக் கொண்டாடியது?
40 ஆம் ஆண்டு

- தொகை மதிப்பு தினமாக அரசினால் பிரகடனப்படுத் தப்பட்டுள்ள தினம் யாது?
2012 மார்ச் 20

- எமது நாட்டில் விவகாரத்துக் கோருவோர் தொகை எத்தனை வீதமாக அதிகரித்துள்ளது?
60 வீதம் (பெண்கள் கல்வி மற்றும் ஆய்வு நிறுவனத்தின் தகவல் - கொழும்பு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அரை நூற்றாண்டுக்கு மேலாக ஒலிபரப்புத் துறையில் தனது வியத்தகு குரல் வளத்தால் சாதனை படைத்தவரும், அண்மையில் காலமாகிய மூத்த வானொலி அறிவிப்பாளர் யார்?
  இராஜேஸ்வரி சண்முகம் (வயது-73)



- இந்த வருடத்தில் (2012) கடந்த மூன்று மாதங்களிலும் நாட்டில் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர்? 8 ஆயிரம் - இதில் 30 பேர் உயிரிழப்பு
- யாழ்.மாவட்டத்தில் பாவனையாளர்களிடையே தினமும் எத்தனை இறாத்தல் பாண் நுகரப்படுகின்றது?
  50 ஆயிரம் இறாத்தல் (யாழ்.மாவட்டபேக்கரி உரிமையாளர் சங்கத்தின் புள்ளி விபரத் தரவிலிருந்து)
- எமது நாட்டில் எத்தனையாயிரம் போலி வைத்தியர்கள் உள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது?
  40 ஆயிரம் பேர்
- இலங்கையை அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கி இருக்கும் 'கெரட்ட கோனர்ஸ்' எனப்படும் 'கருவிழி கூம்பல்' நோய்க்கு முதன் முதல் சிகிச்சை அளிக்கும் திட்டம் எங்கு ஆரம்பித்து வைக்கப்பட்டது?
  கொழும்பு தேசிய கண் வைத்தியசாலையில்
- அண்மையில் காலமாகிய யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பிரபல எழுத்தாளரும்,கவிஞரும் யார்?
  த.ஆனந்தமயில் (வல்வெட்டித்துறை)
- யாழ்.மாவட்ட மட்டத்தில் 2012 சிறந்த பெண்மணியாகத் தேர்வு செய்யப்பட்டவர் யார்?
  திருமதி சைலா இதயராஜ் (சுதுமலை தெற்கு, சாவற்கட்டு.) சிறுவர் அபிவிருத்தி விவகார அமைச்சினால் நடத்தப்பட்ட நேர்முகத்தேர்வில் தெரிவானார்.

  கடந்த 08.03.2012 இல் அலரி மாளிகையில் நடைபெற்ற மகளிர் தின நிகழ்வில் ஜனாதிபதியால் கௌரவிக்கப்பட்டார். 2005 இல் இலங்கையிலிருந்து நோபல் பரிசுக்காக தெரிவு செய்யப்பட்ட 12 பேரில் இவரும் ஒருவர் என்பது குறிப்பிடத் தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- யாழ்ப்பாணத்தில் சர்வதேச தரத்திலான தனியார் வைத்தியசாலை அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. அது எது?
  நொதோர்ண் சென்ரல் ஹொஸ்பிட்டல் லிமிடெட் (Northen Central Hospital)

- அண்மையில் வெளியிடப்பட்ட "புங்குடுதீவு வாழ்வும் வளமும்" என்ற நூலின் ஆசிரியர் யார்?
  தம்பிஐயா தேவதாஸ்

- அண்மையில் காலமாகிய பிரபல சிங்கள நடிகர் யார்?
  அன்ரன் யூட்

## உலகை நோக்கிய வீசலில்...

- உலகப் பல்கலைக்கழக இளைஞர் மாநாடு எந்த நாட்டில் நடைபெற்றது?
  2012 ஜுலை 06 - 08 வரை சிங்கப்பூரில் நடைபெற்றது.
- தெற்காசியாவில் ஹெரோயின் விற்பனையில் முன்னணியில் உள்ள நாடு எது?
  இந்தியா (ஐ.நா. குழு அறிக்கையில் இருந்து)
- வட ஆபிரிக்காவும் யாழ்ப்பாணமும் பண்டைய காலத்தில் வணிக உறவில் ஈடுபட்டதற்கான சான்று அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட இடம் எது?
  அல்லைப்பிட்டி (கிணறு வெட்டிய வேளையில் கண்டு பிடிக்கப்பட்டது)
- உலகின் மிகப்பெரிய தகவல் ஒளிபரப்புக் கோபுரம் எந்த நாட்டில் உள்ளது? அக்கோபுரத்தின் பெயர் என்ன?
  ஜப்பான் தலைநகர் டோக்கியோவில்
  - ஸ்கைட்ரீ (Sky Tree)
  இதன் உயரம் - 634 (2, 080 அடி)
  ஆகும்.எதிர்வரும் மே 22 முதல்
  பொதுமக்கள் பார்வைக்கு விடப்படவுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢ 200 வருடங்களாக மாமிச உணவை உண்ணாத மக்கள் யார்?
இந்தியாவின் ஒசூர் கிராம மக்கள்

➢ ஓசோன் மண்டலத்தில் பாதிப்பைக் கண்டறிந்தவரும், அண்மையில் காலமாகிய விஞ்ஞானி யார்?
ஷெர்வுட் ரோலண்ட் (வயது - 84)

➢ ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 19 ஆவது கூட்டத் தொடரில் இலங்கை சார்பில் பங்கு பற்றிய இராஜதந்திரிகள் யார்?
- மகிந்த சமரசிங்க
- ஜி.எல்.பீரிஸ்
- தமராகுணநாயகம் (இலங்கையின் தூதுவரும், ஐ.நா.வுக்கான ஜெனிவாவிலுள்ள நிரந்தர வதிவிடப் பிரதிநிதி)

➢ 785 திருமணங்களை நடத்தி வைத்து Book of Record இல் இடம்பிடித்திருப்பவர் யார்?
ராம்கோபால் (இந்தியாவிலுள்ள மத்திய பிரதேச மாநிலத்தைச் சேர்ந்தவர்)

➢ 200 பேரைச் சாவுகொண்ட ஆயுதக் கிடங்கு எந்த நாட்டில் வெடித்தது? கொங்கோ

➢ உலகின் முதற்தர கருத்தடை மாத்திரை எது?
யஸ்மின்

➢ ஐ.நா. பாதுகாப்புச் சபையில் நிரந்தரமற்ற உறுப்புரிமையைப் (வாக்களிப்பதன் மூலம்) பெற்ற ஒரே நாடு எது?
வியட்னாம்

➢ புகைப்பிடிக்கும் பழக்கத்தால் உலகில் 6 செக்கனுக்கு எத்தனை பேர் இறக்கின்றனர்?
ஒருவர் என்ற வீதம்
(உலகில் வருடாந்தம் 54 இலட்சம் பேர் இறக்கின்றனர்)



➢ சீனா குறித்து உலக வங்கி எச்சரித்தமை யாது?
சீனாவின் பொருளாதார வளர்ச்சி குறையும் என்பதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢ 14 நாட்களில் 30 மாடிகளைக் கொண்ட கட்டடத்தினைக் கட்டி முடித்து உலக சாதனை படைத்த நாடு எது?
சீனா

➢ 2011ஆம் ஆண்டில் மட்டும் 670 பேருக்கு மரண தண்டனை வழங்கிய நாடு எது? ஈரான்

➢ 244 வருடங்களாக தொடர்ச்சியாக ஆங்கில மொழியில் தனது வெளியீட்டினை வெளியிட்டு வரும் பிரிட்டானிக்காக நிறுவனம் அதனை நிறுத்தியுள்ளது. அது எது?
"என்சைக்ளோ பீடியா"

➢ சிறந்த தொழில் முனைவோர் பட்டியலில் முதலிடத்தில் உள்ளவர் யார்?
ஸ்டீவ் ஜாப்ஸ் (அப்பிள் நிறுவனத்தின் ஸ்தாபகர்)

➢ இரண்டாம் உலகப்போர் நடைபெற்ற இலட்சக்கணக்கான யூத மக்களின் மரணத்துக்கு காரணமான மனிதர் தனது 91 ஆவது வயதில் காலமானார். அவர் யார்?
ஜோன் டெம்யன்யூக் (வயது-91)

➢ வெப்பத்தைத் தாங்கவல்ல பல்லிகளை விண்வெளிக்கு அனுப்பவுள்ள நாடு எது? ரஷ்யா

➢ கீதைக்கு தடை விதித்த விடயம் தொடர்பில் அந்த வழக்கை அந்நாட்டிலுள்ள நீதிமன்றம் நிராகரித்துள்ளது. அது எந்த நாடு? ரஷ்யா

➢ உலகில் புகழ்பெற்ற மறைந்த பொப் இசைப்பாடகர் ஒருவரின் வீடு ஏலத்தில் ஏலத்தில் விடப்படவுள்ளது. அவர்யார்?
மைக்கல் ஜக்சன்



➢ 12 மணித்தியாலங்களில் 14 உலக சாதனை படைத்த கிரிக்கெட் வீரர் யார்?
அன்ட்ரூ பிறின்டொப் (இங்கிலாந்து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢ 100 கோடி டொலர் செலவில் கடலுக்குள் பிரமாண்டமான தீவு எங்கு கட்டப்பட்டு வருகிறது?
டுபாயில் (கட்டார்) ரியல் மாட்ரிட் கால்பந்து அணியினால் அமைக்கப்படவுள்ளது.

➢ உலகிலேயே மிகப்பெரிய நாற்காலி எங்கு உள்ளது?
பிரிட்டனில்



➢ துருக்கி நாட்டு ஷம்போ நிறுவனம் யாரை வைத்து விளம்பரப் படம் தயாரித்து சிக்கலில் மாட்டியுள்ளது?
அடோல்ப் ஹிட்லர்

➢ உலகின் மிகப்பெரிய பெண்கள் பல்கலைக்கழகம் எங்கு உள்ளது?
சவூதி அரேபியாவின் ரியாத் நகரில் ஆகும். இங்கு ஒரே நேரத்தில் 50 ஆயிரம் பேர் பயில முடியும்.

➢ பூமிக்கு மிக நெருக்கமாகவும், பிரகாசமாகவும் அண்மையில் சென்ற கிரகம் எது?
செவ்வாய்க்கிரகம்

➢ உலகிலேயே மிகவும் பழைமை வாய்ந்த தபால் நிலையம் தனது 300 ஆவது பிறந்தநாளை அண்மையில் கொண்டாடியது. அது எந்த நாட்டில் உள்ளது?
இங்கிலாந்து "சான்குகார்" என்ற இடத்தில் உள்ளது.

➢ அதிக சொத்துக்களை உடைய உலகில் முதல் வரிசையில் உள்ள பல்கலைக் கழகம் எது?
இங்கிலாந்தின் கேம்பிரிஜ் பல்கலைக்கழகம்

➢ இம்மாதம் (மார்ச்) பாப்பரசர் 16 ஆவது பெனடிற் எந்த நாட்டுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டார்?
கியூபா

➢ 222 அடி உயரத்தில் உலகிலேயே மிகப்பிரமாண்டமான ஆலயம் எங்கு கட்டப்படவுள்ளது?
இந்தியாவின் பிகார் மாநிலத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢ உலகில் அதிகமானோரை வேலைக்கு அமர்த்தும் நிறுவனத்தின் பட்டியலில் முதலிடத்தைப் பிடித்துக்கொண்ட இராணுவம் எது? அமெரிக்க இராணுவம்


## அயல்நாட்டுப் பக்கமாக வீசிய வலையில்...

★ இந்திய நாட்டின் இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?
லெப்ரினன்ட் ஜெனரல் பைக்ராம் சிங் (மே 31 இல் பதவி ஏற்கிறார்)

★ இந்திய - ரஷ்யக் கூட்டு முயற்சியில் தயாரிக்கப்பட்ட ஏவுகணை எது?
பிரம்மோஸ் ஏவுகணை

★ உத்தரப் பிரதேசத்தின் (இந்தியா) 33 ஆவது முதல்வராக அண்மையில் பதவியேற்றவர் யார்?
அகிலேஷ் யாதவ் (வயது-38)

★ டில்லியில் நடைபெற்ற 59 ஆவது தேசிய விருது வழங்கும் நிகழ்வில் தேசிய விருது பெற்ற திரைப்படம் எது?
"வாகை சூடவா"



★ உலகில் அதிகமாக ஆயுதங்களை இறக்குமதி செய்யும் நாடுகளின் பட்டியலில் முதலிடத்தைப் பெற்றுள்ள நாடு எது?
இந்தியா

★ அந்திஸ் மலைத்தொடரின் உச்சியைத் தொட்ட முதல் இந்தியர் யார்?
மல்லி மஸ்தான் பாபு

★ பிரமோஸ் என்பது யாது?
இந்தியா - ரஷ்யா கூட்டு முயற்சியில் உருவாக்கப்பட்ட ஏவுகணையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



★ இந்திய நிறுவனமொன்று நடத்திய நிகழ்வில், 10 நிமிட நடைக்கு ஒரு கோடி ரூபா பெற்றுக்கொண்ட நடிகை யார்?
கத்ரினா கைப்

★ சியோல் அணுசக்தி பாதுகாப்பு மாநாடு எந்த நாட்டில் நடைபெற்றது? தென்கொரியா

## விளையாட்டுப் பக்கம் வீசிய வலையில்...

◈ கடற்கரை கரப்பந்தாட்ட உப செயலாளராக தெரிவு செய்யப் பட்ட முதலாவது தமிழர் யார்?
இ.மனோகரன் (யாழ்ப்பாணம்)

◈ இலங்கை தேசிய பெண்கள் உதைபந்தாட்ட அணியில் முதற்தடவையாக யாழ்.மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட தமிழ் மாணவி யார்?
சி.தாட்சாயினி (மானிப்பாய் மகளிர் கல்லூரி)

◈ அமெரிக்காவின் டென்னிஸ் சனல்-1 2012 நடத்திய போட்டியில் சிறந்த டென்னிஸ் வீரராகத் தெரிவு செய்யப் பட்டவர் யார்? பெடரர் (சுவிட்சர்லாந்து)

◈ டுபாய் ஓபன் டென்னிஸ் தொடரின் ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவில் சம்பியன் பட்டம் வென்றவர் யார்?
ரோஜர் பெடரர் (சுவிட்சர்லாந்து)

◈ இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தினால் கௌரவிக் கப்பட்ட யாழ். உதை பந்தாட்ட லீக் உறுப்பினர் யார்?
முடியப்பு பிரான்சிஸ்

◈ கிரிக்கெட் விளையாட்டில் 100 ஆவது சதமடித்த சாதனை வீரர் யார்? சச்சின் டென்டுல்கர்

◈ 2012 உலகக் கிண்ணக் கபடிப் போட்டி எந்த நாட்டில் நடைபெற்றது? இந்தியாவில்

◈ வீதி விபத்தில் உயிரிழந்த மேற்கிந்திய தீவுகளின் கிரிக்கெட் வீரர் யார்? ருனாகோ மோர்டன் (வயது-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




◈ கிரிக்கெட்டின் பஞ்சாங்கம் என்று சொல்லப்படும் நூல் எது?
விஸ்டன் நூல்

## உலகை உலுக்கிய இம்மாத இயற்கை அழிவுகள்...

✦ பனிப்பாறை –
- ஆப்கானிஸ்தானில் பனிப்பாறை சரிவினால் 37 பேர் பரிதாப மரணம்
- ஆப்கானிஸ்தானில் பனிச்சரிவினால் 45 ஆயிரம் பேர் பலி *(12.03.2012)*

✦ பெருவெள்ளம் –
- அவுஸ்ரேலியாவின் தென்கிழக்கில் வேகாஸ் நகரில் வெள்ளம். 3 ஆயிரம் பேர் இடப்பெயர்வு

✦ சுனாமி –
- ஜப்பானில் சுனாமி - ஆயினும் உயிரழிவு ஏற்படவில்லை. *(15.01.2012)*

✦ நில நடுக்கம் –
- அவுஸ்ரேலியாவில்..
- ஜப்பானில் *(01.03.2012)*
- பிலிப்பைன்ஸ் சூரியாகோ, மிடானோவா பகுதிகளில் *(17.03.2012)*
- திருச்சியில் *(27.03.2012)*

✦ புயல் –
- அமெரிக்காவில் கடும் புயல் 12 பேர் பலி
- மடகஸ்கார் - கடும் புயல் 65 பேர் பலி

✦ சூறாவளி –
- அமெரிக்காவில் கடும் புயல் 30 பேர் பலி

❒ "சிறிவியசவிய" என்பது யாது?
கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு போஷாக்கு உணவு வழங்கும் சமூக நலத்திட்டம் ஆகும்.
ஜனாதிபதியின் பாரியார் ஷிராந்தி ராஜபக்ஷவின் ஆலோசனைக்கு இணங்க இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❒ "சுரக்கும் திட்டம்" என்பது யாது?

எல்லோருக்கும் ஓய்வூதியத் திட்டமாகும். நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் கீழ் செயற்படும் சமூக பாதுகாப்புச் சபை அறிமுகப்படுத்தியதாகும்.

❒ IAPH என்பது?

சர்வதேச துறைமுகங்கள் மற்றும் கப்பல் தளங்கள் பற்றியதான அமைப்பு (The International Association of Ports and Harbors)

❒ இலங்கையில் தேசிய மரநடுகை தினம் எப்போது அனுஷ்டிக் கப்படுகிறது?

நவம்பர் - 15 "தேசத்தின் நிழல்" மர நடுகைத் திட்டம் 11 இலட்சம் மரக்கன்றுகள் நாட்டப்பட்டன.

---



## சிரேஷ்ட கிராம அலுவலரின் பார்வையில்...

மாணவர்களின் அறிவுப் பசிக்கு தீனிபோடும் "வலை" சிற்றிதழ் படித்தேன். இது மாணவர்களுக்கு மட்டுமல்ல பொது அறிவுத் தேடலில் உலாவரும் அனைத்து மட்டத்தினருக்கும் மிகவும் பயனுள்ளதாக வெளிவருகிறது.

தொழில் வாய்ப்புக்களுக்கான போட்டிப் பரீட்சைகளுக்குத் தோற்றுபவர்கள் கூட இந்த இதழின் ஊடாகத் தமது திறனை உயர்த்திக் கொள்ள முடியும்.

இன்றைய அவசர உலகில் நாட்டில் வெளிவரும் அனைத்து ஊடகங்களிலும் தேடல் செய்ய மாணவர்களுக்கு முடியாத காரியம். ஆனால் இந்த "வலை" இதழில் உலகில் வெளிவரும் அத்தனை ஊடகங்களின் மீது உலாவந்து மேற்கொண்ட தேடலின் தொகுப்பானது மாணவர்களுக்கு எளிதில் விளங்கிக்கொள்ளக்கூடிய இலகுவான மொழி நடையில் கேள்வி–வினா வடிவில் தரப்பட்டி ருப்பது வலையின் சிறப்பம்சமாகும்.

எனவே, இவ் வலையினைப் படிப்பவர்கள் நிச்சயம் தங்களது பொது அறிவுப் பரீட்சையிலும் சித்தியடைந்து, அறிவியலின் சிகரத்தைத் தொடுவார்கள் என்பது எனது நம்பிக்கை. இவ்விதழ் தொடர்ந்து வெளிவர வாழ்த்துகிறேன்.

**க.கணேசலிங்கம்,**
கிராம அலுவலர்,
பிரதேச செயலகம், சங்கானை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாசக நெஞ்சங்களுக்கு...**

வலையின் இதழ் ஏழாவது இழையில் உங்களைச் சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

புண்பட்ட நெஞ்சுக்கு சிரிப்பைப் போல இதமான மருந்து வேறு எதுவும் கிடையாது.

உலக வாழ்க்கையில் இருக்கும் ஏற்றத்தாழ்வுகள், இன்ப துன்பங்கள், பித்தலாட்டங்கள் இவற்றை எல்லாம் பார்த்துக் கொண்டு சிரிக்கத் தெரியாது நாம் இருந்தோமே யானால், என்ன ஆகும் நம் கதி? பைத்தியம் பிடித்து விடும்.

நோய்களையும், பைத்தியத்தையும் தடுப்பதற்காகவே நமக்கு சிரிப்பு என்ற தெய்வீக சக்தி கொடுக்கப் பட்டிருக்கிறது.

சிரிக்கத் தெரியாதவனுக்கு பட்டப்பகலும் அமவாசையாக, கடும் இருட்டாகத்தான் இருக்கும். இந்தக் கருத்தினை வைத்துத்தான் வள்ளுவரும் தனது பண்புடைமை 999 ஆவது குறளில்

"நகல் வல்லார் அல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும்பாற் பட்டன் றிருள்"

எனக் குறிப்பிட்டுள்ளார். எனவே தெளிவில்லாத காரணத் தினால் சிரிப்பற்று இருக்கிறோம். உள்ளத்தில் தெளிவு வந்துவிட்டாலோ, வாழ்க்கையே ஒரு சிரிப்பாக, வளமாக இருக்கும்.

எனவே சிரிக்கவும், சிந்திக்கவும் தெரிந்த உயிரினம் மனிதன். ஆகவே பிறர் எம்மைப் பார்த்து சிரிக்காத வகையில் சமூகத்துக்கு முன்மாதிரிகளாக, இறைவனுக்கு ஏற்றவர்களாக வாழ்ந்து, சீர்பெற்று சிறப்புடன் வளமாக வாழ்வோம்.

என்ன! சிரிக்க ஆயத்தமா....?

இந்த இதழ் தொடர்ந்து வெளிவருவது உங்கள் கைகளிலேயே தங்கியுள்ளது. ஆகையால் இவ் விதழினை உங்களது நண்பர்களுக்கும், மாணவர்களுக்கும் அறிமுகம் செய்து உதவுங்கள்.

எனவே உங்களது ஆதரவிலேயே எனது பணி தொடரும்...


வலை

உங்களது ஆலோசனைகள் வரவேற்கப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏப்ரல் மாத சர்வதேச தினங்கள்...

★ ஏப்ரல் - 01 - உலக முட்டாள்கள் தினம்
★ ஏப்ரல் - 05 - உலக கடல் தினம்
★ ஏப்ரல் - 07 - உலக சுகாதார தினம்
★ ஏப்ரல் - 12 - உலக வான் பயண தினம்
★ ஏப்ரல் - 18 - உலக பரம்பரை தினம்
★ ஏப்ரல் - 22 - உலக பூமி தினம்
★ ஏப்ரல் - 30 - உலக குழந்தைத் தொழிலாளர் தினம்




## இலங்கை பற்றிய இம்மாத வீசலில்...

❖ இலங்கையின் மிகப் பழமையான தலைநகரம் எது?
பொலநறுவை

❖ இலங்கையின் முதலாவது மலர் சேகரிப்பு நிலையம் எங்கு உள்ளது?
நுவரேலியாவில்

❖ இலங்கையில் (2012) பனிக்கட்டி மழையுடன் சூறாவளி தாக்கிச் சேதப் படுத்திய இடம் எது?
வவுனியா - செட்டிக்குளம் பகுதியில்

❖ ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களால் "அபிமன் மாதா" என்ற விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட மூதாட்டி யார்?
எச்.எம்.பொடிநோனா (பலாங்கொடை), (தாய் மண்ணுக்கு 21 பிள்ளைகளை வழங்கியதற்காக இவ்விருது இவருக்குவழங் கப்பட்டது)

❖ இலங்கையில் தற்போது எத்தனை வயதுக்கு குறைந்த பிள்ளைகளின் தாய்மார் வெளிநாடு செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது?
18 வயதுக்கு (சிறுவர் மேம்பாடு மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியந்த தகவல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ வாகன ஆசனப்பட்டி அணியாத சாரதிகளுக்கு புதிதாக அறி விக்கப்பட்டுள்ள அபராதத் தொகை எவ்வளவு?
ஆயிரம் ரூபா முன் ஆசனத்தில் அமர்ந்து ஆசனப்பட்டி அணியாதவர்களுக்கு 100/- வீதமும் தண்டம் அறிவிடப்படு கின்றது.

❖ வாகனங்களுக்கான வரி அதிகரிக்கப்பட்டமைக்கு அரசாங்கம் கூறும் காரணம் என்ன?
போர் முடிவடைந்த பின்னர் நாட்டில் வாகனங்களின் எண் ணிக்கை அசுர வேகத்தில் அதிகரித்து வருகிறது. நாட்டில் 5 பேருக்கு ஒரு வாகனம் என்ற நிலைமை தற்போது உள்ளது.
இந்நிலைமை தொடருமானால் இன்னும் ஒரு வருடத்தில் வீதிகளில் வாகனங்கள் ஒரு அடிகூட நகரமுடியாத நிலை ஏற்படலாம்.

இதன் காரணமாகவே அதிகரித்துச் செல்லும் வாகன இறக்குமதியைக் கட்டுப்படுத்தும் நோக்கிலேயே வாகன வரி அதிகரிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவைப் பதில் பேச்சாளரும், ஊடகத்துறை பதில் அமைச்சருமான லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தனா மேற்படி கருத்தினை வெளியிட்டார்.

❖ அம்பலவாணர் க. அருணகிரி விருது வழங்கிக் கௌரவிக் கப்பட்டவர் யார்?
- பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்.

இந்த விழாவில் - சான்றோர் விருது யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி அவர்களுக்கு வழங்கப்பட்டது.

கொழும்பு இராமகிருஷ்ண மண்டபத்தில் நடைபெற்ற கம்பன் விழாவில் வைத்து மேற்படி விருதுகள் வழங் கப்பட்டன.

❖ 2012 இல் இலங்கை பொருளாதாரம் எத்தனை சதவீதம் வளர்ச்சி நிலையை எட்டியது?
8.0 வீதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ யாழ்.மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் யாழ்.மாவட்ட மக்களுக்கு முதல் தடவையாக வழங்கப்படவுள்ள சேவை எது?
இணைய வழி வைத்திய சேவை

❖ டி.எம்.ஜி.ஏ. தடுப்பூசியை இடை நிறுத்த சுகாதார அமைச்சு தீர்மானித் தமைக்கான காரணம் என்ன?
குடும்பக் கட்டுப்பாட்டுக்காகப் பெண்களுக்கு வழங்கப்படும் இத்தடுப் பூசியானது தற்போது பயன்படுத்தும் பொழுது பல்வேறு உடலியல் அசௌகரியங்களுக்கு உள்ளாகியமை தொடர்பில் பல முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளமையின் காரணமாகவே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

❖ இந்த ஆண்டின் (2012) முதல் காலாண்டுப் பகுதியில் யாழ்.போதனா வைத்தியசாலையில் எத்தனை பேர் சிகிச்சை பெற்றுச் சென்றுள்ளனர்?
ஒரு இலட்சத்து 11 ஆயிரத்து 877 பேர்
(வைத்தியசாலை புள்ளிவிபர அறிக்கையிலிருந்து)

❖ ரொயோட்டா நிறுவனம் நாடளாவிய ரீதியில் பாடசாலை மாணவர்களிடையே நடத்திய கனவுக்கார் வரைதல் போட்டியில் தேசிய ரீதியில் விருது பெற்ற மாணவன் யார்?
வை.சிவாகரன் (வரணி மகா வித்தியாலயம் - தரம் - 7)

❖ 2010/2011 ஆண்டுக்கான விஷன் விருதுகள் வழங்கும் நிகழ்வில் தங்க விருதினைப் பெற்றுக் கொண்ட இலங்கையின் தொலைத் தொடர்பு நிறுவனம் எது?
ஸ்ரீலங்கா ரெலிக்கொம்

❖ கடந்த புதுவருட தினத்தில் கோழி - குஞ்சினைப் பிரசவித்த அதிசய நிகழ்வு எங்கு நடைபெற்றது?
இலங்கையில் - நெடுங்கமுவ என்ற இடத்தில்.

❖ அண்மையில் காலமாகிய ஈழத்தின் முன்னணி சிறுகதை எழுத்தாளர் யார்?
சண்முகம் சிவலிங்கம் (விமர்சகர், கவிஞர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ சுகாதார அமைச்சின் நிறுவனங்களின் கீழ் கடமையாற்றும் கனிஷ்ட அலுவலர்களுக்கான சீருடைப் படிக் கொடுப் பனவுத் தொகை எவ்வளவு வழங்கப்படுகிறது?
8ஆயிரம் ரூபா (இது வருடமொன்றுக்கு இரண்டு தடவை களில் வழங்கப்படுகிறது)

❖ வட மாகாண ஆயுர்வேத பாதுகாப்புச் சபை இணையத்தின் ஏற்பாட்டில் ஆயுர்வேத சுதேச வைத்தியர்கள் கலந்து கொண்ட மாநாடு எங்கு நடைபெற்றது?
யாழ்ப்பாணத்தில்

❖ இந்திய அரசின் நிதியுதவியுடன் வடபகுதி ரயில் பாதையைப் புனரமைத்து வரும் சர்வதேச நிறுவனம் எது?
இர்கோன்

❖ 2011 இறுதியில் இலங்கையில் மொத்த தொலைபேசி இணைப்புக்களின் எண்ணிக்கை எவ்வளவு எனக் கணக்கிடப்பட்டுள்ளது?
2 கோடி 19 இலட்சம்

அத்துடன் கையடக்க தொலைபேசிகளின்
பாவணையாளர்கள் எண்ணிக்கை 18.3
மில்லியன் ஆகும்.

❖ சென்னைப் பல்கலைக்கழகத்தில் பாதுகாப்பு மற்றும் போர்த்திறனியல் துறையில் ஆய்வியல் நிறைஞர் (எம்பில்) பட்டம் பெற்ற வடபிராந்திய கடற்படைத் தளபதி யார்?

ரியர் அட்மிரல் ரவீந்திர விஜே குணரட்ண

❖ க.பொ.த. சாதாரண தரம் மற்றும் உயர்தரம் போன்ற பாடத்திட்டத்தில் எந்த மொழி சேர்த்துக் கொள்ளப்படவுள் ளதாக கல்வியமைச்சு அறிவித்துள்ளது?
சீனமொழி

❖ இலங்கையின் தற்போதைய (2012) சனத்தொகை எவ்வளவு?
2 கோடி 2 இலட்சம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- யாகூ (Yahoo) நிறுவனம் அண்மையில் எத்தனை பேரைப் பணி நீக்கம் செய்தது?
  2 ஆயிரம் பேரை

  தங்களது நிறுவனத்தை சிறியதாக, சுறுசுறுப்பானதாக, அதிக இலாபம் உடையதாக, பாவணையாளர் விரும்பக் கூடிய வகையில் மாற்றுவதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக யாகூ நிறுவனம் அறிவித்துள்ளது.

- எதிர்வரும் நாற்பது ஆண்டுகளில் மக்கள் தொகை நிலைவரம் குறித்து ஐ.நா. வெளியிட்டுள்ள தகவல் என்ன?
  நகர்ப்புற மக்கள் தொகை வளர்ச்சியில் இந்தியாவும், சீனாவும் முன்னிலையில் இருக்கும் என்பதாகும்.

- 10 ஆயிரம் முட்டைகளுடன் ஈஸ்ரர் மரத்தினை உருவாக்கிச் சாதனை படைத்தவர் யார்?
  (2012) - வொல்கர் கிராப்ட் (வயது-76) - ஜேர்மனி

- அண்மையில் மாரடைப்பால் காலமாகிய மேற்கு ஆபிரிக்க நாடான மலாவியின் அதிபர் யார்?
  - முத்தாரிகா

- அண்மையில் இராணுவப் புரட்சி ஏற்பட்டு ஆட்சியை இராணுவம் கைப்பற்றியது. அது எந்த நாடு?
  - கினியா - பஸ்ஸாவ் (14.04.2012 இல் நடைபெற்றது)

- 27 ஆண்டுகளுக்குப் பின்பு சீனாவுக்குப் பயணம் சென்ற துருக்கிப் பிரதமர் யார்?
  - ரிசெப் தாயிப் ஏர்கோடன்

- ஒரே நாளில் சீனாவின் மிகப் பிரபலமானவர் பட்டியலில் முதலிடத்தைப் பிடித்துக்கொண்ட மாணவன் யார்?
  ஜியாங் செங்போ

- அகதிகள் மேம்பாட்டுக்கான ஐ.நா.வின் உயர்ஸ்தானிகராலயத்தின் சிறுப்புத் தூதுவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள நடிகை யார்?
  பிரபல ஹொலிவூட் நடிகை ஏஞ்சலினா ஜூலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- எவரெஸ்ட் சிகரத்தில் ஆய்வகம் அமைத்துள்ள விஞ்ஞானிகள் யார்? - அமெரிக்க விஞ்ஞானிகள்

- ஜப்பானில் கடந்த ஆண்டில் ஏற்பட்ட சுனாமியால் அள்ளிச் செல்லப்பட்ட பந்து ஒன்று எந்த நாட்டில் மீட்கப்பட்டது? அமெரிக்காவில்

- கடும் பனிச்சரிவினால் 135 இராணுவத்தினர் பலியாகிய சம்பவம் எங்கு நடைபெற்றது?
பாகிஸ்தானின் சிபாச்சின் பகுதியில் இடம்பெற்றது.

- அண்மைக்காலத்தில் தமது நாட்டில் முதியோர் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளதாக அறிவித்துள்ள நாடு எது?
சீனா

- தற்போது சர்ச்சைக்குள்ளாகி இருக்கும் கவிஞர் யார்?
ஜேர்மனியைச் சேர்ந்த நோபல் பரிசு பெற்ற கவிஞர் குந்தர் கிராஸ் ஆவார். (இஸ்ரேலிய அரசைக் கடுமையாகச் சாடி எழுதியுள்ள கவிதையாகும்)

- சார்க் பிராந்திய நாடுகளின் சுகாதார மாநாடு எந்த நாட்டில் நடைபெற்றது?
மாலைதீவு (12.04.2012)
இலங்கை சார்பாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன பங்குபற்றினார்.

## வீசலில் சிக்கிய விளையாட்டுத் தகவல்கள்....

- கிரீடா சக்தி செயற்திட்டத்தின் கீழ் இலங்கை தேசிய அணியில் இடம்பிடித்துள்ள யாழ்.மாணவி யார்?
புகழரசி பாலச்சந்திரன் (தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி)

- இந்திய வில்வித்தை வீராங்கனை தான் வெற்றியீட்டிப் பெற்றவில்லை வறுமை காரணமாக விற்றார். அவர் யார்?
நிஷா ராணி தத்தா

- ஒலிம்பிக்கில் பெண்களுக்கான மல்யுத்தப் போட்டியில் பங்கேற்க முதன்முறையாகத் தெரிவு செய்யப்பட்ட இந்திய வீராங்கனை யார்? கீதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



- மியாமியில் நடைபெற்ற சொனி எரிக்ஷன் டென்னிஸ் இறுதியாட்டப் போட்டியில் வெற்றியீட்டிக் கிண்ணத்தைக் கைப்பற்றிய வீராங்கனை யார்?
  அக்னிஸ்கா ரட்லன்ஸ்காவி (போலந்து)

- இதயக் கோளாறு காரணமாக மைதானத்திலேயே மரணமடைந்த இத்தாலி உதைபந்தாட்ட வீரர் யார்?
  பயமரியோ மொரோசினி

## அயல்நாட்டுப் பக்கமாக வீசிய வலையில்...



- கேரள அரசின் அதியுயர் விருதான "அரிவராசனம்' விருது வழங்கப்பட்ட பிரபல பாடகர் யார்?
  கே.ஜே.ஜேசுதாஸ்
  கடந்த 30 ஆண்டு காலமாக அவர் பாடிய சபரி மலையில் அரிவராசனம் பாடல் இசைக்கப்படு கிறது. அதற்காகவே இவ் விருது வழங்கப்படுகிறது.

- சாயிபாபாவின் முதலாவது ஆண்டு நினைவை முன்னிட்டு அமைக்கப்பட்டுள்ள அவரது சிலை எங்கு உள்ளது?
  அவர் சமாதியுள்ள இடத்தில் ஏப்ரல் 24 இல் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

- அண்மையில் காலமாகிய தென்னிந்திய நடிகை யார்?
  சரோஜா - வயது - 82 (300 படங்களுக்கு மேல் நடித்துள்ளார்)

- 2035 எத்தனை அணு உலைகளை அமைக்கவுள்ளதாக இந்தியா திட்டமிட்டுள்ளது?
  அறுபது

- மகாத்மா காந்தி பாவித்த பொருட்கள் அண்மையில் ஏலம் விடப்பட்டது. அவை எவை?
  - வட்ட வடிவக் கண்ணாடி மற்றும் அதன் கூடு
  - நூல் ராட்டை
  - புல் வெட்டும் கத்தி

- அதிகமுறை வெளிநாட்டுப் பயணம் மேற்கொண்ட இந்திய ஜனாதிபதி யார்? பிரதிபா பட்டீல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ படகு கவிழ்ந்ததில் 7 குழந்தைகள் உயிரிழந்த சம்பவம் எங்கு நடைபெற்றது?
ராஜஸ்தான் மாநிலம் தூர்க்கார்பூர் மாவட்டத்தில் (இந்தியா)

❖ இந்தியா ருடே பத்திரிகையின் செல்வாக்கு உள்ளவர்களின் டொப்-50 பட்டியலில் இந்த (2012) வருடத்தெரிவில் இடம்பிடித்துள்ள தமிழ்ப் பட நடிகர் யார்?
சுப்பர் ஸ்ரார் ரஜினிகாந்த்



❖ இந்தியாவின் தேசிய பானமாக அறிவிக்கப்பட்டுள்ள பானம் எது?
தேநீர்
அசாமில் முதன் முதலாக தேயிலை பயிரிட்ட மணிராம் தேவனின் 212 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு மிக விரைவில் இந்தியாவில் தேசிய பானமாக தேநீர் பிரகடனப் படுத்தப்படவுள்ளது.

❖ **CMA** பிரகதி - 2012 மாநாடு எங்கே நடைபெற்றது?
இந்தியாவின் கொச்சினில் (இது முகாமைத்துவ கணக்கியல் கல்வியை நாடும் மாணவர்கள் தொடர்பான மாநாடு)

❖ உலகிலேயே அதிக பணியாளர்களைக் கொண்டுள்ள விமான நிலையம் எது?
டில்லி விமான நிலையம்.
இங்கு 5 இலட்சத்துக்கும் மேற்பட்ட பணியாளர்கள் பணி புரிகின்றனர்.

❖ இந்திய தொழில்நுட்பத்தை முழுமையாகப் பயன்படுத்தி முதன் முறை யாகத் தயாரித்த செய்மதி எது?
ரிசாட் - 1

❖ சர்வதேச நீதிமன்ற நீதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டவர் யார்?
இந்திய நீதிபதி தல்வீர் பண்டாரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகை உலுக்கிய இம்மாத இயற்கை அழிவுகள்...

**சூறாவளி :**

ஜப்பானில் கடும் சூறாவளிப் புயல் 2 பேர் பலி. 108 கி.மீ. வேகம். (03.04.2012)

**பூகம்பம் :**

வட அமெரிக்கா நாடான மெக்ஸிக்கோவில் சக்தி வாய்ந்த நில நடுக்கம் ஏற்பட்டது. (03.04.2012)

**கடும் மழை :**

பிஜி தீவில் கடும் மழை காரணமாக 8 ஆயிரம் பொதுமக்கள் இடம்பெயர்ந்தனர். 5 பேர் பலி.

**நிலச்சரிவு :**

கென்யாவின் நைரோபியில் கடும் மழை காரணமாக நிலச்சரிவில் 40 வீடுகள் நாசம். 11 பேர் பலி.

**நில அதிர்வு:**

இந்தோனேசியாவில் பெரும் நில அதிர்வு பல நாடுகளுக்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது. மீண்டும் 15.04.2012 நில அதிர்வு ஏற்பட்டது.

- பவுவா நியூகினியாவில் வடக்கு கரையோரப் பகுதியில் (7 ரிச்டர்)
- தென் அமெரிக்க நாடான சிலியில் (6.7 ரிச்டர்)

**ஆங் சான் சூகி – இவரைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா?**
**இதோ சுருக்கமாக....**



மியான்மாரில் ரங்கூன் நகரில் 1945 ஜூன் 19 இல் பிறந்தார். இவரது தந்தையார் அந்நாட்டு அரசில் அமைச்சராகப் பதவி வகித்தார்.

இவரது 2 வயதில் தந்தையார் படுகொலை செய்யப்பட்டார். இவரது பெயரானது அவரது 3 உறவினர்களின் பெயரை உள்ளடக்கியது.

- ஆங் சான் - தந்தையார் பெயர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சூ என்பது - பாட்டியின் பெயர்
- கி என்பது - தாயார் பெயர்

இந்த மூன்றையும் சேர்த்து இவரது பெயர் உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

- அந்நாட்டில் எழுந்த இராணுவ அடக்கு முறைகளுக்கு எதிராக தீவிர அரசியலில் குதித்தார்.

- 1989 இல் சூகி 15 ஆண்டுகள் வீட்டுக் காவலில் வைக்கப் பட்டார்.
- ரப்டோ விருது, சாக்கரோவ் ஆகிய விருதுகளைப் பெற்றார்.


அத்துடன் இந்திய அரசின் ஜவகர்லால் நேரு அமைதிப் பரிசும் இவருக்கு வழங்கப்பட்டது.

- 1977 இல் கனேடிய அரசு இவருக்கு அந்நாட்டுக் குடியுரிமை வழங்கியது.

- பிரிட்டன் மற்றும் அமெரிக்காவில் கல்வி பயின்றார்.
- இவரது கணவர் பெயர் மைக்கல் ஏரிசு.

## ☆ தபால் திணைக்களத்தினால் வழங்கப்படும் சேவைகள் எவை?

01. சாதாரண கடிதங்கள் மற்றும் பதிவுத் தபால் சேவை
02. சர்வதேச கடுகதி தபால் சேவை
03. பார்சல் தபால் சேவை
04. தபால் அறிமுக அட்டை சேவை
05. இலத்திரன் காசுக்கட்டளை மற்றும் சாதாரண காசுக்கட்டளை சேவை



06. வெளிநாட்டு நாணயமாற்று சேவை (வெஸ்ரன் யூனியன் காசு மாற்றுதல்)
07. வங்கிச்சேவை வழங்குதல் (தேசிய சேமிப்பு இணைந்து)
08. காப்புறுதி சேவை வழங்குதல் (இலங்கை காப்றுதிக் கூட்டுத்தாபனத்துடன் இணைந்து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. மின்சாரக் கட்டணம் செலுத்தும் வசதி

10. கிரெடிட் காட் காசு செலுத்தும் வசதி

11. முத்திரை மற்றும் முத்திரை சார்ந்த உற்பத்திகள் விற்பனை

12. சமூக நலன்புரிகள் செலுத்துதல் (ஓய்வூதியம், மக்கள் உதவி)

13. ஏனைய தபால் சேவைகள் சம்பந்தப்பட்டவை.

- தபால் திணைக்களம் மேலும் சில சேவைகளை முன்னெடுக்கவுள்ளது. அவை எவை?
  தபால் அலுவலக வலையின் மூலம் புத்தகங்கள் வெளியிடுதல், வார மற்றும் பத்திரிகைகள் கொள்வனவு செய்வதற்கான வசதிகளையும் வழங்கவுள்ளது.

- இலங்கையின் தபால் அதிபர் யார்?
  எம்.கே.பீ.திஸாநாயக்க

◇ **Dream Spark** திட்டம் என்பது என்ன?

நாடு முழுவதிலுமுள்ள பாடசாலைகளுக்கு இலவசமாக மைக்ரோ சொப்ட் மென்பொருள்களை வழங்குவதற்காக கல்வி அமைச்சுடன் மைக்ரோ சொப்ட் ஸ்ரீலங்கா நிறுவனம் ஒப்பந்தம் செய்துள்ளது.

இந்த Dream Spark செயற்திட்டத்தின் மூலம் Developer, Designer மற்றும் Gaming ஆகிய பல்வேறு மென்பொருள்களை இலங்கை மாணவர்களுக்கு இத்திட்டத்தின் மூலம் மைக்ரோ சொப்ட் நிறுவனம் வழங்கவுள்ளது.

◇ ஆயிரம் பாடசாலைத் திட்டத்திற்கு நிதியுதவி வழங்கும் நிறுவனம் எது?

ஆசிய அபிவிருத்தி வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசக நெஞ்சங்களே! மாணவச் செல்வங்களே! அரச போட்டிப் பரீட்சையாளர்களே! உங்கள் வலை வீடு தேடி வர வேண்டுமா? அப்படியாயின் வலையின் சந்தாதாரராக இணைந்து கொள்ளுங்கள். இதோ விபரம்...

**வலை சந்தா விபரம் - Delivered to Your Home**



உங்கள் சந்தா தொகையை சி.என்.எச்.சாள்ஸ் என்ற பெயரில் யாழ். பிரதமதபாலகத்தில் மாற்றக் கூடியதாக காசுக் கட்டளை (Money Order) அனுப்பப்படுதல் வேண்டும். அல்லது உங்கள் பகுதியில் உள்ள கொமர்ஷல் வங்கியில் C.N.H. Charles, Commercial Bank (Stanley Road, Jaffna) 8127011186 என்ற சேமிப்புக் கணக்கில் வைப்புச் செய்து வங்கி ரசீதுடன் உங்கள் முழுப் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் என்பன அடங்கிய விண்ணப்பத்தினை எனது முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். அத்துடன் எத்தனையாவது இதழிலிருந்து அனுப்ப வேண்டும் என்பதையும் குறிப்பிடுங்கள். இதழின் பிரதிகள் கண்ணியமாக உங்களுக்குத் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

**50/- விலைக் கழிவுடன் வருடச் சந்தா 250/- மட்டுமே.**



## உதவி விரிவுரையாளரின் பார்வையில்...

பல விடயங்களை ஒன்றுபடச் சேர்த்து பின்னப்பட்ட இதழாக... சிதறுண்டு கிடக்கும் பொதுத் தகவல்களை ஒரு குவியலாகத் தரும் இதழாக...

சமயம், கலை, அரசியல், பொருளியல், அறிவியல், சினிமா, விளையாட்டு... என அத்தனை விடயங்களையும் மொத்தமாய்த் தருகின்ற இதழாக... மாணவர் கள் மட்டுமன்றி ஏனையோரினதும் அறிவியல் பசிக்கு விருந்து சமைக்கும் முதற்தர இதழாக... "வலை" இருந்து வருவதனை அவதானித்துணர முடிகின்றது.

பல்நிலை சார்ந்த அரச போட்டிப் பரீட்சைகளுக்கும் 'பொது அறிவு சார்ந்த விடயங்களே' இன்றியமையாத உள்ளடக்கங்களாக இருந்து வருகின்றன. பரந்துள்ள உலகில் சமகாலங்களில் நடக்கும் நிகழ்வுகளை அறிந்து கொள்ளுவதற்கு 'வலை' சிறந்த சாதனமாக விளங்கி வருகின்றது. அத்தனை கரங்களும் மொத்தமாய்ச் சேர்ந்து இத்தகைய இதழை மொத்தமாய்ப் படித்தால் அத்தனை நெஞ்சங்களும் பொது அறிவால் மனம் நிறைந்து ஆர்ப்பரிக்கும்; என்பது, மறுக்க வியலாததோர் உண்மை.

அறிவியற் சிந்தனைகளின் ஊற்றாகவும், உறைவிடமாகவும் சிறந்து, விளங்கி வருகின்ற 'வலை'யானது, தொடர்ந்தும் பல்துறைத் தேடல்களினூடாக வெளிவர வேண்டுமெனவும், இவ் 'வலை' இனிவருங்காலங்களில் இன்னும் பல இழைகளால் பின்னப்பட வேண்டுமெனவும்... எதிர்பார்த்து, நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மன நிறைவடைகின்றேன்.

**கே.எஸ்.ரமணன்,**
உதவி விரிவுரையாளர்,
இந்து நாகரிகத்துறை யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாசக நெஞ்சங்களுக்கு...**

வலையின் இதழ் எட்டாவது இழையில் உங்களைச் சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

மே 17 இல் சர்வதேச தொலைத்தொடர்பு தினம் கொண்டாடப்படுகிறது.

உலகத் தொலைத்தொடர்புச் சாதனங்களின் வியக்க வைக்கும் அபரிமிதமான வளர்ச்சி இன்று உலகத் தையே சுருக்கி விட்டது.

நாட்டின் அபிவிருத்தியை முன்னெடுத்துச் செல்லும் இயந்திரங்கள் இந்த தொலைத்தொடர்புச் சாதனங் களே யாகும்.

இணையத்தள ஊடகங்களின் ஊடாக (பி.பி.சி, சி.என்.என், ஏ.பி., ஏ.வி.பி....) இன்று நாம் உலகத்தைக் காணுகின்றோம். 1875ஆம் ஆண்டில் அலெக்ஸ்சாண்டர் கிரகம்பெல் தொலைபேசியைக் கண்டுபிடித்தார். அதன் மூலம் உலக நாடுகளுக்கிடையில் தொடர்புகளை ஏற்ப டுத்தினார். அவரைத் தொடர்ந்து 1895 ஆம் ஆண்டில் மார்க்கோனி வானொலியைக் கண்டுபிடித்தார். இதனால் செய்திகள், கருத்துக்கள் உலகெங்கும் பரவத் தொடங்கின. அதன் பயனே இன்று தொலைக்காட்சி, கையடக்கத் தொலைபேசி, இன்ரநெற் எனத் தொடர்பு சாதனங்கள் வெளியாகின.

இன்று 21 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் நாம் சர்வதேச தொடர்பு தொழில்நுட்பத்தின் பரிணாம வளர்ச் சியில் காலூன்றியுள்ளோம்.

ஒரு செய்தியான ஒரு நொடிப்பொழுதில் சர்வ தேசத்தைச் சென்றடைந்துவிடும் நிலைக்கு உலகம் இன்று சுருங்கிவிட்டது.




தனி மனிதனில் இருந்து ஆரம்பமான செய்தியானது - குடும்பத்துக்குள் சென்று, அங்கிருந்து சமூகங்களை, நாடுகளைக் கடந்து சர்வதேசத்தை அடைந்து ஓர் வலைப்பின்னலை அமைத்து அதன் மூலம் உலகத்தை அபிவிருத்தியின் சிகரத்துக்கு எடுத்துச் சென்றுள்ளது.

இந்த இதழ் தொடர்ந்து வெளிவருவது உங்கள் கைகளிலேயே தங்கியுள்ளது. ஆகையால் இவ்வி தழினை உங்களது நண்பர்களுக்கும், மாணவர்களுக்கும் அறிமுகம் செய்து உதவுங்கள்.

உங்களது ஆலோசனைகள் வரவேற்கப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மே மாத சர்வதேச தினங்கள்...

- மே - 01 - உலக தொழிலாளர் தினம்
- மே - 02 - உலக சக்தி தினம்
- மே - 03 - உலக ஆஸ்துமா
  - உலக பத்திரிகை சுதந்திர தினம்
- மே - 08 - உலக செஞ்சிலுவை தினம்
  - உலக நூதனசாலை தினம்
- மே - 10 - உலக அன்னையர் தினம்
- மே - 11 - தேசிய தொழில்நுட்ப தினம்
- மே - 12 - உலக செவிலியர்/தாதியர் தினம்
  - உலக அன்னையர் தினம்
- மே - 15 - உலக குடும்ப தினம்
- மே - 17 - உலக தொடர்பாடல் தினம்
- மே - 24 - உலக கொமன்வெல்த் தினம்
- மே - 29 - உலக தம்பதியர் தினம்
- மே - 31 - உலக புகையிலை மறுப்பு தினம்




## இலங்கை பற்றிய இம்மாத வீசலில்...

- உலகிலேயே மிகப்பெரிய பௌத்த கொடி எங்கு தயாரிக்கப்பட்டுள்ளது?
  இலங்கையில், நீளம் - 200 அடி, உயரம் 100 அடி கண்டி பொக்காவல இணிபத்தன விகாரையில் அமைக்கப்பட்டுள்ளது.
- 2012, மே முதல் வாரத்தினை சுகாதார அமைச்சு மது ஒழிப்பு வாரமாக அனுஷ்டித்தது. அதன் தொனிப்பொருள் என்ன?
  "மதுவுக்கு முற்றுப்புள்ளி வைப்போம்"
- 2012 இற்கான பொதுநலவாய பிராந்திய உள்ளூராட்சி மன்றங்களுக்கான இருநாள் செயலமர்வு எங்கே நடைபெற்றது.
  கொழும்பில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ 2012, மே முதல் வாரத்தில் இலங்கைக்கு விஜயம் செய்த அவுஸ்ரேலியா வின் குடிவரவுத்துறை அமைச்சர் யார்?
கிரிஸ் பொவன்

❖ ஊழியர் சேமலாப நிதியத்தில் அங்கம் வகிக்கும் ஊழியர்கள் தமக்கு அவசரமாகப் பணம் தேவைப்படும் பொழுது எவ் வளவு சதவீதம் பணத்தைப் பெற்றுக்கொள்ள முடியுமென அரசு அறிவித்துள்ளது? 30 சதவீதம்

❖ யாழ்.மாவட்டத்தில் தனிநபர் ஒருவரின் வாழ்க்கைச் செலவீனம் எத்தனை ரூபாவினால் அதிகரித்துள்ளது?
72/- (இலங்கையில் 3,229 - 3,401 ரூபாவாக அதிகரித்துக் காணப்படுகின்றது)
யாழ்ப்பாணத்தில் 3,578 ரூபாவாகக் காணப்பட்ட தனிநபர் ஒருவரின் வாழ்க்கைச் செலவு 3,657 ரூபாவாக அதிகரித் துள்ளது.

❖ இலங்கையில் ஓட்டோ (Three Weel) (பயணம் குறித்து பொலிஸ் திணைக்களம் கொண்டு வந்துள்ள சட்டம் என்ன?
ஓட்டோவின் பின் ஆசனத்தில் 03 பயணிகளை மாத்திரமே ஏற்றிச் செல்ல முடியும் என்பதாகும்.

❖ தமிழ்நாடு - திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தினால் வாழ்நாள் சாதனையாளர் விருதுக்குத் தெரிவுசெய்யப் பட்ட யாழ்.பல்கலைக்கழக பீடாதிபதி யார்?
பேராசிரியர் தி.வேல்நம்பி
(முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம்)

❖ தேசிய டெங்கு ஒழிப்பு வாரம் அனுஷ்டிக்கப்பட்ட தினம் யாது?
மே மாதம் 14 - 20 வரையாகும்.

❖ சிறந்த சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு முகாமைத்துவத்திற் கான சான்றிதழினைப் பெற்றுக்கொண்ட இலங்கையின் பிஸ்கட் நிறுவனம் எது?
மலிபன் பிஸ்கட் உற்பத்தி நிறுவனமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ காங்கேசன்துறை சீமெந்து ஆலை யாரால் அமைக்கப்பட்டது?
கடந்த 1950 ஆம் ஆண்டில் முன்னாள் கைத்தொழில் அமைச்சராக இருந்த ஜி.ஜி.பொன்னம்பலம் அவர்களினால் அமைக்கப்பட்டது.
(அரச சொத்து மற்றும் கைத்தொழில் அபிவிருத்தித் துறை அமைச்சின் செயலாளர் வி.வி.கமகே இந்தத் தகவலை வெளியிட்டார்)

❖ 2012 வெசாக் பண்டிகையின் போது அதிவேக நெடுஞ்சாலை மூலம் பெற்றுக் கொண்ட வருமானம் எவ்வளவு?
29 இலட்சம் ஆகும். இதுவரை வருமானமாக பெற்ற தொகை 40 கோடி ஆகும்.

❖ இலங்கை கல்வி நிர்வாக சேவை போட்டிப் பரீட்சையில் 269 புள்ளிகளைப் பெற்றுச் சாதனை படைத்த பெண் யார்?
கே.அபிராமி

❖ தற்போது இலங்கையிலிருந்து உலக நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் உப உணவுப் பண்டம் எது?
சோளம்

❖ விஞ்ஞான ஆராய்ச்சிக்கான ஜனாதிபதி விருதுக்குத் தெரிவு செய்யப்பட்ட யாழ்ப்பாணத்தவர் யார்?
கு. வேலாயுதம், இரசாயனவியல் சிரேஷ்ட விரிவுரையாளர் ஆவார்.

❖ ஊடக சுதந்திரத்தில் இலங்கை எத்தனையாவது இடத்தில் உள்ளது?
161 ஆவது இடத்திலாகும்.
(ஐக்கிய அமெரிக்காவை தளமாகக் கொண்டு இயங்கும் சுதந்திர இல்லம் என்ற அரச சார்பற்ற நிறுவனம் வெளியிட்டுள்ள கணிப்பீட்டிலிருந்து)

❖ எத்தனை ரூபா நாணயத்தாள்கள் இனிமேல் அச்சடிக்கப் படமாட்டாது என மத்திய வங்கி அறிவித்துள்ளது?
10/- , 2000/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ 2012 இல் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட குற்றவாளிகள் எத்தனை பேர் இருக்கின்றனர்?
50 ஆயிரம் பேர் (பொலிஸ் குற்றத்தடுப்புப் பொலிஸ்தகவல்)

❖ இலங்கையில் அண்மையில் நான்கு வகையான டெங்கு வைரசுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவை எவை?
டிவி-1, டிவி-2, டிவி-3, டிவி-4 ஆகும்.
ஆயினும் தற்போது டிவி-1 வைரஸே பரவியுள்ளதாகவும் ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

❖ 1968 என்பது யாது?
பொதுமக்களுக்கான சேவையை மேலும் வலுப்படுத்தும் முகமாக துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் தகவல் மத்திய நிலையத்தினால் பொதுமக்களின் தேவைகளை உடனுக்குடன் தீர்த்துவைக்கும் நோக்குடன் அண்மையில் ஆரம்பித்து வைத்த தொலைபேசிச் சேவையாகும்.

❖ இலங்கை வங்கி தனது கிளைகளை வெளிநாட்டிலும் திறந்து வருகிறது. அந்தவகையில், தனது புதிய கிளைகளை எங்கே திறப்பதற்கு திட்டமிட்டுள்ளது?
தூத்துக்குடி-கோயம்புத்தூர்

❖ அண்மையில் கனடாவில் வெளியிடப்பட்ட புங்குடுதீவு நூலின் பெயர் என்ன? புங்குடுதீவு மான்மியம்

❖ இலங்கையின் முதலாவது செய்மதி கம்பனியாக அமையவுள்ள நிறுவனம் எது?
சுப்ரீம் சற் பிறைவற் லிமிட்டெட் (Supreme Sat (PVT) Ltd)

❖ 'இலங்கையின் கல்வி மேம்பாட்டுக்கு உதவி வழங்க முன்வந்துள்ள நாடு எது?
அவுஸ்ரேலியா, அத்துடன் உலக வங்கியும் உதவ முன்வந்துள்ளது.

❖ அண்மையில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தினால் எரிந்து நாசமாகிய தேயிலைத் தொழிற்சாலை இலங்கையில் எப்பகுதியில் உள்ளது? பன்வில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ இலங்கையின் புதிய பரீட்சை ஆணையாளர் யார்?
எம்.என்.ஜே.புஷ்பகுமார

❖ தென்கொரியாவுக்கு பணியாளர்களை அனுப்பிய உலகின் சிறந்த நாடாக தென்கொரியா மனித வளத்திணைக்களத்தினால் தெரிவு செய்யப்பட்டு கௌரவிக்கப்பட்ட நாடு எது?
இலங்கை

❖ பங்களாதேஷிற்கான சிறந்த செலவு குறைந்த விமான சேவையாகத் தெரிவு செய்யப்பட்ட விமான சேவை எது?
மிஹின் லங்கா

## உலகை நோக்கிய வீசலில்...

- பசுமைப் புரட்சிக்கான நோபல் பரிசு பெற்றவர் 2012 இல் புற்றுநோயால் மரணமானார். அவர் யார்?
ஆபிரிக்கப் பெண்ணான வங்காரி மாத்தாய் (வயது-71)

- ஹிட்லரின் சுயசரிதை பாடசாலை மாணவர்களுக்குப் பாடமாக அறிவித்துள்ள நாடு எது?
ஜேர்மனி (சர்வாதிகாரி ஹிட்லர் எழுதிய சுயசரிமைப் புத்தகம் 67 ஆண்டுகளுக்குப் பின்னர் பாடசாலை மாணவர்களுக்குப் பாடமாக்கப்பட்டுள்ளது)



- நியூயோர்க் நகரின் மிகவும் உயரமான கட்டடம் எது?
"வன்" உலக வர்த்தக மையக் கட்டடமாகும்.

- குடும்பத்தில் இரு பிள்ளைகள் அவசியம் என அறிவித்துள்ள நாடு எது?
ரஷ்யா

- கடந்த 2012 ஆம் ஆண்டுக்கான பெலாரஸ் அழகுராணியாகத் தெரிவு செய்யப்பட்டவர் யார்?
யூலியா கல்கோவிச்

- 1500 ஆண்டு பழமைவாய்ந்த புத்த கோவில் எங்கு கண்டு பிடிக்கப்பட்டுள்ளது?
சீனாவின் பெரிய பாலைவனமான சிங்ஜாங்கில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உலகில் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி இருக்கும் பழங்குடியினர் யார்?
அவா (Awa)
பிரேஸிலின் மான்கோ மாநிலத்தில் வசிக்கும் அவா பழங் குடியினரே இவர்களாவர்.

- பெண்டகனின் உயரதிகாரியாக நியமிக்கப்பட்ட இந்தியர் யார்? விக்ரம் ஜெசிங்

- ரஷ்யப் புரட்சியாளர் விளாடிமிர் லெனின் மரணம் குறித்து வெளியாகியுள்ள அதிர்ச்சித் தகவல் என்ன?
இவரது உதவியாளரான / தோழரான யோசப் ஸ்டாலின் என்பவர் விசம் கொடுத்துக் கொன்றதாக தகவல் வெளியாகி யுள்ளது.

- உலகில் முதன் முதலாக யோகா பயிற்சிக் கல்லூரி எந்த நாட்டில் தொடங்கப்பட்டுள்ளது?
சீனாவின் பீஜிங் நகரில்

- ஜி-08 நாடுகளின் மாநாடு இறுதியாக எந்த நாட்டில் நடை பெற்றது? அமெரிக்காவில்

- "பொப் கட்" சிகையலங்காரத்தை வடிவமைத்த கலைஞர் அண்மையில் காலமானார். அவர் யார்?
விடல் சாஸன் (பிரிட்டன்)

- சர்வதேச இப்ட் உணவுக் கண்காட்சி எந்த நாட்டில் நடை பெற்றது? அமெரிக்காவில் (ஜுன் 26-28 வரை)

- சச்சின் டென்டுல்கார் பரிசளித்த கிரிக்கெட் மட்டை (Bat) அண்மையில் ஏலத்தில் விடப்பட்டது. இந்த மட்டையை சச்சின் யாருக்குப் பரிசளித்தார்?
பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் இந்தியா வந்த போது அவ ருக்கு சச்சின் தனது கையெழுத்து இட்டுப் பரிசளித்திருந்தார். ருவாண்டில் கிரிக்கெட் ஸ்ரேடியம் கட்டும் பணிக்கு நிதிதிரட் டும் முகமாக ஏலம் விடப்பட் டது.

- 14 பேரைப் பலிகொண்ட விமான விபத்து எங்கு நடைபெற்றது? ஜோம் சோம் (நேபாள விமானம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இணையத்தின் அடுத்த தொழில்நுட்பம் (பரிணாமம்) எது? IPV 6 (Internet Protocol Version - 6)

- பிரிட்டனிலேயே மிகவும் உயர்ந்ததாகக் கருதப்படும் கோபுரம் எது? சிற்பக் கோபுரம்

- நாய் ஒருவரைக் கடித்தால் அதன் உரிமையாளருக்கு சிறைத்தண்டனை வழங்கப்படுமென அறிவித்துள்ள நாடு எது?
பிரிட்டன் (ஆறு மாதம் முதல் ஒன்றரை வருடங்கள் வரை சிறைத்தண்டனை)

- தாய்மார்கள் வாழ மோசமான சூழ்நிலை உள்ள நாடுகளின் பட்டியலில் முதலிடத்தை வகிக்கும் நாடு எது?
நைஜர் (Tave tha Children என்ற நிறுவனம் நடத்திய ஆய்விலிருந்து)

- கடவுச்சீட்டில் புதிய நடைமுறையைக் கொண்டு வரவுள்ள நாது எது? சீனா

- தனது ஓவியங்கள் மூலம் அதிக பணம் சம்பாதித்து வரும் 5 வயதுச் சிறுமி யார்?
ஜயேலிதா அன்ட்ரோ
(அவுஸ்ரேலியாவின் மெல்பேர்ன் நகரைச் சேர்ந்தவர்.

- சாப்பாட்டுத் தட்டில் மிச்சம் விட்டால் தண்டம் வழங்கும் ஹோட்டல் எது?
பிரிட்டனின் சவுத் ஷீல்ட்ஸ் பகுதியிலுள்ள சீன ஹோட்டலாகும்.

- நியூயோர்க் நகரில் இடம்பெற்ற 2012 கார் கண்காட்சியின் போது சிறந்ததாகத் தெரிவு செய்யப்பட்ட கார் எது?
"Volk swagen Up" இக்காரை வடிவமைத்தவர் ஒலிவர் ஸ்ரெபாணி

- உலகில் ஆரோக்கியப் பராமரிப்புக்கு அதிகமாகச் செல விடும் நாடுகளில் முதலிடம் வகிக்கும் நாடு?
அமெரிக்கா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- முதல் தடவையாக பிரித்தானிய முன்னரங்கு போர்க் கப்பலின் கட்டளைத் தளபதியாக நியமனம் பெற்ற பெண் யார்? சூ மூரி (வயது-43)

- உலகின் மிகவும் உயரமான ஒலிபரப்புக் கோபுரம் எங்கே திறந்து வைக்கப்பட்டது?

  ஜப்பானின் ரோக்கியோ நகரில் 634 மீற்றர் உயரம் கொண்ட "ரோக்கியோ ஸ்கைட்றீ"யே இதுவாகும்.

- 2014 ஆம் ஆண்டின் இறுதியில் தனது 27 ஆயிரம் பணியாளர்களைக் குறைக்கவுள்ள நிறுவனம் எது?

  ஹெல்வட் பெக்காட் - Hewlett-Packard (hp)

- மன அழுத்தம் காரணமாக மரணமடைந்த சனல்-4 நிறைவேற்று அதிகாரி யார்?
  சாரா முல்வி

- தொலைக்காட்சி "றிமோட் கொன்றோல்" கண்டு பிடித்தவர் அண்மையில் காலமானார் அவர் யார்?

  இயுஜின் போல்லி (வயது-96)

- 2400 அடி உயரத்திலிருந்து பரசூட் இல்லாமல் குதித்து உலக சாதனை புரிந்தவர் யார்?
  காரி கொன்னெறி (வயது - 42) பிரித்தானிய சகாஸ வீரர்

- அமெரிக்க நாட்டிலிருந்து இறைச்சியை இறக்குமதி செய்யத் தடை விதித்துள்ள நாடு எது?
  இந்தோனேசியா

- 2012 லண்டனில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியை முன்னிட்டு ஒலிம்பிக் சுடரை ஏந்திச் சென்ற தமிழ் மாணவன் யார்?
  முருகேசுப்பிள்ளை கோபிநாத் (வயது-21)
  மல்லாவியைச் சேர்ந்த இம் மாணவன் நியூகாஸ்டல் பல்கலைக்கழகத்தில் உயிரியல் மருத்துவ பீடத்தில் கல்வி கற்று வருகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீசலில் சிக்கிய விளையாட்டுத் தகவல்கள்...

- ஸ்டட்கார்ட் ஓப்பன் டென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் சம்பியன் பட்டம் வென்ற ரஷ்ய வீராங்கனை யார்? மரிய ஷரபோவா அத்துடன் இத்தாலி ஓப்பன் டென்னிஸ் தொடரின் இறுதிப் போட்டியிலும் இவர் வெற்றியீட்டியுள்ளார்.

- பார்ஸிலோனா ஓப்பன் ரென்னிஸ் போட்டியின் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் 7 ஆவது முறையாக சம்பியன் பட்டம் வென்று சாதனை படைத்த நட்சத்திர வீரர் யார்? ரபேல் நடால் (ஸ்பெயின்)

- இலங்கை மெய்வல்லுநர் சம்மேளன உப தலைவராகத் தெரிவு செய்யப்பட்டவர் யார்? சுசந்திக்கா ஜெயசிங்க

- தேசிய மட்ட கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டியில் உயரம் பாய்தலில் சாதனை படைத்த யாழ்.இந்துக் கல்லூரி மாணவன் யார்? இ.செந்தூரன்

## அயல் நாட்டுப் பக்கமாக வீசிய வலையில்...

- அமெரிக்கப் பல்கலைக்கழகமொன்றினால் கலாநிதி பட்டம் வழங்கப் பட்ட பிரபல இசையமைப்பாளர் யார். ஏ.ஆர்.ரகுமான்.

- நேபாள விமான விபத்தில் பலியாகிய தமிழகத் திரையுலகின் குழந்தை நட்சத்திரம் யார்? தருணி சச்தேவ்

- தென்னாபிரிக்காவின் ஜோகன்ன ஸ்பர்க் பழைய கோட்டைச் சிறைகளில் வைக்கப்பட்டுள்ள இந்திய நாட்டுக்குரியவரின் சிலை அண்மையில் இந்திய குடியரசுத் தலைவரால் திறந்து வைக்கப்பட்ட ஆது யாருடையது சிலை? மகாத்மா காந்தி
  (இங்கு 100 ஆண்டுகளுக்கு முன்னர் காந்தி இங்கு சிறை வைக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இந்த ஆண்டு இந்தியாவின் தேசிய விருது பெற்ற ஜனரஞ்சகப் படம் எது?
  "அழகர்சாமியின் குதிரை"
- *100* படங்களுக்கு மேல் இயக்கி சாதனை படைத்துள்ள இயக்குநர் யார்? ராம நாராயணன்
- 2010 இல் டைம் (Time) இதழ் வெளியிட்ட உலகின் சக்தி வாய்ந்த 100 நபர்கள் பட்டியலில் இடம்பிடித்துக் கொண்ட கிரிக்கெட் வீரர் யார்? சச்சின் டென்டுல்கர்
- அண்மையில் காலமாகிய இந்தியாவின் முன்னணி நடிகர் யார்? திலிப்

## உலகை உலுக்கிய இம்மாத இயற்கை அழிவுகள்...

◇ பூமியதிர்ச்சி:

- இத்தாலியில் பூமியதிர்ச்சி - 7 பேர் பலி.
- பாகிஸ்தானின் பலோகிஸ்தான் மாகாணத்தில் பூமிய திர்ச்சி ஏற்பட்டது. (24.05.2012)

◇ நிலச்சரிவு

- சீனாவில் நிலச்சரிவு 4 பேர் உயிரிழப்பு. 5 இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் பாதிப்பு

◇ பலத்த மழை

- சீனாவின் கான்சு மாகாணத்தில் பலத்த மழை காரணமாக 40 பேர் உயிரிழப்பு

◇ நிலநடுக்கம்

- இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனப் பகுதிகளில் நிலநடுக்கம் ஏற்பட்டது. (12.05.2012)

✧ 2012 ஆம் ஆண்டுக்கான பிரித்தானியாவின் பப்டா தொலைக் காட்சி நடப்பு நிகழ்வுகள் விருதுக்காக *(Bafta TV Awards)* பரிந்துரைக்கப்பட்டுள்ள ஆவணப்படம் எது?

- சனல் 04 தொலைக்காட்சியின் இலங்கையின் கொலைக் களம் என்னும் ஆவணப்படமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விருதுகள் பக்கம் வீசிய வலையில்...

✧ 2010 - சம்பந்தன் விருதுக்கு தெரிவு செய்யப்பட்ட நூல் எது?
தமிழறிஞர் வி.கே. குணசேகரம் எழுதிய 'திருவருட்பயன் கதைகள்'

✧ "இன்வென்சன்ஸ் ஜெனிவா" கண்காட்சியில் இலங்கையின் கண்டுபிடிப்பாளர்கள் இருவர் கௌரவிக்கப்பட்டு தங்கப் பதக்கமும் பெற்றனர். அவர்கள் யார்?
- வைத்திய கலாநிதி எஸ்.ஜே.பி.வினோடோரா
- தினேஷ் கட்டுகம்பல

✧ வருடாந்த *Skytrax* விமான நிலைய விருது வழங்கும் வைப வத்தில் உலகின் சிறந்த விமான நிலையமாகத் தெரிவு செய்யப்பட்ட விமானநிலையம் எது?
தென்கொரியாவின் இஞ்சோன் விமான நிலையமாகும்.
இரண்டாவது- சான்ஜி விமான நிலையம் - சிங்கப்பூர்
மூன்றாவது - சர்வதேச விமான நிலையம் - ஹொங்கொங்

✧ **"சிப்தொற" திட்டம் என்பது யாது?**
சமுர்த்தி கல்வி புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் வறிய மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கான புலமைப் பரிசில் நிதியுதவித் திட்டமாகும்.

✧ *N-Peace* **என்பது யாது?**

பெண்கள் சமாதானம் மற்றும் பாதுகாப்புத் தொடர்பான *N-Peace* என்னும் ஓர் வலைப்பின்னலாகும். அதாவது

சமாதானத்தினைக் கட்டியெழுப்புவதிலும், மீளமைப்பதிலும்

பெண்களின் பங்கினை பலப்படுத்துவதற்குமான *Aus AID* இன் அனுசரணையுடன் செயற்படும் ஒரு பன்னாட்டு வலையமைப் பாகும்.
2012 *N-Peace* - என்னும் விருதினையும் வழங்கவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✧ **"கப்ருக" திட்டம் என்பது என்ன?**



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களின் "மகிந்த சிந்தனை" தொலை நோக்குத்திட்டத்திற்கு அமைவாக ஏற்கனவே தெங்கு பொருள் உற்பத்திகளில் ஈடுபட்டுள்ளோருக்காகவும், தென்னை உற்பத்தித்துறையில் பங்கெடுக்க விரும்புவோருக்காகவும் தெங்கு உற்பத்தி மூலமாக தேசிய பொருளாதாரத்தை பலப்படுத்திடவும், வளப்படுத்திடவும் தெங்கு உற்பத்தியாளருக்கு தேவையான உற்பத்தி ஊக்குவிப்பு கடன் ஆலோசனைத் திட்டமே இதுவாகும்.

இவ் ஊக்குவிப்பு கடன் ஆலோசனைத் திட்டத்தின் கீழ் பின்வரும் பயன்களைப் பெற முடியும்.

- நாடெங்கிலும் தேங்காய் எண்ணெய், கொப்புறா உற்பத்திகளை அபிவிருத்தி செய்தல்.
- தேங்காய் மற்றும் ஏனைய உற்பத்திகளுடன் தரப் பாதுகாப்புக்கான நடவடிக்கையை மேம்படுத்தல்.
- சுற்றாடலுக்கு இயைவான தேங்காய்ச் சிரட்டைக் கரி உற்பத்திகளை வளப்படுத்தல்.
- தென்னந்தும்பு மற்றும் முழுமையாக்கப்பட்ட உற்பத்திகளை வளப்படுத்தல்
- தெங்குப் பொருள் உற்பத்திகளை ஏற்றுமதி செய்யும் தொழிற்துறைக்கு தொழில்வாய்ப்பினைப் பெற்றுத் தரும் பிரிவுகளை ஊக்குவித்தல்.

✧ "சிசு பிரதீபா பிரபா" என்பது யாது?
இலங்கை மாணவர் சமுதாயத்தின் உள்ளார்ந்த திறன்களை வெளியில் கொண்டு வருவதற்கு கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தன அவர்ளின் கருத்துரைப்படி செயற்படுத்தப்பட்ட ஒரு நிகழ்ச்சித்திட்டமாகும்.

✧ கனேடிய ஜனநாயகக் கட்சியின் ஒன்ராறியோ மாகாணத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட தமிழர் யார்?
நீதன் சண்முகராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வங்கிப் பக்கம் வீசப்பட்ட வலையில் அகப்பட்டவை ...

❖ இலங்கை வங்கி ஆரம்பிக்கப்பட்டது எத்தனையாம் ஆண்டு?
*01.08.1939*

❖ இலங்கை வங்கி யாரால் ஆரம்பிக்கப்பட்டது?
சேர் அன்ரு சல்டே

❖ இலங்கை வங்கி இந்த ஆண்டு (2012) எத்தனையாவது ஆண்டு நிறைவில் காலடி வைக்கின்றது?
73 ஆவது ஆண்டில்

❖ இலங்கை வங்கி எத்தனையாம் ஆண்டு தேசியமாக்கப்பட்டது?
*1961*

❖ இலங்கையில் கூடியளவு சொத்துக்களைக் கொண்ட வங்கி எது? இலங்கை வங்கி (400 பில்லியன் ரூபா)

❖ AAA தரத்தைப் பெற்றுள்ள வங்கி எது?
மக்கள் வங்கி

❖ இலங்கை மத்திய வங்கியின் முதலாவது ஆளுநர் யார்?
ஜோன் எக்ஸ்ரர் (1950 - 1953)
தற்போதைய ஆளுநர் அஜிட் நிவாட் கப்ரால் இன்று வரை பதவியல் உள்ளார்.

❖ மக்கள் வங்கி எத்தனையாம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது?
*01.07.1961*

❖ பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் எத்தனை?
*376*

❖ பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் எத்தனை?
*376*

⊙ சர்வதேச கூட்டுறவு வருடமாக ஐக்கிய தேசிய ஒன்றியத்தினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது ஆண்டு எது?
2012 ஆம் ஆண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாலான் டி ஆர் விருது (தங்கப்பந்து) – 2012

சிறந்த கால்ப்பந்தாட்ட வீர, வீராங்கனைகளுக்கு வழங்கப்படும் விருதே இதுவாகும். இவ்விருது 1956ஆம் ஆண்டு பிரான்ஸ் கால்ப் பந்தாட்ட பிரதம பத்திரிகையாளரினால் ஆரம்பிக்கப்பட்டது.

இதன் முதல் வெற்றியாளர் இங்கிலாந்து கால்ப்பந்தாட்ட அணியைச் சேர்ந்த ஸ்டென்லி மெத்தியூஸ் ஆவார். 2012ஆம் ஆண்டிற்கான விருதை பார்ஸிலோனா கால்ப்பந்தாட்ட அணியின் நட்சத்திர வீரர் ஆர்ஜென்டீனாவின் லயனல் மெஸ்ஸி வென்றார். இவர் ஓர் ஆண்டில் அதிக கோல்கள் பெற்ற முல்லரின் 40 ஆண்டு கால சாதனையை அண்மையில் முறியடித்தார். இவர் இவ் விருதை தொடர்ச்சியாக 4ஆவது முறையாக (2009, 2010, 2011, 2012) வென்ற முதல் வீரர் என்ற புதிய சாதனையையும் படைத்துள்ளார்.

இவர் மொத்தம் இதுவரை 31 பதக்கங்கள் பெற்றுள்ளதுடன், 2008ஆம் ஆண்டில் ஒலிம்பிக் தங்கப்பதக்கமும் பெற்றுள்ளார். சிறந்த கால்ப்பந்து வீராங்கனைக்கான விருதை அமெரிக்காவின் அபய்வாம் பேஞ்சும், சிறந்த பயிற்சியாளருக்கான விருதை ஸ்பெயின் அணியின் டெல்போஸ் கியூக்கும் வென்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## *பிரதம கணக்காளரின் பார்வையில்...*



நவீன உலகில் உயர்கல்வி நடவடிக்கைகளுக்கும், தொழில்சார் போட்டிப் பரீட்சைகளுக்கும் இன்று பொது அறிவு என்பது மிக முக்கியமான விடயமாகிவிட்டது.

இன்றைய அவசர யுகத்தில் எம்மால் அனைத்து ஊடகங்களிலும் இருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்வது கடினமாகிவிட்டது. இதனால் நாம் அநேக வாய்ப்புக்களை தவறவிடுகின்றோம்.

இத்தகைய காலகட்டத்தில் அனைத்து ஊடகங்களிலிருந்தும் வெளிவரும் தகவல்களைக் கொண்டு பின்னப்படுகின்ற 'வலை' யானது மணவர்களுக்கு மட்டுமல்லாது, சகல அரச போட்டிப் பரீட்சார்த்திகளுக்கும், உத்தியோகத்தர்களுக்கும் ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளதை எண்ணி மகிழ்வடைகின்றேன்.

உலகின் ஒவ்வோர் மூலையிலும் நடக்கும் விடயங்களை ஒரே பார்வையில் நாம் அறிந்து கொள்ள இவ் 'வலை' அனைவருக்கும் வழி செய்கின்றது. இத்தகைய ஆக்கபூர்வமான பணி தொடர்ந்தும் நடைபெற வாழ்த்துவதோடு, இவ் இதழைத் தொடர்ந்தும் வாசித்து எமது அறிவினைப் பெருக்கிக்கொள்வோம். இவ் வலை தொடர்ந்து வெளிவர வேண்டுமென ஆசித்து வாழ்த்துகின்றேன்.

**ஜே. கில்பேட் குணம்,**
பிரதம கணக்காளர்,
மாவட்டச் செயலகம், கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாசக நெஞ்சங்களுக்கு---**

வலையின் இதழ் ஒன்பதாவது இழையில் உங்களைச் சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

இன்று உலகம் பலவிதமான புதிய பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகையில், அதில் அண்மைக் காலமாக உலகையே, யாழ்.குடாவையே உலுக்கிக் கொண்டிருக்கும் இழி செயலாக உருவெடுத்து வருவது சிறுவர் பாலியல் துஷ்பிரயோகமாகும்.

நறுமணம் மிக்க மலர்களாக மலர்ந்து நாளை மணம் பரப்ப வேண்டிய சிறுவர்களாகிய இளம் மொட்டுக்கள் முளையிலேயே கருக்கப்படுகின்றன.

காமவெறி பிடித்த கயவர்களினால் அவர்களின் தீய நடத்தைகளின் விளைவாக சிறுவர்/சிறுமியர் துன்புறுத்தப்படுகின்றனர். இவை உடல், மற்றும் உளரீதியாகப் பாதிக்கப்பட்டு பிள்ளைகளின் எதிர்காலமே கேள்விக்குறியாகி விடுகின்றது.

இன்று இலங்கையில் தினம் 3 பிள்ளைகள் வன்புணர்வுக்கு உள்ளாவதாக பொலிஸ் திணைக்களப் பதிவுகள் கூறுகின்றன. இவ்வாறான செய்திகள் குறித்து நாளுக்கு நாள், உடனுக்குடன் ஊடகங்களில் செய்திகள் வெளியாகி வருகின்றது.

இவ்வாறான முறைகேடுகளுக்கு உள்ளாகும் பிள்ளைகள் குறித்து, குற்றவாளிகளுக்கு அரசு தீவிரமான தண்டனைகளை உருவாக்கி நடைமுறைப்படுத்த முனைப்புக் காட்டுகின்றது.

எனவே எமது நாட்டில் உள்ள சகல பிள்ளைகளும் எமது சொந்தப் பிள்ளைகள், அவர்கள் எமது சகோதர, சகோதரிகள் என்ற மன உணர்வை ஒவ்வொருவர் மனதிலும் ஏற்படுத்த முயற்சிக்க வேண்டும்.




எண்ணங்கள் நல்லவையாக இருந்தால், செயற்பாடுகளும் நல்லவையாகவே அமையும் எனக்கூறி நிற்பதுடன், இந்த இதழ் தொடர்ந்து வெளிவருவது உங்கள் கைகளிலேயே தங்கியுள்ளது. ஆகையால் இவ்விதழினை உங்களது நண்பர்களுக்கும், மாணவர்களுக்கும் அறிமுகம் செய்து உதவுங்கள்.

வாசகர்களது ஆலோசனைகள் வரவேற்கப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யூன் மாத சர்வதேச தினங்கள்...

- யூன் - 03 - உலக பால் தினம்
- யூன் - 04 - உலக இளம் குழந்தைகள் தினம்
- யூன் - 05 - உலக சுற்றுப்புற தினம்
- யூன் - 09 - உலக அங்கீகார தினம்
- யூன் - 10 - உலக சிறுவர் தினம்
- யூன் - 18 - உலக தந்தையர் தினம்
- யூன் - 23 - உலக இறை வணக்க தினம்
- யூன் - 26 - உலக போதை ஒழிப்பு தினம்
- யூன் - 27 - உலக நீரழிவாளர் தினம்
- யூன் - 28 - உலக ஏழைகள் தினம்




## இலங்கை பற்றிய இம்மாத வீசலில்...

- "பி.சி" படிவம் என்பது யாது?
  வாக்காளராகப் பதிவு செய்யும் படிவம் ஆகும்.

- இலங்கையில் எத்தனை வயதுக்கு கீழே இறைச்சிக்காகப் பசுக்களை கொல்லக்கூடாது என்னும் சட்டம் நடைமுறையில் உள்ளது? 12 வயதுக்கு கீழ்

- சென்னை பாரதியார் விருது கிடைக்கப்பெற்ற பேராயர் யார்?
  தென்னிந்தியத் திருச்சபையின் முன்னாள் பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் அடிகளார்.

- சர்வதேச இன்ரபோல் பொலிஸாரின் தரவு மையத்துடன் இணைந்த இலங்கையின் திணைக்களம் எது?
  குடிவரவு - குடியகல்வு திணைக்களம்

- இரண்டாவது தடவையாகவும் தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராகப் பதவியேற்றுக்கொண்ட பேராசிரியர் யார்?
  எஸ்.எம்.எஸ். இஸ்மாயில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

□ இலங்கையில் 50ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடிய கூட்டுத் தாபனம் எது?
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

□ சாமஸ்ரீ விருது கிடைக்கப்பெற்ற யாழ்ப்பாணத்தவர் யார்?
தேவராசன் தனேந்திரா
சமய,சமூக பொது விடயங்களில் அதிக ஈடுபாடு கொண்டும், பலவருட காலம் தொண்டு நிறுவனங்களிலும், பல அமைப்புக்களிலும் சிறந்த தொண்டாற்றியதை முன்னிட்டு இவருக்கு மேற்படி சாமஸ்ரீ விருது வழங்கப்பட்டது.

□ 2012 இல் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி இலங்கையில் உள்ள கிராமங்களின் மொத்த எண்ணிக்கை யாது?
36 ஆயிரத்து 807 கிராமங்கள்
- இங்கு ஒரு கிராமத்தில் சராசரியாக 123 குடும்பங்கள் வசிக்கின்றன.

□ இலங்கை தேசிய விஞ்ஞான மன்றத்தின் விஞ்ஞானத்தை பரப்புவதற்கான பாராட்டு விருது 2012 யாருக்கு வழங்கப் பட்டது.
டாக்டர் எஸ்.சுரேந்திரஜித்
இவர் கடந்த 15 வருடங்களுக்கு மேலாக பத்திரிகைகளில் மருத்துவ சுகாதாரக் கட்டுரைகளை எழுதி வருகிறார். அத்துடன் சக்தி தொலைக் காட்சி சேவையிலும் சுகாதார அறிவூட்டல் நிகழ்ச்சியினையும் வ்ழங்கி வருகிறார்.

□ இலங்கையில் தற்போது தனிநபர் வாழ்க்கைச் செலவீனம் கூடிய மாவட்டம் எது?
யாழ்ப்பாணம்
வாழ்க்கைச் செலவீனம் குறைந்த மாவட்டமாக மாத்தறை இனங் காணப்பட்டுள்ளது.

□ 30 வருடங்களின் பின்னர் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட குடிசன மதிப்பீட்டின்படி இலங்கையின் தற்போதைய சனத்தொகை எவ்வளவு?
2 கோடி 8 இலட்சத்து 69 ஆயிரம் பேர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 11 ஆவது ஆசிய பாதுகாப்பு மாநாடு எந்த நாட்டில் நடை பெற்றது? சிங்கப்பூர்
- முதல் தடவையாக இலண்டன் ஹரோ மாநகர மேயராகத் தெரிவு செய்யப்பட்ட இலங்கையர் யார்? - நிசாம் இஸ்மாயில்
- தேசிய நீர் வழங்கல் அதிகார சபைக்கு வருடாந்தம் எத்தனை கோடி ரூபா நட்டம் ஏற்படுவதாக திறைசேரி அறிவித்துள்ளது? 335 கோடி
- பொதுநலவாயத்தின் புத்தக விருது கிடைக்கப்பெற்ற இலங்கையின் நாவலாசிரியர் யார்? அப்புத்தகத்தின் பெயர் என்ன? ஷெஹான் கருணாதிலக்க, "சினமன் : லெஜன்ட் ஒவ் பிரதிப் மத்திவ்" இவருக்கு 10 ஆயிரம் ஸ்ரேலிங் பவுன்ஸ் பரிசு கிடைக்கப்பெற்றது.



- தென்னிந்திய சினிமாவில் கால் பதிக்கும் இலங்கையின் கவிஞர் யார்? அஸ்மின் (பொத்துவில்) இணையத்தளத்தின் மூலமாக இவரது பாடல் வரிகள் இசையமைப் பாளர் விஜய் அன்ரனி மூலம் "நான்" திரைப் படத்திற்கு இணையத்தின் மூலம் விண்ணப்பித்த போது 2 ஆயிரத்துக்கும் அதிகமான பாடல்கள் கிடைக்கப்பெற்றன. அதில் இவரது பாடல்களே தெரிவாகியது குறிப்பிடத்தக்கது.
- இலங்கையில் முதன் முறையாக திரில்லியன்ஐந்தொகையை அடைந்து சாதனை படைத்த வங்கி எது? இலங்கை வங்கி
- ஐக்கிய நாடுகள் இளைஞர் மாநாடு 2014 இல் எந்த நாட்டில் நடைபெறவுள்ளது? இலங்கையில்
- தென்னிந்திய நடிகர் சங்கத்தின் தலைவராக அண்மையில் தெரிவு செய்யப்பட்டவர் யார்? நடிகர் சரத்குமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



☐ கனடாவின் அதி சிறந்த குடிவரவாளர்களில் ஒருவராக ஈழத்தமிழ்ப் பெண் தெரிவு செய்யப்பட்டார் அவர் யார்?
மெலானி டேவிட்
- இவர் பிரபல சட்டத்தரணியும், தொழிலதிபருமாவார். (ஈழத்தின் எந்த இடமென வீசிய வலையில் சிக்கவில்லை)

☐ சர்வதேச வதிவிட சுகாதார மற்றும் பாதுகாப்புத் தரச் சான்றிதழை (OHSAS 18001) சமீபத்தில் பெற்றுக்கொண்ட இலங்கையிலுள்ள வைத்தியசாலை எது?
ஹேமாஸ் வைத்தியசாலை - வத்தளை, காலி

☐ அண்மையில் டயலொக் நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தப் பட்ட eZCash என்பது யாது?
டயலொக் மொபைல் தொலைபேசி மூலம் பணக்கொடுக்கல் வாங்கல் அனைத்தையும் இலகுவாகவும், துரிதமாகவும் செய்வதற்கு டயலொக் நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ள முறையே eZ Cash முறையாகும்.
இதற்கு இலங்கை மத்திய வங்கியின் அனுமதி வழங்கப் பட்டுள்ளது.

☐ இ-சனத்தொகை என்பது யாது?
நாட்டின் பிரஜைகளது அடிப்படைத் தகவல்களை உள்ளடக்கிய பிரதான தகவல் தொழில்நுட்ப தரவு அடிப் படையாகும்.

அரசாங்கத்தால் மக்களுக்கு வழங்கப்படும் சேவைகளை வினைத்திறனாக மேற்கொள்ள இந்த இ-சனத்தொகை ஆவணம் மிக முக்கியமானதாகும்.
இதன் மூலம் அரச நிறுவனங்களுக்கு பிரஜைகள் தகவல் களைப் பாதுகாப்பாகவும், துரிதமாகவும் பரிமாறுவதற்கு இத்திட்டத்தின் மூலம் சந்தர்ப்பம் கிடைக்கும்.

இ-சனத்தொகை ஆவணம் அறிமுகப்படுத்தப்படுவதைத் தொடர்ந்து பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களை பதிவு செய்யும் நடைமுறை இலகுவாக்கப்படுவதோடு, இதன் மூலம் இதுவரை காலமும் அனுபவித்த சிரமங்கள் நீங்கி விடும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரச நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சும், தொலைத் தொடர்புகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சும் இணைந்து நடைமுறைப்படுத்தும் இந்த இ-சனத்தொகை செயற்திட்டத்தின் நேரடியான நடவடிக்கைகளை பதிவாளர் நாயகம் திணைக்களமும், இலங்கைத்தகவல் திணைக்களமும், மேற்கொண்டு வருகின்றன.

□ "நெனசல" என்பது யாது?
இது தொழில்நுட்ப அறிவகங்கள் ஆகும். இந்நிலையங்கள் பாடசாலை களில் அமைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் தெற்கில் கற்பிக்கப்படும் அதே பாடங்களை தமிழ் மொழியின் ஊடாக கேட்டு அறிந்து கொள்ள முடியும்.

## உலகை நோக்கிய வீசலில்...

➢ 21ஆவது உலக பொருளாதார மன்ற கிழக்கு ஆசிய விழா எங்கு நடைபெற்றது? தாய்லாந்து

➢ 2012 உலக சுற்றுச்சூழல் தினத்தினை முன்னிட்டு ஐ.நா.வால் வெளியிடப்பட்ட கருத்து என்ன?
பசுமைப் பொருளாதாரம் உங்களையும் உள்ளடக்கியதா?
(2011 இன் கருப்பொருள் - காடுகள் உங்கள் சேவைகளின் இருப்பிடம்)

➢ ஜன்னல்களைச் சுத்தம் செய்ய பணிப்பெண்களுக்கு தடை விதித்துள்ள நாடு எது?
சிங்கப்பூர் (அண்மையில் பணிப்பெண் ஒருவர் உயர்ந்த மாடிக் கட்டடத்தில் சுத்தம் செய்யும் போது தவறி வீழ்ந்து உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது)

➢ மாபெரும் கம்யூனிசத் தலைவரின் உடல் கடந்த 88 ஆண்டுகளின் பின் அடக்கம் செய்யப்பட்டது. அது யாருடையஉடல்?
- லெனின்

➢ 2012 இல் ஹெலிகொப்ரர் விபத்தில் மரணமான கென்ய பாதுகாப்பு அமைச்சர் யார்?
ஜோர் சைடோட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢ முஸ்லிம்களுக்கு, பௌத்தர்களுக்கும் மதக்கலவரம் நடை பெற்று வரும் நாடு எது?
மியான்மார்

➢ நோபல் பரிசுத் தொகை எவ்வளவு வழங்கப்படுகிறது தெரியுமா?
10 மில்லியன் குறோனர். ஆனாலும் தற்போது ஐரோப்பா நாடுகளில் நிலவும் பொருளாதார மந்தநிலை காரணமாக பரிசுத்தொகை 08 மில்லியனாகக் குறைக்கப்பட்டுள்ளது.

➢ ஆபிரிக்க ஒன்றிய மாநாடு எந்த நாட்டில் நடைபெற்றது?
எதியோப்பியாவில்

➢ ஒரு குழந்தைக்கு மேல் பெற்றுக்கொள்ள தடை விதித்துள்ள நாடு எது?
சீனா

➢ ஜி-20 மாநாடு இறுதியாக எந்த நாட்டில் நடைபெற்றது?
மெக்ஸ்சி கோவில்

➢ விசர் நாய்க்கடி தடுப்பூசி மருந்து போட்டுக்கொள்ளாமல் இந்தியா வுக்குச் சுற்றுலா செல்ல வேண்டாமென எச்சரித் துள்ள நாடு எது?
இஸ்ரேல்

➢ ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தால் கலாநிதிப் பட்டம் வழங் கப்பட்ட மியான்மாரின் ஜனநாயகத் தலைவி யார்?
ஆங் சாங் சூகி

➢ உலகின் முதல் சோதனைக் குழாய்க் குழந்தையைப் பெற்றெடுத்த பெண் அண்மையில் காலமானார். அவர் யார்?
லெஸ்லி பிரவுண் (வயது-64, பிரிட்டன்)

அக்குழந்தையின் பெயர் தெரியுமா?
லூயிஸ் பிரவுண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢ "**டியான்காங்**" என்பது யாது?

சீனா விண்ணில் ஆய்வு மையத்தை அமைக்கும் பணிகளை மேற்கொண்டு வருகிறது. அந்த ஆய்வு மையத்துக்கே டியான்காங் எனப் பெயரிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் 2020 ஆம் ஆண்டுக்குள் இந்த ஆய்வு மையத்தின் பணிகளை முடிக்கச் சீனா திட்டமிட்டுள்ளது.

ஆய்வுமையத்தின் பணிகளை மேற்கொள்வதற்காக "ஷென்சு 9" என்ற விண்கலத்தை சீனா அண்மையில் விண்ணில் செலுத்தியது குறிப்பிடத்தக்கது.

**றியோ+20 மாநாடு**

RIO+20

- சுற்றாடல் தொடர்பாக உலகத் தலைவர்கள் பங்குபற்று ஓர் மாநாடா கும்.
- 20 ஆண்டுகளுக்கு முன்னர் பிரேஸிலின் றியோடி ஜெனிரோ நகரில் நடைபெற்ற மாநாட்டை நினைவு கூரும் முகமாக இதற்கு றியோ எனப்பெயர் சூட்டப்பட்டது.
- உலகில் இருந்து வறுமையை முற்று முழுதாக ஒழித்துக் கட்டவும், சுற்றுச்சூழலை பாதுகாக்கவும் செயற்றிட்டம் ஒன்றினைவிவாதித்து அங்கீகரிப்பதற்காக இந்த மாநாட்டில கலந்து கொள்ளும் லைவர் விவாதிப்பர்.
- இம்மாநாடு பத்து நாள்கள் நடைபெறும்.
- 92 உலகத் தலைவர்கள் கடந்த மாநாட்டில் கலந்து கொண்டனர்.
- இந்த மாநாட்டின் கருப்பொருள் "நிலைத்து நிற்கும் அபிவிருத்தி" ஆகும்.
- இலங்கை சார்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, வெளியுறத்துறை அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், அமைச்சர்களான விமல் வீரசன்ச, அனுர பிரியதர்ஷன யாப்பா, பாட்டாளி சம்பிக்க ரணவக்க, மகிந்தசமரவீர, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோர் கலந்து கொண்டனர்.

✧ கடலுக்கு அடியில் 7 ஆயிரம் மீற்றர் வரை சென்று சாதனை படைத்த நாடு எது? சீனா

இதேவேளை, டைட்டானிக் திரைப்படத்தை தயாரித்த இயக்குநர் ஜேம்ஸ் கமரூன் 11 ஆயிரம் ஆழம் வரை சிறிய நீர்மூழ்கிக் கப்பலில் சென்று ஏற்கனவே சாதனை படைத்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✧ 29 துறைகளில் பட்டம் பெற்றுச் சாதனை படைத்த அமெரிக்கர் யார்? மைக்கல் நிக்கோசன் (வயது-71)

✧ உலகிலேயே அதிகளவில் பணம் சம்பாதிக்கும் மொடல் அழகி யார்?
கிஷேல் புன்ட்சென்
பிரேசில் நாட்டைச் சேர்ந்தவர். பிரபல போர்ப்ஸ் பத்திரிகை நடத்திய கருத்துக் கணிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



✧ இலண்டனில் உள்ள உலகப் புகழ்பெற்ற பிக்பென் கடிகாரக் கோபுரத்துக்கு யாருடைய பெயர் சூட்டப்பட்டுள்ளது?
பிரிட்டிஷ் அரசி 2ஆம் எலிசபேத் (எலிசபேத் கோபுரம்)

✧ புத்தகம் படித்தால் கைதிகளின் தண்டனை குறைக்கப்படும் என்ற புது விதமான சட்டத்தைக் கொண்டு வந்துள்ள நாடு எது? பிரேசில்

✧ ஆதி மனிதன் எங்கு தோன்றியுள்ளதாக புதிய ஆய்வுத் தகவல் கூறி நிற்கிறது?
ஆசியாவில் (லிபியாவின் சகாரா பாலைவனத்தில் கண்டெடுக்கப்பட்ட எலும்புக்கூடுகளை ஆய்வு செய்தபோதே இவ்விபரம் கண்டறியப்பட்டுள்ளது)

✧ முகத்தை அசிங்கமாக மாற்றி உலக சாதனை படைத்த நபர் யார்?
தாங் சுகு ஆன் (வயது-43, சீனா)

✧ கம்பி மீது நடந்தபடி நயாகரா நீர்வீழ்ச்சியைக் கடந்து சாதனை படைத்த வீரர் யார்?
நிக் வலன்டா (வயது-33, அமெரிக்கா)

✧ மிஸ் ஏசியா பசுபிக் அழகியாக முடிசூட்டிக் கொண்டவர் யார்?
ஹிமாங்கினி - (இந்தியா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✢ ஐ.நா. ஆதரவுடனான போர்க்குற்ற விசாரணை நீதிமன்றம் லைபீரிய முன்னாள் ஜனாதிபதிக்கு 50 வருட சிறைத்தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தது. அவர் யார்?
சாள்ஸ் டெய்லர் (வயது-64)
சியராலியோனில் பயங்கர வன்முறையில் ஈடுபட்ட குழுவினருக்கு ஆயுதங்களை விநியோகித்து அவற்றுக்குப் பதிலாக இரத்தினக் கற்களைப் பெற்றுக்கொண்டதாக குற்றம் சுமத்தப் பட்டிருந்தவர். இக்குற்றம் நிரூபிக்கப் பட்டதன் பிரகாரமே மேற்படி நீதிமன்றினால் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

✢ ஆயுட்கால சிறைத்தண்டனை வழங்கப்பட்ட எகிப்தின் முன்னாள் ஜனாதிபதி யார்?
ஹொஸ்னி முபாரக்
2011 ஆம் ஆண்டு எகிப்தில் இடம்பெற்ற மக்கள் எழுச்சியின் போது அப்பாவி மக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து 850 ஆர்ப்பாட்டக் காரர்களின் மரணத்துக்கு காரணமாக இருந்தவர் என்பதே இவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டாகும்.

✢ தமது பிள்ளைகளுக்குப் பலவந்தமாகத் திருமணம் செய்து வைக்கும் பெற்றோரைச் சிறையிலடைக்க வழிவகை செய்யும் புதிய சட்டத்தை அறிவித்துள்ள நாடு எது?
பிரித்தானியா

✢ உலகின் மிகவும் வயதான உடன்பிறப்புக்கள் என அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டவர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள்? பிரித்தானியா

✢ வலியின்றி ஊசி மருந்தேற்றக்கூடிய புதிய உபகரணத்தைக் கண்டுபிடித்துள்ள நாடு எது?
அமெரிக்கா
அமெரிக்காவில் அமைந்துள்ள மஸாசூசெட் தொழில்நுட்பக் கற்கைகள் நிறுவனத்தின் (MIT) இயந்திரப் பொறியியல் பேராசிரியர் Lan Hunter தலைமையிலான குழுவே இப்புதிய ஊசி மருந்தேற்றும் உபகரணத்தை வடிவமைத்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✧ 2012 ஆம் ஆண்டு அவுஸ்ரேலிய பிரபஞ்ச அழகுராணிப் போட்டியில் வெற்றியீட்டிய அழகி யார்?
ரேனே அயிறிஸ்

## அயல்நாட்டுப் பக்கமாக வீசிய வலையில்...

- இந்தியாவின் புதிய இராணுவத் தளதிபதி யார்?
ஜெனரல் பிக்ரம் சிங்

- பிரபல ரன்வீர் சேனா இயக்கத்தின் தலைவர் அண்மையில் சுட்டுக் கொல்லப்பட்டார். அவர் யார்?
பிரம்மேஸ்வர் சிங்

- இந்தியாவின் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப் பட்ட பிரபல கிரிக்கெட் வீரர் யார்?
சச்சின் டெண்டுல்கர்

- இந்தியாவின் தற்போதைய புதிய கடற்படைத் தளபதியாகப் பதவியேற்கவுள்ளவர் யார்?
தெவேந்திரகுமார் ஜோஷி - (இவர் ஓகஸ்ட் 31 இல் (31.08.2012) பதவியேற்கவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது)

- ஜி-20 நாடுகளில் மிகவும் பின்தங்கியுள்ளதெனக் குறிப்பிடப் படும் நாடு எது? இந்தியா

- கசல் இசையின் மன்னன் அண்மையில் இந்தியாவில் கால மானார். அவர் யார்?
மேதி ஹசன் (வயது-85)

- உலகிலேயே அதிக இலவச திருமணங்களை நடத்திச் சாதனை படைத்து கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடிக்கவுள்ள இந்தியப் பெண்மணி யார்?
தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா

- இந்தியத் திரையுலகில் 600 இற்கும் மேற்பட்ட படங்களில் நடித்துச் சாதனை படைத்த நடிகர் அண்மையில் காலமானார் அவர் யார்?
காக்கா ராதாகிருஷ்ணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



- விண்வெளிக்கு மீண்டும் செல்வதற்கு நாசாவால் தெரிவு செய்யப்பட்ட இந்திய வீராங்கனை யார்?
  சுனிதா வில்லியம்ஸ் அவார்.
  இவர் 2006இல் விண்வெளிக்குச் சென்று ஆறு மாதங்கள் தங்கி ஆய்வினை மேற்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

- தென்னிந்திய நடிகர் சங்கத் தலைவராக அண்மையில் தெரிவு செய்யப் பட்டவர் யார்?
  நடிகர் சரத்குமார்

- இந்தியாவின் நட்சத்திர சத ஆட்டநாயகன் சச்சின் டெண்டுல்காரின் வாழ்க்கைப் பயணத்தை விளக்கும் புதிய புத்தகம் ஒன்று அண்மையில் வெளியிடப்பட்டது. அப்புத்தகத்தின் பெயர் என்ன?
  "டெண்டுல்கர் டு சென்சூரிகர்"

- பிரான்ஸ் நாட்டில் தாய்லாந்தின் எதிர்க்கட்சித் தலைவர் சூகிக்கு வழங்கப்பட்ட விருது யாது?
  "கௌரவ பிரஜை" விருது

## விளையாட்டுப் பக்கம் வீசிய வலையில்.....

- பிரெஞ் பகிரங்க ரெண்னிஸ் ஒற்றையர் பிரிவு மூன்றாவது சுற்றில் வெற்றியீட்டிய வீராங்கனை யார்?
  பெட்ரா கிவிட்டோவா (செக்குடியரசு)

- பிரெஞ் பகிரங்க ரெண்னிஸ் தொடரில் ஆடவர் ஒற்றையர் பிரிவில் தொடர்ந்து ஆறாவது முறையாக சம்பியனாகிச் சாதனை படைத்த வீரர் யார்?
  ரபேல் நடால்

- தாய்லாந்தின் சிறந்த பட்மின்ரன் தொடரில் சம்பியன் பட்டம் வென்ற இந்திய வீராங்கனை யார்?
  சாய்னா நேவால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நேபாளத்தின் கிரிக்கெட் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள இந்திய கிரிக்கெட் அணி வீரர் யார்? டோனி
- கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெற்ற பின்னர் இராணுவ சேவையில் ஈடுபடவுள்ளதாகக் கூறியுள்ள வீரர் யார்? டோனி
- அண்மையில் காலமாகிய பிரபல உதைபந்தாட்ட வர்ணணையாளர் யார்?
  தியேரி ரோலண்ட் - (வயது 74, பிரான்ஸ்)
  இவர் ஆயிரம் போட்டிகளுக்கு வர்ணணையாளராகப் பணி புரிந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.
- ஆசிய இளைஞர் விளையாட்டுப் போட்டி எத்தனையாம் ஆண்டு இலங்கையில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது?
  2017 ஆம் ஆண்டு என - ஆசிய ஒலிம்பிக் கமிட்டியின் தலைவர் இளவரசர் ஷெய்க் பாட் அல் சபா அண்மையில் இலங்கைக்கு வருகை தந்தபோது உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.
- பிரெஞ்சுப் பகிரங்க ரென்னிஸ் பெண்களுக்கான தனிநபர் சம்பியனாக வெற்றிவாகை சூடிக்கொண்ட வீராங்கனை யார்? மரியா ஷரபோவா (ரஷ்யா)
- 5ஆவது தடவையாகவும் உலக செஸ் சம்பியன் பட்டத்தை தட்டிச் சென்ற வீரர் யார்? விஸ்வநாதன் ஆனந் (இந்தியா)
- தென்னாபிரிக்காவின் கிரிக்கெட் அணியில் 2011 - 2012 ஆம் ஆண்டுக்கான சிறந்த வீரர் மற்றும் சிறந்த டெஸ்ட் வீரர் ஆகிய விருதுக்குத் தெரிவு செய்யப்பட்ட சகலதுறை ஆட்டக்காரர் யார்? வெரோன் பிலாண்டர்

## உலகை உலுக்கிய இம்மாத இயற்கை அழிவுகள்...

◊ நில நடுக்கம்

- ஜம்முவில் இலேசான நில நடுக்கம் 4.3 ரிச்டர் அளவில். (05.06.2012)
- சீனாவில் நிலநடுக்கம் ஏற்பட்டு 4 பேர் பலி, 100 பேர் காயம்(24.06.12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◈ வெள்ளப்பெருக்கு

- ஆப்கானிஸ்தானில் வெள்ளப் பெருக்கால் 30 பேர் உயிரிழப்பு

◈ நிலச்சரிவு

- உகண்டாவில் நிலச்சரிவு 18 பேர் பலி (25.06.2012)

## இலங்கையின் சுற்றுலாத்துறை.

2012ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்பட்ட சுற்றுலாப் பயணிகளின் இலக்கு 950 000 ஆகும், ஆனால் வருகை தந்தோர் பத்து இலட்சம் எனப் புள்ளி விபரம் கூறுகின்றது.

2012ஆம் ஆண்டில் சுற்றுலாத்துறை வருமானம் ஒரு பில்லியனுக்கு மேற்பட்ட அமெரிக்க டொலர்களாகும்.

2013ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் சுற்றுலாப் பயணிகள் 1250 000 ஆகும்.

2016ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் சுற்றுலாப் பயணிகள் 2500 000 ஆகும்.

---

## கலைஞரின் பார்வையில்...



பொது நோக்குடன் வெளிவருகின்ற இந்த 'வலை' மாணவ உலகுக்கு மிகுந்த பயனளிக்கும் ஓர் அரிய இதழாகும். கல்வி பயில்கின்றவர்களும், வேலை வாய்ப்பின் நிமித்தம் போட்டிப் பரீட்சைக்குத் தயார் செய்கின்ற ஒவ்வொருவரும் கட்டாயம் படிக்க வேண்டிய ஓர் உன்னத படைப்பு 'வலை'.

உலக நடைமுறைகளை இந்த "வலை நன்கு வீசிப்பிடித்து எமக்கு அறிவுறுத்துகின்றது. தகவல்களையறிந்து கொள்ள ஓர் ஊடகமாகத் திகழ்வதோடு, ஓர் அறிவுக் களஞ்சியமாகவும் தன்னை வெளிக்காட்டி நிற்கின்றது.

இந்த "வலை சிற்றிதழை ஆசிரிய, மாண" உலகம் உவந்தேற்று ஆதரவு நல்கி வரவேற்றுப் பயன்பெற வேண்டுமென்பதே எனது அவா.

எனவே இவ் வலை தொடர்ந்து இழையோட எம்பெருமான் அருள்புரிய வாழ்த்துகின்றேன்.

கலாபூஷணம் **இராசையா ஸ்ரீதரன்.**
வில்லிசைக் கலைஞர்,
சிவநெறிக் கலாநிதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாசக நெஞ்சங்களுக்கு...**

வலையின் இதழ் பத்தாவது இழையில் உங்களைச் சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

நாட்டின் பல பகுதிகளையும் வறட்சி வாட்டி வதைக்கின்றது. பருவமழை பொய்த்து வெப்பநிலை அதிகரித்து வருவதால் விவசாயிகளை மாத்திரமன்றி சகல தரப்பினரையும் மோசமான பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றது.

சாதாரண நீர்த்தேக்கங்கள் வற்றிவறண்டு விட்டன. குறிப்பாக வட பகுதியில் ஒருபோதுமே வற்றாத குளங்களும் இந்த வறட்சியால் வற்றிவிட்டதாக பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. இந்த நிலைமை இயற்கையின் கோரத்தாண்டவத்தை எடுத்துக் காட்டுகின்றது.

பயிர்கள் வாடி வறண்டுவிட்ட நிலையில், விவசாயத் துறையும், சக்தி வளத்துறையும் பாரிய நெருக்கடியை எதிர்கொள்கின்ற நிலையில், நீரைச் சிக்கனமாகப் பாவித்து சேமித்து வைப்பது அவசரத் தேவைப்பாடாக இருப்பதாக சூழலியல் நிபுணர்கள் கூறுகின்றனர்.

எனவே கடும்வறட்சியால் உற்பத்தித்துறை வீழ்ச்சியுடன் வாழ்க்கைச் செலவினமும் வேகமாக அதிகரித்துச் செல்கிறது.

இந்த நிலையில், நீர் வளங்களைப் பாதுகாப்பதற்குரிய வழி முறைகளை உடனடியாகப் பின்பற்றினால் மட்டுமே மழை வீழ்ச்சி போதியளவு கிடைக்கும் வரை உள்ளதை வைத்துக் கொண்டு சமாளிக்க முடியும்.

எனவே, நீரைச் சிக்கனமாகப் பாவித்து நலமுடன் வாழ்வோம். மற்றவர்களையும் வாழ வைப்போம். என்ன! சொல்வது சரிதானே?

இந்த இதழ் தொடர்ந்து வெளிவருவது உங்கள் கைகளிலேயே தங்கியுள்ளது. ஆகையால் 'இவ்விதழினை உங்களது நண்பர்களுக்கும், மாணவர்களுக்கும் அறிமுகம் செய்து உதவுங்கள்.

உங்களது ஆதரவிலேயே எனது பணி தொடரும்...

வாசகர்களது ஆலோசனைகள் வரவேற்கப்படுகின்றன...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யூலை மாத சர்வதேச தினங்கள்...




- யூலை - 01- உலக மருத்துவர்கள் தினம்
- யூலை - 01- உலக கூட்டுறவுத் தினம்
- யூலை - 08- உலக கூட்டுறவாளர் தினம்
- யூலை - 08- உலக எழுத்தாளர் தினம்
- யூலை - 11- உலக சனத்தொகை தினம்
- யூலை - 17- உலக வறுமை ஒழிப்புத் தினம்
- யூலை - 20- உலக சதுரங்க தினம்
- யூலை - 22- உலக அண்ணளவு தினம்
- யூலை - 23- உலக மனவழுத்த தினம்
- யூலை - 28- உலக அகதிகள் தினம்

## இலங்கை பற்றிய இம்மாத வீசலில்...

- வட மாகாணத்தில் ஒரே நாளில் 11 விரிவாக்கல் கிளைகளைத் திறந்து வைத்துச் சாதனை படைத்த வங்கி எது?
  இலங்கை வங்கி

- 2012 இல் மூன்றாவது தடவையாகவும் மிகச் சிறந்த வங்கிக்கான விருதை வென்ற வங்கி எது?
  கொமர்ஷல் வங்கி (இதனை பினான்ஸ் ஏசியா சஞ்சிகை வழங்கியுள்ளது)

- நாட்டிலுள்ள கொமர்ஷல் வங்கியின் சேவை நிலையங்கள் இன்று 2012 யூலை வரை எத்தனை தெரியுமா?
  218

- 25 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடிய வங்கி எது?
  சம்பத் வங்கி

- 2011 ஆம் ஆண்டு இரட்டைக் குழந்தைகள் பிறந்த தாய்மார் எத்தனை பேர்?
  83 பேர் -
  யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் அறிக்கையிலிருந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அணு ஆயுதம் இல்லாத உலகம் உருவாக வேண்டும் எனக் கருத்து வெளியிட்ட விஞ்ஞானி யார்?
டாக்டர் அப்துல் கலாம்

- இலங்கையில் கட்சிச் சின்னங்களாக குறிப்பிட்ட சிலவற்றைப் பாவிக்கமுடியாது எனத் தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய அறிவித்துள்ளார். அவை எவை?
புலி, நாய், கலசம், ஜோடி
வாள், தாமரை, மலர், சிங்கம், சம்மட்டி

- தேசிய விவசாய சபையினால் யாழ்.மாவட்டத்தில் சிறந்த விவசாயியாக தெரிவு செய்யப்பட்டவர் யார்?
கந்தையா தியாகலிங்கம் (சுன்னாகம்)

- இலங்கையின் மிகப்பெரிய புனித அந்தோனியார் சிலை அண்மையில் எங்கு திறந்து வைக்கப்பட்டது?
வத்தளை (25 அடி உயரம்)

- 2011 ஆம் ஆண்டுக்கான சிறந்த உள்நாட்டு உற்பத்தியாளருக்கான விசேட விருது வழங்கப்பட்ட நிறுவனம் எது?
இன்டர்பார்ம் (பிறைவேட்) லிமிட்டெட் (இந்நிறுவனமானது இலங்கையில் மருந்துப் பொருட்களை உற்பத்தி செய்கிறது)

- இலங்கையின் புதிய சட்ட மா அதிபராக ஜனாதிபதியினால் நியமனம் வழங்கப்பட்டவர் யார்?
பாலித பெர்னாண்டோ

- தபால் திணைக்களத்துடன் சம்பந்தப்பட்ட சேவையொன்றினை நிறுத்துவதற்கு அரசு தி... மிட்டுள்ளது. அது எந்தச் சேவை?
தந்திச் சேவை
- தற்போது இணையம், மின்னஞ்சல், தொலைநகல், குறுந்தகவல் போன்றவற்றினால் தந்திச் சேவை வாடிக்கை

- 115 வயது வரை வாழ்ந்து அண்மையில் வடமராட்சியில் காலமாகிய முதியவர் யார்?
ஆர்மானிஸ் அந்தோனிப்பிள்ளை (கட்டைக்காடு மேற்கு)
ஒடியல் பிட்டையே அதிகமாக விரும்பிச் சாப்பிட்டு வந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- Lanka IOC என்பது யாது?
திருகோணமலையில் உள்ள லங்கா இந்தியன் எண்ணெய் நிறுவனமாகும்.

- 150ஆவது ஆண்டு நிறைவினைக் கொண்டாடிய கத்தோலிக்கச் சபை எது? திருக்குடும்ப கன்னியர் சபை

- இலங்கை மெதடிஸ்த திருச்சபை இவ்வாண்டு எத்தனையாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடியது?
198 ஆவது

- "ஸ்மைல்" என்பது யாது?
தேசிய சேமிப்பு வங்கியானது புதிதாக அறிமுகப்படுத்தியுள்ள சேமிப்பு ஊக்குவிப்புத் திட்டமாகும்.

- இலங்கை கத்தோலிக்கத் திருச்சபையின் வரலாற்றில் புதிய மறை மாவட்டமாக 16ஆம் ஆசீர்வாதப்பரினால் (பாப்பாண்டவர்) பிரகடனப் படுத்தப்பட்டுள்ள இடம் எது?
மட்டக்களப்பு

- இலங்கையில் அதிகூடிய மக்கள் வசிக்கும் மாவட்டம் எது?
கொழும்பு - 23 இலட்சத்து 826 பேர்

- இலங்கையில் சனத்தொகை குறைந்த மாவட்டம் எது?
முல்லைத்தீவு - 99 ஆயிரத்து 63 பேர்

- இலங்கையில் அண்மையில் வாழ்நாள் சாதனையாளர் விருது யாருக்கு வழங்கப்பட்டது?
எஸ்.நடராஜா
இலங்கை மருந்தாக்கல் தொழிலுக்கு அவரின் 30 வருட கால நற்சேவையைப் பாராட்டி மேற்படி விருது வழங்கப்பட்டது.

- நம் நாட்டின் பிரபல நகைச்சுவை நடிகர் அண்மையில் காலமானார். அவர் யார்?
டொன் பொஸ்கோ - இவர் 'எங்களில் ஒருவன்' திரைப்படத்தில் கதாநாயகனாக நடித்ததோடு, நான் உங்கள் தோழன், இரத்தத்தின் இரத்தமே, ஏமாளிகள், நெஞ்சுக்கு நீதி, நாடு போற்ற வாழ்வு போன்ற தமிழ் திரைப்படங்களிலும் ஒரு சில சிங்களத் திரைப்படங்களிலும் நடித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பொதுநலவாய அரச தலைவர்கள் ஒன்றுகூடும் மாநாடு அடுத்த வருடம் (2013) எங்கு நடைபெறவுள்ளது?
கொழும்பில் (இதற்கான இலட்சனையும் வடிவமைக்கப் படவுள்ளது)

- அண்மையில் காலமாகிய உலக மல்யுத்த சம்பியன் யார்?
தாராசிங் (வயது-83) இவர் திரைப்பட நடிவருமாவார்.

- மைக்ரோசொப்ட் ஸ்ரீலங்காவும் ICTA வும் இணைந்து நடத்திய FutureGov SARRC 2012 எங்கு நடைபெற்றது?
கொழும்பில்

- "ரட்டவிருவோ" என்பது யாது?
நாட்டிற்கு அன்னியச் செலாவணியை ஈட்டித்தரும் புலம்பெயர் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள ஒரு அமைப் பாகும்.
இவ் அமைப்பு நாட்டின் ஒவ்வொரு பிரதேச பிரிவுகளிலும் உருவாக்கப்படவுள்ளது.

- "புறநெகும" என்பது யாது?
உள்ளூராட்சி நிறுவனங்களைப் பலப்படுத்துகின்ற திட்ட மாகும்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

2011 தொடக்கம் 2013 வரையான மூன்று ஆண்டு கால இவ் அபிவிருத்தித் திட்டத்துக்கு ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றத் துக்கும் 1000 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருப்பது டன், சனத்தொகை மற்றும் நிலப்பரப்பு அடிப்படையில் இத் தொகை வேறுபட்டுக் காணப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விருதுகள் பக்கம் வீசிய வலையில்...

★ 2012 ஆம் ஆண்டுக்கான சிறந்த வர்த்தக வங்கி என்னும் விருதை இலங்கையில் வென்ற வங்கி எது?
NDB வங்கி (National Development Bank)
ஐக்கிய இராச்சியத்தின் வேர்ள்ட் ஃபினான்ஸ் நிறுவனத்தினால் வழங்கப்பட்டது. இந்நிறுவனம் 2007முதல் சாதனைகள் மற்றும் விசேடத்துவத்துக்கான விருதுகளை வழங்கி வருகிறது.

★ 2011 பத்திரிகையாளருக்கான மத்திய நிலையத்தின் (International Center for Journalist) தென்னாசியாவுக்கான விருதைப் பெற்றுக் கொண்ட யாழ்ப்பாண ஊடகவியலாளர் யார்?
ந.பரமேஸ்வரன்

★ AgbIZ 2012 விருது வழங்கும் விழாவில் 14 விருதுகளை வென்று சாதனை படைத்த நிறுவனம் எது?
ஹேலீஸ்

★ வர்த்தகத்துடன் இணைந்த சிறந்த மனிதவள ஊழியத்திற்கான ஆசியாவின் சிறந்த தொழில் வழங்குநர் விருது வழங்கப்பட்ட நிறுவனம் எது?
எஸ்.எல்.ரீ மேண்பவர் சொலுயுஷன்ஸ்

★ ஊடகத்துறையில் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட ஊடகவியலாளர்கள் யாவர்?

- கந்தையா நித்தியானந்தன்,
- திருமதி சிபில் வெத்தசிங்க
- எஸ்.ஹேவகே சித்திரானந்தா,
- சுனில் மாதவ பிரேமதிலக்க
- டி.சி.ஏ.விஜேசேகர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ 2011 ஆம் ஆண்டு பிலிம்பேர் விருது வழங்கும் நிகழ்வில் சிறந்த நடிகர், சிறந்த இயக்குநர், சிறந்த படம் உட்பட நான்கு விருதுகளைப் பெற்றுக்கொண்ட திரைப்படம் எது?
ஆடுகளம்

★ அமெரிக்க ஜனாதிபதி விருது வழங்கப்பட்ட நான்கு இந்திய விஞ்ஞானிகள் யார்?
- ஸ்ரீதேவி வேதுல சர்மா, - பவன் சின்கா
- பராக் ஏ.பதக், - பிஜீ பரக்காடன்

## உலகை நோக்கிய வீசலில்...

◈ உலக பாரம்பரிய சின்னம் என யுனெஸ்கோ நிறுவனத்தினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள இடம் எது?
பெத்தலகேம்

◈ உலகின் மாபெரும் தேசப்படப் புத்தகம் (அட்லஸ்) அண்மையில் எங்கு வெளியிடப்பட்டது? அதன் பெயர் என்ன?
அபுதாபி
Earth Platinum
அவுஸ்ரேலிய வெளியீட்டாளர்களான Millennium House நிறுவனம் வெளியிட்டுள்ளது.
இப்புத்தகமானது 128 பக்கங்களுடையதும், 6 அடி நீளமும், 9 அடி அகலமும், 150 கிலோ எடையும் கொண்டதாகும். இதனைத் தயாரித்து முடிக்க 6 வருடங்கள் சென்றது. 120 பேரின் உழைப்பு இதற்குப் பயன்படுத்தப்பட்டது.

◈ அண்மையில் காலமாகிய கானா ஜனாதிபதி யார்?
அட்டா மில்ஸ் (வயது-68)

◈ உலகின் மினி தலைநகரொன்றை புதிதாகத் திறந்து வைத்துள்ள நாடு எது? தென்கொரியா

◈ உலகின் முதலாவது திறந்த கூரையைக் கொண்ட கேபிள் கார் எங்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டது?
சுவிற்ஸர்லாந்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◈ அமெரிக்காவிலிருந்து முதன் முறையாக விண்வெளிக்கு பயணம் மேற்கொண்ட பெண்மணி காலமானார். அவர் யார்?
சேலி ரைட் (வயது-61)

◈ உலக வங்கியின் தற்போதைய புதிய தலைவர் யார்?
ஜிம் ஜோங் கிம் (வயது-52) இவர் அமெரிக்க குடியுரிமை பெற்ற தென்கொரிய பிரஜையாவார். இவர் 12 ஆவது தலைவராவார். அத்துடன் இவர் ஒரு வைத்தியருமாவார். (உலக வங்கியின் முன்னாள் தலைவர் யார்?

ரொபேட் சொயரிக்)

◈ Sharp நிறுவனம் அறிமுகப்படுத்திய உலகின் பெரிய புதிய தொலைக் காட்சியின் பெயர் என்ன?
Aquos LED (ஆகுவோஸ் எல்.இ.டி-ரீ.வி)
4 அடி உயரம், 6 அடி அகலம்

◈ உலகப் பாரம்பரிய இடமாக அறிவிக்கப்பட்டுள்ள மலைத் தொகுதி எது?
மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதி

◈ உலக அளவில் அதிக இலாபம் ஈட்டும் வங்கிகளின் பட்டியலில் இடம் பிடித்துக்கொண்ட வங்கி எது?
சீன வங்கி - வங்கிகள் குறித்த கணிப்[illegible]களை
ஆண்டு தோறும் நடத்தும் பிரபல வங்[illegible]ப் பத்திரிகை
(அவ் வங்கிப் பத்திரிகையின் பெயர் [illegible]கவில்லை)
வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையில் வெ[illegible]ியிட்டுள்ளது.

◈ வளர்முக நாடுகளில் குடிநீர்ப் பிரச்சினைக்குத் தீர்வாக மாசடைந்த நீரை ஒரு வினாடிகளில் தூய்மையாக்கும் இயந்திரத்தினைக் கண்டுபிடித்து அதனை ரியோ+20 மாநாட்டில் காட்சிப்படுத்திய அமெரிக்க யாழ். இலங்கைத் தமிழரின் ஆய்வு முயற்சிக்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது. அவர் யார்?

சின்னராஜா சயந் (இவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◈ 1, 110 ஆண்டுகளுக்கு முற்பட்ட கல்லறை எந்த நாட்டில் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டது? சீனா

◈ உலகின் முதலாவது அப்பிள் கணினி அண்மையில் ஏலத்துக்கு விடப்பட்டது. அதன் தொகை எவ்வளவு?
3,74,500 அமெரிக்க டொலர் ஆகும்.

◈ கிழக்கு சீனக் கடற்பகுதியிலுள்ள 3 சிறிய தீவுகளை விலை கொடுத்து வாங்குவதற்கு தீர்மானித்துள்ள நாடு எது?
ஜப்பான்.

◈ சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தினால் 14 வருட காலம் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட காங்கோ கிளர்ச்சிக் குழுவின் தலைவர் யார்?
தோமஸ் துபாங்கோ (சிறுவர்களைப் படையில் சேர்த்து ஆயுதப்போராட்டம் நடத்தியமை)

◈ ஐ.நா.வின் கல்வித்தூதுவராக அண்மையில் நியமிக்கப்பட்டவர் யார்?
சார்டன் பிரௌன் (பிரிட்டனின் முன்னாள் பிரதமர்)

◈ உலகின் மிகவும் பிரபலமான கட்டடம் விற்பனைக்கு விடப்படவுள்ளது. அது எந்த நாட்டில் உள்ளது?
ஜப்பானின் மேற்கு டோக்கியோ பகுதியில் உள்ளது.
(தடெலி கிராப் பத்திரிகை தகவல்)

◈ அணு சக்தியில் இயங்கும் உலகின் முதலாவது அமெரிக்க போர்க் கப்பல் ஏலத்தில் விடப்படவுள்ளது. அக்கப்பலின் பெயர் என்ன?
யு.எஸ்.எஸ்.லாங் டீச்
(720 அடி நீளம் கொண்ட இக்கப்பல் 1991 ஆம் ஆண்டு வளைகுடாப் போரின்போது அமெரிக்காவால் பயன்படுத்தப்பட்டது)

◈ 2012 சீனாவில் நடைபெற்ற உலக அழகி இறுதிப் போட்டியில் கலந்து கொள்ள சோதனைக்குழாய் மூலம் பிறந்த பெண் தெரிவானார். அவர் யார்? எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

சர்வோட் கோல்ம்ஸ், பிரிட்டன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◊ ஆபிரிக்க ஒன்றியத்தின் முதலாவது பெண் தலைவராக நிய மிக்கப்பட்டிருப்பவர் யார்?
நிலாமினி சுமா (இவர் தென்னாபிரிக்க ஜனாதிபதி ஜாகொப் சுமாவின் மனைவியாவார்)

◊ இரண்டாம் உலகப்போரில் முக்கிய பயங்கரவாதி அண்மை யில் கைதுசெய்யப்பட்டார். அவர் யார்?
வாடிஸ்லாஸ் சிஸ்க் (வயது-97)
இவர் இரண்டாம் உலகப்போரின்போது யுதக் குடிமக்களைக் கொன்றுகுவித்தார் எனக் குற்றம் சாட்டப்பட்டு கடந்த 15 ஆண்டுகாலமாகப் பொலிஸார் இவரைத் தேடிவந்துள்ளனர்.

◊ கடந்த காலங்களில் அதிகளவான நாடுகளுக்குச் சுற்றுப் பய ணம் மேற்கொண்டு சாதனை படைத்தவரென அறிவிக்கப் பட்டுள்ளவர் யார்?
ஹிலாரி கிளிண்டன் - அமெரிக்க வெளிவிவகாரத்துறை முன்னாள்அமைச்சர்.

◊ உலகின் சோம்பேறிகள் பட்டியலில் முதலிடத்தில் உள்ளவர் கள் எனக் கூறப்படுபவர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள்?
பிரிட்டன் (ஹார்வார்ட் மருத்துவக் கல்லூரி நடத்திய ஆய்வில்)

◊ அட்லாண்டிக் பெருங்கடலை தனியாகக் கடந்து சாதனை படைத் தவர் யார்?
வியா மேரி
ஏர்.'.சாட், அமெரிக்காவின் சிறப்புமிக்க பறக்கும் சிலுவை (Distin guished Flying Cross) வழங்கப்பட்ட முதல் பெண்மணி இவராவார்.
115 ஆவது பிறந்த தினத்தில் இவருக்கு கூகுள் நிறுவனம் பிரத்தியேகப் பக்கத்தை உருவாக்கிச் சிறப்பித்துள்ளது.

◊ நாட்டின் முதற் பெண்மணி என்று தன்னை அழைக்க வேண் டாம் என்றும், தன்னை அம்மா என்று அழைக்கும்படி கூறியவர் யார்?
எகிப்து நாட்டு ஜனாதிபதி மொஹமட் முர்சியின் மனைவி கசானே கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◈ உலகின் மிகவும் செக்ஸியான பெண் என 4 ஆவது முறை யாகத் தெரிவு செய்யப்பட்ட பெண் யார்?
கத்ரினா கைப்

◈ இந்த ஆண்டுக்கான 2012 சர்வதேச இஸ்லாமிய பெண்கள் எழுச்சி மாநாடு எந்த நாட்டில் நடைபெற்றது?
ஈரான் தலைநகர் தெஹ்ரானில்

## அயல் நாட்டுப் பக்கமாக வீசிய வலையில்...

▲ இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் எழுதி வெளிவந்த அவரின் இரண்டாவது நூல் எது?

"Turning Points"(டேர்னிங் பொயிண்ட்ஸ்)




இந்தப் புத்தகத்தில் முரண்பட்ட முடிவுகள் என்ற வகையில் தான் எடுத்த சில முடிவுகளைப் பட்டியலிட்டு அது எந்தக் கட்டத்தில் எடுக்கப்பட்டது? அதன் பின்னணி என்ன? என்பது குறித்து விரிவாக விளக்கப் பட்டுள்ளது.

குறிப்பாக சோனியா காந்தி இந்தியாவின் பிரதமராகலாமா? இல் லையா? என்ற கேள்வி எழுந்த முக்கியமான ஒரு தருணத்தில் தான் என்ன செய்தார் என்பது பற்றி முற்றிலும் அவர் இந்தப் புத்தகத்தில் எழுதியுள்ளார். மற்றும் தூக்குத் தண்டனைக் கைதிகளின் கருணைமனுப் பரிசீலிப்பு விடயங்களும் ஆராயப்பட் டுள்ளன.

அவரது முதல் புத்தகம் "அக்கினிச் சிறகுகள்" என்பது குறிப்பிடத்தக்கது. இது அனைவரும் படிக்க வேண்டிய ஒரு புத்தகமாகும்.

▲ இந்திய இராணுவத்தில் கௌரவ லெப்டினன் கேணல் பதவியைப் பெற்றுக்கொண்ட முதல் இந்தியப் பெண் யார்?
மேரி கோம் (குத்துச் சண்டை வீராங்கனை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இந்தியாவின் முதலாவது ஜனாதிபதி யார்?
  ராஜேந்திரப்பிரசாத் - இவரது வங்கிக் கணக்கு தற்போதும் நடைமுறையில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அவரது கணக்கின் தொகையை இதுவரை யாரும் சொந்தம் கொண்டாட முன்வரவில்ல யெனக் கூறப்படுகிறது.

- தனது 100 ஆவது படத்திற்கு இசையமைத்துள்ள இசையமைப் பாளர் யார்?
  யுவன் சங்கர்ராஜா

- குழந்தைகள் கொலை எண்ணிக்கையில் தமிழகம் எத்தனை யாவது இடத்தில் உள்ளது? 3ஆவது இடத்தில்

- இந்தியாவின் முதல் சுப்பர் ஸ்ரார் என்று அழைக்கப்படும் பிரபல நடிகர் அண்மையில் காலமானார். அவர் யார்?
  ராஜேஷ் கண்ணா (வயது-69)

- முதன் முதலாக தமிழில் மொழிமாற்றம் செய்யப்பட்ட அனிமேஷன் திரைப்படம் எது?
  ICE Age Continental Drift

- 2012 இந்தியாவின் 13 ஆவது ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டவர் யார்?
  பிரணாப் முகர்ஜி

## விளையாட்டுப் பக்கம் வீசிய வலையில்....

- விம்பிள்டன் ரென்னிஸ் தொடரில் மகளிர் ஒற்றையர் பிரிவில் 5ஆவது தடவையாகவும் சம்பியன் பட்டம் வென்று சாதனை படைத்த வீராங்கனை யார்?
  செரினா வில்லியம்ஸ் (அமெரிக்கா)

- உக்ரைனில் நடந்த 14ஆவது யூரோ கிண்ணக் கால் பந்துப் போட்டியில் சம்பியன் பட்டத்தைப் பெற்றுக்கொண்ட நாடு எது?
  ஸ்பெயின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◈ லண்டனில் நடைபெற்ற விம்பிள்டன் ரென்னிஸ் தொடரின் தனிநபர் பிரிவின் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்ட வீரர் யார்? றொஜர் பெடரர் (சுவிஸ்லாந்து)

◈ 2012 ஒலிம்பிக் போட்டியில் இலங்கை ஒலிம்பிக் வீரர்களின் தலைவராக நியமிக்கப்பட்டவர் யார்?
நிலுக கருணாரத்ன

◈ 2012 லண்டனில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டி எத்தனை யாவது? 30 ஆவது.

◈ 2012 லண்டன் ஒலிம்பிக் போட்டியில் இலங்கையிலிருந்து பங்குபற்றியவர்கள் எத்தனை பேர்? அவர்கள் யாவர்? - 7 பேர்

- நிலுக்க கருணரட்ண - பட்மின்டன்
- அனுராத இந்திரஜித் குரே (மெல்வல்லுநர்)
- க்கிறிஸ்டின் சொனாலி மெரிஸ் (மெய்வல்லுநர்)
- மங்கள சமரக்கூன் (குறிபார்த்துச் சுடுதல்)
- ஹேஷான் உடுகம்பொல (நீச்சல்)
- ரேஷிக்கா உடுகம்பொல (நீச்சல்)
- தில்லினி ஜயசிங்க (பட்மின்டன்)

## உலகை உலுக்கிய இம்மாத இயற்கை அழிவுகள்...

➢ பனிப்புயல்

- அமெரிக்காவின் கிழக்குப் பகுதிகளில் கடும்பனி 11 பேர் பலி 43 இலட்சம் வீடுகள் பாதிப்பு

➢ நிலநடுக்கம்

- சீனாவின் வடமேற்குப் பகுதியில் உள்ள ஸின்ஜி யாஸ் மாகாணத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டது. அசாமிலும் நிலநடுக்கம்.
- இந்தியாவின் வட-கிழக்கு மாநிலமான மேகாலயாவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலநடுக்கம் ஏற்பட்டது.
- இந்தோனேசியாவில் 5.1 ரிச்டர் அளவில் பூமியதிர்ச்சி ஏற்பட்டது. சேதவிபரம் தெரியவில்லை.
- மொரிஷியஸ் தீவில் 5.8 ரிச்டர் அளிவல் பூமியதிர்ச்சி.

➢ நிலச்சரிவு
- ஜம்முவில் நிலச்சரிவு, 400 பேர் பாதிப்பு
- கனமழை காரணமாக நிலச்சரிவு ஏற்பட்டு 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் பாதிப்பு

✧ Money 2 SriLanka என்பது யாது?

இந்தியாவின் இராட்சத தனியார் வங்கியான ICICI யுடன் கூட்டாக சம்பத் வங்கி Money 2 SriLanka என்னும் ஒன் லைன் பண வருவழி வசதியை ஏற்படுத்திக் கொண்டுள்ளது.
இது மிகவும் சௌகரியமான பயன்மிக்க சிக்கனம் வாய்ந்த ஒன் லைன் மூலமான பணப்பெறுகை நடைமுறையாகும்.
உலகின் எப்பகுதியிலேனும் ஒன் லைன் பணச்செல் வழி / வருவழி முறையை செயற்படும் நாடுகளிலிருந்து இலங்கைக்குப் பணம் அனுப்பு தலை இதன் வழியே மேற்கொள்ள முடியும்.

இவ்வசதிகள் கனடா மற்றும் ஐக்கிய இராட்சியத்திலும் இருந்து செயற்படுகின்றன. குறுகிய காலத்தில் வேறு பல நாடுகளில் இதனைச் செய்வதற்கு சம்பத் வங்கி எண்ணியுள்ளது.

✧ 18 அமைச்சுக்களின் புதிய செயலாளர்களுக்கான நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வு அண்மையில் ஜனாதிபதியினால் அலரி மாளிகையில் வைத்து வழங்கப்பட்டது.

நியமனம் பெற்றவர்களின் பெயர் விபரம் வருமாறு :

01. எப்.பீ.சீ.ஹேரத் - மக்கள் தொடர்பு அமைச்சு
02. அனுர சிறிவர்த்தன - கைத்தொழில் மற்றும் வர்த்தக நடவடிக்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. வைத்தியர் நிஹால் - சுகாதார அமைச்சு
04. வைத்தியர் ரூபேரு - சிவில் விமான சேவைகள் அமைச்சு
05. என்.பந்துசேன - அரச முகாமைத்துவ புனரமைப்பு அமைச்சு
06. டீ.அமரவர்தன - கூட்டுறவு உள்நாட்டு வர்த்தக அமைச்சு
07. ஆர்.செனவிரட்ன - திறன் அபிவிருத்தி மேம்பாட்டு அமைச்சு
08. லலித் கன்னங்கர - தேசிய வைத்தியத்துறை அமைச்சு
09. ஓ.நிஹால் சோமவீர - தெங்கு அபிவிருத்தி அமைச்சு
10. வசந்த ஏக்கநாயக்க - கலாசார, சபை நடவடிக்கை அமைச்சு
11. எப்.பெரேரா - நிர்மாண பொறியியல் சேவை அமைச்சு
12. எம்.ஜெயவிக்கிரம - விளையாட்டுத்துறை அமைச்சு
13. ஏ.இமெல்டா சுகுமார் - சமூக சேவைகள் அமைச்சு
14. பீ.சுகததாஸ் - மீள்குடியேற்ற அமைச்சு
15. கே.ரணவக்க - உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சு
16. ஷரித்த ஹேரத் - ஊடகத்துறை அமைச்சு
17. பீ.திஸாநாயக்க - பௌத்த, மத அலுவல்கள் அமைச்சு
18. கே.பெரேரா - தேசிய மொழிகள் அமைச்சு

✦ **ரூபிக் கியூப் என்றால் என்ன?**

மூளைக்குவேலை கொடுக்கும் விளையாட்டுச் சாதனமாகும் 1980 ஆம் ஆண்டில் உலகம் முழுவதும் இது தீவிர ஆர்வத்தை ஏற்படுத்தியது.

ஹங்கேரியைச் சேர்ந்த ரூபிக் என்ற பேராசிரியர் இதனைக் கண்டுபிடித்தார்.
கம்யூனிஸ்ட் உலகில் பெற்ற முயற்சியில் தானாவே உருவான முதல் இலட்சாதிபதி என்ற பெருமையும் இவருக்கு கிடைத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் புதிய உறுப்பு நாடுகள்.

2013 ஜனவரியில் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் ஆர்ஜென்ரீனா, அவுஸ்ரேலியா, லக்ஸம்பேர்க், தென்கொரியா, றுவாண்டா ஆகிய ஐந்து புதிய உறுப்பு நாடுகள் இவற்றில் அங்கத்துவம் பெற்றன.

இப் புதிய உறுப்பு நாடுகள் இரண்டு வருடங்கள் கடமையாற்றும்.

சுழற்சி முறையில் பதினைந்து நாடுகளை கொண்ட பாதுகாப்புச் சபையில் பாகிஸ்தான் தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் சக்தி வாய்ந்த பாதுகாப்புச் சபை சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பிற்கு பொறுப்பு வகிக்கின்றது.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் வீட்டோ அதிகாரம் கொண்ட நிரந்தர அங்கத்துவ நாடுகளான அமெரிக்கா, சீனா, பிரான்ஸ், ரஷ்யா, பிரிட்டன் என்பனவாகும்.

---



## நல்லூர் பிரதேச செயலரின் பார்வையில்...

பொது அறிவை இலகுவாகக் கற்றுக்கொள்ள "வலை" சஞ்சிகை மிகவும் உதவுகின்றது. போட்டிப் பரீட்சைகளுக்காகக் கற்பவர்கள் மட்டுமன்றி உலக நடப்புகளை அறிய அவாக் கொண்டவர்களுக்கு வலை மிகச் சிறந்த ஓர் சஞ்சிகை.

இன்றைய நவீன அவசர உலகில் பெரிய புத்தகங்கள் மூலம் அறிய வேண்டிய விடயங்களை இச்சஞ்சிகை சிறிய துணுக்குகளாகத் தந்துதவுகின்றது.

மேலும், பலதரப்பட்ட ஊடகங்கள் வாயிலாகக் கிடைக்கும் சமகாலச் செய்திகளை இச்சிறிய சஞ்சிகை தன்னகத்தே கொண்டு வெளிவருவது சிறப்புக்குரியது.

இத்தகைய அறிவுக் களஞ்சியத்தை அறிவு உலகம் வரவேற்க வேண்டிய தேவைப்பாடு உள்ளது. அதன் வாயிலாக இந்த வலையின் வீச்சை மிக நீண்ட பரப்பிற்கு கொண்டு சென்று எமது அறிவினைப் பெருக்கலாம்.

எனவே, இந்தப் பயன்மிக்க வலையின் பணி தொடர வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

**பா.செந்தில்நந்தனன்,**
பிரதேச செயலர்,
நல்லூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசக நெஞ்சங்களுக்கு...

வலையின் இதழ் பதினோராவது இழையில் உங்களைச் சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

"உங்கள் முயற்சி முழுமையாக வெற்றி பெற சில அம்சங்களில் உறுதியாக இருக்க வேண்டும்" என்கிறார் மால்டஜ் என்னும் சிந்தனையாளர்.

உங்களுடைய கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய மூன்றுக்கும் பொறுப்பேற்கும் தெளிவு தேவை. நல்லதே நடக்கும் என்ற மனோபாவமும், ஆக்கபூர்வமான எதிர்பார்ப்பும் தேவை.

எதை விரும்புவீர்கள் என்பதைத் தெரிந்து கொண்டு அதற்கான விலையைக் கொடுக்கத் தயாராக இருக்க வேண்டும்.

எனவே நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்பதை மற்றவர்களுக்கும் உணரச் செய்ய வேண்டும்.

நம் வெற்றிக்குத் துணை புரிகின்றவர்களின் தேவையையும், திறமையையும் சரிவரப் புரிந்துகொண்டு இயங்க வேண்டும். நினைத்ததைச் சாதிப்போம் என்ற கற்பனை உணர்வு அவசியம்.

இலக்கு எதுவோ, அதைத்தவிர வேறு எந்தப் பக்கமும் கவனம் சிதறக்கூடாது. புதிய சிந்தனைக்கு, சூழ்நிலைக்கேற்ப நம்மை மாற்றிக்கொள்ள வேண்டும். எதைச் செய்தாலும் முழுமையான ஆளுமையுடன், ஈடுபாட்டுடன் செய்ய வேண்டும்.

என்ன ஆச்சரியம்! செய்வீர்களா?

இந்த இதழ் தொடர்ந்து வெளிவருவது உங்கள் கைகளிலேயே தங்கியுள்ளது. ஆகையால் இவ்விதழினை உங்களது நண்பர்களுக்கும், மாணவர்களுக்கும் அறிமுகம் செய்து உதவுங்கள்.

உங்களது ஆதரவிலேயே எனது பணி தொடரும்...

வாசகர்களது ஆலோசனைகள் வரவேற்கப்படுகின்றன...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓகஸ்ட் மாத சர்வதேச தினங்கள்...




- ஓகஸ்ட் - 01 - உலக தாய்ப்பால் தினம்
- ஓகஸ்ட் - 03 - உலக நண்பர்கள் தினம்
- ஓகஸ்ட் - 06 - உலக ஹிரோஷிமா தினம்
- ஓகஸ்ட் - 09 - உலக நாகசாகி தினம்
- ஓகஸ்ட் - 12 - உலக இளைஞர் தினம்
- ஓகஸ்ட் - 18 - உலக உள்நாட்டு மக்களின் தினம
- ஓகஸ்ட் - 19 - உலக புகைப்படப் பிடிப்பாளர் தினம்
- ஓகஸ்ட் - 30 - உலக காணாமல் போனோர் தினம்

## இலங்கை பற்றிய இம்மாத வீசலில்...

- பாதுகாப்பு அமைச்சின் ஏற்பாட்டில் 2012 ஆம் ஆண்டுக்கான பாதுகாப்பு மாநாடு கொழும்பில் நடைபெற்றது. அந்த மாநாட்டின் தொனிப்பொருள் என்ன?
  நீடித்த அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை நோக்கி...

- பிரதேச அபிவிருத்தி வங்கி தனது எத்தனையாவது கிளையை வட மாகாணத்தில் திறந்துள்ளது?
  258 ஆவது

- "சிரேஷ்ட கல்வி மற்றும் பயிற்சி விருது" கிடைக்கப்பெற்ற நிறுவனம் எது?
  மேர்க்கண்டைல் சீமென் - The Mercantile Seament Traning Institute (MSTI)

- 'சர்வதேச மிளகு மாநாடு' இந்த முறை எங்கு நடைபெற்றது?
  2012 ஒக்ரோபர் மாதம் (30.10.2012) கொழும்பில் நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டில் - இலங்கை, இந்தியா, பிரேசில், இந்தோனேசியா, மலேசியா, வியட்னாம் ஆகிய நாடுகள் அங்கம் வகிப்பதுடன், மாநாட்டில் பங்குபற்றின.

- 2012 இற்கான கொமர்ஷல் வங்கியின் ஆறு மாத கால இலாபம் எவ்வளவு பில்லியன் ரூபா தெரியுமா?
  7.7 பில்லியன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◇ சர்வதேச ஒலிம்பியாட் போட்டிக்கு வடக்கு மாகாணம் சார் பாகத் தெரிவான மாணவி யார்?
ச(த)ர்மிகா சர்வானந்தன்
(வவுனியா றம்பைக்குளம் மகளிர் ம.வி)

◇ நைஜீரியாவைச் சேர்ந்த பெண்கள் உரிமைச் செயற்பாட்டாள ரும், அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவருமான பெண்மணி அண்மையில் கொழும்பு வந்தார். அவர் யார்?
லேமா போவீ அம்மையார்

◇ அரச பாடசாலை பாடத்திட்டத்தில் எந்த மொழியை அறிமுகப் படுத்த கல்வியமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது?
கொரிய மொழி

◇ யாழ்.மாவட்டத்திலுள்ள உதவி அரச அதிபர் பிரிவுகள் பிரதேச செயலகங்களாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன. அவை யாவை?
நெடுந்தீவு, ஊர்காவற்றுறை,
காரைநகர், மருதங்கேணி

◇ 23 ஆவது ஆசிய பசுபிக் மாநாடு அண்மையில் கொழும்பில் நடைபெற்றது. அந்த மாநாட்டின் தொனிப்பொருள் என்ன?
"சந்தையின் அபிவிருத்திக்கென செயற்திட்டங்களைத் தயாரித்தல்"

◇ 2012 இல் மக்கள் வங்கி எத்தனையாவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடியது?
50 ஆவது

◇ இலங்கையில் நாடு தழுவிய ரீதியில் குழந்தைகள் புதுவித நோயினால் பாதிக்கப்படுவதாக சுகாதார அமைச்சு அறி வித்தது. அந்த நோயின் பெயர் என்ன?
தலசீமியா - நாடு தழுவிய ரீதியில் ஆயிரத்து 425 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

◇ இலங்கையில் மீண்டும் கால் பதிக்கும் விமான சேவை எது?
பிரிட்டிஷ் ஏயார்வேஸ் - British Airways

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◇ அண்மையில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி யார்?
சிசெல்ஸ் ஜனாதிபதி ஜேம்ஸ் அலிக்ஸ்

◇ இந்த மாதம் நம் நாட்டில் தீயினால் 50 ஏக்கருக்கும் அதிகமான வனப் பிரதேசம் எரிந்து நாசமாகியது அது எப்பிர தேசம்?
சோமாவத்தி வனப்பிரதேசமாகும்

◇ இலங்கை தமிழ்ப் பத்திரிகைத் துறையின் ஜாம்பவான் யார்?
அமரர் கே.வி.எஸ். வாஸ்

◇ வாசிப்புப் பழகத்தினை ஊக்குவிக்க இலங்கை கிரிக்கெட் நட்சத்திரம் அஞ்சலோ மெத்தியூசால் சிறுவர்களுக்கான புத்தகம் ஒன்று அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளது. அதன் பெயர் என்ன?
Little Angelo's Big Day in Cricket
சிங்களத்தில் - புஞ்சி ஆச்சலோ
தமிழில் - சிறிய வயதினிலே ஆஞ்சலோ

◇ இலங்கை தபால் திணைக்களத்திற்கு அதிக வருமானத்தை ஈட்டித் தரும் மாவட்டம் எது?
வட மாகாணம் - தபால் மா
அதிபர் றொஹான் அபேயரத்தினா தகவல்...

## உலகை நோக்கிய வீசலில்...

○ "எப்போலா" எனப்படும் ஒரு வித ஆட்கொல்லி வைரஸ் எந்த நாட்டைத் தாக்கியுள்ளது?
உகண்டா (14 பேர் இறந்துள்ளனர். இதன் காரணமாக அந்நாட்டு மக்கள் பீதியில் உறைந்துள்ளனர்)

○ செவ்வாய்க்கிரகத்தில் ஆய்வு செய்யவென நாசா அனுப்பிய விண்கலத்தின் பெயர் என்ன?
கியூரியோசிட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- "விண்வெளி ரக்ஸி" தயாரிக்க நாசா நிறுவனம் எவ்வளவு கோடி ரூபா ஒதுக்கியுள்ளது?
19 ஆயிரத்து 250 கோடி ரூபா

- தென்கொரிய பொறியியலாளரினால் செய்யப்பட்ட உலகின் மிகச்சிறிய செய்மதியின் பெயர் என்ன?
"ஓப்பென்ச" - இதனைத் தயாரித்தவர் ஸொங் ஹேறஜூன் ஆவார்.

- அண்மையில் ஊடகத் தணிக்கையை நீக்கியுள்ள நாடு எது?
மியான்மார்

- அண்மையில் காலமாகிய எதியோப்பிய நாட்டுப் பிரதமர் யார்? மெலஸ் ஸெனவி (வயது-57)

- குழந்தைகளைப் பாடசாலைக்கு அனுப்பாத பெற்றோருக்கு அபராதம் விதிக்கப்படுமென அறிவித்துள்ள நாடு எது?
ஜேர்மனி

- 300 கிலோ மீற்றர் இலக்கைத் தாக்கும் ஏவுகணை ஈரானில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. அதன் பெயர் என்ன?
:.படே - 110

- உலகில் அதிகாரம் படைத்த 100 பெண்மணிகளில் (2012) முதலிடத்தைப் பிடித்துக் கொண்டவர் யார்?
ஜேர்மன் நாட்டின் பிரதமர் ஏஞ்சலா மெர்க்கல்
(அமெரிக்காவின் போர்ப்ஸ் பத்திரிகை நடத்திய கருத்துக் கணிப்பில்)

- மைக்ரோ சொப்ட் நிறுவனத்தின் புதிய சின்னம் அறிமுகப்ப டுத்தப்பட்டுள்ளது. அது யாது?
(இளஞ்சிவப்பு, குருத்துப் பச்சை, நீலம், மஞ்சள்)
சற்சதுர வடிவங்கள்

- டுபாய் நாட்டில் சொத்துக்களை வாங்குவதில் முதலிடத்தில் நிற்பவர்கள் யார்?
இந்தியர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஹரி பொட்டர் ஆசிரியர் ஜே.கே.ரௌலிங் வெளியிடவுள்ள அடுத்த புத்தகத்தின் பெயர் என்ன?
The Casual Vacancy

- தன்னினச் சேர்க்கையாளர்களது திருமணத்திற்கு சட்டபூர்வ அங்கீகார மளித்த முதலாவது ஆசிய நாடு எது?
தாய்வான்

- தொற்று நோயால் மரணமடைந்த எதியோப்பிய பிரதமர் யார்? மெலெஸ் ஸெனாவி (வயது-57)

- உலக வர்த்தக ஸ்தாபனத்தில் இறுதியாக இணைந்துள்ள நாடு எது? ரஷ்யா (World Trade Organization)

- உலகின் பிரபல பெண் எழுத்தாளர் அண்மையில் காலமானார். அவர் யார்?
மேவ் பின்சி (வயது-72), அயர்லாந்து.
"லைட் ஏ பென்னி காண்டில்" என்ற முதல் நாவலை எழுதி எழுத்துத் துறையில் காலடி வைத்தார். இவர் எழுதி பிரபலமான நூல்கள் - "டரா ரோட்", "சேர்கின் ஒவ் பிரண்ட்ஸ்", "கிலத் பஸ்",

- சர்வதேச அணுத் தொழில்நுட்ப மாநாடு எங்கு அண்மையில் நடை பெற்றது? அதன் தொனிப்பொருள் என்ன?
கொழும்பில்
விவசாய நிலங்களின் வளத்தை மேம்படுத்தல்

- மூளையால் கட்டுப்படுத்தப்படும் செயற்கைக் கரத்தைப் பொருத்திக் கொண்ட உலகின் முதலாவது மனிதர் யார்?
அன்ட்றூகார்த்வெயிட் (வயது-25. பிரித்தானியா)

- ஒரே நாளில் 21 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றி யுள்ள நாடு எது? ஈராக்

- தனது 106ஆவது வயதில் உலகைச் சுற்றி சாதனை படைத்த பேராசிரியர் யார்? சபுரோ ஷோசி (ஜப்பான்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 2012 ஆண்டின் உலக அழகியாகத் தெரிவு செய்யப்பட்டவர் யார்?
  வெண்சியா யு (சீனா, வயது-23)
  சீனத் தலைநகர் பீஜிங்கில் தோங்க்செ
  என்னுமிடத்தில் நடைபெற்றது.
  - இரண்டாவது இடம் - சோபி மோல்ஸ் (வேல்ஸ்)
  - மூன்றாவது இடம் - ஜெசிக்கா கஹவாட்டி (அவுஸ்ரேலியா)



- உலகிலேயே மிகவும் ஆழமான நீச்சல் தடாகம் அண்மையில் எங்கு திறந்து வைக்கப்பட்டது? பெல்ஜியம்

- தபால் தலையை வட்ட வடிவமாக வெளியிட்ட நாடு எது? மலேசியா

## அயல்நாட்டுப் பக்கமாக வீசிய வலையில்...

- "கதவைத் திற உள்ளே காற்று வரட்டும்" என்ற ஆன்மீக கருத்துக் கொண்ட தொடரை எழுதியவர் யார்?
  சுவாமி நித்தியானந்தா (இவருடைய இயற்பெயர் ராஜசேகர், குமுதம் சஞ்சிகையில் தொடர் கட்டுரையாக வெளிவந்தது)

- இந்தியாவின் எத்தனையாவது சுதந்திர தினம் அண்மையில் அனுஷ்டிக்கப்பட்டது?
  66 ஆவது.

- இந்தியாவின் பிரபல நாவலாசிரியரான கு.சின்னப்பாரதியின் "சங்கம்" நாவல் பிரெஞ்சு மொழிக்கு மொழிமாற்றம் செய்யப்பட்டு வெளியிட்டு வைக்கப்பட்டது. அந்த நாவலின் பெயர் என்ன?
  "Le Reveil"

- பீரங்கிகளைத் தாக்கி அழிக்கும் "நாக்" (Nag) ஏவுகணைச் சோதனையை நடத்தி தோல்வி கண்ட நாடு எது?
  இந்தியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ இந்தியாவின் பிரபல நகைச்சுவை நடிகர் காலமானார்.
அவர் யார்? என்னத்தே கண்ணையா (வயது-87)

❖ பழம்பெரும் பொலிவுட் நடிகர் அண்மையில் காலமானார்.
அவர் யார்? ஏ.கே.ஹங்கால்

❖ உலக அளவில் சக்திவாய்ந்த பெண்கள் பட்டியலில்சோனியா காந்திக்கு எத்தனையாவது இடம் கிடைத்துள்ளது?
ஆறாவது இடம். - அமெரிக்க போர்ப்ஸ் பத்திரிகை தகவல்.

## விளையாட்டுப் பக்கம் வீசிய வலையில்....

✧ சர்வதேச ஒலிம்பிக் 2012 போட்டியில் லிதுவேனியா நாட்டிற்கு முதன் முதலாக தங்கத்தை வெற்றியீட்டிக் கொடுத்த வீராங்கணை யார்?
ருட்டா மெலியுட்டி (வயது-15)



✧ 2012 ஒலிம்பிக் போட்டியில் உலகின் அதிவேக ஓட்டப்புயல் மனிதன் என்பதை நிரூபித்து தங்கப் பதக்கம் வென்ற வீரர் யார்?
உசைன் போல்ட் (ஜமைக்கா)



✧ இரு கால்களையும் இழந்த வீரர் ஒலிம்பிக் தடகளப் போட்டியில் பங்கு பற்றி அனைவரது கவனத்தையும் ஈர்த்தார். அவர் யார்?
ஒஸ்கர் பிஸ்டோரியஸ்
(வயது-25, தென்னாபிரிக்கா)



✧ 2012 ஒலிம்பிக் போட்டியில் முதலிடத்தைப் பிடித்துக் கொண்ட நாடு எது?

| | | |
|---|---|---|
| அமெரிக்கா - | தங்கம் | - 46 |
| | வெள்ளி | - 29 |
| | வெண்கலம் | - 29 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு முறையே சீனா, பிரிட்டன் இரண்டாவது, மூன்றாவது இடங்களைப் பிடித்துக் கொண்டன.



| | | |
|---|---|---|
| சீனா - | தங்கம் | - 38 |
| | வெள்ளி | - 27 |
| | வெண்கலம் | - 22 |
| பிரிட்டன் - | தங்கம் | - 29 |
| | வெள்ளி | - 17 |
| | வெண்கலம் | - 19 |

இந்தியா 55ஆவது இடத்தையே பிடித்துக் கொண்டது

| | | |
|---|---|---|
| - | தங்கம் | - 02 |
| | வெள்ளி | - 04 |

குறிப்பு : இலங்கையிலிருந்து 7 வீர, வீராங்கனைகள் மற்றும் 27 அதிகாரிகளுடன் சென்ற இலங்கை எந்தவொரு பதக்கத்தையும் பெறவில்லை.

◈ வாழ்நாள் தடையும், பட்டங்களும் பறிக்கப்பட்ட சைக்கிள் பந்தய வீரர் யார்?
லான்ஸ் ஆம்ஸ்ட்ரோஸ்
(ஊக்கமருந்துப் பாவணையில் சிக்குப்பட்டவர்)



◈ மாற்றுத் திறனாளிகளுக்கான பரா 14 ஆவது ஒலிம்பிக் போட்டி எங்கு நடைபெற்றது?
லண்டனில்

◈ பரா ஒலிம்பிக் போட்டியின் மூலம் இலங்கைக்கு முதன் முதலாக பதக்கத்தைப் பெற்றுக்கொடுத்தவர் யார்? பிரதீப் சஞ்சய



சர்வதேச கிக்கெட் சபையின் 2012 ஆம் ஆண்டுக்குரிய விருது வழங்குவதற்கான குறும்பட்டியல் அறிவிக்கப்பட்டுள் ளது.

அறிவிக்கப்பட்டுள்ள விருதுகளுக்கான குறும்பட்டியலில் இலங்கையின் குமார் சங்ககார சிறந்த கிரிக்கெட் வீரர், சிறந்த ஒருநாள் சர்வதேச போட்டி வீரர் ஆகியவற்றுக்கான விருதுகளுக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளார்.

இவரைத்தவிர திலகரட்ண டில்ஷான், அஜந்த மெண்டிஸ் ஆகியோர் ருவெண்ரி - 20 விருதுகளுக்காகவும், சிறந்த புதுமுக வீரர்களுக்கான விருதுக்கு டினேஸ் சந்திரமாலும் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதோ சுருக்கமாக உங்கள் வசதி கருதி விருதுக்கான பெயர்ப்பட்டியல் பின்வருமாறு :

**இந்த வருடத்திற்கான**



❖ சிறந்த வீரர்

- குமார் சங்ககார (இலங்கை)
- ஹசிம் அம்லா (தென்னாபிரிக்கா)
- மைக்கல் கிளார்க் (அவுஸ்ரேலியா)
- வேர்ணன் ஃபிலாந்தர் (தென்னாபிரிக்கா)



❖ சிறந்த டெஸ்ட் வீரர்

- குமார் சங்ககார (இலங்கை)
- ஹசிம் அம்லா (தென்னாபிரிக்கா)
- மைக்கல் கிளார்க் (அவுஸ்ரேலியா)
- வேர்ணன் ஃபிலாந்தர் (தென்னாபிரிக்கா)

❖ சிறந்த ஒருநாள் சர்வதேசப் போட்டி வீரர்

- குமார் சங்ககார (இலங்கை)
- லசித் மலிங்க (இலங்கை)
- மகேந்திரசிங் டோனி (இந்தியா)
- வீராத் ஹோலி (இந்தியா)



❖ சிறந்த புதுமுக வீரர்

- டினேஷ் சந்திமால் (இலங்கை)
- டக் பிரெஸ்வெல் (நியூசிலாந்து)
- சுனில் நரைன் (மேற்கிந்தியத் தீவுகள்)
- ஜேம்ஸ் பற்றின்சன் (அவுஸ்ரேலியா)

❖ துணை அங்கத்துவ நாடுகளில் சிறந்த வீரர்



- கெவின் ஓ பிரையன் (அயர்லாந்து)
- ஜோர்ச் டொக்ரெல் (அயர்லர்ந்து)
- எட் ஜொய்ஸ் (அயர்லாந்து)
- போல்ஸ்ரோலிங (அயர்லாந்து)
- டாவ்லட் ஷெட்ரன் (ஆப்கானிஸ்தான்)

❖ சிறந்த ருவென்ரி - 20 பெறுபேறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அஜந்த மெண்டிஸ் (இலங்கை)
4 ஓவர்களில் 16 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்கள் - எதிர் அவுஸ்ரேலியா திலகரட்ண டில்ஷான் (இலங்கை)
- 57 பந்துகளில் ஆட்டமிழக்காத 104 - எதிர் அவுஸ்ரேலியா கிறிஸ் கெய்ல் (மேற் கிந்தியத் தீவுகள்)
- 52 பந்து களில் ஆட்டமிழக்காத 85 - எதிர் நியூசிலாந்து ரிச்சாட் லெவி (தென்னாபிரிக்கா) - 51 பந்துகளில் ஆட்டமிழக்காத 117 - எதிர் நியூசிலாந்து

**சிறந்த நடுவர்**



- பில்லி பௌடன்
- அலீம் தார்
- குமார் தர்மசேன
- ரிச்சாட் கெற்றல்புரோ
- சைமன் தௌ·.பல்
- ரொட்னி ரக்கர்

**சிறந்த விளையாட்டு உணர்வுடன் விளையாடியமைக்கான விருது**




- மொஹமட் ஹபீஸ் (பாகிஸ்தான்)
- ஜக் கலிஸ் (தென்னாபிரிக்கா)
- டானியல் வெட்டோரி (நியூசிலாந்து)
- ஏ.பி.டி.வில்லியர்ஸ் (தென்னாபிரிக்கா)

**மக்கள் தெரிவுக்கான விருது**
- குமார் சங்ககார (இலங்கை)
- சச்சின் டெண்டுல்கர் (இந்தியா)
- ஜேம்ஸ் அன்டர்சன் (இங்கிலாந்து)
- ஜக் கலிஸ் (தென்னாபிரிக்கா)
- வேர்ணன் பிலாந்தர் (தென்னாபிரிக்கா)

## உலகை உலுக்கிய இம்மாத இயற்கை அழிவுகள்...

◈ பெருவெள்ளம்
- வடகொரியாவில் 88 பேர் பலி. 134 பேருக்கு காயம்.
- தென்காசியில் வெள்ளம் - 31 பேர் உயிரிழப்பு

✧ பிலிப்பைன்ஸ் தலைநகர் மனிலாவைத் தாக்கிய சூறாவளியின் பெயர் என்ன? சயோவா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◈ நிலநடுக்கம்

ஈரானில் 11 நிமிட இடைவெளியில் 2 முறை ஏற்பட்ட நில நடுக்கத்தில் 250 உயிரிழந்தனர். (11.08.2012) நான்கு கிராமங்கள் தரைமட்டமாகின.

- அசாமில் நிலநடுக்கம் - சேதம் அறிவிக்கப்படவில்லை.
- இந்தோனேசியாவில் நிலநடுக்கம், 6 பேலி பலி, 43 பேர் காயம் 6.6 ரிச்டர் அளவில்.
- கலிபோர்னியாவில் தொடர் நிலநடுக்கம்
- பப்புவா நியூகினியாவில் நிலநடுக்கம்

◈ சூறாவளி

- வியட்னாமில் சூறாவளி, 27 பேர் பலி. இதற்கு கை-டாக் தைபூன் எனப் பெயரிடப்பட்டுள்ளது.
- ஜப்பானிலும் பயங்கர சூறாவளி (26.08.2012)

✧ அண்மையில் கியூபாவைத் தாக்கிய புயலின் பெயர் என்ன?
ஐஸக்

✧ அண்மையில் தென்கொரியாவைத் தாக்கிய சூறாவளிக்கு என்ன பெயர்?
பொவாவென் (12 பேர் பலி, 10 காணாமல் போயினர்)

## விருதுகள் பக்கம் வீசிய வலையில்...

★ கைத்தொழில் துறையில் சிறந்த தொழில் முயற்சியாளருக்கான 2011 "சில்ப கர்மாந்த்" என்னும் விருதினைப் பெற்றுக் கொண்ட யாழ்ப்பாணத்தவர் யார்?
மயில்வாகனம் மகேந்திரலிங்கம் (சாவகச்சேரி)

★ மிகச் சிறந்த ஆடம்பர ஹோட்டல் விருதினை தனதாக்கிக் கொண்ட இலங்கையில் உள்ள ஹோட்டல் எது?
சினமன் லேக்சைட் (Cinnamon Lakeside)-
(Business Destination2012 Travel Awards)

★ 'Nasco' விருது வழங்கப்பட்ட லீசிங் கம்பனி எது?
பீப்பிள்ஸ் லீசிங் கம்பனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ சர்வதேச தரச்சான்றிதழையும், சர்வதேச நட்சத்திர தங்கப் பதக்கத்தையும் பெற்றுக்கொண்ட கூட்டுத்தாபனம் எது?
இலங்கை அரச மொழியியல் கூட்டுத்தாபனம்.(இவ்விருது வழங்கும் விழா கடந்த யூன் மாதம் 25 ஆம் திகதி பாரிஸ் நகரில் இடம்பெற்றது)

★ "கப்ருக்க நிபெயும் திரிய" என்பது யாது?
தெங்கு கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்காக தெற்கு அபிவிருத்தி அதிகார சபை மற்றும் மக்கள் வங்கியும் ஒன்றிணைந்து செயற்படுத்துகின்ற சலுகைக் கடன் திட்டமே கப்ருக்க நிபெயும் திரிய திட்டமாகும்.

இதன் உச்ச கடன் எல்லை இரண்டு மில்லியனாகும். வருடாந்த வட்டி ஆறு வீதமாகும்.

★ C.S.R திட்டம் என்பது யாது?

- இது கொமர்ஷல் வங்கியால் 2004 இல் ஸ்தாபிக்கப்பட்டது.
- இத்திட்டத்தின்மூலம் கொமர்ஷல் வங்கி 15 ஆயிரம் பாடசாலைச் சிறார்களின் சிறந்த எதிர்காலத்திற்காக தகவல் தொழில்நுட்ப ஆய்வு கூடத் தேவைகளை வழங்கி வருகின்றது.

◈ "ஏரோ-2" என்பது யாது?
எதிரிகளின் ஏவுகணைகளை இடைமறித்துத் தாக்கும் இஸ்ரேல் தயாரித்துள்ள ஏவுகணையே ஏரோ-2 ஆகும். அத்துடன் ஈரானுடன் மோதல் போக்கைக் கடைப்பிடிக்கும் இஸ்ரேல் தனது ஏவுகணை வரிசையை விரிவுபடுத்தியுள்ளது.

◈ தற்போது ஜப்பானுக்கும் சீனாவுக்கும் முறுகல் நிலை தோன்றியமைக்கான காரணம் என்ன?
கிழக்கு சீனக்கடலில் சீன மக்களால் டயாவோயு என்று அழைக்கப்படும் தீவுகள் உள்ளன. இந்தத் தீவுகளை ஜப்பானியர்கள் சென்காகு தீவுகள் என்று அழைக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் யாரும் வசிக்காத இந்தத் தீவுகள் இரு நாடுகளும் சொந்தம் கொண்டாடி வருகின்றன. தற்போது அத்தீவில் ஜப்பான் தனது நாட்டுக் கொடியை பறக்கவிட்டுள்ளது.

◇ No Easy Day என்பது யாது?
ஒசாமா பின்லேடன் கொலை நடந்தது எப்படி என்ற புத்தகம் செப்ரெம்பர் 11 இல் வெளிவரவுள்ளது. அப்புத்தகத்தின் தலைப்பே இதுவாகும்.

## கடவுளின் துகள்

கடவுளின் துகள் பற்றி அண்மைக்காலமாக ஊடகங்களில் முக்கிய இடம் பிடித்ததைத் தாங்கள் அறிவீர்கள். இதோ உங்களுக்காக வலையில் சிக்கியவை, சுருக்கமாகத் தரப்படு கிறது...



உண்மையில் இது என்ன? கடவுளின் துகள்! என்று கணக்குப் போட்டு கோட்பாடு சொல்லி விளக்கப் போனால் எல்லோருக்கும் தலை சுற்றும்.

ஆனால், ஒன்று மட்டும் நிச்சயம். அதாவது இந்தக் கடவுளின் துகளுக்கும் கடவுளுக்கும் எந்தவிதச் சம்பந்தமும் இல்லை. வெறுமனே மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடும் தொடர்புதான்.

செய்திகளை விற்க ஊடகம் எதுவும் செய்யும் என்ற கதைதான் இந்தக் கடவுளின் துகள் கதை. கடவுளின் துகளின் உண்மை யான பெயர் - 'ஹிக்ஸ் போஸோன்' விஞ்ஞானிகளின் பெயர்கள் நேராக அவர்களது கண்டு பிடிப் புக்களுக்கு வருவதால் அவைகளை உச்சரிக்க வேறாக மேலதிக வகுப்புக் களுக்குச் செல்லவேண்டும். அவ்வாறே இந்த ஹிக்ஸ் போஸோனும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கிலாந்தின் பீட்டர் ஹிக்ஸ் என்ற பௌதிகவியல் விஞ்ஞானி மற்றும் இந்தியாவின் சத்தியேந்திரநாதன் போஸ் என்ற விஞ்ஞானியினதும் பெயர் இணைக்கப்பட்டே வாய்க்குள் நுழை யாத ஹிக்ஸ் போஸோன் என்ற பெயர் உருவாகியிருக்கிறது.

இந்தப் பெயருடன் ஊடகங்களுக்கு செய்தி சொல்ல முடியாது. அவ்வாறு சொன்னால் அதனை எவரும் பார்க்கவும் மாட்டார்கள். எனவே சுடச்சுட செய்தி சொல்ல வேண்டும். எனவே அதற்கு ஒரு பெயர் வேண்டும்.

கடந்த 1993 ஆம் ஆண்டு The God Particle; if the Universe is the Answer, What is the Question? என்ற ஒரு புத்தகம் வெளியானது. இந்தப் புத்தகத்தை எழுதியவர் இயன் லெடர்மன் என்ற விஞ்ஞானி.

இதில் வரும் God Particle என்ற பெயரை ஊடகங்கள் பிடித்துக் கொண்டன. God Particle என்பதன் தமிழ் மொழிபெயர்ப்பு கடவுளின் துகள் என்பதா கும். இது ஒரு கவர்ச்சியான பெயர் இதனை நன்றாக விற்க முடியும். எனவே ஊடகங்களை பிடித்துக் கொண்டதில் நியாயம் இருக்கிறது.

இந்த ஹிக்ஸ் போஸோன் பற்றி ஆரம்ப கட்ட ஆய்வுகளே நடக்கிறது. இதந் ஹிக்ஸ் போஸோன் (   லம் பல அதிசயங்களை எட்ட இன்னும் பல தசாப்தங்கள் செல்லலாம்.

அது வரையில் ஹிக்ஸ் போஸோன் என்ற இந்தக் கடவுளின் துகள் ஊடகங்களுக்கு நல்ல தீனிதான்.

◈ இலங்கையில் தொழில், தொழில் பயிற்சிக்கான பல்கலைக் கழகம் அமைக்கப்பட்டுள்ள இடம் எது?
இரத்மலானை


◈ N.V.Q. என்பதன் விரிவாக்கம் யாது?
தேசிய தொழிற் பயிற்சி தகைமைச் சான்றுதழ்
(Notional Vocational Qualifications)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இன்று பயன்பாட்டில் இருக்கும் எக்ஸ்–ரே கண்டுபிடித்தவர் ஜேர்மனியர்!

8.11.1895 அன்று மாலை Wilhelm Conrad Rontgen என்ற ஜேர்மனியர் எதேச்சையாகக் கண்டுபிடித்ததுதான் X-Ray (Rontgen) ரேடியேஷன் மூலம் ஏற்படும் ஒளியை (fluorescence) சோதனைக் கூடத்தில் கண்டுபிடித்த அவர் அந்த ஒளிக்கீற்றுக்குப் பெயர் வைக்கத் தெரியாமல் X-Ray என்ற அழைத்தார்.



அவர் முதலில் எடுத்த X-Rayயே ஜோராக இருந்தது. அது மோதிரம் அணிந்து கொண்டிருந்த அவரது மனைவியின் கை விரல்கள்!

மருத்துவ உலகின் மிகச் சிறந்த கண்டுபிடிப்புகளில் ஒன்று எக்ஸ்-ரே! catஸ்கேன் 1975 ஆம் ஆண்டிலும், அதைவிடச் சக்தி வாய்ந்த MRI ஸ்கேன் 1983 ஆம் ஆண்டிலும் புழக்கத்துக்கு வந்து விட்டன என்றாலும் எக்ஸ் - ரே சாகாவரம் பெற்று அன்றும் பயன்பாட்டில் இருக்கின்றது...! இவர் யேர்மனியில் Remschied நகரில் வாழ்ந்தவர். அவர் வசித்த வீடு அருகே உள்ளது.

---



## பல்கலைக்கழக மாணவனின் பார்வையில்...

வேகமாக மாறிவரும் காலச்சக்கர ஓட்டத்தில் அறிவியலின் மாற்றம் அதன் வளர்ச்சி, நவீன கண்டுபிடிப்புக்களின் தோற்றம் என விஞ்ஞானத்தின் விந்தைகள் இயற்கையினையே தோற்கடித்து விட்டன.

அந்தவகையில், பாடசாலையினை விட்டு விலகி தொழில் தேடி வேலை உலகில் பிரவேசிக்க உள்ளவர்கள் பல போட்டிப் பரீட்சைகளை உடைத்தெறிந்து வேலைவாய்ப்பினைப் பெறவேண்டியுள்ளது.

இந்தநிலையில், பொது அறிவுத் திறன்களை அக்குவேர் ஆணிவேராக மிகச்சாதுரியமாக உடைத் தெறிந்து பரீட்சையில் உயர் புள்ளிகளைப் பெற வலை ஆணி வேராக உள்ளது.

எனவே இந்த பயன்மிக்க வலையின் பணி தொடர வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

**பாலசிங்கம் மயூரன்,**
2ஆம் வருடம்,
முகாமைத்துவ பீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசக நெஞ்சங்களுக்கு...

வலையின் இதழ் பன்னிரண்டாவது வருட இறுதி இழையில் உங்களைச் சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

ஒரு வருட நிறைவாக வெளிவரும் இந்த வலையின் முயற்சிக்கு ஆதரவுக்கரம் நீட்டிய வாசக நெஞ்சங்கள் அனைவருக்கும் எனது இதயம் கனிந்த நன்றிகளைக் கூறி நிற்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

அச்சிடும் காகிதத்தின் விலை அடிக்கடி உயர்ந்து வருகின்றது. ஆகஸ்டிந்தி இப்போது மேலும் விலை உயர்த்தப்பட்டுள்ளது. அத்துடன் அச்சிடுவதற்குரிய சகல உப பொருட்களின் செலவினங்களும் கடந்த பல மாதங்களாக அதிகரித்துள்ளன.

அந்நிலையில், வலையின் விலையை ஐந்து ரூபாவால் உயர்த்தவேண்டிய தவிர்க்கமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளேன் என்பதை தங்களுக்கு அன்புடன் அறியத்தருகின்றேன்.

எனவே அடுத்து வெளிவரவிருக்கின்ற ஒக்ரோபர் மாத உங்கள் வலை 25/- ஆக இருக்குமென்பதுடன், சந்தாதாரர்களுக்கான வலையின் கட்டணம் தபால் செலவு உட்பட 50/- விலைக் கழிவுடன் 250/- ஆக உயர்த்தப்படுகிறது என்பதையும் தெரியப்படுத்துகின றேன்.

எனவே வலை, உங்களது பொது அறிவுத் தேவையை ஓரளவுக்கேனும் ஈடுசெய்யும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.




இந்த இதழ் தொடர்ந்து வெளிவருவது உங்கள் கைகளிலேயே தங்கியுள்ளது. ஆகையால் இவ்வித ழினை உங்களது நண்பர்களுக்கும், மாணவர்களுக்கும் அறிமுகம் செய்து உதவுங்கள்.

உங்களது ஆதரவிலேயே எனது பணி தொடரும்...

வாசகர்களது ஆலோசனைகள் வரவேற்கப்படுகின் றன...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செப்ரெம்பர் மாத சர்வதேச தினங்கள்...

- செப்ரெம்பர் - 02 - உலக தெங்கு தினம்
- செப்ரெம்பர் - 08 - உலக எழுத்தறிவு தினம்
- செப்ரெம்பர் - 09 - உலக இருதய தினம்
- செப்ரெம்பர் - 12 - உலக கைதிகள் தினம்




- செப்ரெம்பர் - 15 - உலக மக்களாட்சி தினம்
- செப்ரெம்பர் - 16 - உலக ஓசோன் தினம்
- செப்ரெம்பர் - 18 - உலக அறிவாளர் தினம்
- செப்ரெம்பர் - 21 - உலக பொறியியல் வல்லுநர்கள் தினம், உலக சமாதான தினம்
- செப்ரெம்பர் - 26 - உலக ஊமை மற்றும் காதுகேளாதோர் தினம்
- செப்ரெம்பர் - 27 - உலக சுற்றுலா தினம்

## இலங்கை பற்றிய இம்மாத வீசலில்...

- ஆசியாவிலுள்ள விமான சேவைகளில் முதன் முதலாக ஐபாட் இலத்திரனியல் விமானப் பை (ipad electronic light bag) அறிமுகம் செய்து வைக்கப்பட்டது எந்த விமான சேவையாகும்? ஸ்ரீலங்கா விமான சேவை

- இலங்கை பொலிஸ் படையணி 2012 இல் எத்தனையாவது ஆண்டு நிறைவினைக் கொண்டாடியது?
  146
  - இலங்கை பொலிஸ் படையணி 1866 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 3 ஆம் திகதி ஸ்தாபிக்கப்பட்டது.
  - இலங்கையின் முதலாவது பொலிஸ் மா அதிபராக பதவி வகித்தவர் ஜி.டபிள்யு.ஆர். கெம்பிள் ஆவார்.
  - தற்போது 33 ஆவது பொலிஸ்மா அதிபராக என்.கே.இலங்கக்கோன் பதவி வகிக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☆ மது போதைச் சாரதிகளுக்கு பொலிஸ் மா அதிபரினால் அறிவிக்கப்பட்டுள்ள புதிய தண்டனை எது?

- 1000 ரூபா அபராதமும், 3 மாத காலம் சிறைத்தண்டனை. அத்துடன் ஒரு வருடத்திற்குச் சாரதி அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்படும்.
- உயிர்ச்சேதம் ஏற்பட்டால் சாரதிக்கு 10 வருட சிறைத் தண்டனையும், சாரதி அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்படும்.

☆ இலங்கையின் முதலாவது உயிரியல் பல்வகைமைப் பூங்கா எங்கே உள்ளது?

பத்தரமுல்லையில்

இப்பூங்கா விரைவில் திறக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

☆ இந்த வருடத்திற்கான உலகளாவிய ரீதியில் சிறந்த பேராசிரியருக்கான விருது கிடைக்கப்பெற்ற யாழ். பல்கலைக் கழகப் பேராசிரியர் யார்?

பேராசிரியர் தி.வேல்நம்பி

யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடாதிபதி

தென்னிந்தியாவின் பாண்டிச்சேரியைத் தளமாகக் கொண்டு இயங்கும் விஞ்ஞானிகள், அபிவிருத்தியாளர்கள் மற்றும் பீடங்கள் சங்கம் (ASDF) என்ற அமைப்பே இந்த விருதினை வழங்கவுள்ளது.

இத்தெரிவுக்கு உலகளாவிய ரீதியில் 350 விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

☆ நாணயத்தாள் குறித்து மத்திய வங்கி அறிவித்துள்ள விடயம் என்ன?

நாணயத்தாள் அச்சிடும் போது மும்மொழிக்கும் சம சந்தர்ப்பம் அளிக்கப்படும்.

☆ ரயில்வே திணைக்களம் பயணிகளுக்கு இலவசமாக என்ன சேவையை வழங்கவுள்ளதாக அறிவித்துள்ளது?

இணையத்தள வசதி

ரயில்வே திட்டமிடல் பணிப்பாளர் விஜய சமரசிங்க தகவல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☆ பெயர்மாற்றம் செய்யப்பட்டுள்ள இலங்கையின் விமான நிலையம் எது?
இரத்மலானை விமான நிலையம். "கொழும்பு நகர விமான நிலையம்" எனப் பெயர்மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

☆ இலங்கை மின்சார சபையிடமிருந்து 2011 ஆம் ஆண்டு மட்டும் எத்தனை பேர் மின் இணைப்பைப் பெற்றுள்ளனர்?
51,89,019 பேர்

☆ அரச ஊழியர்களின் உன்னத சேவைக்காக ஸ்ரீலங்கா ரெலிக்கொம் புதிதாக அறிமுகப்படுத்தியுள்ள பக்கேஜின் பெயர் என்ன?
"அபிமான"

☆ அண்மையில் (இந்த மாதம் - 01.09.2012) காலமாகிய இலங்கையின் முன்னாள் அமைச்சர் யார்?
விஜயபால மெண்டிஸ் (வயது-84)

☆ யாழ்.மாவட்டத்தில் கண்ணிவெடிகளை அகற்றுவதற்கு புதிதாக இணைந்துள்ள நிறுவனம் எது? "மக்"

☆ 25 ஆண்டுகளின் பின் தேசிய மின் விநியோகக் கட்டமைப்புடன் வடக்கு அண்மையில் இணைக்கப்பட்டது. இத்திட்டத்திற்கு உதவி வழங்கியுள்ள நாடு எது?
ஜப்பான் - 24.6 மில்லியன் டொலர்களை வழங்கியுள்ளது.

☆ 2012 தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் அகில இலங்கை ரீதியில் முதலிடத் தைப் பிடித்துக்கொண்ட மாணவர்கள் யார்?
- இசாரா எஸ்.கொடித்துவக்கு - 196 புள்ளிகள்
றிச்மண்ட் கல்லூரி, காலி
- ஆர்.எம்.ஏ.யு.மதுவந்தி - 196 புள்ளிகள்
தலாத்து ஓயா வித்தியாலயம்
- பாலேந்திரன் அபிராம் - 193
யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



★ 138 ஆவது சர்வதேச அஞ்சல் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட தேசிய மட்ட அஞ்சல் தினப் பேச்சுப் போட்டியில் முதலிடத்தைப் பெற்றுக்கொண்ட அஞ்சல் அதிபர் யார்?
அ.அருளானந்தசோதி

★ ஸ்ரீலங்கன் விமான சேவை அண்மையில் எத்தனையாவது ஆண்டு விழாவைக் கொண்டாடியது?
33 ஆவது

★ இவ் வருடத்தின் ஏழு மாதங்களில் மட்டும் சுற்றுலாப் பயணிகள் எத்தனை பேர் இலங்கை வந்துள்ளனர்?
5 இலட்சத்து 43 ஆயிரத்து 205 பேர்
இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் தகவல்

★ கொமர்ஷல் வங்கி இந்த மாதம் இலங்கையில் எத்தனையாவது கிளையை எங்கே திறந்துள்ளது?
224, மாகொல

★ ஹற்றன் நஷனல் வங்கி இந்த மாதம் இலங்கையில் எத்தனையாவது கிளையை எங்கே திறந்துள்ளது?
224, பமுனுகம

★ மட்டக்களப்பு மாவட்டத்தின் புதிய ஆயராகத் திருநிலைப் படுத்தப்பட்ட அருட்தந்தை யார்?
அதிவணக்கத்துக் குரிய பொன்னையா யோசப் ஆண்டகை

★ இந்தமாத இறுதியில் ஓய்வுபெற்ற இலங்கையின் கடற்படைத் தளபதி யார்?
வைஸ் அட்மிரல் சோமதிலக்க திஸாநாயக்க

★ "தமிழர் சால்பு" என்னும் நூலை எழுதியவர் யார்?
பேராசிரியர் சு. வித்தியானந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☆ அண்மையில் தொப்பிகலப் பிரதேசத்தில் முப்படைகளின் கூட்டு இராணுவப் பயிற்சிகள் நடைபெற்றது. இப்பயிற்சியில் பங்குபற்றிய நாடுகள் எவை?

சீனா, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், மாலைதீவு நீலத் தீவு மற்றும் சிவப்புத்தீவு என்ற இரண்டு நாடுகளுக்கிடையில் இடம் பெறும் யுத்தம் என்ற அடிப்படையில் தொப்பிகல (குடும்மி மலை) வாகரை புள்ளிக்குடா ஆகிய பிரதேசங்களில் கடந்த ஒருமாத காலமாக இரண்டு கட்டங்களாக இப்பயிற்சி இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது.

☆ ரெஜின்போ பேஜஸ் என்பது யாது?

ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட 2012 ஆம் ஆண்டுக் கான விபரக்கொத்தின் பெயரே இது வாகும். (raibow pages)

☆ தேசிய கல்வி ஆணைக்குழுவின் உறுப்பினராக ஜனாதிபதியினால் தெரிவு செய்யப்பட்டவர் யார்?

ஓய்வுநிலைப் பேராசிரியர் சோ.சந்திரசேகரன்

☆ மூத்த பிரஜைகளுக்குப் பல்வேறு சலுகைகளை வழங்கும் மக்கள் வங்கியின் கணக்கு எது?

"பரிணத" மூத்த பிரஜைகள் வங்கிக் கணக்காகும்.

☆ பௌத்த சாசனத்தின் மேம்பாட்டுக்குப் பெரும் பங்களிப்புச் செய்த தேரர் அண்மையில் காலமானார் அவர் யார்?

ராமான்ய மகா பீடத்தின் தேரர் அமரர் வணக்கத்துக்குரிய வேவல் தெனிய மேதாலங்கார தேரர் (வயது-103) ஆவார். இவர் பௌத்த மதத்துக்காக 90 வருடங்கள் தனது வாழ்க்கையை அர்ப்பணித்தமை குறிப்பிடத்தக்கது.

☆ இலங்கைக்கான தூதரகமொன்றை ஒரு நாட்டில் அமைக்க வேண்டுமென அரசாங்கம் அண்மையில் தீர்மானித்துள்ளது. அந்த நாடு எது?

பஹ்ரைன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☆ இலங்கை கப்பல் நிறுவனத்துக்குச் சொந்தமான கப்பல் ஒன்றின் பொறியியலாளர் அண்மையில் மின்சாரம் தாக்கி கப்பலிலேயே காலமானார். அந்தக் கப்பலின் பெயர் என்ன?
"சுதர்ஸன் டிஸரி"
இந்தோனேசிய நாட்டைச் சேர்ந்த யன்டோ கிரியண்டோ என்பவரே உயிரிழந்தவராவார். மின்சாரக் கோளாறைச் சீராக்கும் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போதே இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

☆ பொதுநலவாய நாடாளுமன்ற ஒன்றியத்தின் 58 ஆவது மாநாடு 2012 செப்ரெம்பர் 07 - 15 வரை கொழும்பில் நடைபெற்றது. இந்த மாநாட்டின் தொனிப்பொருள் என்ன?
"எதிர்காலத்திற்குப் பொருத்தமான பொதுநலவாய அமைப்பை உறுதிப்படுத்துதல்"

சுகாதாரம், கல்வி, தொழிற்பயிற்சி ஆகியவற்றுக்கு எதிர்கால தலைமுறையினரை வலுவூட்டுதல் என்ற தலைப்பில் செயலமர்வு நடைபெற்றது.

- பொதுநலவாய நாடாளுமன்ற ஒன்றியத்தின் கிளைகள் 9 பொது நலவாயப் பிராந்தியங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.
- ஆபிரிக்கா, ஆசியா, அவுஸ்ரேலியா, பிரிட்டிஷ் தீவுகள் மற்றும் மத்திய தரைக்கடல் பிரதேசம், கனடா, கரிபியன், அமெரிக்கப் பிராந்தியம், அத்திலாந்திக் மற்றும் இந்திய பசுபிக் தென்கிழக்காசியா என்று பிரிக்கப்பட்டுள்ளது.
- இந்த மாநாட்டில் 58 நாடுகளைச் சேர்ந்த 800 பேர் பங்குபற்றினர்.

டிப்ளோமா தொடக்கம் பட்டமேற்படிப்பு வரை பல்வேறு கற்கைநெறிகளுக்காக சுமார் ஒரு இலட்சம் ரூபா வரை இந்தப் புலமைப்பரிசில் வழங்கப்படுகிறது.

☆ எக்ஸ்போ 2012 யோசோ உணவு விவசாய அமைப்பின் சர்வதேச மாநாடு எந்த நாட்டில் நடைபெற்றது?
கொரியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ இந்தியாவிலிருந்து இலங்கைக்கு அண்மையில் கொண்டு வரப்பட்ட புத்த பெருமானின் புனித சின்னம் எது?
"கபில வஸ்து"

★ இலங்கையில் 2012 வரை சிறுவர்கள் எத்தனை பேர் பார்வைக் குறைபாட்டினால் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது?
ஒரு இலட்சத்து 60 ஆயிரம் பேர்

★ இலங்கையில் பல்கலைக்கழகங்களுக்கு மேலதிகமாக எத்தனை மாணவர்களைச் சேர்த்துக்கொள்ள உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது?
5 ஆயிரத்து 609 பேர்

★ இலங்கையில் 7 மாடிகளைக் கொண்ட வாகனத் தரிப்பிடம் எங்கே அமைக்கப்பட்டுள்ளது?
இலங்கை மத்திய வங்கி வளாகத்தில் (கொழும்பு)

★ இலங்கைக்கு 2012 இல் நியமிக்கப்பட்ட ஆறு புதிய தூதுவர்கள் ஒரே பார்வையில்...
- பிறேசில் - மார்செல்லோ லியனாடோ த சில்வா
- ஹங்கேரி - ஜனோஸ் டெரனி
- நோர்வே - திருமதி திரீடே லொச்சன்
- அமெரிக்கா - திருமதி மிச்சேல் ஜெனி சிசைன்
- ஐக்கிய அரபு இராச்சியம் - அப்துல் ஹமீட் அப்துல் பதார் ஹாசீம் அல் முல்லா
- ஜேர்மன் - மோர்ஹாப் எம்

★ 2012 ஆம் ஆண்டுக்கான பிலிப்பைன்ஸ் நாட்டின் குஷி சமாதான விருது கிடைக்கப்பெற்ற நம் நாட்டுப் பாடகி யார்?
ஆச்சிதப்பர வாகிலா புகழ் செல்வி லிஷாரத் தீப்பிக்கா பிரியதர்ஷினி

மகிந்த சந்திர சேகரவின் பாடல் வரிகளிலும், ரோஹன வீரசிங்கவின் இசையமைப்பிலும் உருவான "சரோஜா" என்னும் தலைப்பிடப்பட்ட பாடலே இந்த வருடத்திற்கான சிறந்த சமாதானப் பாடலாகத் தெரிவு செய்யப்பட்டது.

2010 ஆம் ஆண்டில் சமாதான முன்னெடுப்புகளுக்கான மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க குஷி சமாதான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருதினைப் பெற்றுக்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

★ இலங்கையின் எப்பிரதேசத்தில் அண்மையில் ஐஸ் மழை பொழிந்தது? தியத்தலாவையில்

★ இலங்கையின் விளையாட்டுத் துறையின் வளர்ச்சிக்கு உதவி வழங்கி வரும் நாடு எது? சீனா

★ இலங்கையில் அண்மையில் கடும் காற்று வீசிய பிரதேசங்கள் எவை? மொனராகலை, மாத்தறை (100 வீடுகள் சேதம்)

## உலகை நோக்கிய வீசலில்...

◈ அண்மையில் பேஸ்புக்கில் வயது முதிர்ந்த மூதாட்டி இணைந்தார். அவர் யார்?
பிளாரன்ஸ் டெட்லர்
அமெரிக்க கல்போர்னிய நகரத்தைச் சேர்ந்தவர்.

◈ வெளிநாட்டு மாணவர் அனுமதிக்கான உரிமம் இரத்துச் செய்யப்பட்ட பல்கலைக்கழகம் எது?
லண்டன் மெட்ரோ பொலிடன்

◈ விண்வெளியில் அதிக நாட்கள் தங்கியிருந்த முதல் பெண் என்ற சாதனைனையைப் படைத்தவர் யார்?
சுனிதா வில்லியம்ஸ்
இவர் விண்வெளிக்குச் சென்றிருப்பது இது இரண்டாவது முறையாகும். அமெரிக்காவின் சார்பிலேயே இவர் விண்வெளிக்குச் சென்றுள்ளார்.

◈ அணிசேரா நாடுகளின் 16 ஆவது மாநாடு எந்த நாட்டில் நடைபெற்றது? ஈரானின் தெஹ்ரான் நகரில்

◈ ஐ.நா. மனித உரிமை சபையிலிருந்து விலகிக்கொள்வதாக அறிவித்துள்ள நாடு எது? சூடான்

◈ இரண்டாம் உலகப்போரில் பயன்படுத்தப்பட்ட குண்டுகள் அண்மையில் எந்த நாட்டில் மீட்கப்பட்டது?
இத்தாலி (ட்ரென் டினோ மாகாணத்தில் அகோ டி நர்டிஸ் என்ற பகுதியில் மீட்கப்பட்டுள்ளது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◈ அப்பிள் நிறுவனத்தின் முன்னாள் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஸ்ரீவ் ஜாப்ஸினுக்கு சிலை நிறுவவுள்ள நாடு எது?
ரஷ்யா

◈ 2100 ஊசிகளைத் தலையில் ஏற்றிச் சாதனை படைத்த கனேடியத் தமிழர் யார்?
மோகனதாஸ் சிவநாயகம் (வயது-37)
(மூளாய் குமரன்புலம், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்)

◈ மடிக் கணினியை முதன் முதல் உருவாக்கிய (Laptop) பிரிட்டன் விஞ்ஞானி அண்மையில் காலமானார். அவர் யார்?
பில் மாக்ரிட்ஜ் (வயது-69)

◈ ரஷ்யாவின் மிக வயதான 122 வயதுடைய வயோதிபர் காலமானார். அவர் யார்? முகமது லபசானோவ்

◈ ரொக்கெட் தாக்குதலில் உயிரிழந்த லிபியாவுக்கான அமெரிக்கத் தூதுவர் யார்? ஸ்ரீவன்

◈ சீனப்பெருங்கடலில் அமைந்துள்ள சர்ச்சைக்குரிய மூன்று தீவுகளை விலைகொடுத்து வாங்கியுள்ள நாடு எது?
ஜப்பான்

◈ தியேட்டர்களில் குளிர்பானங்களுக்குத் தடை விதித்துள்ள நாடு எது?
நியூயோர்க்
அமெரிக்காவில் உடல் பருமன் பிரச்சினை நாளுக்கு நாள் அதிகரித்து வருவ தன் எதிரொலியே இத்தடைக்கு காரணமாகும்.

◈ எகிப்தின் தலைநகர் கெய்ரோவில் உள்ள தூதரகம் ஒன்று அண்மையில் மூடப்பட்டது. அது எந்தநாட்டு தூதரகம்?
கனேடியத் தூதரகம்

◈ மலிவு விலையில் கையடக்கமான ஸ்கானர் கருவியைக் கண்டுபிடித்த இங்கிலாந்து பேராசிரியர் யார்?
இலத்திரனியல் மொழியியல் பேராசிரியர் ஜெப் நீஷம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◈ 100 இற்கும் மேற்பட்ட இரண்டு மனித பிரேதக் கூடங்கள் அண்மையில் எந்த நாட்டில் கண்டுபிடிக்கப்பட்டது?
கென்யா

◈ 9 ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட மிருக வடிவுடைய உருவச் சிலைகள் கண்டுபிடிக்கப்பட்டது எந்தநாட்டில்?
இஸ்ரேல்

◈ நோர்வே நாட்டு அமைச்சரவையின் முதலாவது முஸ்லிம் பெண் ஒருவர் தெரிவு செய்யப்பட்டார். அவர் யார்?
ஹாடியா டாஜிக் (வயது-29)

◈ மனித இன நலம் சார்ந்த டாரா என்ற நிறுவனம் நடத்திய ஆய்வில் உலக வெப்பமடைதலால் 2030 இல் எத்தனை கோடி மக்கள் இறப்பார்கள் என அதிர்ச்சித் தகவல் வெளியிட்டுள்ளது? 10 கோடி

◈ உலகின் வெறுக்கப்படும் நகரங்களின் பட்டியலில் முதலாவது இடத்தில் உள்ள நகரம் எது?
- மெக்சிக்கோவின் டஜுவானா நகரமாகும்.
, இரண்டாவது, மூன்றாவது முறையே
- அவுஸ்ரேலியா - சிட்னி
- பிரான்ஸ் தலைவர் - பாரிஸ்
இந்தப் பட்டியலில் இந்தியாவின் புதுடில்லிக்கு 8 ஆவது இடம் கிடைத்துள்ளது. காரணம் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளைக் கண்டால் அவர்களை ஏமாற்றிப் பணம் பறிப்போர் அங்கு கூடுதலாக உள்ளனர்.

◈ 150 படுகொலையுடன் சம்பந்தப்பட்டிருந்த ஈராக்கின் உப ஜனாதிபதிக்கு அந்நாட்டு நீதிமன்று அண்மையில் மரண தண்டனை வழங்கித் தீர்ப்பளித்துள்ளது. அவர் யார்?
ஹஷிமி
தற்போது துருக்கி நாட்டில் தஞ்சமடைந்துள்ளார்.

◈ உலக சாதனைப் புத்தகமான கின்னஸ் எத்தனை மொழிகளில் வெளியிடப்பட்டு வருகின்றது?
22 மொழிகளில், இப்புத்தகமானது 100 இற்கு மேற்பட்ட நாடுகளில் வெளியிடப்பட்டு வருகிறது தெரியுமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◇ அண்மையில் இன மோதல் இடம்பெற்ற நாடு எது?
கென்யா (30 பேர் பலியாகினர்)

◇ 'சூரியக் குடும்பத்தில் புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட கோள் எது?
'டைகி'
இந்தக் கோளானது வியாழன் கோளை விட 4 மடங்கு பெரிதாகவும், மேலும் நமது சூரியனைப் போல் ஹீலியம், ஹைட்ரோஜென் வாயுக்கள் நிறைந்ததாகவும் காணப்படுகிறது.

◇ இவ்வாண்டுக்கான (2012) உலக ஓசோன் தினத்தின் தொனிப் பொருள் யாது?
'எதிர்காலச் சந்ததியினரைக் கருத்தில் கொண்டு வாயு மண்டலத்தைப் பாதுகாப்போம்' என்பதாகும்.

◇ இவ்வாண்டுக்கான (2012) உலக சுற்றுலா தினத்தின் தொனிப் பொருள் என்ன?
"நிரந்தர அபிவிருத்திக்கு வலுவூட்டக்கூடிய சுற்றுலாத்துறையும் நிரந்தரமான சக்தி வளமும்" ஆகும்.

◇ உலகில் எத்தனை வெளவால் இனங்கள் உள்ளதாகக் கண்டுபிடிக்கப்பட்டது? ஆயிரத்து 240

◇ காந்தி போதனைகளே எனது வழிகாட்டி என அண்மையில் கூறியவர் யார்?
ஆங் சாங் சூகி

◇ சர்வதேச பௌத்த பல்கலைக்கு அண்மையில் அடிக்கல் நாட்டப்பட்டது எங்கு?
இந்தியாவின் சாஞ்சி நகரில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது.

◇ மோனாலிசா ஓவியத்தை தங்களிடம் ஒப்படைக்கும்படி கேட்டுள்ள நாடு எது?
இத்தாலி (பிரான்ஸிடம் கேட்டுள்ளது)

◇ தாய்க்கும், மகனுக்கும் இடையிலான உலகின் முதலாவது கருப்பை மாற்று அறுவைச் சிகிச்சையை வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ள மருத்துவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
சுவீடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◇ இஸ்லாத்தை அவமதிக்கும் திரைப்படம் அண்மையில் இணை யத்தளங்களில் வெளியாகியது. அத்திரைப்படத்தின் பெயர் என்ன?
Innoconce of Muslim
இப்படத்தினைத் தயாரித்தவர் - நகோலா பாஸிலி நகோலா
இயக்கியவர் - அலன் ரொபட்ஸ்
இப்படமானது 14 நிமிடக் காட்சியைக் கொண்டதாகும். அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட இப்படத்தினால் முஸ்லிம்கள் மத்தியில் பெரும் எதிர்ப்பலைகளைத் தோற்றுவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

◇ ஆலயம் ஒன்றின் திருவிழாவின் போது பிச்சைக்காரர்களை விசேட கம்பிக் கூடுகளில் அடைத்து வைத்த நாடு எது?
தென் சீனா

◇ புதிய ஆளற்ற விமானமான "ஷாஹெட் 129" ஐ அறிமுகம் செய்து வைத்துள்ள நாடு எது? ஈரான்

◇ அணு ஆயுதத்தை ஏந்திச் செல்லும் ஏவுகணையை பாகிஸ்தான் அண்மையில் வெற்றிகரமாகச் சோதனை செய் தது. அதன் பெயர் என்ன?
ஹாப்ட் - 07

◇ அமெரிக்கப் பணக்காரர் பட்டியலில் இந்த வருடமும் தொடர்ந்து முதலிடத்தில் உள்ளவர் யார்? பில்கேட்ஸ்

◇ பிரிட்டனின் முன்னாள் பிரதமரின் உடைகள் ஏலத்தில் விடப் பட்டன. அப்பிரதமர் யார்?
மார்கிரெட் தட்சர்

◇ வத்திக்கான் போப் ஆண்டவர் பதவிக்கு சிபார்சு செய்யப்பட்ட கர்தினால் அண்மையில் காலமானார். அவர் யார்?
கர்தினால் கார்லோ மரியா மார்ட்டின் (இத்தாலி, வயது-85)

◇ பரிசுத்த புனித பாப்பரசர் பாவனைக்கென அண்மையில் கார் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. அந்தக் காரினை வழங்கி யுள்ள நிறுவனம் எது?
'ரேனோல்' கார் உற்பத்தி நிறுவனமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◈ 2012 செப்ரெம்பரில் பரிசுத்த பாப்பரசர் 16 ஆம் பெனடிற் பயணம் மேற்கொண்ட நாடு எது?
லெபனான்
கடந்த 15 வருட காலப்பகுதியில் பாப்பரசர் ஒருவர் லெபனானுக்கு விஜயம் செய்தது இதுவே முதல் தடவையாகும்.

## அயல் நாட்டுப் பக்கமாக வீசிய வலையில்....

❖ ஐசக் நியூட்டனின் புதிருக்கு தீர்வு கண்ட இந்திய மாணவன் யார்?
சௌர்யா ரேய் - இவர் தற்போது இங்கிலாந்தில் வசிக்கிறார்.

❖ இந்தியக் கடற்படையின் புதிய தளபதியாக அண்மையில் நியமிக்கப்பட்டவர் யார்?
அட்மிரல் தேவேந்திரகுமார் ஜோஷி

❖ மெல்லிசை மன்னர் எம்.எஸ்.விஸ்வநாதனுக்கு அண்மையில் வழங்கப்பட்ட பட்டம் என்ன?
திரையிசைச் சக்கரவர்த்தி
- ஜெயா ரி.வி.யின் சார்பில் தமிழக முதல்வர் ஜெயலலிதா அவர்களினால் வழங்கப்பட்டது.

❖ சோலர் ரிக்ஷாவை உருவாக்கிச் சாதனை படைத்த தமிழக இளைஞர் யார்?
சிவராஜ் முத்துராமன் (வயது-26, திருப்பூர்)

❖ அதிக நேரம் விண்வெளியில் நடந்து சாதனை படைத்த பெண் யார்?
இந்திய வம்சாவளி அமெரிக்க விண்வெளி வீராங்கனை அனிதா வில்லியம்ஸ்.

❖ இந்தியாவின் வெண்மைப் புரட்சியின் தந்தை அண்மையில் காலமானார் அவர் யார்?
வர்கிஸ் குரியன் - இங்கு வெண்மைப் புரட்சி என்பது பால் தயாரிப்புக்களாகும். (அமுல் பிராண்ட் தயாரிப்பு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ பிரபல மலையாள தமிழ் திரைப்பட நடிகர் அண்மையில் காலமானர். அவர் யார்?
திலகன்

❖ பழம்பெரும் நகைச்சுவை நடிகர் இந்த மாதம் காலமானார். அவர் யார்?
லூஸ்மோகன் (வயது-84) இவர் 1000 இற்கும் மேற்பட்ட படங்களில் நகைச்சுவை வேடத்தில் நடித்துள்ளார்.

❖ புற்றுநோயால் மரணமடைந்த தென்னிந்திய நடிகை யார்?
அஸ்வினி (வயது-36)

❖ இந்தியாவின பிரபல திரைப்படத் தயாரிப்பாளர் அண்மையில் காலமானார். அவர் யார்?
ஏ.வி.எம்.முருகன்

❖ முல்லைப்பெரியாறு அணை குறித்து தொடர்ச்சியாக 168 மணி நேரம் பேசி கின்னஸ் சாதனை படைத்திருக்கும் இந்தியர் யார்?
ராஜா - இவர் ஜகவர்லால் நேரு தகவல் தொழில்நுட்பக் கல்லூரியில் பி.ரெக்படித்து வருகின்றார்.

❖ இந்தியாவில் தகவல் தொடர்புப் பணிகளுக்கு உதவும் வகையில் இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையமான இஸ்ரோ தயாரித்துள்ள செயற்கைக் கோள் எது?
ஜிசாட் - 10

❖ உலகிலேயே அதிக படங்களை இயக்கிய பெருமைக்குரிய பெண் யார்?
விஜய நிர்மலா

¤ அதிக விளைச்சல் பெறும் விவசாயிகளுக்கு பணப்பரிசு வழங் கப்படுமென அறிவித்துள்ள நாடு எது?
இந்தியா

❖ 2012 இல் தமிழ் சினிமா வரலாற்றில் ஆகக்கூடுதலான படங் களை வெளியிட்டு(28 படங்கள்) சாதனை படைத்த மாதம் எது?
ஓகஸ்ட் 2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ பலகோடி ஆண்டுகளுக்கான நாள் காட்டியைத் தயாரித்து சாதனை படைத்த தமிழர் யார்?
சுப்பிரமணி (பெங்களூர்)
கூகுள் போன்ற இணையத்தளங்களில் 10 ஆண்டுகள் வரை உருவாக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

❖ இந்திய விடுதலைச் செய்தியை முதன் முதலில் வானொலியில் கூறிய அறிவிப்பாளர் யார்?
பூர்ணம் விஸ்வநாதன் (இவர் ஒரு நடிகருமாவார், 2008, ஒக்ரோபரில் இறைபதம் எய்தினார், இவரது வயது கிடைக்கவில்லை)

## விளையாட்டுப் பக்கம் வீசிய வலையில்....

- 8 ஆவது ஆசிய வலைப்பந்தாட்டப் போட்டியில் வெற்றியீட்டிய நாடு எது?
சிங்கப்பூர் (கொழும்பில் நடைபெற்றது)

- ஐக்கிய அமெரிக்க பகிரங்க ரென்னிஸ் போட்டிகளின் பெண்கள் தனிநபர் பிரிவில் சம்பியன் பட்டம் வென்றவர் யார்?
செரினா வில்லியம்ஸ்
உலகின் முதற்தர வீராங்கனை விக்டோரியாஅசரென்காவை இறுதிப் போட்டியில் வீழ்த்தியே சம்பியன் பட்டம் வென்றார்.

- ஐக்கிய அமெரிக்க பகிரங்க ரென்னிஸ் சுற்றுத் தொடரில் ஆண்கள் தனிநபர் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டவர் யார்? அன்டி முர்ரே

- 1936 ஆம் ஆண்டுக்குப் பின்பு பிரித்தானியாவிலிருந்து கிராண்ட ஸ்லாம் பட்டமொன்றை வெற்றி கொண்ட முதலாவது பிரித்தானிய வீரர் யார்? அன்டி முர்ரே

- சர்வதேச ரென்னிஸ் தரவரிசையில் முதலிடத்தில் நிற்பவர்கள் யார்?
  - ரொஜர் பெடரர் - சுவிற்சர்லாந்து
  - விக்டோரியா அசரென்கா - பெலாரஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2012 ஆம் ஆண்டின் ஐரோப்பாவின் சிறந்த கால்பந்து வீரருக்கான விருதினைப் பெற்ற வீரர் யார்?
ஆன்ட்ரஸ் இனியஸ்டா (பார்ஸிலோனா)

இலங்கை கிரிக்கெட் வீரர்களுக்கு ஆடைகளை வழங்குவதற்கு ஒப்பந்தம் செய்துகொண்ட நிறுவனம் எது?
Mas Holding

இலங்கையில் சர்வதேச விளையாட்டு மைதானங்கள் உள்ள இடம் எது?
- சூரியவெவ, அம்பாந்தோட்டை - மகிந்த ராஜபக்ஷ சர்வதேச கிரிக்கெட் விளையாட்டு மைதானம்.
- பள்ளேகல, கண்டி - பள்ளேகல சர்வதேச கிரிக்கெட் விளையாட்டு மைதானம்.

சுயசரிதை எழுதும் இந்தியக் கிரிக்கெட் வீரர் யார்?
யுவராஜ்சிங்

பத்துக்கும் மேற்பட்ட ஒலிம்பிக் போட்டிகளில் பங்குபற்றிச் சாதனை படைத்த வீரர் யார்?
இயன் மில்லர் (கனடா)

பங்களாதேஷ் கிரிக்கெட் சபையினால் தடை விதிக்கப்பட்ட வீரர் யார்?
சரிபுள் ஹக் (வயது - 36)
ஸ்பொட் பிக்சிங்கில் ஈடுபட்டமையே காரணமாகும்.

ஏலத்தில் விற்பனை செய்யப்பட்ட கிரிக்கெட் அணி எது?
டெக்கான் சார்ஜர்ஸ் அணி (Deccan)

110 மீற்றர் தடை தாண்டி புதிய உலக சாதனை படைத்த வீரர் யார்?
அரிஸ் மெர்ரிட்
இப்போட்டி பெல்ஜியத்தில் நடைபெற்றது.

2012 பரா ஒலிம்பிக் போட்டியில் வெற்றியீட்டிய நாடு எது?
சீனா - 231 பதக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உலகக் கிண்ண 20 இற்கு 20 போட்டித் தொடருக்காக அறிமுகப்படுத்தப்பட்ட இணையத்தளம் எது?
WWW.icccrikct.com

- 200 மீற்றர் பிரிஸ்ரோக் ஜப்பான் நீச்சல் போட்டியில் உலக சாதனை படைத்த வீரர் யார்?
அகிஹிரோ யமகுச்சி

- உதைபந்தாட்டப் போட்டிகளில் இருந்து ஓய்வுபெற்ற இங்கிலாந்து வீரர் யார்? ஜோன் ரெறி

- பெண்களுக்கான தெற்காசிய உதைபந்து சம்பியன் லீக் போட்டியில் வெற்றியீட்டிய அணி எது?
இந்திய அணி - கொழும்பில் நடைபெற்றது.

- நிலாவில் முதன் முதல் காலடி வைத்த முதல் மனிதர் அண்மையில் காலமானார். அவர் யார்?
நீல ஆம்ஸ்ரோங் (வயது-82, 25.09.2012 ஆம் உலகை விட்டு விடைபெற்றார்)

- "டிரையத்லான்" என்பது யாது?
ஓரே நேரத்தில் ஓட்டம், சைக்கிளோட்டம், நீச்சல் என 3 போட்டியும் சேர்ந்த விளையாட்டாகும்.
அண்மையில் கலிபோர்னியாவில் இப்போட்டி நடைபெற்றது.

இதேவேளை விண்வெளி ஆய்வுகூடத்தின் பொறுப்பாளரான சுனிதா வில்லியம்ஸ் விண்வெளியில் இவ்விளையாட்டை நிகழ்த்திப் புதிய சாதனை படைத்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## விருதுகள் பக்கம் வீசிய வலையில்....

☆ 2012 ஆசிய விருது வழங்கும் நிகழ்வில் (சிங்கப்பூர்) சிறந்த சமூக பொறுப்புணர்வுத் திட்டம், சிறந்த வர்த்தக நாமம் மற்றும் சந்தைப்படுத்தல் ஆகிய விருதுகளைவென்ற நிறுவனம் எது?
ஜனசக்தி நிறுவனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ Lacp - 2011 விஷன் விருதுகள் போட்டியில் தங்க விருதும், வெண்கல விருதையும் பெற்றுக்கொண்ட காப்புறுதி நிறுவனம் எது?
ஸ்ரீ லங்கா இன்சூரன்ஸ் நிறுவனமாகும்.

★ 2012 HRM விருது வழங்கும் விழாவில் வெள்ளி விருதினைப் பெற்றுக்கொண்ட நிறுவனம் எது? DHL கீல்ஸ்

★ SLM NASCO - 2012 விருது கிடைக்கப்பெற்ற நிறுவனம் எது?
ஏயார் ரெல்

★ உலகளாவிய ரீதியில் வாசகர்களின் நன்மதிப்பைப் பெற்றுள்ள "பினான்ஸ் ஏசியா" சஞ்சிகையிடமிருந்து 2012 ஆம் ஆண்டுக் கான இலங்கையின் அதிசிறந்த வங்கிக்கான விருதினைப் பெற்றுக்கொண்ட வங்கி எது?
கொமர்ஷல் வங்கி

★ சீன கன்பூஷியஸ் அமைதி விருதுக்குப் பரிந்துரை செய்யப் பட்ட உலகின் பிரபலமான இருவர் யார்?
- கொபி அனான் (ஐ.நா. முன்னாள் பொதுச் செயலாளர்)
- பில்கேட்ஸ் (மைக்ரோ சொப்ட் நிறுவனம்)

★ 2012 ஆம் ஆண்டுக்கான மனித வள முகாமைத்துவ விருதுகள் வழங்கும் நிகழ்வில் வெள்ளி விருதினைப் பெற்ற நிறுவனம் எது?
எயார்ரெல்

★ டொஷிபா சிங்கப்பூர் நிறுவனத்தின் மூலம் ஏற்பாடு செய்யப் பட்ட வருடாந்த விருது வழங்கும் நிகழ்வில் வைரவிருது கிடைக்கப்பெற்ற நிறுவனம் எது?
Jkoa
ஜோன் கீல்ஸ் ஒபிஸ் ஓட்டோமேஷன் நிறுவனம்
(பாங்கொக்கில் நடைபெற்றது)

★ அமெரிக்காவின் உயரிய விருதினை அண்மையில் பெற்றுக் கொண்ட பெண்மணி யார்?
ஆங் சாங் சூகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ ஆசியாவின் சிறந்த தொழில் வழங்குநர் வர்த்தக நாமத்துக்கான (Asias Best Employer Brand) விருதினை இரண்டாவது தடவையாகவும் பெற்றுக் கொண்ட நிறுவனம் எது?
சிலோன் பிஸ்கட் நிறுவனத்தின் முதல் தர வர்த்தக நாமமான 'மஞ்சி' பெற்றுக் கொண்டது.

சிங்கப்பூரில் நடைபெற்ற CMO விருது வழங்கும் நிகழ்வில் வைத்து வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் மஞ்சி நிறுவன முகாமையாளர் தேஜா பீரிஸுற்கு 2012 Super Achiever என்ற விருதும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

★ சக்திவள சிக்கன விருது கிடைக்கப்பெற்ற வங்கி எது?
ஹற்றன் நஷனல் வங்கி

★ 2012 பெட்ரோ·.ட் விருது எந்த நிறுவனத்துக்கு கிடைத்தது?
கெய்ன்

★ Infotel - 2012 என்பது யாது?
நாடு தகவல் தொடர்பாடல்கள் மற்றும் தொழில்நுட்பத்தில் முகம் கொடுத்து வரும் உறுதியான அபிவிருத்தி மற்றும் அதன் முக்கியத்துவங்கள் ஆகியவற்றைச் சித்தரிக்கும் தேசிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பக் கண்காட்சிக்கு வைக்கப்பட்ட பெயரே இதுவாகும்.

★ "அசிதிஸி" என்பது யாது?
ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களினால் சிறந்த, துறை சார்ந்த, திறமையுள்ள இளம் ஊடகவியலாளர்களை ஊக்குவிக்கும் நோக்குடன் ஏற்படுத்தப்பட்ட பரிசிலின் பெயரே இந்த ஊடகப் புலமைப் பரிசிலாகும்.

★ 5000 ஆரம்பப் பாடசாலைகள் மற்றும் 1000 இரண்டாம் நிலைப் பாடசாலைகளை மேம்படுத்தும் அரசின் திட்டத்தின் கீழ் கவனம் செலுத்தப்படும் தொழிற்பாடுகள் எவை?

01. மின்சார வசதிகளை வழங்குதல்

02. நீர் வசதிகளை வழங்குதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. மலசல கூடங்கள் மற்றும் சுகாதார வசதிகளை அபிவிருத்தி செய்தல்
04. பாடசாலை வேலிகள் மற்றும் வாயிற் கதவுகளை அமைத்தல்
05. தற்போதுள்ள கட்டடத்தினைப் புதுப்பித்தல் மற்றும் வர்ணம் பூசுதல்
06. பாடசாலை வளாகத்தில் முன்மாதிரியான வீட்டுத் தோட்டத்தை உருவாக்குதல்
07. பாடசாலையின் பெயர்ப் பலகையை அமைத்தல்
08. முதலாம் தர மாணவர்களின் தொழிற்பாட்டு அறையினை சரியான முறைக்கமைய அமைத்தல்
09. பிள்ளைகளுக்கான விளையாட்டு முற்றத்தினை அமைத்தல்
10. ஆசிரியர்கள் தற்போது தங்கியுள்ள விடுதிகள் இருப்பின் அதற்குத் தேவையான அத்தியாவசியமான வசதிகளை மட்டும் மேற்கொள்ளுதல்

---



## வாசகியின் பார்வையில்...

உலக இயங்கியலின் வடிவங்கள் பல்கோணத்தில், பல்பரிமாணங் களில் தெறிப்படைந்து வரும் நிலையில், அவற்றையெல்லாம் ஒன்று சேர்க்கும் குவிமையமாக வெளிவந்து கொண்டிருக்கும் 'வலை' யின் பிரசவம் நயந்து போற்று தற்குரியது.

இன்றைய பூகோளவியல் மாற்றங்களுக்கேற்ப எம்மைத் தக்க வைத்துக்கொள்ளும் நோக்கில், மற்றவர்களோடு போட்டி போட்டு எம்மை உயர்த்திக் கொள்வதற்கு 'வலை' யின் உட்கிடக்கைகள் சிறந்த வழிகாட்டியாய்த் திகழ்கின்றன என்பதில் ஐயமில்லை.

எனவே, அறிவுசார் சமுகத்தைக் கட்டியெழுப்புவதற்காக இவ் 'வலை' யானது மென் மேலும் பல இதழ்களைப் பிரசவிக்க வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

**ராஜி மகேந்திரன்,**
'வலை' யின் அபிமான வாசகி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி

தேசியப் பத்திரிகைகள்
குடாநாட்டுப் பத்திரிகைகள்
இணையத்தளங்கள்
வாசக நெஞ்சங்கள்

அன்புடன்
சி. என். எச். சாள்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சி.என்.எச்.சாள்ஸ் எம்முடைய நீண்டகால நண்பர். அவர் பழகுவதற்கு இனிமையானவர். அடக்கமான குணம். பொது நலநோக்கு. புதியவற்றைத் தேடிக் கற்றுக் கொள்ளும் ஆர்வம். கற்றுக் கொண்டதை மற்றவர்களும் கற்றுக் கொள்ளவைக்கும் துடிப்பு அவருக்குரிய தனித்துவம்.

அலுவலக உத்தியோகத்துடன் மட்டும் முடங்கிவிடாது. அனைவருக்கும் பயனுடைய வகையில் "வலை" என்னும் அறிவியல் சஞ்சிகையை காலத்தின் தேவை அறிந்து வெளியிடுவது சிறப்பு. "வலை" சஞ்சிகை போட்டிப் பரீட்சை எழுதுபவர்களுக்கும், மாணவர்களின் பொதுஅறிவு வளர்ச்சிக்கும் பெரிதும் துணை புரிகின்றது.

சமகால அறிவை மாதாந்தம் தொகுத்து வெளியிடுவது பெரும் இடர்பாடு மிக்க பணி. அந்தப் பணியை மனநிறைவுடன் சி.என்.எச்.சாள்ஸ் தானே தனியனாக முன்னெடுத்து எமது சமூகத் திற்கு அரும்பெரும் பணியாற்றிவருவது பாராட்டுக்குரியது.

பாடசாலைக் கல்வியை முடித்த சாள்ஸ் நூலகத்துறையில் உள் நுழைந்து படிப்படியாக வளர்ச்சி பெற்றார். "நூலகத் தகவல் விஞ்ஞானடிப்ளோமா" மூன்று வருடகால கற்கை நெறியையும் பூரணமாக கற்று, தற்போது "நூலகர் தரம் III" இல் யாழ். மாநகரசபையின் பொதுசன நூலகத்தில் சேவையாற்றி வருகிறார்.

**வி.பி. தனேந்திரா**
**பதிப்பாசிரியர்**

ISBN 978-955-44442-0-1

Noble Printers Jaffna. 021 2220386

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org